
# சு. வே. யின் சிறுகதைகள்




## பாற்காவடி

# சு.வேயின் சிறுகதைகள்

## பாற்காவடி

(வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ்முலாக்கல் அமைச்சு யாழ். இலக்கிய வட்டத்திற்கு வழங்கிய நூல் ஊக்குவிப்பு நிதியையும் கொண்டு இந்நூல் அச்சிடப்பட்டது)

# சு.வேயின் சிறுகதைகள்

# பாற்காவடி

யாழ்

# சு.வேயின் சிறுகதைகள்
## பாற்காவடி

★ ஆசிரியர் :- சு.வே. (சு.வேலுப்பிள்ளை)
★ வெளியீடு :- யாழ் இலக்கியவட்டம்
★ முதற்பதிப்பு :- 2002 - பெப்ரவரி
★ அட்டை அமைப்பும் ஓவியமும் :- ரமணி
★ அச்சுப்பதிப்பு :- உயர் கல்விப் பதிப்பகம்
★ விலை :- 200/=

★ PAATKAVADI
(Collection of Short Stories)
SU. VEA.
★ Author :- SU. VEA (S.Veluppillai)
★ Frist Edition :- February 2002.
★ Pullished by :- Yarl Ilakkiya Vaddam, Jaffna.
★ Pages :- 178 + XVI = 194
★ Priec :- Rs. 200/=

விற்பனையாளர்கள் :-

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
யாழ்ப்பாணம் : கொழும்பு.
**ஸ்ரீலங்காப் புத்தகசாலை,**
யாழ்ப்பாணம் : கொழும்பு.

# சு.வே என்ற படைப்பாளி

1921ஆம் ஆண்டு, மே மாதம், இருபத்தி நான்காம் திகதி நாவற்குழியில் ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை என்ற சு.வே.யின் ஜனனம் நிகழ்ந்தபோது, வருங்காலத்தில் சிறுகதை, உருவகக்கதை, கட்டுரை, நாடகம் ஆகிய இலக்கியத்துறைகள் அவரின் படைப்புகளால் தம்மை மெருகூட்டிக் கொள்ளப்போகின்ற சங்கதி எவருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. கந்தப்புராணம், சிவராத்திரி புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பனவற்றுக்குப் பயன் சொல்லும் ஆற்றல் பெற்ற புராண படனக்காரரும் தமிழ்ப்புலமை பெற்றவரும் விவசாயியுமான விசுவலிங்கம் சுப்பிரமணியம், நிறையவே வாசிக்கும் பழக்கம் கொண்ட இலக்கிய ரசிகையான தையல்நாயகத்தைத் தன் துணைவியாகக் கொண்டபோதே, தமிழ்ப்புலமை கொண்ட புதல்வராக சு.வே. வருவாரென்பது உதரத்தில் உருவாகிய சிருஷ்டி இரகசியமாகிவிட்டது. சு.வே. யின் பாடைப்பாற்றலின் பின்னணி பிறப்பிலேயே நிச்சயிக்கப்பட்டு விட்டது.

சு.வே. யின் படைப்பாற்றலைப் புடம் போட்டு ஒளிர வைத்தது திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கல்லூரியாகும். 1939இல் இக்கல்லூரியின் மாணவனாகச் சேர்ந்த சு.வே, 1942ல் பயிற்றப்பட்ட தமிழாசிரியராக வெளிவந்தார். அத்தோடு ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தில் கற்று தமிழ்ப்பண்டிதராகவும் விளங்கினார். பண்டைத் தமிழிலக்கியத்தினை நன்கு தெரிந்திருந்ததுபோல நவீன இலக்கியவடிவங்களையும் அவர் தெரிந்திருந்தார் என்பதற்கு அவர் படைத்த நவீன ஆக்கங்கள் சான்றாகின்றன. திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக்கல்லூரி உருவாக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, மூத்த படைப்பாளி சம்பந்தன், இரசிகமணி

கனகசெந்திநாதன் போன்றோரின் தடத்தில் சு.வே.யையும் அக் கல்லூரி புத்திலக்கியப் படைப்பாளியாக ஈழத்தமிழிலக்கியத்துக்கு வழங்கியது.

சு.வே.யின் பரந்த அனுபவச் செறிவு, இலங்கையின் பல்வகை வாழ்க்கை நிலைகளைக் கொண்ட பிரதேசங்களில் ஆசிரியராக கடமையாற்றியதன் மூலம் கிடைத்ததென்பேன். கற்றன். டிக்கோயா, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய பிரதேசப்பாடசாலைகளில் 1946 தொடக்கம் 1981 வரை பணிபுரிந்துள்ளார். பிரமச்சாரியாகத் தன் தவ வாழ்க்கையை சு.வே. மேற்கொண்டிருக்கும் இன்று தனது என்பத்தோராவது அகவையில் காலடி வைக்கின்ற காலவேளை வரை. எழுத்தையும், ஆசிரிய பணியையும் தன்னிரு கண்களாகக் கொண்டுள்ளார். அவரது நீண்ட அனுபவமும், மிக நுட்பமான அவதானிப்பும் அவரது படைப்பிலக்கியத்திற்குச் சமூகப் பொறுமானத்தைத் தந்துள்ளன. அதனால் ஈழத்தின் புனைகதைத்துறைக்குப் புத்தூக்கம் வழங்கிய முக்கியமானவர்களில் ஒருவராகச் சு.வே. விளங்குகிறார்.

## சு.வே.யின் சிறுகதைகள்

சு.வே. தன் படைப்பாற்றலைச் சிறுகதை. உருவகக்கதை, கட்டுரையியல், சிறுவர் கதை, நாடகம், வானொலி நாடகம், வானொலித் தொடர் நாடகம், உரைச்சித்திரம். பாடநூல்கள் எனப்பல துறைகளிலும் ஆழமாயும் அகலமாயும் வெளிக் கொணர்ந்துள்ளார். ஈழகேசரிப் பண்ணையில் முகிழ்ந்த முன்னோடிச்சிறுகதை எழுத்தாளரான சு.வே. 1943இல் ஈழகேசரியில் வெளியான **கிடைக்காத பலன்** என்ற சிறுகதையுடன் இலக்கியப் பிரவேசம் செய்தார். அதனைத் தொடர்ந்து மனித மிருகம், புத்தனின் சுவடு, காலத்தின் தண்டனை, பாசம், பிரேமை, பாற்காவடி, மனநிழல். அன்புக்கறை, சிற்றன்னை, தோழன் முதலான சிறுகதைகளை ஈழகேசரியில் எழுதியுள்ளார். மண்வாசனை, ஸ்ரைக், தகிப்பு, அக்கினி, பாரிசவாதம் முதலான சிறுகதைகளை ஈழத்தின் இலக்கிய வரலாற்றின் ஒருகால கட்டத்தில் பதிவேடாக விளங்கிய 'கலைச் செல்வி' யில் படைத்துள்ளார். வெறி, பூ, பெரியம்மா, புகை, தெய்வம் முதலான சிறுகதைகளைத் தினகரனிலும், புகை, தெய்வம் முதலான சிறுகதைகளை வீரகேசரியிலும் எழுதியுள்ளார். ஐம்பது வரையிலான. சிறுகதைகளைச் சு.வே. எழுதியுள்ளார் என மதிப்பிடமுடிகிறது. அண்மைய யுத்தம் காரணமாக நாமிழந்தவை உயிர்கள், சொத்துக்கள், விழுமியங்கள் என்பன மட்டுமல்ல, மீளப்பெறமுடியாத ஆக்கவிலக்கியப்படைப்புக்களுமாம். நாவற்குழியில்

மிக அவதானமாகப் பேணப்பட்டிருந்த சு.வே.யின் படைப்புக்கள் அண்மைய யுத்தவரக்கனின் பார்வையில்விழுந்து, தீய்ந்தழிந்துபோயிற்று. சு.வே.யின் சிறுகதைகளில் பன்னிரண்டு 1972 இல், அன்னை வெளியீடாக திருமகள் அச்சகத்தில் அச்சிட்டு வெளிவந்தது. இன்று அச்சிறுகதைகளும் கிடைத்த ஏனைய எட்டுச்சிறுகதைகளும் சேர்த்து பாற்காவடி என்ற தொகுதியாக வெளிவந்துள்ளது.

'மனிதனின் சிந்தனைகளைத்தூண்டி உணர்ச்சிகளைத் தொடுவதுடன், அவனுடைய பாவனாசக்தியை மிகுதிப்படுத்துவதாயும் மனதிற்கு இன்பம் அளிப்பதாயும் அமைவது இலக்கியம்' என்பது சு.வே. யின் கருத்து. 'நல்ல கருத்துக்களைப் பிரதிபலிப்பதால் ஒன்று நல்ல இலக்கியமாகிவிடுவதில்லை. நல்ல கருத்தை நல்ல கலையழகோடு பிரதிபலிப்பது தான் நல்ல இலக்கியமாகும்' என்ற சரஸ்வதி சிதம்பரநாதனின் கருத்துக்கும் இவர் உடன்பாடு. சு.வே.யின் சிறுகதைகளின் சிறப்பு நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு அவரின் கூர்மையான அவதானிப்பும், சுவையான வர்ணனையும், மானிட நேயத்தைத்தூண்டும் கருத்துக்களுமாம். அவரின் சிறுகதைகளில் கிடைக்காத பலன் , பாற்காவடி ஆகிய இரண்டும் ஈழத்தின் சிறுகதை இலக்கியத்திற்கு அணிசேர்ப்பன.

சு.வே. யின் முதற்சிறுகதை கிடைக்காத பலன் என்பதாகும். இச்சிறு கதைபின்னர் அவரது மண்வாசனைத் தொகுதியில் கிழவனும் வத்தகைக்கொடிகளும் எனப் பெயர் மாற்றம் பெற்று, கருவை நெகிழ்த்தியுள்ளது. 'கிழவனின் முகத்திலே தேவனின் சாட்டையடித்தழும்புகள் நன்றாகப் பதிந்திருந்தன. கன்னங்கள் குழிவிழுந்திருந்தன. வத்தகைக் கொடியின் இலையிலுள்ள வெட்டுக்கள் போல, தோல் அதில் எலும்போடு ஒட்டித்திரைந்து போயிருந்தது.' என சு.வே., கிழவனை அறிமுகப்படுத்தும்பாணி கலைத்துவமானது. வத்தகைக் கொடியில் மூன்று பிஞ்சு, இரண்டு காய்கள்பிடித்திருந்தன. அவற்றை அன்போடு தடவிக்கொடுக்கிறான். இவை எப்போது பழுக்கும்? ஆவலோடு காத்திருக்கிறான் கிழவன். இரண்டு காய்களும் களவுபோகின்றன. 'ஓகோ, யாரோ பசிக்கொடுமையால் கொண்டு போய் விட்டார்கள். போகட்டும்' எனக் கிழவன் திருப்திப்படுகிறான். மற்றைய மூன்று காய்களையாவது காப்பாற்றிவிட வேண்டுமென்பதற்காக. குடிசைவெளியே, பனிக்குளிரில் கட்டிலைப்போட்டுப் படுத்துக் காவல் காக்கிறான். காலம் கழிகிறது. அந்த வத்தகைக்காய்கள் பூரணமாகப் பழுத்து விடுகின்றன.

ஆனால் அவற்றைப் பிடுங்கக் கிழவன் எழுந்து வரவில்லை. இச்சிறு கதையைப் படித்து முடிந்ததும் எழுகின்ற உணர்ச்சிதான் இச்சிறுகதையின் வெற்றி.

சு.வே. யின் பாற்காவடி பலராரும் விதந்துரைக்கப்பட்ட நல்ல தொரு சிறுகதை. ஒருவிதத்தில் கோவில் வழிபாட்டிலுள்ள குறைபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் பாற்காவடியில் சு.வே. சுட்டிக்காட்டுகிறார். 'ஆத்ம சாந்திக்குறைவிடமான அந்தச் சந்நிதானம் கலகலப்பில் முழ்கிப்போய்க்கிடந்தது. இது தெய்வத்தின் சம்மதமன்று. மனித வர்க்கத்தின் ஏகோபித்த அபிப்பிராயம்' என்கிறார் சு.வே. கோயில்களில் கேளிக்கைகள் அதிகரித்து விட்டன. மயிலிறகுகள் கற்றை கற்றையாகக் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்ட காவடிகளை வசதியானவர்கள் எடுக்க நிற்கிறார்கள். இது வசதியான சுப்பிரமணியர் கோயிலில் திருக்கார்த்திகை அன்று காணப்படும் காட்சி. இன்னொரு இடத்தில் சடைத்து வளர்ந்த ஆலமரத்தின் கீழ் சிறுகுடிலில் வீற்றிருக்கும் அம்மன்கோவில். வீரனும் அவன் மனைவி வள்ளியும் பாற்காவடி எடுத்துத் தம் நேர்த்தியை நிறைவேற்ற வந்திருக்கிறார்கள். அங்கு கொட்டுமேளம், ஜனக்கூச்சல், பகட்டு எதுவுமில்லை. இருகோவில்களிலும் காவடிகள் புறப்படுகின்றன. இதுதான் பாற்காவடியின் கதை. ஆனால் சமூக ஏற்றத் தாழ்வுகளை மனிதரிலும் அவர்கள் வணங்கும் கோவில்களிலும் ஏற்றிக் கதையைச் சொல்லிவிடுகின்றமுறையும், அதற்குரிய சொற்களும் பாற்காவடியில் சு.வே. யின் படைப்பனுபவத்தினை உணரவைக்கின்றது.

சு.வே. யின் சிறுகதைகள் வெறும் கற்பனாவாதப்பிரசவங்களல்ல. அவை இந்த மண்ணின் வாழ்வையும் வளத்தையும் அவலத்தையும் ஆழமாகப்பேசுவன. யதார்த்தப்படைப்புகள், தேசிய இலக்கியம் என்பதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாக அமைவன. 1943 - 1950 களிலேயே சு.வே. யின் படைப்பிலக்கிய நோக்கு, மிகத் தெளிவாக இந்த மண் சார்ந்ததாக விருந்திருக்கின்றதென்பதற்கு பாற்காவடி (1947), மனித மிருகம் (1944) கிடைக்காத பலன் (1943) என்பன தக்க உதாரணமாகும் கதைகளாம். அந்த தேசிய இலக்கியநோக்கு 1950 -1970 களில் மிகவும் ஆழமாகவும் கனதியாகவும் மண்வாசனை (1963) , பெரியம்மா (1962) ஆகிய சிறுகதைகளில் படிமப்பட்டுள்ளது. சு.வே. தனது சிறுகதைகளில் இந்த நாட்டினையும், அதில் வாழ்ந்துவரும் மக்களையும் மட்டுமே சித்திரித்துள்ளார் என்பது மிகமுக்கியமான அம்சம், மண்வாசனைக் கதைகள் அவருடையவை. நவீன சிறுகதையின் அழுத்தமான பண்புகளைக் கொண்டவை.

சு.வே. யின் படைப்புக்களில் பேச்சு மொழி மிகமிக அவதானத்தோடு, அளவாகவே கையாளப்பட்டுள்ளது; எளிமையும் இனிமையும் வாசிக்கும் போது சலிப்பை ஏற்படுத்தாத பண்பும், உணர்வுகளைப் புலப்படுத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களும், இலக்கிய நடையும், சு.வே. யின் சிறுகதைகளில் விரவிக் காணப்படுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்தின் எரியும் பிரச்சினைகள், - இரண்டாம் உலகயுத்தகால அரிசிப்பஞ்சம் (காலத்தின் தண்டனை) கோயில்களில் ஆடுமாடு கோழிகளைப் பலியிடும் மிலேச்சத்தனம் (மனிதமிருகம்), தமது பிறந்த மண் இருப்பை அழித்துக் கொள்ள விளையும் பிள்ளைகள் (மண்வாசனை), சமூகத்திற்கு பயன்தராத கேளிக்கைகள் (பாற்காவடி) முதலானவை மண்ணின் ஆவணப்பதிவுகளாகவுள்ளன. மேலும், சு.வே. யின் சிறுகதைகளில் சம்பவங்களின் ஊடாக மனித உணர்வுநிலைகளைச் சித்திரிக்கின்ற பாங்கும், அவ்வுணர்வு நிலைகளுக்குப் பொருத்தமான பகைப்புல வர்ணனைகளும் கவிதாபூர்வமாக விழுந்துள்ளன; இலக்கியத் தேடலுடன் கூடிய கலைத்துவம் அவர் படைப்புகள் பலவற்றிலும் விரவியுள்ளது.

## சு.வே.யின் உருவகக்கதைகள்

'பண்டிதமணி வழி யாழ்ப்பாண பண்ணிலே விளைந்த செழுமைத்தமிழைப் படைப்பிலக்கியத்திலே புகுத்திய மூலவர். பண்டிதவர்க்கத்தினரைப் படைப்பிலக்கிய வாதிகளாக அங்கீகாரம் பெறச் செய்த முன்னோடி. மூதறிஞர் இராஜாஜி மெச்சிப் புகழ்ந்த உருவகக்கதைக் கலையின் பிதாமகர்' என ஈழத்தின் சிறுகதைத் துறையில் ஒரு புதிய பரிமானத்தை ஏற்படுத்திய எஸ்.பொன்னுத்துரையின் சு.வே. பற்றிய கணிப்பீடாகும். உண்மையில் சு.வே. யின் இன்னொரு படைப்புத்தளம் உருவகக் கதைகளாம்; ஈழத்து உருவக்கதைத் துறையின் பிதாமகர் அவரே. மணிற்கோயில், சுதந்திரம், மின்னற்கீற்று, வனமுல்லை, தொண்டர் இருவர், பாழ்நிலம், விண்ணும் மண்ணும், நிர்விகற்பம், இராசகோபுரம், பயணம், வீடு, வரம்புகள், பதி, விடிவெள்ளி, தரிசனம், மயக்கம், தர்மம் தெரிந்தவர்கள், வெறுங்கோவில், மனக்குருடு முதலானவை சு.வே. யின் உருவக்கதைகள், அவருடைய இக்கதைகளில் வளமான இலக்கிய உரைநடை அழகொழுக விளையாடும் திறனைக் காணலாம். மொழியை இனிமையாயும் தூய்மையாயும் கையாளும் லாவகத்தைப் புரிந்து கொள்ள சு.வே.யின்

உருவகக் கதைகளைப் படிக்க வேண்டும். 'சு.வே. யின் உருவகக் கதைகளின் நிலைகளன் யாழ்ப்பாணமே. அவற்றில் தாவரங்களும். பட்சிகளும், இயற்கையும். மானிடரும் புதிய கோலம் பெறுகின்றன. சாமான்யனுக்குப் புலனாகாத அற்புதக் காட்சிகள் அவை. அவர் ஆளுமையில் மகத்துவம் பெறுகின்றன' என்ற எஸ்.பொ. வின் மதிப்பீடு ஏற்புடையதே. நிகழ்ச்சியையும் கற்பனையும் தக்கவாறு கலாபூர்வமாகச் சு.வே தனது உருவகக்கதைகளில் பயன்படுத்தியுள்ளார். 'மணற்கோயில்' சு.வேயின் உருவகத்தைத் தொகுதியாகும்.

## சு.வே. யின் நாடகங்கள்

சு.வே. யின் படைப்பாற்றலை வெளிக் கொணர்ந்த இன்னொரு துறை நாடகமாகும்; சிறுகதை, உருவகக்கதை என்பனவற்றின் படைப்பாளியாக இனங்காணப்படும். சு.வே., நாடகத்துறைக்கு ஆற்றிய பணி சரிவர கவனத்திற்கு எடுக்கப்படவில்லை என்றே எனக்குப் படுகின்றது. 1965இல் இலங்கைக் கலைக்கழகம் நடாத்திய ஓரங்க நாடகப் போட்டியிலும். அதே கழகம் 1966இல் நடாத்திய முழு நீள நாடகப் போட்டியிலும் முதற்பரிசுகளை முறையே .வஞ்சி, எழிலரசி ஆகிய நாடகங்கள் மூலம் சு.வே. சுவீகரித்துக் கொண்டார். 1960இல் இலங்கை வானொலி நாடகப் போட்டியில் அவரின் மண் வாசனை முதற்பரிசினைப் பெற்றுக் கொண்டது; வானொலி நாடகப் போட்டியில் பரிசில் பெற்ற சு.வே. யின் இன்னொரு நாடகம் ஒருமை நெறித் தெய்வம் (1968) ஆகும். கணக்கில் இன்று கணிக்க முடியாதளவு வானொலி நாடகங்களைச் சு.வே. தந்துள்ளார். இலங்கை வானொலியில், தொடர் நாடகங்களைப் படைத்தளித்தவர்களின் எண்ணிக்கையில் சு.வே. முதல்வராவர்; ஏட்டிலிருந்து, (1964 - 16 வாரங்கள்), கிராமராஜ்யம் (1964 - 32 வாரங்கள்), பொன்னொச்சிக் குளம் (1967 - 1968, 97 வாரங்கள்) நாவயுகம் (1969 - 12 வாரம்) என்பன அவரது தொடர் நாடகங்களாகும். வாராவாரம் வானொலி இரசிகர்களை ஆவலோடு காத்திருந்து கேட்டுச் சுவைக்க வைத்த படைப்புக்கள் இவையாம். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல்வேறு களங்களையும் மானிட நடத்தைகளையும், அவர்தம் உணர்வுகளையும் இந்த நாடகங்களில் சு.வே. யதார்த்த பூர்வமாகப் படைத்துத் தந்துள்ளார்; யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழ் இந்த நாடகங்களில் அட்டகாசமாக வலம்வந்துள்ளன. இலங்கை வானொலியை ஒரு காலகட்டத்தில் நன்கு பயன்படுத்திக்

கொண்டவர் சு.வே. இலக்கிய இரசனை என்ற தொடரில் 32 வாரங்கள் (1965) உரை நிகழ்த்தியுள்ளார். திருக்குறட் சித்திரம் (1968 - 36 வாரங்கள்). நாட்டுக்கு நல்லது (1969 - 24 வாரங்கள்) என்பன சு.வே. இலங்கை வானொலியில் நிகழ்த்திய உரைச் சித்திரங்களாகவுள்ளன. இந்தச் சங்கதிகள் இன்றைய இளந்தலை முறையினருக்குத் தெரியாது போய்விட்டது. சு.வே. என்ற படைப்பாளியை எடைபோடும் போது. அவரது மேற்குறித்த நாடக, வானொலிப் பணிகள் சீர் தூக்கிப் பார்க்கப்பட வேண்டும். இவற்றின் மூலப் பிரதிகள், நாவற்குழி யுத்தத்தில் தீக்கிரையாகிவிட்டமை ஈழத்தமிழிலக்கியத்தின் சோகமாகும்.

## சு.வே. யின் சிறுவர் கதைகள்

சு.வே., பல்வகைப் பாட நூல்களை படைத்துள்ள போதிலும். அவர் மீளக்கூறிய இலக்கியக்கதைகளான சந்திரமதி, குகன் ஆகிய இரு சிறுநூல்களும் சிறுவர் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பெரும் பணியாக எனக்குப்படுகின்றது. சிறுவர்களின் வயது, உளநிலை, ஆளுமை, கிரகிக்கும் திறன். ஒழுக்கம் முதலான பண்புகளைப் புரிந்து எழுதிய படைப்புக்கள் இவையாகும். சிறுவர் இலக்கியத்தை ஆராய்பவர்கள் ஈழகேசரி நா. பொன்னையா வெளியிட்ட இவ்வகை நூல்களை வெறும் உப பாடநூல்களாகக் கருதி வருவது. சிறுவர் இலக்கியத்திற்கிழைக்கும் தவறாகும்.

சு.வே. ஈழத்தின் மூத்த எழுத்தாளர்; முன்னோடிப் படைப்பாளி. தமிழிலக்கியத்தின் பல் துறைகளிலும் ஆரோக்கியமாகக் காலடி பதித்த கலைஞர்.

**செங்கை ஆழியான். க.குணராசா**

'ஹம்சம்'
75/10A. பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்,
10.01.2002.

# சு.வே. யின் சிலவார்த்தைகள்

சின்னஞ்சிறிய, எளிய மான் மனக்கோயிற் கொட்டிலில் இருந்து, பல்லாண்டுகளுக்குமுன் தலைமேற் கொண்ட இந்தப் பாற்காவடியை, கன்னித் தமிழ்த் தேவியின் திருக்கோவிற் சந்நிதியிலே, இலக்கிய ஆர்வலர்களான பக்தர்களின் திருமுன்னிலையில் இறக்கி வைத்துள்ளேன். என் பணி முடிந்து விட்டது; சுபம்!

இனி, இந்தப்பாற்காவடியை உற்று நோக்கி இந்தப் பக்தர்களிற் சிலர் முகஞ் சுழிக்கலாம்; சிலர் பூ! இவ்வளவுதானா' என்று ஏளனஞ் செய்யலாம்; சிலர் ஆளைப் பார்த்து ஆட்டத்தைப் பாராமல் இருக்கலாம்; சிலர் கெக்கட்டமிட்டுச் சிரித்துவிட்டுப் போகலாம்; சிலர் தம் மனச்சலனத்தை ஏதோவோர் பாவமாகக் காட்டலாம்; சிலர் நீண்டதொரு பெருமூச்சு விடலாம். எல்லாம் எனக்கு ஒன்றே; நன்றே.

அத்தகையதொரு பெருமூச்சு யாராவது பக்தன் ஒருவனிடமிருந்து வெளிப்படுமாயின், அஃதொன்றே எனக்குப் போதும், நான் மனநிறைவடைவதற்கு; என் நெஞ்சு குளிர்வதற்கு.

இந்தப் பாற்காவடியே, எனக்கு இவ்வுலக வாழ்வின் எச்சங்கள், மிச்சங்கள்; வாரிசுகள். இவை என் பெயர் விளங்க வந்த குழந்தைகள். இவற்றினூடாக என்னைக் கண்டு விமரிசனம் செய்யுங்கள். நன்றும் தீதும் எனக்கு ஒன்றே.

இந்தக் குழந்தைகள் சிலவற்றின் பிறப்புச் சான்றிதழ் கிடைக்கவில்லை. எனது மறதி இருள் திரையை நினைவுக் கூரம்பால் கிழித்து, குத்துமதிப்பாகச் சிலவற்றின் பிறப்பை அறிந்து குறித்துள்ளேன்.

இந்தப் பாற்காவடியில் வரும் சிலகதைகளுக்கு சில விளக்கம் தரவேண்டிய கடமை எனக்குண்டு. சிலகதைகள் உருவான காலப்பின்னணியை இன்றைய தலை முறையினரும் எதிர்காலத்தினரும் விளங்கிக் கொள்ள முடியாது. 'காலத்தின்தண்டனை' இரண்டாம் உலக மகாயுத்த காலப்பகுதி நிகழ்வைக் கருவாகக் கொண்டது. அப்போதுதான்

அரிசிப் பஞ்சம் ஏற்பட்டு. உணவுப் பங்கீட்டு முறை - அரிசிக்கூப்பன முறை- அறிமுகப்படுத்தப்பட்டது. 'மனித மிருகம்' என்ற கதை, யாழ்ப்பாணத்தில் கடவுளர் பெயரால், 'வேள்வி' என அழைக்கப்பட்டு, ஆடு, கோழி என்பவற்றைப் பலியிடும் வழக்கம் பரவலாகக் காணப்பட்ட காலக் கருவைக் கொண்டது. 'அன்புக்கறை' படைக்கப்பட்ட காலத்தில் (1962) ஒரு இறாத்தல் இறைச்சி பத்துருபா; ஐந்து சதத்துக்கும் இறால் வாங்க முடியும் என்றால் இன்று யாராவது நம்புவார்களா?

செய்ந்நன்றி மறவாமையாகிய உயர்தருமம் போற்றப்பட வேண்டிய ஒன்று. இப்பாற்காவடி, நூல் வடிவெடுப்பதற்கு ஆகுஞ் செலவில் கணிசமான ஒரு தொகையை (ரூ. 30.000) வழங்கிய வடக்கு புனர் வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி. தமிழ் விவகாரத்துறை அமைச்சுக்கும் அந்நிதியைப் பெற்றுத் தந்த யாழ் இலக்கிய வட்ட நிர்வாகத்துக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள். நாவற்குழியூரைச் சேர்ந்தவரும் யாழ் பல்கலைக்கழக மாணவரும் இலக்கிய ஆர்வலருமான விக்னேஸ்வர மூர்த்தி உதேஸ் என்பவர், கலாநிதி. க. குணராசா அவர்களின் வழிகாட்டலின் படி, யாழ் பல்கலைக்கழகத்தில் நூலகப் பிரிவிலிருந்த ஈழகேசரியின் பழைய இதழ்களிலிருந்து எனது கதைகளைப் பல நாள் முயன்று பிரதிசெய்து தந்தார். அவர் செய்த உதவி வானிலும் பரந்தது; நினைந்து நினைந்து போற்றுதற்குரியது.

இன்றைய இலக்கிய உலகினால் தொண்ணூறு விழுக்காடு மறக்கப்பட்டு, எங்கோ ஒரு மூலையிலே இருளில் கிடந்த என்னை மறுமலர்ச்சிச் சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள் என்பவற்றினூடாக வெளிவரச் செய்த பெருமை, இலக்கியவுலகிலே புகழ்க்கொடி நாட்டிய தம்பி செங்கைஆழியானுக்கே உரியது. அம்மட்டோ! இந்தப் பாற்காவடி இன்று உங்கள் கையில் இருப்பதற்கான முழுமுதற் காரணர் செங்கை ஆழியானே. ஈழகேசரிக் கதைகளைக் கண்டு பிடித்த, என்னை இப்படி ஒரு பாற்காவடி எடுக்கலாம் என வழிகாட்டியது. நிதியுதவிபெற்றுத்தந்தது. அச்சு வேலை அனைத்தையும் தாமே பொறுப்பேற்றுக் கொண்டது ஆகிய அனைத்து உதவிகளும் செங்கைஆழியானுடையதே. அவர் செய்த உதவிக்குஈடாக 'வையகமும் வானகமும் மாற்றல் அரிது'

இலக்கிய ஆர்வலர்களே - பக்தர்களே - வணக்கம். இனி. பாற்காவடியை உற்று நோக்குங்கள், ஆட்டத்தைப் பார்த்துச் சுவையுங்கள்.

நாவற்குழி தற்காலிக முகவரி: 119, கன்னாதிட்டிவீதி. யாழ்ப்பாணம்.

**சு. வே.**

# பதிப்புரை

மூத்த படைப்பாளி சு.வே. யின் சிறுகதைகளைத் தொகுத்துப் பாற்காவடி என்ற பெயரில் தமிழுலகிற்கு வழங்குவதில் யாழ். இலக்கிய வட்டம் பெருமிதமடைகின்றது. ஈழகேசரிக் காலத்திலிருந்து எழுதிவருபவர்; ஈழகேசரிப் பண்ணையில் முகிழ்த்தவர். சிறுகதை, உருவகக் கதை, நாடகம் எனப் பல்துறைகளிலும் ஆழக்கால்பதித்தவர். சு.வே, யாழ் இலக்கிய வட்டத்தின் மூத்த உறுப்பினருமாவார்.

வடக்கு அபிவிருத்தி , புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழமுலாக்கல் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, யாழ் இலக்கிய வட்டத்திற்கு நூல்வெளியீட்டு ஊக்குவிப்பு நிதியாக வழங்கிய நிதியையும் பயன்படுத்தி இத் தொகுதி அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. அமைச்சருக்கு நன்றி கூறுகின்றோம்.

ஆனைக்கோட்டை.
10.12.2001.

புத்தொளி. ந.சிவபாதம்
பொருளாளர்,
யாழ். இலக்கியவட்டம்.

# சமர்ப்பணம்

என்னிதயக் குகையில் ஒளிதருஞ் சோதி,
என்னுள்ளக் குடிலில் உறைதருந் தெய்வம்
என்னினை வெல்லாம் பரந்த நீள்கனல்
என்னூனே யன்றி உயிருந் தளிர்த்திட
அன்பெனும் மாரி பொழிந்திடும் மாமுகில்
என்னிலை இன்று இந்நிலை யாம்வணம்
வாழ்வும் வளமும் வழங்கிய வள்ளல்,
அமரனாகி நினைவில் வாழ்வோன்
'ஆசையப்பு'
**விசுவலிங்கம் கந்தையா**
அன்னான்,
பொன்னார் தூய பதமல ரிணைக்கே
இந்தப் பாற்காவடி

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பாற்காவடி (ஈழகேசரி - 1947) | 1 |
| 02. | மண்வாசனை (கலைச்செல்வி - 1963) | 7 |
| 03. | கிடைக்காத பலன் (ஈழகேசரி - 1943) | 16 |
| 04. | வெறி (தினகரன் - 1958) | 21 |
| 05. | புத்தரின் சுவடு (ஈழகேசரி - 1944) | 30 |
| 06. | ஸ்ரைக் (கலைச்செல்வி - 1962) | 38 |
| 07. | மனிதமிருகம் (ஈழகேசரி - 1944) | 51 |
| 08. | புதுவகைத்துறவி (ஈழகேசரி - 1946) | 55 |
| 09. | பூ (தினகரன் - 1965) | 63 |
| 10. | தோழன் (ஈழகேசரி - 1955) | 75 |
| 11. | காலத்தின் தண்டனை (ஈழகேசரி - 1949) | 83 |
| 12. | தகிப்பு (கலைச்செல்வி - 1960) | 90 |
| 13. | சிற்றன்னை (ஈழகேசரி - 1949) | 98 |
| 14. | அக்கினி (கலைச்செல்வி - 1960) | 112 |
| 15. | அன்புக்கறை (ஈழகேசரி - 1949) | 121 |
| 16. | பாரிசவாதம் (கலைச்செல்வி - 1966) | 133 |
| 17. | புகை (வீரகேசரி - 1956) | 144 |
| 18. | தெய்வம் (வீரகேசரி - 1955) | 153 |
| 19. | வாய்சொல்லில் வீரரடி (கட்டுரை மஞ்சரி - 1985) | 162 |
| 20. | பெரியம்மா (தினகரன் - 1962) | 166 |

# 01. பாற்காவடி

அன்று திருக்கார்த்திகை. அந்தக்கிராமத்திலுள்ள சுப்பிரமணியசுவாமி கோயிலில் ஒரே கலகலப்பு. போவோர் வருவோரின் நடமாட்டம் ஒருபுறம்; தெய்வ சந்நிதானத்தை உலக வியவகாரங்கள் பேசுவதற்கேற்ற இடமாக்கிக்கொண்ட கும்பல் ஒருபுறம்; பலவர்ணப் புடைவைகளையணிந்துகொண்டு வானவில்லின் நிறத்தைத் தெறிக்கவிட்டு நடமாடிய பெண்கள் கும்பல் ஒருபுறம். இப்படியாகக் காட்சி தந்தது அந்தத் திருக்கோயில். பூசைக்குரிய எவ்வித ஆயத்தங்களும் தென்படவில்லை. ஆனால் அங்குள்ள கலகலப்பு, சந்தை இரைச்சலையும் வென்றுவிட்டது. ஆத்மசாந்திக்குறைவிடமான அந்தச் சந்நிதானம் வெறும் கலகலப்பில் மூழ்கிப்போய்க் கிடந்தது. இது தெய்வத்தின் சம்மதமன்று; மனித வர்க்கத்தின் ஏகோபித்த அபிப்பிராயம்.

சிறிது நேரஞ்சென்றது. அந்தக்கலகலப்பு குறைந்ததோ அல்லது வேறு ஒரு ஒலி அதை விழுங்கியதோ என்னவோ, கொட்டுமேளம் முழங்கத் தொடங்கியது. அதை அடுத்து நாதஸ்வரம் முதலிய ஏனைய வாத்தியங்களும் முழங்கத் தொடங்கின. பெரிய கண்டாமணி தனது பேரொலியை காற்றுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தது. என்ன, பூசைக்கு ஆயத்தமா?

அதோ வரிசையாகப் பல காவடிகள் வைக்கப்பட்டிருக்கின்றனவே. அவை ஒவ்வொன்றும் பலபேதப்பட அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றனவே. ஆனால், ஒரேயொரு ஒற்றுமை எல்லாவற்றிலும். மயிற்றோகைகள் கற்றை கற்றையாகக் கட்டப்பட்டிருக்கின்றன. எவ்வளவு அழகிய தோகைகள். ஒவ்வொரு தோகைக் கண்ணும் கண்ணைச் சிமிட்டி விளையாடுகின்றது. ஆனால், இந்த அழகில் எத்தனை எத்தனை வேதனைகள் மர்மாக மறைந்திருக்கின்றனவோ? அந்தத் தோகைகள் அத்தனையும் மயிலின் அன்பளிப்பா? மயில் மனங்கனிந்து உதிர்ந்த இறகுகளா? மனிதனிடத்தில் மறைந்திருக்கின்ற மிருக சுபாவத்தைத் தெய்வத்தின் பெயரால் புனிதமாக்கலாமென்பது அவன் எண்ணம். இவ்வித மிருக சுபாவத்தின் வெற்றிக்குப் பலியான மயில் தன் மரண வேதனையில் கடைசி மூச்சில் ஈந்த தோகைகள் தாம் அவை. அகிம்சையின் சிகரமான தெய்வத்திற்கு இம்சையினால் வந்த தோகை ஒரு புனித வஸ்துவாம்.

அந்தக்காவடிகளிற்குப் பக்கத்திலே அதனதன் சொந்தக்காரர் நிற்கின்றனர். அவர்கள் அரையிலே உயர்வான சரிகை இழைத்த பட்டுவேட்டி. அதை அவர்கள் கச்சையாகக் கட்டியிருக்கின்றனர். அதன் மேலே அதே சாதிச்சால்வை. மார்பிலே மூன்றுபட்டுச் சங்கிலி அசைகிறது. அட்சரக்கூடு வேறு. அவர்கள் மார்பிலும் கைகளிலும் எண்ணிலடங்கா செடில்கள். சூரிய ஒளியில் மீன் செதில்கள் மின்னுவதுபோல அவைகள் ஒளிவீசுகின்றன. முதுகிலே 108 'செடில்கள்' குத்தப்பட்டு நூற்கயிறுகள் இரண்டின் ஒருபக்க நுனிகளிலே அவை பிணைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற நுனியிரண்டும் அவர்கள் தோளின்மேல் அநாயாசமாக ஒரு நாகரிகமாக எறியப்பட்டிருக்கின்றன.

எல்லா வித ஆயத்தங்களிலும் செய்கைகளிலும் பணத்தின் செழிப்பு பரிபூரணமாகத் தெரிந்தது. ஆம், அன்று அந்த கோவிலில் காவடி எடுக்கும் அத்தனை பேரும் அந்த ஊரின் பெரும்புள்ளிகள்; நடப்புக்காரர்; பணக்காரர். எனவே மேளக்கூட்டங்களிற்கும், பாட்டுச்சமாவிற்கும் பரிமளிப்புக்கும் சொல்லவா வேண்டும்.

2

**வா**னைத்தொடும் கோபுரங்கள் கொண்ட அந்தச் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குக் கிழக்கே ஒரு கூப்பிடுதூரத்தில் ஒரு அம்மன்

கோயில் இருந்தது. பரந்து சடைத்துப்போய் எத்தனையோ தலைமுறைகளைக் கண்ட அந்த ஆலமரத்தின் கீழே வெயிலும், மழையும் கூசாமல் உட்பிரவேசிக்கக்கூடிய ஒரு சிறிய கொட்டிலிலே அவள் இருந்தாள். பெரும் செல்வர்களின் அந்தக் கோவிலுக்கும் பஞ்சமர்களின் இந்தக்கோயிலுக்கும் வெளிப்பார்வைக்குப் பெரும் வித்தியாசம் தான். என்றாலும் இரண்டிலும் தெய்வம் உண்டு என மனிதன் நம்பினான். மனிதன் எந்தெந்த அந்தஸ்தில் இருந்தாலும் அவன் மனம் தனக்கென ஒன்றை வைத்திருப்பதில் திருப்தி அடைகிறது. அந்த ஏழைப் பஞ்சமர்கள் தங்களுக்கென்று உண்டாக்கப்பட்ட அந்தக் கோயிலினால் பரம திருப்தி அடைந்தார்கள். அந்தத் திருப்தியை அவர்கள் வருஷத்திற்கு ஒரு நாள் காட்டி வந்தார்கள். அன்று தான் அந்த ஜெகன்மாதா எண்ணெய்த்திரியையும், கர்ப்பூர ஒளியையும், சாம்பிராணி மணத்தையும் கண்டு அனுபவிப்பாள். மற்றை நாள் எல்லாம் ஏகாந்தத்தில் யோகம் செய்யவேண்டியதுதான்.

ஆனால் அந்த வழமையை அன்று அந்தத் திருக்கார்த்திகை புனித தினத்தன்று யாரோ கெடுத்துவிட்டார்கள். அந்த உலக மாதாவின் அனுக்கிரகத்தின் பேரில் அன்று அந்த சந்நிதியிலே யாரோ காவடி எடுக்கப்போகிறார்கள். ஆனால் அங்கே கொட்டுமேளத்தின் ஒலி கேட்கவில்லை. சனக்கூட்டத்தின் கூச்சல் கேட்கவில்லை. பகட்டின் பிரதிபிம்பம் கண்ணை மயக்கவில்லை. மனித முயற்சியினாலே எத்தனையோ வேதனைகளை மறைத்து வைத்து உருப்பெற்று விளங்கும் காவடிகள் அங்கு காணப்படவில்லை. ஆனால் அங்கு தெய்வீக அமைதியும், பக்தியும், பரிசுத்தமும் மாத்திரம் இருந்தன. இரண்டே இரண்டு பேர் தான் அந்தக் திருக்கோயிலில் நின்றார்கள், ஆணும் பெண்ணுமாக.

எலும்புகள் தம் தன்மையை மறந்து வெளியே புறப்பட்டுக் காணப்பட்டன. தோளிலே அங்கங்கு சுருக்கங்கள் காணப்பட்டன. வேப்பமரத்தின் மேற்பட்டையைப் போல் தலைமயிர் பல நாள் வாரப்படாமல் பின்னிப்போய்த் தொங்கிக்கொண்டிருந்தது. அவனையும் அறியாமல் ஒரு இளைப்பு அவனில் ஒளித்துக்கொண்டிருந்தது. ஆம், சமீபத்தில் நோயினால் பீடிக்கப்பட்டு எழுந்தவனைப் போல் காணப்பட்டான். அம்பாளை நோக்கி கைகூப்பிக்கொண்டு தன் பக்தியை கண்ணீர் மூலம் வெளிப்படுத்திக்கொண்டிருந்தான். வீரன் என்பது அவன் பெயர்.

ஆனால் அவன் மனைவி வள்ளி ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள். அவள் தன்னுடைய பாற்காவடியை பக்தி சிரத்தையுடன்

ஆக்கிக்கொண்டிருந்தாள். பளபளவென ஒளிவீசும் பால் நிறைந்த செம்பு; அதன் வாயில் வேப்பிலை. அதன் மேல் தேங்காய். அதன் மேல் ஒரு பூ. அவ்வளவுதான் அக்காவடி

பாற்காவடி தயாராகிவிட்டது. இனி அதைத் தலையில் தூக்கி வைத்துக்கொள்ள வேண்டியதுதான். தூரத்திலே கேட்ட மேள ஒலியின் 'கிருதா' வேலைப்பாடுகள் அந்தப்பணக்காரக் காவடிகள் புறப்பட்டுவிட்டன என்பதை அறிவித்தன. வள்ளி இடுப்பிலே சொருகியிருந்த கற்பூரத்தை எடுத்துக்கொளுத்தினாள். உள்ளே எரிந்துகொண்டிருந்த எண்ணெய் விளக்கைத் தூண்டிவிட்டாள். அவள் கைகள் கூப்பின. கண்கள் மூடின. தேவி உன் செயல்தான் என்று வாய் முணுமுணுத்தது. மனம் சிறிது நேரம் தெய்வ பக்தியில் ஈடுபட்டது. இந்த மனம் சிறுகுழந்தைகளைப் போன்றது. எப்படி சிறு குழந்தைகள் ஒன்றிலேனும் லயித்திரார்களோ அதைப்போல மனதிற்கும் சுயேச்சையாக அங்குமிங்கும் ஓடித்திரியத்தான் விருப்பம். அதிலும் கழிந்த சில சம்பவங்களை அசைபோடுவதென்றால் மிகுந்த பிரீதி. அவள் மனமும் கழிந்த சில சம்பவங்களை நினைத்துக்கொண்டது.

## 3

இயற்கைக்குப் பாரபட்சமற்ற தன்மைதான் சிறந்த பண்புபோலும். வள்ளியினுடைய அநாதைத்தன்மையை ஆற்றொணா மனவேதனையை சிறிதும் பொருட்படுத்தாமல் அந்த மழை கொட்டிக்கொண்டிருந்தது. இன்னது செய்வதென்று அறியாத மனநிலையில் அங்கும் இங்கும் ஓடினாள். உக்கி இறந்த கூரையில் இருந்து ஒழுக்கு விழுந்துகொண்டிருந்தது. வேதனையால் சிதறுண்ட அவள் மனதிலிருந்தும் எண்ணற்ற சிந்தனைகள் வெளிவந்துகொண்டிருந்தன.

அந்தத் தென்னந்தோட்டத்தின் ஒரு மூலையிலே காவற்காரன் ஒருவனின் குடிசை; ஏழ்மையின் சகலவிதமான லட்சணங்களிற்கும் அது வாசத்தலமாக விளங்கியது. அந்தக் குடிசையின் ஒரு பக்கத்திலிருந்து முனகல் சத்தம் கேட்கிறது. மரணவேதனையின் கைப்பிடியில் நசியும் ஆத்மாவின் துடிதுடித்த குரல் போல. இடையிடையே வேதனையின் உச்ச நிலையைப் புலப்படுத்தும் "ஐயோ, ஐயோ" என்ற ஒலம். அதோ வள்ளியின் கணவன் வீரன் நோயாகப் படுத்திருக்கிறான். கடுமையான நோய்; ஆளையே கொல்லக்கூடிய வியாதி. சுவாத சன்னி. தகுந்த வைத்திய சிகிச்சைக்கோ. பராமரிப்பிற்கோ தேவையான பணம் அவளிடம்

அவன் பக்கத்திலே வள்ளி நிற்கிறாள். அழுதழுது கண்கள் சிவந்து போயிருக்கின்றன. வீரனின் ஒவ்வொரு முனகல் சத்தமும் கூரிய ஈட்டிபோல அவள் மார்பை ஊடுருவியது. பாசத்தினால் பிணைக்கப்பட்ட ஒரு உள்ளத்தின் வேதனை மற்ற உள்ளத்திலும் பிரதிபலித்தது இரு உள்ளங்களின் அன்புப் பிணைப்பு உண்மையான இன்பத்தை உண்டாக்குமென்பது உண்மைதான். ஆனால் அந்த அன்பின் பயனாக விளைந்த வேதனையும் மனதைக் கொல்லும் என்பது அவ்வளவுக்கு உண்மையே.

அவளும் என்ன செய்வாள் பாவம்! தன்னாலான மருந்துகள். பரிகாரிப்புகள் எல்லாம் செய்துவிட்டாள். அந்தக் கொடிய வியாதிக்குத்தான் எவ்விதமான மனப்பண்புகளும் இல்லையே. காலையிலே வந்திருந்த அந்தச் சுதேச வைத்தியன் சொன்ன ஒவ்வொரு சொல்லும் நினைவு ரூபமாக வந்து அவளைக் கொன்றன.

"ஆ, சுவாத சன்னியாம்: முற்றிவிட்டதாம்: ஐயோ! நான் என்ன செய்வேன்! ஏழ்மையை அத்திவாரமாகக் கொண்டு அன்புக்கற்களால் கட்டிய இன்பக்கோட்டையில் ஒரு பெரிய இடியாக வந்ததே இந்த் வியாதி. இந்த நோய்க்கு நல்ல வைத்தியம் செய்யவேண்டுமாம். இல்லாதுபோனால்.. இல்லாதுபோனால்... ஐயோ! என்னால் நினைக்கவே முடியவில்லை. நல்ல வைத்தியம் - இங்கிலீஸ் வைத்தியம் - நான் எங்கே போவேன்? அநாதை. அதற்கும் பணம் வேண்டும். பணம் - அதிருந்தால் இந்த நிலையே வந்திராதே. எத்தனை பகல் எத்தனை இரவு பட்டினியாக வேலை செய்தோம். அதன் பயன்தானே இந்த நோய். ஆ! தெய்வமே. மாரியம்மா."

வெறிகொண்டவள் போல் காணப்பட்டாள் வள்ளி. தலைமயிரை கைகளால் பிசைந்தாள். மார்பிலே இரண்டுகைகளாலும் குத்தினாள். தேகம் முழுவதும் பதறத் தொடங்கியது. அவளுடைய இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி இட்டுவிட்டது. வீரனின் தண்ணீ தண்ணீ என்ற தீனக்குரல். அன்றிரவு வெளியந்தகாரம் வள்ளியின் மனஅந்தகாரத்துடன் போட்டி இட்டது. மழையும் கொட்டிக்கொண்டிருந்தது. புயற்காற்று சீறிக்கொண்டிருந்தது. இயற்கையின் கொந்தளிப்புக்கு முன்னால் எந்த சீவராசியும் தன்னாண்மையைக் காட்ட விரும்பவில்லை. ஆனால் அந்த ஒற்றையடிப் பாதையில் மாத்திரம் ஓர் உருவம் விரைவாக நடந்து கொண்டிருந்தது. தலைவிரி கோலமாக நனைந்த துணியில் இருந்து நீர் சொட்டச்சொட்ட நடந்தது. அந்தக் கனத்த இருளிலும் அதன் கூரிய கண்கள் வழிபிடித்தனவோ? அல்லது பாசம் வழிகாட்டியதோ யாரறிவார்?

ஆனால் ஒன்று மாத்திரம் உண்மை. திடமான பிடிவாதத்தின் பேரில் ஏதோ ஒன்றை சாதித்துவிடும் துணிவில் சென்றது அது.

வானத்தில் ஒரு மின்னல் ஓடிற்று. ஒரு கணநேரம் ஜெகம் அனைத்தும் சோதி வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தது. அத்துடன் கூடவே வள்ளியின் பரிதாப கோலத்தையும் அது எடுத்துக்காட்டியது.

வள்ளியின் நெஞ்சம் தகுந்த வைத்தியத்தையும் நம்பவில்லை. தகுந்த பராமரிப்பையும் நம்பவில்லை. தன் குலதெய்வத்தின் கருணையைத் தான் நம்பியது. அந்த பக்திப் பெருக்கால், வெறிகொண்டு கூத்தடிக்கும் இயற்கையின் கொந்தளிப்பு அவளுக்குத் தெரியவில்லை. எதுவும் பயங்கரத்தைக் கொடுக்கவில்லை. வெகுவிரைவாக நடந்து மாரியம்மன் கோவிலை அடைந்தாள்.

அந்தக் கோயில் இருளோடு இருளாய்ப் பயங்கர தோற்றத்தை அளித்தது. அந்தப் பயங்கரத்தை மிகைப்படுத்துவது போல ஆலமரத்தில் இருந்த ஆந்தை அலறியது. ஆனால் வள்ளி கண்ட கோயிலிலே இவை ஒன்றும் இல்லை. அவள் வேறொரு உலகில் நடமாடிக்கொண்டிருந்தாள். "தேவி மாரியம்மா! எங்கள் குலதெய்வமே! இதுவும் உன் சோதனையோ? என் கணவனைக் காப்பாற்ற உன்னால் முடியும். வைத்தியம், பராமரிப்பு இவை ஒன்றும் எனக்குத்தெரியாது. நீ தான் என் கணவனைக் காப்பாற்ற வேண்டும் அல்லாது போனால் என்னையும் கொன்றுவிடு. என் மாரியாத்தா! உனக்குத் தெரியாததொன்று உண்டோ? என் மனம் படும்பாடு நீ அறியாததோ? என் தேவி! என் கணவனைச் சுகமாக்கிவிடு. வரும் திருக்கார்த்திகைக்கு உன்பெயரால் நான் பாற்காவடி எடுக்கிறேன்" என்று உரக்க ஓலமிட்டாள். அதன் எதிரொலியாற் போலும் அந்த ஆந்தையின் குளறலும் இல்லாமல் போய்விட்டது.

4

கொட்டுமேளத்தின் ஓசையிலே, மனித கும்பலின் மத்தியிலே, பணத்தின் இறுமாப்பிலே, பகட்டின் பிரதிபலிப்பிலே, இம்சையின் பதிவிலே செல்லும் காவடிகள் - செடிற்காவடிகள் - ஒரு கூப்பிடுதூரத்திற்கு முன்னால் சென்று விட்டன. பக்திக்கனலிலே, அன்பின் பெருக்கிலே எடுக்கப்பட்ட பாற்காவடி ஒன்று அவற்றின் பின்னால் மெல்லச் மெல்ல சென்றது. அதனோடு ஒரு ஆண் உருவம் எலும்பும் தோலுமாய்ப் பின்தொடர்ந்தது.

❖❖❖

# 02. மண்வாசனை

"உ...ஸ்.... ஸ் ..... அப்பாடா"

காலை முழுதும் காட்டியும் மறைத்தும் கண்ணாம்பூச்சி ஆட்டமாடி. ஈற்றிலே வைரமுத்தரிற் கவிந்து. அவரைப் பரிபூரணமாக ஆட்கொண்டுவிட்ட களைப்பின் சொல் வடிவங்கள் அவை. அவர் தமது தோளிற் கிடந்த கலப்பையையும் நுகத்தையும் அநாயாசமாக ஆனால் வெகு பரிவுடன் இறக்கி, பல்லாண்டு பல்லாண்டாகக் கலப்பையும் நுகமும் கிடந்து தழும்பு கண்ட அந்தச் சுவரிலேயே சார்த்திவிட்டு தலையிற் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

அவர் இப்பொழுதும் வயலில் நின்றிருப்பாரானால் இன்னுங் கொஞ்சநேரம் உழுதிருப்பார்; கால்கள் மாடுகளின் பின்னால். அலையலையாகச் சரிந்துகிடக்கும் உழவுச் சால்களில் நடக்க. அங்கிருந்து பரவும் அபூர்வமான புதுமண் வாசனையை முகர்ந்துகொண்டு. சிறுகுழந்தையைப் போலத் தள்ளாடித் தள்ளாடி நடை பழகியிருப்பார். அப்பொழுது அவர் மனம் பலபல எண்ணங்களை ஓடவிட்டு. அவற்றுக்கு அருத்தமும் அழுத்தமும் கொடுக்காமல் தொட்டுந் தொடாமலும் அலைந்து திரிய. நெற்றி வியர்வை வழிந்து நெற்றிப்பொட்டைக் குளிர்வித்துக் கீழிறங்கி வாயில் நுழைந்து, வெற்றிலைச் சாற்றோடு இணைந்து புதுச்சுவை கூட்ட. அவையெல்லாவற்றையும் அநுபவித்துச் சுவைத்துக்கொண்டு உழுதிருப்பார். இரண்டு நாட்களுக்கு முன் மழை பெய்திருந்த போதிலும் பங்குனிமாத வெயில் தன் தனித்தன்மையையைக் காட்டிக் கொண்டு தழலைச் சொரிந்து தகித்தது. பாவம்! மாடுகள்

களைத்துப்போய் நுரை கக்கத் தொடங்கி விட்டன. வாய் பேசாது ஏவியவற்றை முடிக்கும் அந்த எருதுகளே வைரமுத்தரின் கண்கண்ட தெய்வம். தெய்வமும் வாய் பேசுவதில்லையன்றோ? அவர் இலக்கணப் படி மாடுகள் உயர்திணைப் பொருள்கள். அதனால் அவைகளை - அவர்களை - மேலும் வருத்தாமல் அவிழ்த்து விட்டார். அவை பக்கத்திலிருந்த குளத்தை நாடிச் சென்றன.

அவிழ்த்து விட்ட மாடுகள் இன்னும் வீடுவந்து சேரவில்லை. துண்டை உதறி விரித்துவிட்டு முற்றத்து மாமரத்தின் கீழ்ப் படுத்துவிட்டார் வைரமுத்தர். களைப்பு வேசிப்பெண்ணைப் போன்றது. இரண்டும் சமய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்து முடிவிலே அவனவன் பெலவீனத்தை வாயிலாகக் கொண்டு. அவனவனை முழுதும் வசமாக்கி மயக்கிவிடும். இவ்வளவு நேரமும் எங்கோ பதுங்கிக்கிடந்த களைப்பு. அவரை முற்றுமுழுதாக ஆட்கொள்ள. அவர் அதனோடு புணர்ந்து மோனநிலையிற் கிடந்து. கண்களைச் சொருக விட்டு. அதைச் சுவைத்து அநுபவித்தார். களைப்பிலே பிறந்த சோர்வை. உள்வாங்கி அனுபவிப்பதென்பது பலருக்குக் கிட்டாத ஓரின்ப அனுபவம்.

"பூரணம்" என்று மனைவியைக் கூப்பிட்ட பின்னர்தான். தமது மோனப் பெருநிலையில் ஒரு பொள்ளல் விழுந்துவிட்டதை அவரால் உணரமுடிந்தது. ஆண்டான்டு காலமாகக் கூப்பிட்டுப் பழகிய வாய். குரல் கொடுத்ததையும் அவராலே தடுக்க முடியவில்லை.

இத்தனை முடுகூளையாய் இந்தக் களைப்பு எப்போது தன்னிலே கவியத்தொடங்கியது என்று எண்ணியபோது.அவருக்குச் சிரிப்பு வந்தது. வயது ஒவ்வொன்றாக நழுவி நழுவி விழ.அந்த இடத்திலே சோர்வு வெற்றிக்கொடி நாட்டிவிடுகின்றது. என்ன! என்னில் இன்னும் வாலிபமா கொப்பளிக்கும்! போன தையோடு அறுபத்துநாலு முடிந்து அறுபத்தைந்தாகி விட்டதே! காடு வா வா எனக் கூப்பிடுகிறதே. இந்தப்பருவத்திலும் வயலைப் பாராமலிருக்க மனம் கேட்டால் தானே என்று எண்ணிக்கொண்டார்.

"மே......மேஏ எ..ஏஎ" வீட்டுக் கோடியிற் கட்டியிருந்த தாயாடு அளபெடை சேர்த்துக் கத்தியது. பின் தாயோடு சேர்ந்து குட்டிகளும் முறைவைத்துக் கத்தின.. "நான் வீட்டுக்கு வந்த சங்கதியை இவைகளுக்கு யார் சொன்னவர்?" பாக்குக் கடிக்கிற நேரம் பொறுங்கோ.. ஏ! பூரணம் இவைகளுக்கு ஒன்றும் போடவில்லையோ?. அவர் மனத்தளவில் ஆடுகளோடும் பூரணத்தோடும் பேசினார். வாய்விட்டுப் பேசமுடியாத அவ்வளவு சோர்வு.

அவர் அசையாமல் அண்ணாந்து கிடந்து மீண்டும் கண்மூடி மௌனியாய் எண்ணமும் நினைப்புமற்றதொரு நிலையில் லயித்துவிட்டார். எல்லாம் பழுத்து உதிர்ந்து புதிய தளிர்களுக்கு இடங்கொடுத்துவிட, தப்பித் தவறிக் கிடந்த ஒரு பழுத்த மாவிலை, அவர் நெஞ்சில் விழுந்தது. அவர் திடுக்கிட்டுப் போய்க் கண்விழித்தார். கண்கள் மேலே சென்று மாமரத்தின் பசிய இலைகளெல்லாவற்றையும் அளாவி அலைந்து சுழன்றன. கை பழுத்த இலையை எடுத்துச் சுழற்றியது.. 'பழுத்துவிட்டால் இலையல்ல எதுவுமே விழவேண்டியதுதான். புதிய இலை வரும்வரையில் இருந்ததே பெருங்காரியம். ஆசைக்கும் ஓரளவு வேணும். இந்தக் காணி பூமியில் எத்தனையோ ஆண்டுகளாகப் புரண்டுருண்டும் ஆண்டனுபவித்தும் சலிப்புத் தட்டவில்லையே! இந்த மண்வாசனை பூரணத்தின் கூந்தல் மணம்போல நெஞ்சின் நெஞ்செல்லாம் இனிக்கிறது. ஆதி தெரியாத இந்தக் குல விருட்சத்திலும் எத்தனையோ பழுத்தல் இலைகள், புதுத் தளிர்களிடம் அதை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அதனடியில் வீழ்ந்து அதற்கே உரமாகிவிட்டன. உடனடியாக இரு பிள்ளைகளையும் அழைத்து காணி பூமி. பொருள் பண்டமெல்லாவற்றையும் பங்கிட்டு ஒப்படைத்துவிடவேண்டும். எப்போது காற்று வீசும். எப்போது பழுத்தலிலை விழும் என்று யாருக்குத் தெரியும்'. இந்த எண்ணம் மின்னலாய் வெட்டி அவரது மனத்தின் மூலத்தானத்திலே பெருஞ்சோதியை எறிக்கவிட்டு மறைந்தது.

மின்னலையடுத்துப் பயங்கரவிருள் முழு மூர்க்கத்தனமாய் வந்து அவருள்ளத்திலே உறைந்தது. மனக்கண் அந்தவிருளிற் கூர்மையிழந்து தட்டுத்தடுமாறி ஊர்ந்தது. ஏதோ ஒருவகைத் தவிப்பு. மெல்ல மெல்லப் பெருகிப் பெருங்கடலாய் அலைமோதி நெஞ்சச் சுவர்களைத் தாக்கியது. உள்ளத்தை இழக்குந் தவிப்பா? உள்ளதை இழக்கும் தவிப்பா? உள்ளத்திலே ஊறி ஊறி உயிருடன் கலந்துவிட்ட தன்மானத்தின் மரணாவத்தையிற் பிறந்த தவிப்பா?

'இனி நானும் பூரணமும் யாருக்குப் பாரமாவது? மூத்தவனுக்கா? இளையவனுக்கா? ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கா? யாருக்கும் யாரும் பாரமாக வேண்டாம். படுக்கையில் விழுந்து கிடக்கிறபோது இருவரும் வந்து எதுவேண்டுமானாலும் செய்யட்டும். எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகட்டும். இப்போது நான் யாருக்காவது பாரமாவதோ யார் நிழலையாவது அண்டுவதோ முடியாது. ஆகவே பூரணத்தாலும் முடியாது' இந்த எண்ணங்கள் அவரது தவிப்பின் பயங்கரக் கொந்தளிப்பை ஓரளவு தணித்தன.

தவிப்பு அடங்கிய நிலையிலே சந்தேகவித்தென்று முளைத்து மகாவேமாக வளர்ந்து. கணப்பொழுதிலே பெருமரமாகிவிட்டது. அது

நிரந்தரமாக உண்மைத் தன்மை பெற்றுவிட்டால் அதனால் விளையும் பயனை அவர் தெளிவாக உணர்ந்தார். அந்த மனக்காட்சியின் ஒவ்வொரு சிறு தோற்றமும் புரண்டு நெளிந்து வழுக்கி ஊர்ந்து புழுக்கூட்டம் போலக் கிலுமொலுத்தது.

'மூத்தவனுக்கு நிலத்திலும் பார்க்க உத்தியோகமே பெரிது. இளையவனுக்கு வியாபாரமே பெரிது. இருவரின் இந்தப் பற்றுக்களின் முடிபு நிலத்தின் பற்றின்மைதானே. ஆமாம். அவர்களுக்கு ஒன்றைத் தீர்மானமாகச் சொல்லிவிட வேண்டும். "அடே இங்கே பாருங்கோ, நீங்கள் சிரித்துச் சிரித்து வாழக் காரணம் உங்கள் படிப்பென்றும் வியாபாரமென்றும் நினைத்தால் நீங்கள் சுத்த மடையரே. அதற்குக் காரணம் இந்த நிலம்; இந்த நிலத்திலே பரம்பரை பரம்பரையாகச் சிந்திய வேர்வை; அதனால் ஏற்பட்ட செழிப்பு. இந்தப் பூமித்தாய் வரண்டு வெடித்துப் பாழாய்க் கொட்டாவி விட்டு. பெருமூச்சுவிட்டால் அவ்வளவு தான்; குலவிருட்சம் படவேண்டியதுதான். இதோ ஒன்றாய்க் கிடந்த நிலம் இரண்டாகி உங்களிடம் வருகிறது. இதோ உறுதிக்கடதாசி. குத்தகைக்கு விடுவேன்; வாரத்துக்கு விடுவேன்; அப்படியிப்படி என்ற பேச்செதுவும் இருக்கக்கூடாது. ஒன்றில் நீங்கள் நிலத்துக்கு வரவேண்டும். அல்லது உங்கள் பிள்ளைகளில் ஒவ்வொருத்தன் வரவேண்டும். அவ்வளவுதான்" என்று அறுத்துறுத்துச் சொல்ல வேண்டும். பாம்பு மாதிரி நழுவி நொழுவிப் பேசுகிற பேச்சுக்கிடமில்லை. பிறகு அவரவர்கள் வந்த வந்த வழி.'

அவர் மனத்திலே கிடந்து நெளிந்த மனக்காட்சிகளெல்லாம் ஒன்றில் ஒன்று அடங்கி, அந்த ஒன்றில் மற்ற ஒவ்வொன்றும் ஒவ்வொன்றாயடங்கி ஈற்றில் எல்லாம் ஒன்றுள் அடங்கி அந்த ஒன்றும் இல்லையாய் மறைந்தது. இந்நிலையில் அவர் மனம் ஆழ்ந்து அனுபவித்துத் தூங்குகிற குழந்தையாய். அது கனவிலே நரி வெருட்டச் சிரிப்பது போலச் சிரித்தது. அவரும் சிரித்தார்.

"என்ன சிரிப்பு; கால் முகம் கழுவியாச்சோ" என்ற குரல் தூங்கும் இதயத்தை அருட்டி எழுப்பி இனிமையூட்டியது. வைரமுத்தர் ஒருக்கணித்துத் திரும்பி தலைக்குக் கையை முட்டுக்கொடுத்துக் கொண்டு பார்த்தார். பூரணம் அவரை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

உயர்சாதிப் பிராமணப் பெண்போல மஞ்சளிலே சிறிது செம்மையைக் கொட்டிக் குழப்பிய நிறம்; வாட்டசாட்டமான பாரிய சரீரம்; நடக்கும்போது சதை அதுங்கிப்பிதுங்கிக் குலுங்குவதும் ஒரு கவர்ச்சியாகத்தானிருந்தது. முன் நெற்றியிலே தொடங்கி நடுவகிட்டின் இரு கரையும் பற்றிக்கொண்டு மேலே மேலே பரவிச் செல்லும் நரை;

பளிச்சென்ற முகம்; குளித்தபிறகு நெற்றியிலிட்டுக்கொண்ட ஒருசத அகலக் குங்குமப்பொட்டு; பார்த்தால் மனத்தூய்மையைப் பரவவிட்டு சிலிர்க்கச் செய்யும் முழுப்பொலிவு; அவள் அன்னபூரணிதான். பூரணம் தான்.

அவள் தாமரையிலையால் மூடப்பட்ட சருவச்சட்டியொன்றை ஒரு கையில் ஏந்திக் கொண்டு, மறு கையிலே செம்புந் தண்ணீருங் கொண்டு வந்தாள்.

அவளிலே கண்ணைப் பதித்து. மனத்தால் விழுங்கி. பின் இரண்டினாலும் அளவிட்டுப் பூரித்தார் வைரமுத்தர். எத்தனையோ ஆண்டாய். ஒவ்வொரு நாளிலும் எத்தனை எத்தனையோ முறை பார்த்துங்கூட அவருக்கு அலுக்கவில்லை; அலுக்கப்போவதுமில்லை. இப்போது அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தார். நாணம் என்றுமே நித்தியகன்னி. முதுமையின் எல்லையைத் தொட்டுநிற்பவளிடங்கூட. தன் தனித்தன்மை மாறாமற் பரந்துநிற்கும் மகாமந்திர சக்தி அதனிடமுண்டு. அது ஐம்பத்திரண்டு வயதிலும் அவளையறியாமலே அவள் முகத்தே செம்மைகாட்டி பதிலுக்குச் சிரித்து விட்டு மறைந்தது.

"என்ன சிரித்துக்கொண்டு ... எழும்புங்கோவன்..." அப்போதுதான் கணகணவென்ற கழுத்து மணியோசையோடு எருதுகள் சுதந்திரமாகத் திரிந்துவிட்டு. அதுவும் சலித்துவிட உள்ளே நுழைந்தன.

"உதை இப்படி வை. மாடுகளைப் பிடித்துக் கட்டி. வைக்கல் இழுத்துப்போட்டிட்டு வா...."

"இதைத் தின்னுங்கோவன். பிறகுபோய்க் கட்டினாலென்ன."

"எனக்கென்ன அவசரம். வாயில்லாச் சீவன்கள். பாவம்! இன்றைக்கு நல்ல களை. அவைகளைக் கட்டி ஒரு திரணை வைக்கல் போட்டிட்டு வாணை. என்ரை ராசாத்தி."

கிழவன் வாய்விட்டுச் சிரித்தான். முன்னமே நாணத்தால் ஓரளவு செம்மைச் சாயம் தோய்ந்திருந்த கிழவியின் முகம் முழுவதும் சிரித்தது.

"சீச்சீ. கிழவனுக்கு வயது போனாலும் பகிடி போகாது."

"ஓகோ. அப்ப நான் கிழவன். நீ இப்பவும் வாலைக்குமரி என்று நினைப்போ. அதுக்கென்ன போட்டுவா."

வாயாட வாயில்லை பூரணத்திற்கு. சருவச்சட்டியையும் செம்பையும் 'தொம்' என்று வைரமுத்தருக்கு முன்னே வைத்துவிட்டு மாடுகட்டப் போய் விட்டாள் கிழவி.

வைரமுத்தர் எழுந்து கால்முகங் கழுவிக்கொண்டு வந்து அதேயிடத்தில் அமர்ந்தார். பூரணம் இன்னும் வரவில்லை. மெதுவாக இலையைத் தூக்கிப் பார்த்தார்.

உள்ளே பழஞ்சோறு. ஒடியற்பிட்டோடு மரவள்ளிக் கிழங்குப் பழங்கறியும் சேர்த்துத் தயிர்விட்டுக் குழைத்த கொழுகொழுவென்ற குழையல். பார்க்கப் பார்க்க வாயூறியது. பசி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. என்றாலும் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டார். அதற்குக் காரணம் இருந்தது. பூரணம் திரட்டித் திரட்டிக் கையில் வைத்தாலல்லவா அவராலே தின்ன முடியும். மூடிவைத்துவிட்டு இருந்தார்.

பூரணம் கடுகடுப்போடுதான் வந்தாள். நெற்றியிலே முத்து முத்தாக வியர்வை துளிர்த்திருந்தது. கன்னம் இரண்டிலும் வியர்வை ஆறு. கால்வாய்கள் கண்டு ஓடியது. வாளிப்பான அந்த உடலை அசைத்தெடுத்தது நெடுமூச்சு.

"இந்த வேலையெல்லாம் இனிமேல் என்னாலை ஏலாது. என்னாலை ஏலாதென்றால் உங்களாலும் ஏலாது தான். பேசாமல் ஒரு பிள்ளையோடு போயிருப்பம்." எத்தனையோ காலமாகச் சிறுசிறு ஊற்றாக ஊறி உள்ளே நிறைந்து அலைமோதிய ஆசைவெள்ளம், கிழவனது ஆண்மை ஆணையிட அடங்கிக் கிடந்த அது, வேளை கிடைத்த வேளையிலே வெளியே பெருகத்தொடங்கியது.

"என்ன அழையா விருந்தாய்ப் போகச்சொல்லிறியோ?" – கிழவன் வேடிக்கை பண்ணினான். ஆனால் அதனுள்ளீடாகப் புருடத்துவ கம்பீரம் நிமிர்ந்து நின்றது."

"பேச்சைப் பாருங்கோ பேச்சை: இவர் பெரிய மகாராசா; கொடி, குடை, ஆலவட்டத்தோடு வந்து அழைக்க வேணுமாம். மீசை நரைச்சாலும் ஆசையும் அதிகாரமும் நரைக்கவில்லை."

"பின்னை என்ன, உனக்கும் எனக்கும் என்ன குறைவாம். நான் இராசா; நீ இராசாத்தி. அவர்கள் வந்து கூப்பிட்டபோது பார்த்துக் கொள்ளலாம். இப்ப உனக்கோ எனக்கோ எதுவும் வந்துவிடவில்லையே"

"ஐயையோ, மறந்து போனன். காலமை இரண்டு காயிதம் வந்தது. ஒருவேளை வரச்சொல்லித்தான் இரண்டுபேரும் எழுதியிருக்கோ என்னவோ. கொண்டு வரட்டோ" – பூரணத்தின் ஆசை வெகு மூர்க்கமாக நிமிர்ந்தது. இரு கடிதங்களையும் பற்றிக்கொண்டு தன்னை வெளிக்காட்டியது.

"கொஞ்சம்பொறு. அதுக்கு இப்ப என்ன அவசரம். சாப்பிட்டு முடியட்டும்." வைரமுத்தர் கிழவியின் ஆசைக்கலவைகளைப் பிரித்துப்

பிரித்துத் தனிக் கூறுகளாக்கிப் பார்த்தார். கிழவனிடம் குறும்பு முளைத்தது.

"ம்..... கோவியாதை உள்ளதைச் சொல் ... பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகிறாயா? பேரப்பிள்ளைகளைக் கொஞ்சிச் சீராட்டவோ அல்லது சாகக்கு முந்திக் கொஞ்ச நாளைக்காவது மாமியார் அதிகாரம் பண்ணவோ அல்லது..."

"எப்பவும் நையாண்டிதான். இன்னும எத்தனை நாளைக்கோ? உள்ளே அழுகத் தொடங்கிவிட்ட இந்தப் பூசணிக்காயைப் பெருமான் எப்ப தூக்கி எறிகிறாரோ: அப்ப சளிஞ்சுபோய். வாயைப்பிளந்து கிடக்க வேண்டியதுதான். அதுக்கிடையிலே கொஞ்ச நாளைக்காவது...." பூரணம் வெம்பி வெடித்துக் கண்ணீர் சிந்தினாள். பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் நினைத்தபோது அவள் உள்ளத்தின் உள்ளெல்லாம் உருகி நெகிழ்ந்தது. தாய்மைத் துடிப்பு உடலணுக்கள் எல்லாவற்றிலும் ஊறியது. பழஞ்சோறு திரட்டி எடுத்த கை நடுங்கியது. அவள் உணர்ச்சிப் பெருநெருப்பிலே கருகி, ஒரு கணம் தன்னை மறந்து மூச்சிழந்திருந்து வெளி வந்தாள். அவளைக் கண்டு வைரமுத்தரின் கண்களும் குளமாகி விட, தனது சால்வைத் துண்டையெடுத்துப் பூரணத்தின் கண்ணிரைத் துடைத்தார்.

"என்ன பூரணம் உன்னத்தனை பாசமும் வருத்தமும் எனக்கில்லையோ: உன்னது தாய்ப்பாசம்: அடங்காது. என்னதை அடக்கியடக்கி குமைந்து குமைந்து பார்க்கிறென். நினைத்தவைகளை நினைத்து நினைத்து நினைக்க முடியாதவைகளையும் நினைத்துப் பார்த்து நான் படும்பாடு.. எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த பிறகு ஒரு முடிவுக்கு வந்துவிட்டன்..."

பூரணம் கண்களை அகல விரித்துக்கொண்டு. அந்தக் கண்களிலே ஆசை. இரச வோட்டமாய் ஓட, அந்தக் கண்களினால் கேட்டாள், 'என்ன' என்று.

"இரண்டு பேரையும் வரச்சொல்லி இண்டைக்கே எழுதப்போறன். வந்ததும் சொத்தெல்லாத்தையும் இரண்டாய்ப் பிரிச்சு எழுதிப்போட்டு.."

கிழவனைக் கட்டியணைத்து கொஞ்சிக் குலவவேண்டும் போல அத்தனை மகிழ்ச்சி கிழவியிலே கிளர்ந்தெழுந்தது. அதற்கு அணையிட அவள் விரும்பாவிட்டாலும் வயது அணையிட்டது.

"அதுதான் சரி. நாங்கள் வாழ்ந்தது போதும். சின்னஞ்சிறுசுகள் ஆண்டனுபவிக்கட்டும். இந்தாருங்கோ தண்ணி. சருவச்சட்டிக்கை கையைக் கழுவிப்போட்டுக் குடியுங்கோ; காயிதத்தை எடுத்துக்கொண்டு வாறன்."

பூரணம் சேலைத்தலைப்பிலே கையைத் துடைத்துக்கொண்டு குடுகுடுத்தாள். அடுத்த நொடியிலே கண்ணாடிக் கூடும் இரண்டு கடிதங்களுங் கொண்டு வந்தாள்.

வைரமுத்தர் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக்கொண்டு ஒரு கடிதத்தைப் பிரித்து வாசித்தார். அவர் முகத்திலே கணத்துக்கு கணம் உணர்ச்சித் திவலைகள் அள்ளித்தெளிக்கப்பட்டன. அந்தத் திவலைகளைக் கொண்டே கடிதத்தில் என்ன இருக்கிறதென்று கண்டுகொள்ள முயன்று தவித்தாள் பூரணம். ஈற்றில் முகத்திலே துலாம்பரமாகத் தெரிந்த வெறுப்போடு அக்கடிதத்தை மடித்து வெகு நிதானத்தோடு துண்டு துண்டாகக் கிழித்தார். படபடென அடித்துக் கொள்ளும் மனப்பறவையின் ஒரு சிறகை யாரோ வெட்டி விடுவது போலத்துடித்தாள் கிழவி.

"என்னவாம் .." அவள் குரலில் ஏக்கம் குடியிருந்தது.

"இது உன் மூத்தமகன் எழுதினது. உன்ரை மூத்த பேரன் பூனாவுக்கோ எங்கேயோ விவசாயம் படிக்கப் போறானாம். இப்ப தன்னிடம் பணம் இல்லையாம்: தன்ரை பங்கை வித்துத் தரட்டாம்."

"அதுக்கென்ன. என்ரை செல்வங்கள் படிச்சு நல்லாய் வரட்டும். அப்பனே முருகா! அந்தக் குஞ்சுகளுக்கு ஒரு குறையும் வரவிடாதை."

"ம.... அப்படியா?"... வைரமுத்தர் கடைவாய்க்குள் சிரித்துவிட்டு. மற்றக் கடிதத்தைப் படித்தார். மீண்டும் பூரணம் அவரது முகத்தில் எழுதப்படும் உணர்ச்சி வரிகளை வாசிக்க முயன்றாள். கடிதத்தை படித்து முடித்த வைரமுத்தர் மிக மிக நிதானத்தோடு அதையும் துண்டாக்கினார். மற்றச் சிறகும் அரிபட்ட பூரணத்தின் மனப்பறவை மேலுங்கீழுந் தொங்கி அவத்தைப்பட்டது.

"என்ன" – பூரணம் ஏங்கினாள்.

"இளையவன் இன்னுமொரு கடை எடுத்துவிட்டானாம். வியாபாரத்தைப பெருக்க வேண்டுமாம்: பெருவாரியாகச் காசு தேவையாம். அதற்காகத் தன் பங்குக்காணி பூமிகளை தரட்டாம். விற்பதற்கு.

"இளையவன் எப்பவும் கெட்டிக்காரன்தான். பாவம் நாலு பெண்ணைப் பெற்றுவிட்டான். சம்பாதிக்கத்தானே வேணும்."

"ம... அப்படியோ" – அதற்குமேல் எதுவும் போசாமல் பல பல எண்ணங்களை உள்வாங்கி மனக்கல்லில் மோதி மோதிச் சிதறுதேங்காயடித்து விளையாடினார் வைரமுத்தர்.

"இப்ப என்ன செய்யப்போறியள்: எழுதுங்கோவன்..."

"எழுதத்தான் போறன்...."

"என்ன எழுதப்போறியள்?"

"உடனே வாருங்கோ என்றுதான்"

"இப்படி எழுதுங்கோ: இந்தக் கடிதத்தைத் தந்தியாய்ப் பாவிச்சு உடனே வரச்சொல்லி என்ன...."

"வேறென்ன எழுதவேணும்...."

"வாறபோது தனியே வரவேண்டாம். பெடிச்சி பேரப்பிள்ளைகள ஒருத்தர் தவறாமல் வரவேணும் அதுவும் பத்துப்பதினைஞ்சு நாள் நிக்கக் கூடியதாய் வரவேணும்...."

"வேறென்ன...."

"வேறென்னத்தை நான் சொல்ல...."

"பார் பூரணம், எழுதப்போறன்: எல்லாரும் உடனே வாருங்கோ: பெண்சாதி பிள்ளைகளோடு வாருங்கோ. பத்து நாளல்ல ஒரு மாதம் நிற்கக்கூடிய ஆயத்தத்தோடு வாருங்கோ. ஆனால் நீயும், நானும் இருக்கிறவரையில் எதையும் விற்பதற்காக ஒருவனும் வரவேண்டாம். இந்த நிலந்தான் இந்தக் குலத்தாய். அவளை விற்றுவிட்டுக் கிடைக்கிற படிப்பும் வேண்டாம். வியாபாரமும் வேண்டாம். நாங்கள் இப்போது யாருக்கும் எதையும் எழுதிக்கொடுக்கிற யோசனையில்லை. இப்படித்தான் எழுதப்போறன் சரிதானே..."

பூரணம் விக்கித்துப் போனாள். மடை திறந்தாற் போலக் கண்ணீர் ஆறாகப் பெருகியது. கண்ணீர்த் திரையியினூடாக அவள் தன் கணவனைப் பார்த்தாள். தன் முப்பத்திரண்டு வருடக் குடும்ப வாழ்க்கையிலே கண்டிராத புதுமைக் கணவனை அவள் கண்டாள். மனம் பெருமையால் விம்மிப் பொங்கிப் பூரித்தது.

"நான் ஒரு மடைச்சி."

"சீ யார் அப்படிச்சொன்னது? நீ ஒரு பெண்: என் மனைவி: இருபிள்ளைகளின் தாய்."

❖❖❖

# 03. கிடைக்காத பலன்

வேறொன்றுமில்லை: மூன்று வத்தகைக் கொடிகள்: நன்றாகப் பண்படுத்தி எருவிட்டு, நீர்பாய்ச்சி வளர்க்கப்பட்ட கொடிகள், கொழுகொழுவென்று கண்களுக்கு ஒரு தனிக் குளிர்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருந்தன.

ஒரு நாள் விடியற்காலை; இன்னும் நன்றாக நிலம் வெளுக்கவில்லை. கிழக்கு வெளுத்துவிட்டது. மிருதுவான ஊதற்காற்று வீசிக்கொண்டிருந்தது. ஓர் உருவம்; மனித உருவந்தான்; உடம்பை மூடிப் போர்த்திக்கொண்டு அந்த வத்தகைக் கொடிகளுக்குப் பக்கததில் வந்து இருந்தது. அந்த உருவத்தின் முகத்திலே காலதேவனின் சாட்டைத் தழும்புகள் நன்றாகப் பதிந்திருந்தன. கன்னங்கள் குழிவிழுந்திருந்தன, வத்தகைக் கொடியின் இலையிலுள்ள ஆழமான வெட்டுக்கள் போலே, தோல் எலும்போடு ஒட்டித் திரைந்துபோயிருந்தது. அந்த மெல்லிய குளிருக்கும் அவன் தேகம் விடுவிடென்று நடுங்கிக் கொண்டிருந்தது.அவ்வளவு பெலவீனம். யமதர்மராசனின் உறவு அவனுக்குக் கிட்டுவதற்கு அதிகநாளில்லை. அவன்தான் அந்த கொடிகளின் சொந்தக்காரன்; ஏன் அவற்றின் தாய், தகப்பன், பாதுகாவலன் எல்லாருமே அவன் தான் - கார்த்திகேயன்.

கார்த்திகேயன் கொடிகளை ஒருமுறை கூர்ந்து நோக்கினான்; பின்னர் தனது நடுங்குங் கைகளால் இலைகளை மெல்ல நீக்கினான்.

"மூன்று பிஞ்சு; இரண்டு காய்" என்று முணுமுணுத்தது அவன் வாய். அந்த இரண்டு காய்களையும தடவிக்கொடுத்தான். அந்தத் தடவுதலிலேதான் எத்தனை அமைதி; எவ்வளவு அன்பு! எவ்வளவோ காலமாக வேலைசெய்து மரத்துப்போய். சொரசொரப்படைந்திருந்த அவனது கைகள். அன்று அனிச்சமலரின் மென்மையைப் பெற்றனவோ! அந்தக் காய்களின் பரிசம் அவன் மனதைப் பாகாய் உருக்கிவிட்டது. அவன் குழந்தைகளின் சிறு கைப்பரிசத்திலும் பார்க்க.

"ஆம். இரண்டு காய்கள். என் இரண்டு கண்கள் போல. இவைகள் எப்போதான் பழுக்குமோ? என் நாவின் ஆசை என்றுதான் தீருமோ? என்று என் கைகள் உங்கள் மெல்லிய காம்பைப் பிடித்துப் பறிக்கப்போகின்றனவோ? என் நாவில் சுவைப்பு என்றைக்கு மாறுமோ?" - இப்படி அவன் வாய் புலம்பிற்று. மன உணர்வு நிலை கொள்ளாமல் அவன் வாய்வழியே வந்துவிட்டன. வார்த்தைகளாக. "பத்தேபத்து நாட்கள்" என்று கிழவனுடைய அங்கலாய்ப்புக்கு அந்தக் காய்களும் விடை சொல்லிவிட்டனவோ! ஆனால் இவையெல்லாம் கார்த்திகேயனின் மனப்பிரமைகள்! அந்த மூன்று காய்கள் மீதும் அவன் பெரும் பாசங்கொண்டிருந்தான்.

## 2

ஒருபுறம் நொச்சிப்புதர்களும். கிஞ்ஞாச் செடிகளும்; ஒருபுறத்தில் ஓங்கிவளர்ந்த பனங்காடு; மறுபுறத்தில் பரந்த வயல்வெளி. சன நடமாட்டம் குறைந்த பகுதி அது. இவைகளுக்கு மத்தியில் ஒரு சிறு குடில். அதுதான் கார்த்திகேயன் இல்லம். அவன் வீட்டுவாசலில் நின்று பார்த்தால் மற்றொரு கார்த்திகேயன் கோவில் தெரியும். உயர்ந்தெழுந்து கம்பீரமாய் நின்ற அதன் கோபுரத்தைப் பார்த்தே அவன் தன் கஷ்டங்களையெல்லாம் மறந்து விடுவான். முன்னொருநாள் அந்தக் குடில், இல்லை. அந்த மாளிகை. குழந்தைகளின் அழுகை. அவர்கள் குறுநடை. மழலை. கலகலவென்ற சிரிப்பு. இன்னிசைக் கீதங்கள். இவைகளால் பரிமளித்திருந்தது. ஆனால் இன்றோ? அவைகளெல்லாம் இல்லை; வெறும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. கிழவனின் அபஸ்வர இருமற் சத்தத்தைத் தவிர.

கார்த்திகேயன் அந்தநாளிலே பெருத்த சம்சாரி. மனைவி, நாலு இன்பக் குழந்தைகள்; இவைகளின் தலைவன் அவன். இந்த நிலை வெகுநாள் நிலைநிற்கவில்லை. காலசக்கரம் வேகமாகச் சுழன்றது. எப்படியாக ஒரு புயலினால் எற்றுண்டு இரண்டு படகுகள் ஒன்றையொன்று

அணைந்தனவோ அப்படியே இன்னொரு புயலினால் அவை இரண்டும் பிரிந்துவிட்டன. அவன் பிள்ளைகளும் விவாகஞ் செய்து சீவியத்தையிட்டுப் பிரிந்து விட்டனர். எல்லாம் காலச்சுழிப்பின் சேவை. அவன் இப்போது தனியன்; ஆருமற்ற அநாதை.

இந்த நிலையிலே அவன் மனத்திற்குச் சிறிது நிம்மதியையும் ஆறுதலையும் அளித்தன. அந்த மூன்று கொடிகளும். பசுமை சொட்டும் அந்தக் கொடிகளின் இலைகளைப் பார்த்து அவன் தன் தனிமையின் துன்பங்களையெல்லாம் மறந்துவிடுவான்; காலையில் குறுநகை செய்யும் பூக்களில் தேனுண்ணவரும் வண்டுகள்தான் எத்தனை எத்தனை இன்பக் கனவுகளை அவனுக்கு மூட்டியிருக்கும். பலகிளை செல்லும் ஒவ்வொரு கொடியின் கொழுந்தும் தன் மனக்கொடியின் நீண்ட நினைவுக்கொடிகள் போன்றிருப்பதாக அவன் உணர்ந்தான். ஒப்புயர்வற்ற ஒரு நண்பனாகவே அவற்றை மதித்தான். கிழவன்.

கார்த்திகேயன் அன்று காலை நிம்மதியுடன் தான் எழுந்தான். ஆனால் பூரண நிம்மதியன்று. அவன் மனத்தின் அடியிலே ஏதோ ஒன்று தட்டிக்கொண்டிருந்தது; யோசித்து யோசித்துப் பார்த்தான். மனதில் இருப்பது வெளிப்பட்டால்தானே. இன்னும் கொஞ்சநேரம் யோசித்தான்.

"ஓகோ! இன்றுதானே அந்த இரண்டு வத்தகைக் காய்களும் சொன்ன பத்தாவது நாள்" -- அவனால் ஒரு நிலையில் நிற்க முடியவில்லை. ஏதோ இன்பவுலகொன்றை நாடிச் செல்பவன்போலத் தன்னைக் கருதிவிட்டான். அவன் மனம் சிறிது முன்னாடிச் சென்றது. நிலை கொள்ளாமல்.

> "இன்னும் சிறிதுநேரத்தில் அவைகளைப் பிடுங்கி விடுவேன். நான் தனியனாக; தனியனாகவா..? ஆம். தனியனாகத் தானே சாப்பிடவும் வேண்டும். அந்தக் காலமென்றால் எத்தனை பேரின் கைகளுக்குத் தாவி விழும் அந்தப் பழங்கள். அவளின் தளிர்க்கரங்களின் ஸ்பரிசமே இப்பழத்திற்கு ஒரு தனிச்சுவையல்லவா? என் இன்பக் குழந்தைகள் சூழ்ந்திருக்க. அவள் இப்பழங்களை வெட்டுவாளே. அப்பொழுது அவள் முகத்தில் எத்தனை இன்பச் சாயைகள் படரும். அந்தப் பேறு எனக்குக் கொடுத்து வைக்கவில்லை...! என்ன. ஒரு சிறுதுண்டுப் பழத்திற்கு எத்தனை சண்டை போடுவார்கள். அந்தச் சிறுவர்கள்.."

அவன் சித்தனை சுழன்றது. ஒரு பெருமூச்சு அவனை அறியாமலே வெளிவந்தது. சரி, சரி; சூறைக்காற்றினால் அள்ளுண்ட சருகுக் கூட்டங்கள் எப்போதும் கூட்டமாக இருப்பதுண்டா? என்ற கேள்வியை. தன்னைத்தானே கேட்டவண்ணமாய், தான் வளர்த்த கொடிகளை நோக்கி மெல்ல மெல்ல நடந்தான். மனம் எங்கெல்லாமோ சென்று வெள்ளாட்டைப்போல அலைந்துகொண்டிருந்தது.

ஏதோ அபாரசக்தியால் மனதைத் தன்னிலைக்குக் கொண்டு வந்தவன் போலக் கண்களை வத்தகைப்பழமிருந்த இடத்தில் செலுத்திப் பார்த்தான். ஒருமுறை பார்த்தான்; இரண்டு தரம் பார்த்தான்; இல்லை ஆயிரந்தரம் பார்த்தான்.

"ஆ..! காணவில்லையே..."

பிரமமை பிடித்தவன் போலத் திகைத்து நின்றான். அவன் தலை சுழன்றது. அவனால் எதையும் யோசிக்க முடியவில்லை. அதிலேயே இருந்துவிட்டான். அவன் அன்பின் கனி – அன்பின் பலன் - அங்கேயில்லை. என்ன செய்வான் பாவம்! ஏதோ எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான். சோகம் அணையை உடைத்துக்கிளம்பிற்று. கண்கள் அதைப் பிரதிபலித்தன. இந்த நிலையில் இன்னொருதரம் கொடியைப் பார்த்தான்.

அவன் முன்கொண்ட துயரமெல்லாம் எங்கே? அவன் முகத்தில் சந்தோஷத்தின் மலர்ச்சி தாண்டவமாடியது. முன்பு மனத்தை நிரப்பியிருந்த சோகக்கடல் வற்றி வறள, சில இன்ப ஊற்றுக்கள் அந்த இடத்தை நிரப்பிவிட்டன போலும்!.

"ஓகோ, யாரோ பசிக்கொடுமையால் கொண்டுபோய் விட்டார்களாக்கும். கொண்டு போகட்டும்; நல்லாக் கொண்டுபோகட்டும். என் பங்குக்கும் இங்கேமூன்று பிஞ்சு - இல்லை - காய்கள் இருக்கின்றன. இவற்றின் ருசியை நான் அனுபவிக்கிறேன்.

## 3

இப்போதெல்லாம் கார்த்திகேயன் முன்போலில்லை. அவன் வெளியிலேயுள்ள அந்தச் சாக்குக் கட்டிலிலேதான் படுப்பான். அவன் நித்திரை கொள்வதே குறைவு; அந்த மூன்று காய்களையும் காவல்காக்க வேண்டாமோ? பொல்லாத குளிரடிக்கும்; அதைப் பொருட்படுத்தான். மூசி மூசிக்காற்று இரையும்; அவையெலலாம் அவனின் அலட்சியப் பொருள்கள். கனத்த அந்தகாரம்; அது அவனுக்குப் பரிச்சயம். அவன்

பஞ்சபூதங்களின் சேஷ்டைகளை மறந்திருந்தான்.

அந்த மூன்று பிஞ்சுகளும் காய்நிலை போய் கனிநிலையை அடைந்துவிட்டன. கார்த்திகேயன் உடல் நிலையோ வர வர மோசமாய் விட்டது! துரும்பாய் இளைத்துவிட்டது. பஞ்சபூதங்களின் வேகத்தாலும் மனத்துயரங்களாலும் அவன் பெலவீனமடைந்து விட்டான். அவன் உடம்பு நோயின் இருப்பிடமாய்விட்டது. ஓர் இருமல்.தொடங்கினால் அரைமணி செல்லும் முடிய. இவைகளெல்லாம் கார்த்திகேயனை உயிருடன் உண்டு வந்தன.

அன்றுதான் கார்த்திகேயன் அந்த மூன்று பழங்களையும் பிடுங்க எண்ணியிருந்த நாள். பழங்கள் பழுத்துச் சாம்பர் நிறமடைந்து கார்த்திகேயன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கின்றன. கார்த்திகேயன். அதோ அந்தச் சாக்குக் கட்டிலிற் கிடக்கிறான். வத்தகைக் காய்கள் பூரணமாகப் பழுத்துவிட்டன. ஆனால் அவற்றைப் பிடுங்க கிழவன் வரவில்லை. ஏன்? முந்திய இரவு அவற்றுக்கு முன்னரே அவன் வாழ்வு பழுத்துவிட்டது. பழங்கள் கொடியோடு நிலத்தில் புரண்டு கிடந்தன. கார்த்திகேயன் கட்டிலில் புரண்டு போய்க்கிடந்தான்.

❖❖❖

# 04. வெறி

“யார் அவன்? அவன்தானோ? அவனாயிருந்தால்....”

அவனைக் கண்டபோது, என்மனம் இவ்விதம் வினாவெழுப்பிச் சந்தேகித்து, அங்கலாய்த்துக்கொண்டது. மெல்ல நடைபயிலும் சின்னஞ்சிறு குழந்தையைப் போல் என் எண்ணமும் தட்டுத் தடுமாறிக்கொண்டு அவனிடம் சென்றது. பின்னர், “யார் அவன்? அவன்தானோ?” என்று திரும்பத் திரும்ப வினாவெழுப்பி அவனைச் சுற்றிக் குரவைக் கூத்தாடியது.

சுன்னாகத்திலே இரவு பத்தரை மணியளவில், கீரிமலைக்குச் செல்லும் கடைசி பஸ்ஸுக்காகத் தவங்கிடந்த எனக்கு, இப்போது பஸ்ஸைப்பற்றிய எண்ணம் முனை மழுங்கிவிட அவனைப்பற்றிய எண்ணம் கூர்மைபெற்றது.

அவன் எனக்கு முன்னே பதினைந்து அல்லது இருபது யார் தூரத்திலே தெருவின் மறுபக்கத்திலே சந்தியிற் கிடந்த மதகின்மேல் இருந்தான். தெருவிளக்கொளியிலே இவ்வுலக உணர்வு சிறிதுமின்றி ஏதோ ஒரு புத்தகத்தை வாசிப்பதில் ஈடுபட்டிருந்தான். அவனுக்குச் சமீபத்திலே, அடிக்கொருதரம் முன்னங்காலினாலே கழுத்தைப் பிறாண்டிக்கொண்டு கிடந்த சொறிநாய் இரண்டொரு தரம் அவலமாகக் குரல் எழுப்பியபோதுகூட, அவன் திரும்பிப் பார்க்கவில்லை. இழவு வீடுபோலச் சோகமும் பயங்கரமும் வழிந்தோடும் அவ்விடத்தில் அவனைத் தவிர வேறு யாருமில்லை.

நான் இரண்டொரு யார்முன் சென்று கூர்ந்து பார்த்தேன். அப்பொழுதும் சந்தேகம் தெளியவில்லை. மேற்போக்காகப் பார்க்கும்போது அவன், அவனைப் போலத்தான் இருந்தான். கொஞ்சம் கூர்ந்து பார்த்த

போது அவன் முகத்தில் யதேச்சையாக வளர்ந்துவிட்ட தாடியும் மீசையும், கலைந்து தாறுமாறாய் வழிந்து விழுந்து கிடந்த கேசமும், குனிந்த தலையுடன் அவனிருந்த நிலையும் எல்லாம் வேறு யாரோ போலக் காட்டின. அதனால் முடிபு, பாதரசம் போலப் பிடிபடாமல் வழுக்கியோடியது. அவன் எழுந்து நடந்தால் போதும், எனக்கு முடிவு கிட்டிவிடும் என்று எண்ணினேன்.

அதோ! எழுந்துவிட்டானே! தவம் கலைந்த மகரிஷிபோல அவன் எழுந்தான். விளக்கொளி முகத்திலடித்தது.அடுத்த கணம் காதிலே சொருகப்பட்ட பீடித்துண்டை வாயில் வைத்துக்கொண்டான்; தூரத்திலே தெரிந்த கடைவிளக்கொளியை நோக்கி இடப்பக்கமாகச் சாய்ந்து சாய்ந்து நொண்டிக்கொண்டு நடக்கத் தொடங்கினான். வைகறைப்போது வெளிர் வாங்குவது போன்றதோர் உணர்ச்சி என்னிற் படர்ந்தது.

"ஆம் அவனே தான்; முத்துவேதான்; என்னருமை முத்துவே தான்."

என் மனக் குழந்தை கைகொட்டிச் சிரித்துக் களித்தது. என் கண்கள் பனித்தன. தெய்வத்தை நேருக்கு நேர் தரிசனஞ்செய்து நிறைவு கொண்டது போன்று என்னெஞ்சு சிலிர்த்து விம்மிப் பூரித்தது. "முத்து" என்று உரக்கக் கதறிக்கொண்டு அவன் பின்னால் ஓடவேண்டும்; ஓடி அவன் காலடிகளைத் தொட்டு முத்தமிட வேண்டும் போலத் தோன்றியது. ஆனால் நான் கூப்பிடவுமில்லை. ஓடவுமில்லை. மெதுவாக அவன் பின்னால் நடந்தேன். தெய்வத்தை அது எழுந்தருளியிருக்கும் கோவிலிலேதான் பூசிக்க வேண்டும் என்று எண்ணினேன். அதுதானே பரமபத்தனுக் கழகு.

தூரத்திலே தெரிந்த கடையின் முன்னால் நாலைந்து மனித உருவங்கள் என் மனத்திலே தோன்றிய தெளிவற்ற எண்ணங்கள் போல, நடமாடின. அவற்றுளொன்றாக முத்துவின் உருவமுஞ் சேர்ந்துகொண்டதை நான் கண்டேன். ஏழைக்கு அடிக்கடி தோன்றும் வாழ்க்கைக் கவலைகள்போல, என் மனதில் ஒன்றுதேய மற்றொன்றாய்ப் பலவாய்ச் சந்தேகங்கள் கிளைத்துப் பெருகின. அவன் இங்கு எப்படி வந்தான்? என்ன வேலை செய்கிறான்? எங்கிருக்கிறான்? ஆளைப்பார்த்தாற் பைத்தியம் போலத் தெரிகிறதே? எப்படி இந்நிலை வந்தது? என்று பலவாறு எண்ணினேன். மனசிற்கு அழுங்குப்பிடி பிடிக்கவுந் தெரியும்; குரங்குப் பாய்ச்சல் பாயவுந் தெரியும்; "சிங்க நோக்கி"லும் அதற்குப் பரிச்சயமுண்டு.

## 2

டிக்கோயா ஆசுபத்திரி வெளிவிறாந்தையில் கூண்டில் அடைக்கப்பட்ட புலி கணமேனும் ஓயாது. சுற்றிச் சுழன்று வருவதுபோல. நான் அங்கும் இங்குமாய் நடக்கிறேன். மனத்தில் ஆயிரமாயிரமாக எண்ணப்புயல்கள் சுழன்றடிக்கின்றன. அசுபமான கற்பனைகள் ஒன்றிலிருந்தொன்றாய்க் கிளைத்துப் பெருகி நடுங்கவைக்கின்றன. அவ்வப்போது கண்ணீர் மடைதிறந்து பாய்கிறது. அதனை யாரும் காணாதபடி இமையை வெட்டி வெட்டி அடக்கப் பார்த்தும் அடங்காதபோது புறங்கையாலே துடைத்து நடிக்கிறேன். தண்ணீரிலே தோன்றும் வாயுக்குமிழிகள் போன்று ஒன்றன்பின் ஒன்றாய் நினைவுகள் தோன்றி வெடிக்கின்றன. எப்போது அவனை வெளியே கொண்டுவருவார்கள் என்ற எண்ணம் சுமையாய் அழுத்துகிறது. இவ்வளவுக்கும் அவன் யார்? நான் யார்? என்ற எண்ணமும் முனைந்தெழுகிறது.

அவன் முன்பின் தெரியாத ஓர் அநாதை; அந்நியன்; மலைநாட்டுத் தோட்டமொன்றில் ஜூனியர் கிளாக்காக வேலையை ஒப்புக்கொண்ட புதிதில் எனக்குத் துணையாக அவனை அனுப்பிவைத்தார் பெரிய கங்காணி. காலமென்னும் சுழற் காற்றினால் எங்கெங்கோ கிடந்த இரு மனிதச் சருகுகள் ஒன்றுகூடின. சமீபத்திற் கண் பறிபோன புதுக்குருடனைப் போல அந்தப் புது இடத்திலே தட்டித் தடவித் திரியவிடாமல் ஊன்றுகோல் தந்த துணைவன் அவன். இருபத்தைந்து வயதுக்கு மேலிருக்கும். படித்தவன் போற் காணப்பட்டான். தூரத்து உறவினரான பெரிய கங்காணியை விட்டால் அவனுக்கு உறவும் இல்லை; புகலுமில்லை. வயிற்றுச் சோற்றுக்காகப் பகல் முழுவதும் அவரது காய்கறித் தோட்டத்திற் பாடுபட்டு விட்டு, மாலையில் என்னிடம் வருவான். உலகத்தையோ, மனிதரையோ, மனிதர் செயல்களையோ ஆழமாய்க் கருத்திற்கொள்ளாத ஒரு அலட்சிய சுபாவம் அவனில் ஒட்டிக்கிடந்தது. அது. மரியாதை தெரியாத முரடனோ என்று யாரும் சந்தேகிக்கும் அளவுக்குத் துலாம்பரமாய்த் தெரிந்தது. அந்தப் பெரிய பங்களாவில் எனக்குச் சொந்தமான பெருஞ்செல்வம், இரு "சன்லைட் சோப்" பெட்டி நிறைந்த புத்தகங்கள் தான். அவன் அவற்றுடன் ஈடுபட்டுப் படிக்கும் ஆர்வத்தைக் கண்டு சில சமயம் நானே பொறாமைப்படுவது உண்டு. அவன் மகாத்மா காந்தியடிகளின் "சத்திய சோதனை"யை ஆர்வத்துடன் படித்துக்கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். அவனைக் காணும்போது அலை தவழாத நடுக்கடலின் நினைவுதான் எனக்குத் தோன்றும். நடுக்கடலில் அடிவயிற்றிலே எத்தனை எத்தனையோ அதிசயங்களும்

இரகசியங்களும் நீரோட்டச் சுழிகளும் கரந்து கிடக்கின்றன. அவன் அடிமனமும் அத்தகையதோ? மனத்திலுள்ளது சொல்லில் செயலில் வருமென்பார்களே: அவன் உணர்ச்சியில் ஊமையா? அவன் மனச்சலனத்தின் எந்த ஒன்றையும் என்றுமே என்னாற் காணமுடியவில்லையே.

மலைநாட்டுக்கு வந்த புதிதில் வானை முட்டும் மலைக்குலங்களில் ஏறி. அங்கு தவழ்ந்து செல்லும் வெண்முகில்களை அணைத்துப் பிடித்து விளையாட என் மனம் செல்லும். அடக்கவொடுக்கமுள்ள குடும்ப ஸ்திரிபோலப் பசும்பட்டால் முக்காடிட்டுக் கொண்டு மலை மங்கை நாணி நிற்கும் கோலம் மனத்தில் நெகிழ்வைப் பாய்ச்சும். துடியான இளங் குழந்தைகள் போலக் குதித்து விளையாடிச் சிரித்தோடும் அருவிகளிலே தவழ என்மனம் விரும்பும். எண்ணிலடங்கா வண்ண மலர்களில் இயற்கையின் திருவுருவைக் கண்டு நான் என் வயமிழந்து நிற்பதுமுண்டு. எங்கிருந்து நோக்கினும் மெல்லென என்னை மயக்கும் இந்த அழகுக் கோலங்களை நான் சொல்லிச் சொல்லி இரசிக்கும்போதெல்லாம் முத்து மிக அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பான். சில சமயம் இலேசாகச் சிரித்துவிட்டு "சார் மலைகள் உயர்ந்து கம்பீரமாக வானை முட்டி நிற்பதென்னமோ உண்மைதான். ஆனால். அந்த உயர்ச்சியும் கம்பீரமும் யாருக்குவேண்டுமோ அந்த மக்களிடம் சிறிதும் காணப்படவில்லையே. பதிலுக்கு அவர்கள் விஷகுணங்கள் நிறைந்து பயங்கரமான. ஆளை விழுங்கி ஏப்பமிடும் மலைக்காடுகளாகவல்லவா நடமாடுகிறார்கள்." என்பான். ஏதோ தனக்கேற்பட்ட கசப்பான அனுபவங்களால் அப்படிச் சொல்லுகிறான் என எண்ணுவேன். சில சமயம் "ஐயா.தொழிலாளியின் அடிவயிற்றைப் போலக் காணப்படும் கிடுகிடு பள்ளத்தாக்குகளைக் கண்டிருக்கிறீர்களா?" என்பான். அவன் சொல்லும் உவமைகளைக் கேட்டு என் நெஞ்சு பதைக்கும். சிலசமயம் "சார். முத்துக்களைச் சிதறி விட்ட மரகதக் கம்பளம் போலக் காணப்படும் புற்றரையின் அடியிற் கிடக்கும் அட்டைகள் உங்களையும் கடிக்கலாம்" என்பான். விளங்காத வியப்புத்தான் எனக்கு ஏற்படும்.

3

"சார் உங்களைத்தான்" என்ற குரல் கேட்டு நான் திரும்புகிறேன். டாக்டர் நிற்கிறார். "கவலைப்பட ஒன்றுமில்லை. கணுக்கால் எலும்பைத் தாக்கிவிட்டது. துப்பாக்கிக் குண்டு. அவ்வளவுதான்: போய்ப் பாருங்கள்" என்கிறார். உருட்டிவிட்ட பம்பரத்தைப் போல ஒரே இடத்தில் நின்று கிர் கிர் எனச் சுழல்கிறது மனம். வெகுவேகமாக அவன் கிடந்த கட்டிலையடைகிறேன். அந்நிலையிலும்

அவனது மென் முறுவல் என்னை வரவேற்கிறது. அந்த நிலையில் அந்த மென்முறுவல் என்னில் திட்டிய உணர்ச்சிக் கோலங்கள்.... ஐயோ...ஐயோ, அவற்றை விண்டுசொல்ல எனக்குத் தெரியாது. கட்டியணைத்து முத்தமிட்டுக் கண்களிலொற்றி அவனைக் குழந்தையாக்கி விடுவோமா..... வேண்டாம். செயலற்றுச் சும்மா நிற்கிறேன்.. "சார் எனக்கொன்றுமில்லை. பயப்பட வேண்டாம்." சொல்லும்போதே அவன் கண்களும் சிரிக்கின்றன. என்னுடைய அசாதாரண நிலையை விளங்கிக்கொண்ட அவன் என்னைத் தேற்றுகிறான். இப்போது நானா அவனா நோயாளி? "முத்து முத்து..." மேலே பேச முடியாமல், அவனிடம் சொல்வதற்கென்று பன்னூறு தரம் நெட்டுருப்போட்டு வந்த அந்த ஒன்றை எப்படிச் சொல்வதென்று தெரியாமல் திணறுகிறேன்.

"சார். நீங்கள் சொல்ல வேண்டாம்: நீங்கள் சொல்லப்போவது எனக்குத் தெரியும். நீங்கள் சொல்லி நான் ஏற்றுக்கொண்டதாக எண்ணுங்கள். வெளிப்படையாகச் சொன்னால் என்னாலே தாங்கமுடியாது. மானசீகமான இந்தப் பரிமாற்றமே போதும். உங்களை நம்பி ஊரிலே ஒரு பெரிய குடும்பம். என்னை நம்பி நான் தானும் இந்த உலகில் இருக்கவில்லையே.

"முத்து என்ன சொன்னாய் முத்து – அதற்காக ... ஏன் நான் ஒருவன் உயிருடனிருப்பது உனக்குத் தெரியவில்லையா? முத்து நீ செய்ததை நான்...."

"ஐயோ சொல்ல வேண்டாம் சார்: சொல்ல வேண்டாம்."

அவன் என் கைகளை இறுகப்பற்றிக் கொள்கிறான். சின்னக் குழந்தை தன் தாயிடம் கெஞ்சுவது போலக் கெஞ்சுகிறான். "சார், வேண்டாம். நீங்கள் புகழ்வதையோ, நன்றி கூறுவதையோ நான் பொறுக்கவே மாட்டேன்." விம்மலுக்கூடாக வார்த்தைகள் வருகின்றன. கண்கள் கலங்கிப் பொலுபொலுவென முத்து உதிர்கிறது.

என் மேற்றுண்டினால் அவன் கண்களைத் துடைத்துக்கொண்டே "முத்து என்ன நடந்தது?" என்கிறேன். முத்து ஒரு கணம் நிதானிக்கிறான். அவனுக்குப் பழைய சுயகுணம் சித்திக்கிறது. ஒரு கணம் விலகிநின்ற அலட்சியப் போக்கு மீண்டும் அவனிற் படிகிறது.

"அந்த மாலைக்கருக்கலில் நீங்கள் வானத்தைப் பார்த்துக் கொண்டு வந்தீர்கள். உங்களுக்கு வானம் தெரியுமேயன்றி மண் தெரியாதே" இதைச் சொல்லி இலேசாகச் சிரித்துவிட்டு. "யாரோ உங்களைக் குறி பார்த்துச் சுடப்போவதைக் கண்டேன். பிறகு

என்னையறியாத ஒரு வெறியில்.... அதன் பின்னர் என்ன நடந்ததோ எனக்குத்தெரியாது" என்கிறான்.

"சார். நீங்கள் நேர்மை. நியாயம். மனச்சாட்சி என்ற எல்லாவற்றையும் கடைப்பிடிக்கலாம். இலஞ்சம் வாங்காதிருக்கலாம். தொழிலாளரின் சுகதுக்கங்களில் ஈடுபடலாம். 'பார்ட்டி'கள் வைக்காதிருக்கலாம். அவையெல்லாம் உங்களுக்கு நல்லது. அவையே மற்ற சக உத்தியோகத்தர் மனத்தைப் புண்படுத்தினால்...."

"என்ன சொல்லுகிறாய் முத்து?"

"ஆமா சார். இதுதான் தோட்டக்காட்டு வாழ்க்கை; நீங்கள் அவர்களாக மாறவேண்டும். அல்லது அவர்கள் நீங்களாக மாறவேண்டும்".

"ஐயையோ பயங்கரமாயிருக்கிறதே."

"ஜனநாயக முறைப்படி நீங்கள் அவர்களாக மாறாது போனால் வாழ்க்கை பயங்கரமானதுதான். இரவு நடந்த சம்பவம் வெகு அற்பம் சார்."

என்னால் நம்பமுடியவில்லை. இப்படியும் நடக்குமா என எண்ணிக்கொள்கிறேன். என்மனக் குழப்பத்தைக் கண்டஅவன் "சார் ஏன் வீணாகக் குழம்புகிறீர்கள் விளங்காதவை விளங்க அனுபவம் வேண்டும். சரி. நேரமாகிறது போங்கள்" என்கிறான்.

ஒரு இரவல்ல பல இரவுகள் அவனுடன் தங்கி அவனுக்குத் தொண்டுசெய்ய எண்ணி. அனுமதிச்சீட்டும் பெற்று வந்த என்னை அவன் தன்னுடன் தங்க அனுமதிக்கவேயில்லை. வெகு மூர்க்கத்தனமாக எதிர்த்து அனுப்பிவிடுகிறான். இப்பொழுது அவனே என் தலைவனும் குருவும் ஆகையால் கீழ்ப்படிந்து சொற்கேட்டுச் சென்றுவிடுகிறேன்.

முத்து ஆசுபத்திரியிலிருந்து வெளியேறும் நாள் வருகிறது. அவனை அழைத்துவரச் செல்லுகிறேன். படுக்கையில் அவன் இல்லை. 'முத்து எங்கே சென்றாய்? எங்கேயடா சென்றாய் முத்து?' என்று என்னை நானே கேட்பதைத் தவிர வேறு வழியுமில்லை.

## 4

கடை விளக்கு கண்ணைக் கூசச் செய்ததால் என் நினைவுத் தொடர்அறுந்தது. கடை வாசலில் அந்த நேரத்திலும் இரண்டு மூன்றுபேர் வெகு சுவாரஸ்யமாக ஏதோ ஒன்றைப்பற்றிச் சர்ச்சை செய்துகொண்டு நின்றனர். நான் நேரே கடைக்காரனிடம் சென்று "முத்து இங்கே வந்தானே, அவன் எங்கே" என்று கேட்டேன். அவன் ஆச்சரியத்தோடு என்னை

ஒருதரம் ஏற இறங்க நோக்கினான். "அதோ அந்தச் சந்து வழியாக நேரே செல்லுங்கள். அவன் இருப்பான்" என்றான்.

அந்தச் சந்து இலட்சியமில்லாத வாழ்க்கைப் பாதையைப் போலச் சேறுஞ் சகதியுமாகக் குழம்பிக் கிடந்தது. அந்தச் சந்து முழுவதும் இருளை வடித்தெடுத்து யாரோ ஊற்றியிருந்தார்கள். தட்டுத் தடுமாறிக்கொண்டு சென்றேன். சிறிது தூரத்தில் ஒரு வீடு தென்பட்டது. அந்த வீட்டு விறாந்தை. தட்டியினாலே தடுக்கப்பட்டு இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு பகுதியின் ஒரு மூலையிலே ஒரு சிறு அகல் விளக்கு சிணுங்கிக்கொண்டு கிடந்தது. சுவரோரமாக யாரோ படுத்திருந்தார்கள். நாலைந்து பழந்துணிகளைத் தவிர. குறிப்பிடக்கூடிய எப்பொருளும் அங்கில்லை. என்னைக் கண்டதும் முத்து திடுக்கிட்டெழுந்தான்.

"சார். நீங்களா? ஏன் இங்கே வந்தீர்கள்?" முத்துவா இப்படிக் கேட்கிறான்? என்னால் நம்ப முடியவில்லை.

"ஏன் உன்னை நான் பார்க்க வரக்கூடாதோ?" என் நெஞ்சுக்குள் மலைப்பாம்பு புரண்டு நெளிவதைப்போல் ஓர் உணர்ச்சி: அதைத் தாங்கவும் முடியவில்லை: விழுங்கவும் முடியவில்லை.

அவன் அங்கிருந்து நடக்கத் தொடங்கினான். நடை ஓட்டமாவதன் முன் நான் ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக்கொண்டேன்.

"சார் என்னை விட்டு விடுங்கள். உங்கள் அன்புக் கடனைத் தீர்த்த மனநிறைவுடன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தேன். நான் ஆசுப்பத்திரியிலே தங்கியபோது எனக்கு விளங்கிவிட்டது. நீங்கள் என்னை அன்பால் அடிமைப்படுத்திவிட்டீர்கள் என்று. அதனால். நான் உங்களுடன் தங்கக்கூடாதென்று தீர்மானித்துச் சொல்லாமல் வந்துவிட்டேன். உங்கள் அன்புஎன் மனத்திற் சுமையேற்றியது. சரியோ பிழையோ எனக்குத் தெரியாது. நான் கொடுப்பேனே தவிர வாங்கமாட்டேன். அன்புக்குத்தானும் அடிமையாக என்னால் முடியாது." அவன்குரல் மிகமிகக் குழைந்தது. என்னுள் ஒரு மின்னல் வெட்ட அங்கே தெளிவு பிறந்தது?

"ஆமாம். நான் போய்விடவேண்டியதுதானே அது சரி......... அது யார்?"

"அதுவா? அது ஒரு அவள். அவள் என் சகோதரி"

"சகோதரியா?" அவனுக்குச் சகோதரி யாரும் இருந்ததாக நான் அறியவில்லை.

"ஆமாம்; சுன்னாகச் சந்தையில் கிடைத்தாள். அவள் ஒரு குருடி. அவளைப் பெறுவதற்குச் சண்டை பிடித்து மண்டையும் உடைந்தது" என்று கூறிச்சிரித்தான்.

"என்ன?" எனக்கு அவன் கூறுவதெல்லாமே வியப்பாயிருந்தன.

"ஆமாம் இவளும் ஓர் அநாதை. ஆனால் பருவக்குமரி. நான் சுன்னாகச் சந்தையில் தொழில் தொடங்கியபோது முனியப்பர் கோவில் புளியின் கீழிருந்து பிச்சையெடுத்தாள்."

"பிறகு-"

"உலகத்தில் எதிர்பார்த்தது நடந்தது. உணர்ச்சியைக் கொன்று. மனித மாமிசத்தைத் தின்னும் சில இரண்டுகால் நாய்கள் அவளைச்சுற்றி வட்டமிட்டன. நான் வெறிநாயாய் மாறி அவைகளைக் குதறினேன். மண்டையில் கொஞ்சம் பலமான அடி" சர்வசாதாரணமாகத் தான் அவன் பேசினான். ஆனால் வியப்பு என்னை மயக்கி, தெய்வீகமான ஒரு உலகுக்குக் கூட்டிச் சென்றது.

"சார், நேரம் பன்னிரண்டாயிற்றே. நீங்கள் எங்கு போகவேண்டும்?" என்றான அவன்.

"எங்குமில்லை. போகவேண்டிய இடத்துக்கு வந்துவிட்டேன்" வேறு எப்பதிலும் கூற எனக்குத் தெரியவில்லை.

"சார், உங்கள் எண்ணம் எனக்குப் புரிகிறது. நாங்கள் உங்களுடன் வரமுடியாமைக்காக மன்னிக்க வேண்டும்" என்று கூறிக் கைகூப்பினான்.

## 5

அன்றொருநாள் வெள்ளிக்கிழமை. இராசவள்ளிக் கிழங்கு வாங்கி வரலாமென்ற நினைப்பில் சுன்னாகம் போகப்புறப்பட்டேன். முத்துவைக் காணவேண்டும் என்ற தாகம் என்னை வாட்டியதுதான் உண்மைக்காரணம் என்பதும் எனக்குத் தெரியாததன்று.

நான் அங்கு சென்றபோது சந்தை களைகட்டி விட்டது. தெருவோரத்தில் நீண்டு கிடந்த மோட்டார் வாகன அரணைத் தாண்டி உள்ளே சென்றேன். உலக மொழிகளின் ஒலிவடிவெல்லாம் திரட்டி ஒருருவாக்கியது போலச் சந்தையிரைச்சல் பலபல ஸ்தாயிகளிற் கேட்டது. ஏறக்குறைய அங்கு அல்லிராச்சியம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெண் வியாபாரிகளின் குழைவான பேச்சும் சமயங் கிடைத்தபோது வெளிவரும் அதட்டலும் மிரட்டலும் பொருள் வாங்குவோரைக் குழப்பியடித்தன; அவர்களுக்கு இலாபஞ் சம்பாதித்துக் கொடுத்தன.

"முத்து! முத்து! இதைத் தூக்கி வானுக்குக் கொண்டு போ" என்ற சத்தம் கேட்டது. அத்திசையில் நோக்கினேன். வியர்க்க விறுவிறுக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, சாமான்களைத் தூக்கிக்கொண்டு ஒரு

பக்கம் சாய்ந்து நொண்டி நொண்டி ஓடினான் முத்து. இதற்கிடையில் "தம்பி, இதையும் பஸ்ஸடியில் போட்டுவிடு" என்று ஒரு கிழக்குரல் நலிந்துவந்தது. "இதோ வருகிறேன் ஆச்சி" என்று அவளுக்குச் சொல்லிக்கொண்டு ஓடினான். ஓடவிட்ட பம்பரம்போற் காணப்பட்டான். எவரிடமும் அவன் பேரம் பேசியதை நான் காணவில்லை. அவர்கள் கூலியாகக் கொடுப்பதை வாங்கிக்கொண்டான். அது இரு வயிற்றை நிரப்பியது.

அமளி சிறிது அடங்கியபின் "முத்து..." என்று குரல் கொடுத்தேன் அதைக் கேட்டு ஓடி வந்தான். என்னை ஒருமுறை பார்த்துவிட்டு "சார் எதைத் தூக்கி எங்கு போடவேண்டும்" என்றான். அந்தக் குரலிற் குழைவுமில்லை; நெகிழ்வுமில்லை. என்னையும் சந்தைக் கூட்டத்தில் ஒருவனாகவே மதித்த சுபாவம் அதில் தெரிந்தது. நான் காட்டிய கடகத்தைத் தூக்கிக்கொண்டு வாடகைக்கார் நின்ற இடத்துக்குச் சென்றான். அவன் பின்னால் நான் சென்றேன்.

முத்து எங்கே ஓடுகிறான்? என்ன அவசரம்? கடகத்தை எறிந்துவிட்டல்லவா ஓடுகிறான்? எனக் கொன்றும் விளங்கவில்லை. திகைத்து நின்றேன். ஒரு கார் கிரீச் எனப் பேரொலி செய்துகொண்டு நின்றது. அதற்கிடையில் சனக்கும்பல் மொய்த்துவிட்டது. ஒரு சிறு பெண்குழந்தை தெருவோரத்தில் தள்ளப்பட்டுக்கிடந்தாள்.

முத்து காரின் முன்சில்லில் அகப்பட்டுக்கிடந்தான். பச்சையிரத்தம் குபுகுபுவெனப் பெருகி ஓடியது. மரணாவஸ்தையிலே கடைசித் துடிப்புக்குக்கூடச் சந்தர்ப்பமளிக்காமல் அவனைக் கொன்றுவிட்டது. அந்த வாகனம். அவன் முகத்தில் வேதனை இல்லை. துன்பம் இல்லை. கவலை இல்லை. வழக்கமான புன்முறுவல் அழியவுமில்லை. இனி. அவனைச் சுன்னாகச் சந்தையும் காணமுடியாது. நானும் காணமுடியாது.

நான் செய்வதறியாது திகைத்து நின்றேன். கண்ணீர்த்திரையிட்ட கண்களினால் முத்துவை மீண்டும் ஒருமுறை நோக்கினேன்.

என்மனம் "முத்து. உன்வெறி நீடூழி வாழ்க" என வாழ்த்திப் புலம்பியது.

❖❖❖

# 05. புத்தனின் சுவடு

நிலவொளியிலே அந்த மலைப்பள்ளத்தாக்கு முழுவதும் எழின் முறுவல் பூத்துத் தேஜோமயமான காட்சியளித்தது. மலையினின்றிழிந்து துள்ளியோடிய சிற்றாறு. அந்த நிலவொளியில் தக தக வென்று மின்னிக் கொண்டிருந்தது. அந்தச் சிற்றாறை நோக்கிச் சாந்தமே உருவாய ஒரு புத்தபிக்கு மெல்ல நடந்து சென்றார். நாற்பது நாற்பத்தைந்து வயது மதிப்பிடக்கூடிய அவர் நடக்கும்போது ஒரு காம்பீரியம் துள்ளிய போதிலும் அது சோபிக்க இன்னும் இடமுண்டு. ஞான ஒளியைச் சூக்குமமாக விசும் அவர் கண்கள் வெளிப்பார்வைக்குச் சோந்திருந்தன. பாவம்! பசியரக்கனுக்குப் பல நாட்களாகப் பலியிடவில்லை. ஒரே பட்டினி. ஒப்பற்ற மனோதிடத்துடன் இருந்தபோதிலும் பசியரக்கன் தன் வெற்றியை அவர் தேகத்தில் பொறித்து விட்டான். சோர்வுச் சின்னங்களால். புத்தபகவானின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய அவருக்கு இதுவும் ஒரு சோதனைக் காலம் போலும்!.

புத்தனின் அஷ்டசீல விரதத்தை நுண்ணிதாகப் பாகுபடுத்தி அதன் வழி நடக்கும் அந்தப் பிக்கு கொல்லாமையை எங்ஙனந்தான் புறக்கணிப்பார் அதுதானே அவராத்மா. அவர் தான் கொண்டு வந்த நீர்வடி கருவியால் சுனைநீரிலுள்ள ஜீவாணுக்களை நீக்கிவிட்டுச் சிறிது ஜலபானஞ் செய்தார். சிறிது களைப்பு நீங்கிய அந்த நிலையிற்றான் அவரால் அந்த இயற்கையின் சௌந்தர்யத்தையள்ளிப் பருகக்கூடிய மனவுணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு பாறையின் மீதமர்ந்து இயற்கைத் தேவியின் க[illegible]நடத்தைப் பார்த்து இன்புற்றுக் கொண்டிருந்தார்.

சில கணங்கள் சென்றன. "கொ.......ர்.கொ.....ர்" என்று ஒரு இருமற் சப்தம். அந்த அகால வேளையில் நிலவிய நிசப்தத்தைப் பிளந்துகொண்டு தெளிவாகக் கேட்டது. ஆச்சரியத்தால் திடுக்குற்ற புத்த தபோமுனிக்கு உள்ளூர ஒரு பயமும் வியப்பும் தோன்றின. அமானுஷியமான இந்த வனப் பிரதேசத்தில் இந்த மனிதக் குரல் கேட்கிறதே! ஆம். என்னைத்தவிர இன்னுமொரு ஜீவன் இந்தப் பிராந்தியத்தில் வசிக்கின்றது போலும் என்று எண்ணிக் கொண்டு சப்தம் வந்த திக்கை நோக்கி நடந்தார்.

சிறிது தூரந்தான் நடந்திருப்பார். அவர் எதிர்பாராதவிதமாக ஒரு புதர் மறைவில் ஒரு மனித உருவம் இருந்தது. அந்த மனிதனின் பக்கத்தில் நிலவொளியின் சோபையால் ஏதோவொன்று பளபள வென்று பிரகாசித்தது. அது அவன் வாள். இனனொரு புறத்தில் ஒரு சிறு முடிப்பு. அதை அந்தநேரம் அவன் அவிழ்க்கத் தொடங்கினான். அது கட்டுச்சாதம். அந்தப் பிக்கு போன சமயம் அவன் அதை நிலாவெளிச்சத்தில் வைத்துச் சாப்பிட ஆரம்பித்தான். எதிர்பாராத இந்த மனித உருவத்தைக் ,கண்டதும் பிக்குவின் இதயம் திக் என்றது. ஆனாலும் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு அந்தப் புதுமனிதன் இருந்த இடத்தையடைந்தார்.

"அப்பா, எனக்கும் கொஞ்சம் சாதம் அளிக்க முடியுமா?" என்று புத்த பிக்கு அந்த மனிதனைப் பார்த்துக் கேட்டார். எத்தனையோ நாளாகக் காட்டுணவையே புசித்துக் காலங்கழித்த அவருக்கு அமுது செய்ய ஆவல் பிறப்பது இயற்கை தானே!

சடுதியில் தோன்றிய இந்தக் கேள்வியைக் கேட்ட அந்தப் புது மனிதன் திகைப்படைந்தான். தன்னிடம் வந்த புது விருந்தினனை உற்றுப் பார்த்தான் அவன். மனதில் என்ன எண்ணம். தோன்றியதோ. தான் கொண்டுவந்த சாதத்தில் ஒரு பகுதியைப் பகிர்ந்து அவருக்குக் கொடுத்து விட்டு மிகுதியையருந்தினான். மகிழ்ச்சியின் ஒளிபடர அவர் அதைக் கையேற்று அருந்திவிட்டு சாவகாசமாக அந்த இடத்தில் இருந்தார்.

"அப்பா. நீ எங்கிருந்து வருகிறாய்.? தொலைவிலிருந்து போலத் தோன்றுகிறதே" என்றார்.

"ஆம், தொலைவிலிருந்து தான்; அநுராதபுரத்திலிருந்து" என்றான் அந்தப் புது மனிதன்.

"அநுராதபுரத்திலிருந்தா! அங்கு என்ன விசேடம்? அரசனின் சேமம் எப்படி?

"யார் சங்கபோதியா? அவர் தானே ஒளித்து விட்டார்."

"ஆ! சங்கபோதியா? எப்போது?"

"அவரை ஒரு மாதமாகக் காணவில்லையாம். அதனால் தலைநகரிலேயே பெரிய பெரிய பூசல்கள்"

"பூசல்களா? என்ன பூசல்கள்?" பிக்குவின் முகத்தில் துக்கத்தின் ரேகைகள் படர்ந்தன. அந்த நிலாவொளியிலே அவர் முகம் வெளிறியதை அந்தப் பாமரனால் எப்படித்தான் அறிய முடியும்?

"பூசல்கள் தான்; பெரும் பூசல்கள். எத்தனையோ பேரின் தலைகளெல்லாம் வாளுக்கிரையாகின்றன, அந்த ஒரு அரசனினால்."

"என்ன என்ன, வாளுக்கிரையாகின்றனவா? ஏன் அப்படி?" பிக்குவால் மேலே பேசமுடியவில்லை. மலை போன்ற பெரிய பாறாங்கல் நெஞ்சில் அழுத்துவதுபோன்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. என்ன செய்வதென்று தோன்றவில்லை. அந்த நிலையை அவனுக்குக் காட்டிக் கொள்ளவும் விரும்பவில்லை. மிகுந்த பிரயாசையுடன் புன்முறுவலொன்றை வருவித்துக் கொண்டார்.

"ஐயா! அதையேன் கேட்கிறீர்கள்? அரசனின் மந்திரி கோட்டாபயன் அரசன் புறப்பட்ட அன்றே பறையறைவித்துவிட்டான், 'யார் அரசன் சங்கபோதியின் தலையைக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கு 1000 பொன் பரிசு' என்று. இந்தப் பரிசைப் பெறப் பலர் அரசனின் முக ஒற்றுமை வாய்ந்த பல அப்பாவிகளின் தலைகளைக் கொய்கிறார்கள் கடைசியில் அவர்களுக்கும் ஏமாற்...."

குடியானவன் வார்த்தைகளை முடிக்கவில்லை. "ஆ! என்ன கொடுமை!" என்ற வார்த்தைகள் மாத்திரம் பிக்குவின் வாயிலிருந்து கிளம்பிச் சென்றன. நினைவு தப்பி மூர்ச்சையடைந்து விட்டார்.

வைகறையின் விடிவைப் போன்று அந்த வழிப்போக்கனின் சந்தேகவிருள் மெல்ல மெல்ல நீங்கியது. அவன் ஒருதரம் பிக்குவைக் கூர்ந்து நோக்கினான். 'ஆம், இது எங்கள் அரசன் சங்கபோதி தான். ஐயமேயில்லை. நான் தேடி வந்த வஸ்து இதோ என் முன்னால் கிடக்கிறதே. காரியத்தை முடித்துவிடலாமா? ஏன் முடித்து விடுவோமே' என்று அவனின் ஒரு மனம் சொல்லிக்கொண்டது.

அவன் கண்கள் பளபள வென்று ஒளி விடும் வாளை நோக்கின. எடுப்பது தான் தாமதம்.

'ஆ! எங்கள் அரசனையா? கருணை வள்ளலையா – நீ கொல்வது? ஏ! மதியிலியே! என்ன எண்ணங்கொண்டாய்? உன்னிடம் ராஜபக்தியின் தழும்புகள் இன்னும் பதியவில்லையா? கேவலம்! ஒரு ஆயிரம் பொன்னுக்கு ஆசைகொண்டு உன் அரசனைத் துச்சமாக மதித்து விட்டாயே? சிங்கள இரத்தம் குதித்தோடும் உன் தேகம்

இன்னுமா நிலை நிற்க வேண்டும்? இதோ, நீ கொடுத்தசோறு இன்னும் செரிக்கவில்லையே! அதற்கிடையில் நீ அவர் தலையைக் கொய்யத் துணிந்தாயோ? துரோகியே! சுதந்திர உணர்ச்சியும் வீரப்பிரதாபங்களும் பெருக்கெடுத்தோடும் உன் சமூகத்திற்கு ஒரு அழியா வசையை ஆக்கக் கருதினையோ? இங்ஙனம் நீ எண்ணங்கொண்டால் ஈழத்தாய் ஒருத்தி உனக்கு ஊட்டிய தாய்ப்பால் என்ன ஆகும்? 'என்று அவனின் மற்றொரு மனம் வேகமாக அடித்துக்கொண்டது.'

உடனே தரையில் கிடந்த சங்கபோதியைத் தன் மடியில் பரிவுடன் எடுத்து அணைத்து ஆசுவாசப்படுத்தினான்.

## 2

எத்தனையெத்தனையோ அரசர்கள் அரசுகட்டிலேறி அரசாண்ட அநுராரபுரம் கி.பி 3ம் நூற்றாண்டளவில் மகோன்னத நிலைபெற்று விளங்கியது. அந்தக் காலத்தில் அந்தப் புனித புத்தனின் சமயம் இலங்கையில் ஆழமாக வேரூன்றியிருந்தது. பெரும்பாலான மக்களின் இருதயமெல்லாம் புத்தனின் ஞானோபதேசங்களால் நிறைந்திருந்தன. அது என்னவோ இந்தச சமயங்களுக்கும் கலைப்போக்கிற்கும் நெருங்கிய பிரிவற்ற தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. அதனாலே தான் புத்த சமய வளர்ச்சியைப் பின்பற்றிக் கலைகளின் - சிற்பம், ஓவியம் - செல்வாக்கும் உன்னத நிலை அடைந்து கொண்டிருந்தது. யாரும் இந்த வளர்ச்சியைத் தடுக்க முடியாது; காட்டாறு போல பெருகிச் செல்வதே அவற்றின் சுய குணம்.

பாறைகளெல்லாம் உருமாறி உயிர்ச்சிலைகளாகவும் குகைகளும் விகாரைச் சுவர்களும் புத்தனின் வாழ்க்கையைக் காட்டும் அழியா ஓவியங்களாகவும் பரிணமித்த காலம் அது. அந்தச் சிற்பியும் ஓவியனுந் தன் தொழிலிற்கொண்ட உள்ளத்து உணர்ச்சியிலும் பார்க்க அவர்களுக்கு ஆர்வமூட்டிப் பொருளுதவி செய்த அந்தக்கால அரசர்களின் உள்ளப்பண்பாடு எவ்விதத்திலும் குறைந்ததல்ல பிரவகித்தோடிய அவர்களுள்ளத்துணர்ச்சியின் சின்னங்களான அவை இன்னும் அழியாது அங்கே நிற்கின்றன.

என்றாலும் விசனிக்கக்கூடிய சில சம்பவங்களும் அந்தக் காலத்திலே நடந்தன. அரசனைக் கொல்லும் யாரும் அரசு கட்டிலேறும் அநியாயங்கள்; சூழ்ச்சியும் பொறாமையும் மனதிலே சேர்ந்துவிட அதனால் அரண்மனைக்குள்ளேயே பெரிய பெரிய குழப்பங்கள்; அரசர்கள்

நானே அரசன் என்ற மனப்பாங்கினால் குடிகளுக்குச் செய்யும் கொடுமைகள்: இவைகளும் அந்தக் காலத்தில் தாண்டவமாடின. இவ்விதமாக ஒருபுறம் மனித கலையின் வளர்ச்சியும் இன்னொரு புறம் பாதாளத்தையொத்த அரசியற் பிணக்குகளும் நிகழ்ந்த அந்தக் காலத்திலே தான் தாமஸ்ரீ சங்கபோதி அரசனான்!

இவன் ஒரு தயாநிதி: அறநறி பிழைத்த ஒரு உயிரைத் தானும் கொல்லத் துணியாதவன். கருணையே உடம்பானவன். புத்தபகவான் அருளிய அஷ்டசீல விரதங்களில் கொல்லாமையென்பது அவனுயிர். நீரிலுள்ள சீவாணுக்களையே பிரித்து ஜலபானஞ் செய்வானென்றால் அவன் கொல்லா விரதத்திற் கொண்ட மாசற்ற பற்றைப் பார்க்கவேண்டியது தான்! இந்தக் கொள்கையால் அரசியலில் துஷ்டநிக்ரகமே ஒழிந்துபோய்விடும் போற் தோன்றியது.

3

ஒருநாள் இரவு இரண்டுமணி சமயம். எங்கும் செறிந்த இருள்: அநுராதபுரத்தின் சகல இடங்களையும் ஈவிரக்கமின்றிக் கவ்விக்கொண்டது. அநுராதபுரமே மோனநிலையின் பரிபூரண அணைப்பிலே லயித்துப்போய் மனதுக்கு எட்டாத ஒரு பெருந் தத்துவத்தை விளக்கிக் கொண்டிருந்தது. கடிகையார் அடிக்கும் மணியொலியேயன்றி வேறொன்றும் அந்த மோன நிலையைச் சின்னபின்னப்படுத்தவில்லை.

இந்த நிலையிலே இலங்கையரசன் சங்கபோதி தன் சயன கூடத்தின் கதவுகளை மெதுவாக நீக்கிக்கொண்டு செறிந்த அந்தக் காரிருளில் நடக்கலானான். பிரகாசமான ஜோதிக்கும் கனத்த அந்தகாரத்திற்கும் மனிதன் கண்கள் பேதங்கண்டு கொள்ளாத் தன்மையாலோ என்னவோ? அந்தக் காரிருளிலும் அவன் கண்கள் வழிபிடித்துச் சென்றன. அவன் சிறைக்கூடத்தின் வாயிலை அடைந்தபோது விடியற்காலச் சுக்கிரன், தூரத்தில் தெரிந்த அந்தப் புத்த விகாரையின் மேலே தன் சொந்தக் குறுநகையுடன் வந்து நின்றது. அது சங்கபோதியின் கண்களுக்குச் சுபசோபனமாகத் தான் விளங்கியது.!

இவ்விதமாகப பலதினங்கள் அரசன் கால்கள் சிறைச்சாலையையடைந்திருக்கும். என்ன நினைத்தக்கொண்டு கால் தேயச் சென்றுவந்தானோ அந்த அரசன்?

இவ்விதமாகப் பல தினங்களுக்கப்பால் அந்தக் காலப் புள் பறந்துவந்து தங்கிற்று.

4

என்ன அதிசயம்! அரசன் ஆணையின் கீழ் அடங்கி நிம்மதியுடன் விளங்கிய நாடு நகரங்கலெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டன. நாடு நகரங்களைத் தமது சொந்த உரிமையாகப் பாராட்டிக் கொள்ளைக் கூட்டங்கள் வேட்டையாடிக்கொண்டு கேட்டபாரற்றுத் திரிந்தன. அதனால் எத்தனை கொலை, களவு, மானவீனம்! மந்திரி பிரதானிகள் ஒருவருக்கும் காரணம் புலப்படவில்லை. நாட்டு மக்கள் உணர்ச்சியைத் தனதாக்கிக் கொண்டு அரசன் செவியில் அறிவுறுத்த அந்தக் காலத்தில் ஒரு புலவனுமில்லையோ? இல்லையே என் செய்வது!

5

ஒருநாள் வழக்கம் போலச் சங்கபோதி அந்த நள்ளிரவிலே சிறைக்கூடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். ஆனால் இடைவழியில் நின்று எதையோ உற்றுக்கெட்டுக்கொண்டிருந்தான். பல எண்ணங்களின் பிரதிபிம்பங்கள் அவன் முகத்தில் தோன்றி மறைந்தன.

அது மந்திரி கோட்டாபயனின் மாளிகை. உள்ளேயிருந்து இரு மெல்லிய குரல்களின் துவனி அறைச்சுவர்களைத் தாண்டி மிருதுவாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

"நாடு நகரங்களின் அல்லோல கல்லோலங்கள் எப்படி?" இது மந்திரி கோட்டாயனின் குரல்.

"எப்படியா? இன்னும் சில தினங்கள் கழிந்தால் இந்த ராச்சியமே அழிந்துவிட வேண்டிதுதான்". இது சேனாதிபதியின் வார்த்தை.

"நிச்சயமாக அழியவேண்டியதுதான்: துஷ்டநிக்ரகமும் அரசனின் கடமைகளில் தலைசிறந்த ஒன்றுதானே?"

"ஆம். சந்தேகமென்ன?"

"அப்படியென்றால் அர..சனே.."

"என்ன நமது அரசனா..?"

"ஆம் நமது அரசன் தான் இதற்கெல்லாம் காரணம்"

இந்தச் சம்பாஷணை அரசனுள்ளத்தில் சுரீரென்று தைத்தது. அவனது மனவிருட்சம் பலவித எண்ணச் சுழல்களினால் மோதுண்டு உலைந்தாடியது. நான் தான் எல்லாவற்றிற்கும் காரணமாம் எப்படி? என்றது அவன் அந்தராத்மா. ஆனால் அவர்கள் சம்பாஷணை தொடர்ந்து

நடந்ததனால் அவன் கவனமெல்லாம் அதிலேயே லயித்துப் போயிற்று.

"என்ன அரசனா இவற்றுக்கெல்லாம்காரணம் எப்படி?" என்றான் சேனாதிபதி.

"சரி சரி அவையெல்லாம் உனக்கு எப்படித் தெரியப்போகின்றன? நேற்றிரவு இதேநேரம் என் சயன கிருகத்தில் சுவரோரமாக யாரோ ஒரு மனிதனின் காலடிச் சத்தம் லேசாய்பட்டது. 'இந்த அகால வேளையில் யார் எங்கே போகிறார்கள்?' என்று எண்ணிக்கொண்டு சப்தம் வந்த திக்கை நோக்கி நடந்தேன். ஒரு உருவம் சிறைச்சாலையை நோக்கிச் சென்றது. சந்தடி செய்யாமல் மெதுவாக அந்த உருவத்தைப் பின்தொடர்ந்தேன். என்னஆச்சரியம்? எங்கள் அரசனே சிறைச்சாலையைத் திறந்து இரு கைதிகளை விடுதலை செய்து விட்டார்! அதற்குப் பதிலாகத் தன் கையாலேயே இரு பிணங்களைக் கழுவேற்றியும் விட்டார். இனியாவது விஷயம் விளங்கவில்லையா உனக்கு?" என்று கூறி முடித்தான் கோட்டாபயன்.

"நன்று நன்று. அரசனின் கருணைவெள்ளம் இந்த வழியிலா பிரவகித்தோட வேண்டும்? இனி அரசாங்கம் கவிழ்வதற்கு வேறு என்ன காரணம் வேண்டிக்கிடக்கிறது.?"

அரசனால் அந்த இடத்திலே நின்று கொள்ள முடியவில்லை. ஏதோ அந்தர வெளியில் செல்வது போன்ற உணர்ச்சியடைந்தான்.

அவன் தனது மன மாளிகையின் உன்னதசிகரமாக எதை மதித்திருந்தானோ அந்த சீவகாருண்யமே அறநெறியை பிறழ வைத்தது போலும்! அதற்காக அவன் சிறிதும் கவலைப்படவில்லை.

'அறநெறியில் பிறழ்ந்த ஒரு உயிரைத் தானும் வதைப்பதற்கு என் மனம் இடங்கொடுப்பதில்லையே. நான் என் செய்வது, எந்த உயிர் வதையைத் தானும் புறக்கணிக்கும் என்னுள்ளம் இந்த இராச்சியமே அழிந்து போனால் கூட மாறப்போவதில்லையே' என்று குமுறிக் கொந்தளித்தது அரசனுள்ளம்.

## 6

மறுநாள்; அதே நேரம் வழக்கமான காரிருளின் செறிவு எவ்விதத்திலும் குறைந்துவிடவில்லை. அரசன் தன் சயன அறையிலே பலமான மனோவேதனையில் சுழன்றுகொண்டிருந்தான்.

'ஆம்; என் ஒருவனால்தானே இத்தனை கஷ்டங்களெல்லாம். நான் தொலைந்துவிட்டால் பரம்பரையாக வந்த இராட்சியம் நிம்மதியாக விளங்குமல்லவா? நல்ல யுக்தி தான்' என்று அவன் கடைசியில்

தீர்மானித்து எழுந்தான். அரண்மனை வாசல் கதவின் மெல்லிய கிரீச் சப்தம் அங்கு நிலவிய நிசப்தத்தில் ஒரு சிறு பிளவையேற்படுத்தி மறைந்தது. அடுத்தகணம் அநுராதபுரத்தின் அரசன் சங்கபோதி ராசபாட்டை வழியாக நடந்து சென்று அந்தக்காரிருளில் கலந்துவிடடான். ஆனால், தன்னால் தான் எத்தனையோ நிரபராதிகளின் சிரம் கொய்யப்பட்ப் போகிறதென்பதை அவனால் எவ்விதம் அறிந்துகொள்ள முடியும்!.

❖❖❖

# 06. "ஸ்ரைக்"

"நான் யார்? எங்கிருந்து வந்தேன்?" என்ற தத்துவ விசாரம், சந்தர்ப்பம் வாய்த்த வேளையிலே சாதாரண மனிதர் மனத்திலும் முளைவிடுவதுண்டு. ஒருவரின்றி ஒருவரில்லை என்ற பிணைப்பில், ஒருவர் போய்விட இருக்கும் ஒருவருக்கு அது தோன்றுவதுமுண்டு; மயானத்தின் பயங்கரப் பின்னணியிலே "நேற்றிருந்தார் இன்றில்லை" என்னும் உண்மை வெகு தெளிவாகத் தெரிய அது தோன்றுவதுமுண்டு.

ஆனால் முத்துவுக்கோ யாழ்ப்பாணப் பஸ் நிலையத்திலேயே அந்த விசாரம் அரும்பிவிட்டது. எதிர்காலமென்னும் கற்பனைக் கன்னியின் குறுநகையில் மனம் கொள்ளைபோக, அவள் காட்டும் கனவுகளிலே முக்குளித்துத் திரியும் அந்த வாலைவயதில் அந்தச் "சுடலை ஞானம்" தோன்றுவதென்றால், நிச்சயமாக அந்தக் காரணம் வெகு தாக்கமுள்ளதாகத்தான் இருக்கவேண்டும். ஆம்: கடந்த ஐந்தாண்டுகளாக, அவனது ஜீவமூச்சாய், அவனே அதுவாய், அதுவே அவனாய்ப் பிரிவறியாப் பொருளாய் ஒன்றிவிட்ட யாழ்ப்பாணப் பஸ் நிலையம் கடந்த நான்கு நாட்களாய்ச்செத்துப்போய், அநாதைப் பிணம்போல நீட்டி நிமிர்ந்து கிடந்தது.

எந்தெந்தச் சடப்பொருளும் காலமும் இடமும் பயனுங்கொண்டு பாவம் ததும்பப் பிரகாசிக்கலாம் என்ற உண்மையை அது அவனுக்கு அன்று தெளிவாகக்காட்டியது. குத்துவிளக்கின் எல்லாமுகங்களிலும்

அடக்கமாகப் பூரணப்பொலிவுடன் விளங்கிய சுடர் அணைந்து விட, அது. செத்துக்களையிழந்து கிடப்பதில்லயா? அது போலக்கிடந்தது அது. பரிதாபமும் பயங்கரமும் கலந்த இந்நிலை. விபரம் புரியாததொரு உணர்வாய் விஸ்வரூபமெடுத்து அவனது மனத்தின் உட்சுவரைத் தட்டித் தட்டித் துன்புறுத்தியது. அவனால் சீரணித்துக்கொள்ள முடியாத, மகாகடினமான, மகாபயங்கரமான அனுபவமாக அது தோன்றியது.

இறந்துபோன தாயின் கால்மாட்டிலே கிடந்து. அழுதழுது துயரத்தின் எல்லையைக் கண்டு, தேற்றுவாரின்றியே சோர்ந்துபோய். முடங்கிக்கிடக்கும் குழந்தையைப்போல, அந்தப்பஸ்நிலையத்தின் ஆபீஸ் அறைக்கு வடபாலுள்ள மண்டபத்தின் தென்கோடியிலே கிடந்த ஆசனத்தில்.முத்து கூனிக்குறுகிப்படுத் திருந்தான். அந்தப் பயங்கர அனுபவத்தைக் கடந்த நாலுநாட்களாக அல்லும் பகலும் மெல்ல மெல்ல அனுபவித்து. பரிபூரண கசப்புணர்வை உள்வாங்கி, மனசைச்சுளிக்கப்பண்ணிக்கொண்டு அவன் கிடந்தான். அவன் கண்களை மூடி அந்தர்முகமாக நினைவைச் சுழலவிட்டுக்கொண்டு கிடந்தான். இடைக்கிடை கண்ணீர் கொப்புளித்துக்கொண்டு கடைக்கண் வழியாகச் சிந்தியது. அதை அவன் துடைக்கவி ல்லை.

ஒருமுறை பார்த்தவர்களையும் இரண்டாம் முறையும். பார்க்கச்செய்யும் ஒரு வசியத்தன்மை முத்துவுக்குச் சித்தித்திருந்தது. தூசிபடிந்த ஆனால் சுருண்டு நெளிந்த கேசம், சொல்வழிகேளாத் துடுக்குக் குணம்கொண்டு அலைந்து கிடந்தது. குருத்துமீசை அரும்புகட்டி. காளைப்பருவத்தின் தலைவாயிலுக்கு அவனை கூட்டிவந்த பெருமிதத்திலே கறுத்துச் சிரித்தது. சரிபாதியாக வெட்டிப்பிளந்தது போன்ற அவனது உதடுகள், தீர்க்கமான போக்கைக் காட்டும் கண்ணாடிகள், தோய்த்துத் தோய்த்து நசிவுண்ட அரைக்காற்சட்டை; இடது பக்கத் தோள்மூட்டிலே கிழிவுகண்ட ஒரு "சேட்". கழுவித் துடைத்துத் துப்புரவுசெய்தால் தான் அவனது உண்மையான நிறத்தைச் சொல்லமுடியும்.

நினைவுகளை உள்வாங்கிக் குமைந்த அவன், கண்திறந்து பார்க்கிறான். கண்கள் அங்குமிங்கும் எங்கும் நோக்குகின்றன. அந்தக் காட்சி.....

வழக்கமான வைகறைப்போதிலேயே உயிர்ப்பொறி தெறிக்கத் தொடங்கிவிடும் பஸ்நிலையத்தில் எதுவித சலனமுமில்லை. வைகறை தொட்டு ஒரு சாமம் வரையும் கணந்தவறாமல வருவதும் போவதுமாய்த்திரியும் எந்தவகை பஸ்ஸும் இல்லை. தள்ளாமையால்

கீழ்மூச்சு, மேல்மூச்சு வாங்க இருமல் நெஞ்சைப் பிளக்க விழுந்தெழுந்து தள்ளாடிக்கொண்டு வந்துநிற்கும் கிழப்பஸ்ஸும் இல்லை. கம்பீர நடைநடந்து வெகு லாகவமாக மூலை திரும்பி வெற்றிப்பெருமிதத்தோடு துதித்துநிற்கும் காளை பஸ்ஸும் இல்லை. நளின தோற்றத்தோடு அன்னமென நடந்து மெல்லிசை மிழற்றி அலுக்கிக் குலுக்கி நிற்கும் குமரி பஸ்ஸும் இல்லை. இவைகளுக்காக ஏங்கித்தவமிருந்தும், நின்று இருந்து நடந்து அலுத்தும், பின்பு அவரவர்க்குரிய அவயைவை கிடைத்தபோது, சிலவேளை சிரித்து மகிழ்ந்தும் சிலவேளை காலாக்கினி முகத்தில் ஜொலிக்க முணுமுணுத்தும் போக்குவரத்துச் செய்யும் மனிதக்கும்பலையும் காணவில்லை. இந்த மனிதக்கும்பலை நம்பி முத்துவைப்போலவே வயிறு வளர்க்க எண்ணி, இடதுசாரி, வலதுசாரியாகச் சுழன்று திரிந்து, சிலசமயம் தனக்குப் போட்டியாகவும் உதவியாகவும் தொண்டை கிழியக் கத்திப் பணம் பண்ணும் நடமாடும் வியாபாரிகளையும் காணவில்லை. எல்லாம் எங்கெங்கோ போய் அடைந்துவிட, எல்லாரும் எங்கெங்கோ போய் ஏதேதோ வழிவகை கண்டார்கள். ஆனால் முத்துமாத்திரம் செத்துப்போன தன் தாயான பஸ்நிலையத்தைக் கட்டிக்காத்துக்கொண்டு கிடந்தான்.

முத்து எழுந்திருந்தான். மீண்டும் அவன் கண்கள் சுழன்று சுழன்று நோக்கின; ஆபீஸ் அறையை எட்டிப் பார்த்தன. அங்கே நாலு பொலீஸ்காரர், எங்கோ தனிவழியில் விழுந்துகிடந்த அநாதைப்பிணத்தை இரவு பகலாகக் காப்பதுபோலக் காணப்படுகின்றனர். பிணத்தைக் காக்கவந்தவர்கள் சர்வாயுதபாணிகளாய்க் காட்சிதரும் தொழில் நுணுக்கந்தான் மர்மமாய்த் தோன்றுகிறது. இவர்கள் கடந்த நாலு நாட்களாய் வேலையில்லாத வேலையை இருப்பதும் படுப்பதும் எழுவதும்நிற்பதும் நடப்பதுமாய் செய்துகொள்கிறார்கள். அந்த ஆபீஸறைதான் இப்போது அவர்கள் பாசறை.

அவர்களைப் பார்த்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஒரு கணம் தன்னிலையை மறந்துஅவர்கள் நிலைக்குப் பரிதாபப் படுவதுபோல, "ஐயோ பாவம்" என்று அங்கலாய்த்தான்.

அப்பொழுது பொன்னம்பலம் வீதி வழியாகச் சிறுவன் ஒருவன் தாளந்தவறாமல் ஸ்தாயி மாறாமல் குரலெழுப்பிக்கொண்டு சென்றான்.

"நாலு ரொபி பத்துச்சதம்...... நாலு ரொபி பத்துச்சதம்."

"ஒரு ரூபாவுக்கு மூன்றுபேனை..... ஒரு ரூபாவுக்கு மூன்று பேனை"

"இருபது இனிப்......பத்துச்சதம்" நாலு நாளாய்க் காதிற்படாத அந்தக் குரலைக் கேட்டபோது முத்துவின் உடல் சிலிர்த்தது.

உள்ளேயிருந்து வெள்ளமாய் எழுந்த உத்வேகம் அவனை ஆட்கொள்ள வேகமாய் எழுந்தான். தன்னைமறந்த ஒரு நிலை அவனிற்கவிந்து மூடியது.

"தினகரன்..வீரகேசரி......ஈழநாடு....... டெயிலிமிறர்......... பத்துச்சதம் பேப்பர்...."

"படுக்கையில் பாதி மீசை பறிபோன பரிதாப சம்பவம்."

"பெய்தது பெருமழை.........பெருகியது வெள்ளம்."

"வஞ்சிக்கப்பட்டாள் கன்னி........வாலிபன் கைது"

"பிரதமருக்குக் கன்னத்திலறை"

"தினகரன்....வீரகேசரி....ஈழநாடு.......டெயிலிமிறர்.... பத்துசதம் பேப்பர்........பத்துசதம் பேப்பர்....." அவன், தான் நின்ற சூழல், 'உலகம் எல்லாவற்றையும் மறந்து உரக்க உரக்கக் கத்தினான். தினம் தினம் தன் தொழில் ரீதியாகச் சொல்லிப் பழக்கப்பட்ட வாய், கட்டை உடைத்துக்கொண்டு ஓலமிட்டது: அவன் நாலைந்துமுறை கத்தினான்.

"...யாரடா அது? உனக்கென்ன பைத்தியமா?" என்ற பொலீஸ்காரன் அதட்டல். வெடிகுண்டாய் வெடித்து. முத்துவினது அந்த வெறியைத் தகர்த்தெறிந்து அவனைச் சுயநிலைக்குக் கொண்டுவந்தது. தானும் தன் சூழலும் செயலும் அவனறிவிற் பட்டன. தாளக்கட்டுத் தவறிய நடனமாது நிலைகொள்ளாது தத்தளிப்பதுபோலத் தன் செயலற்றவனாய் மீண்டும் அந்த ஆசனத்திலே சுருண்டு படுத்தான். மீண்டும் நினைவுகள் உள்முகமாக நின்று அவனைக் குடைந்தெடுத்தன. அது அவனைப் படுக்கவோ, இருக்கவோ, நிற்கவோ விடாமற் பாடுபடுத்தியது. திடீரென்று எழுந்த அவன், சுற்றுவட்டமெங்குஞ் சென்று ஏதோவொன்றைத் தேடினான். கடைசியில் அந்த ஒன்று கரிக்கட்டி அவனுக்குக் கிடைத்துவிட்டது. அடுத்த கணம் தான் படுத்திருந்த இடத்திலேயுள்ள தகரச்சுவரிலே எழுதினான்.

"ஸ்ரைக் விழ்க"

மூலகாரணத்தைக் காணமுயலாமல், ஏட்டில் எழுதியும் கூக்குரலிட்டும் அமைதி காண்பவர்களைப்போல அதை எழுதி முடித்ததும் ஏதோ ஒன்றைச் சாதித்து விட்டதைப்போன்ற சாந்தம் அவனுக்குச் சித்தித்தது. படபடப்பும் வெறிக்குணமும் சமனமடைந்தன. ஒரு கணம் நிர்ச்சிந்தையாய் இருந்தான். பின் தன் சட்டைப்பையிலிருந்து கசங்கிய ஒரு "பாஸ்" புத்தகத்தை. பிறந்தவுடனே பிஞ்சுக்குழந்தையைத் தொட்டு எடுப்பது போல. வெகு மிருதுவாக எடுத்துப் பார்த்தான். "மொத்தம் 480 ரூபா" என்று அவன் முணுமுணுத்துக்கொண்டான்.

'இன்னும் இருபது ரூபா. இந்தப் பாழாய்ப்போன "ஸ்ரைக்" வராதுபோனால் இந்த நாலுநாளிலும்... நாலைந்து இருபது.... இந்தக் கடன் முடிந்திருக்கும். நானும் சுதந்திர புருஷனாயிருப்பேன். நானும் என் அப்பாவும் அடிமையாயுமிருக்கமாட்டோம். கடன்காரனாயுமிருக்க மாட்டோம். எந்த ஒரு நிமிஷம் முந்தி இந்தக்கடன் தீருகிறதோ அந்த நிமிஷத்தில் என் அப்பாவின் ஆவி சாந்தியடையும்' என்று எண்ணம் ஓடியது.

"அப்பா". அப்பா...." என்று உரக்கக் கத்த வேண்டும்போலத் தோன்றியது. அந்த நப்பாசையை மென்று விழுங்கிக்கொண்டு, அந்த ஆசனத்தில் சரிந்தான். வாய் சொல்வழிகேட்டு அடங்கிவிட்ட போதிலும் மனம் "அப்பா அப்பா" என்று ஓலமிட்டுக் கொண்டேயிருந்தது. அப்பாவின் நினைவு நெஞ்சைச் சுடச்சுட, அவன் அங்குமிங்கும் புரண்டு துடித்தான்.

"அப்பா". அப்பா...." மனம் தன்வாய் வலிக்கும் வரை ஓலமிட்டுக்கொண்டேயிருந்தது. கடந்தகால நிகழ்ச்சித்துண்டங்கள் குமிழிகளாய்ப் பரிணமித்து, மனத்தின் அடித்தளத்திலிருந்து மேலேவந்து பலபல வண்ணங்கள் காட்டிவிட்டு உடைந்தன.

## 2

முத்து கௌபீனக்கட்டோடு, தன் மாமி வீட்டுக் கிணற்றுக்கட்டிலே காலைத் தொங்கப்போட்டுக்கொண்டு, குனிந்து நாடிக்குக் கையை முட்டுக்கொடுத்தபடியிருக்கிறான், தோய்த்துக் காயப்போட்ட காக்கிச் காற்சட்டை காயும் வரையும். காலையில் நிகழ்ந்த சம்பவங்களுக்கு அர்த்தம் காணுவதில் முனைந்திருக்கிறான்.

காலையில் யாரோ ஆணும் பெண்ணும் பிள்ளைகளுமாய் நாலுபேர் மாமிவீட்டைத் தேடிவந்தனர். பண்பாடு வற்றிப்போய் 'கலடு' தட்ட, பணச்செருக்கு அவர்களது நடையுடைபாவனையிலே தெறிக்கிறது. மாமி வந்தவர்களை, "வாருங்கோ வாருங்கோ, இப்போதாவது வழிதெரிந்ததா" என்று இரு கைகளையும் நீட்டி வெகுவிமரிசையாக வரவேற்கிறாள். முத்துவுக்கு ஆச்சரியந்தாளவில்லை. மாமி இவ்வளவு விநயத்தோடு மகிழ்ச்சிபொங்க வரவேற்பதென்றால் நிச்சயமாக அவர்கள் மாமியிலும் பார்க்கப் பெரியவர்களாகத் தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொள்ளுகிறான்.

சிறிது நேரம் யோக சேமங்கள் விசாரிக்கப்படுகின்றன. வைப்புச் செப்புப்பற்றி வீடுவாசல் பற்றி, பணம பண்டம் பற்றி, ஆடை ஆபரணம்

பற்றிப் பரக்கப் பேசுகிறார்கள். எல்லாப்பேச்சிலும் முழுக்க முழுக்க பணம் பேசுகிறது. பண்பு. முகத்தில் விழிக்க வெட்கப்பட்டு ஒளித்துக்கொள்கிறது. “அடே முத்து, முத்து” என்ற மாமியின் குரல் ஒலிக்கிறது. முத்து ஓடிவருகிறான். பொத்தான் இல்லாத அந்த காக்கிக்காற்சட்டையின் இரு தலைப்புகளையும் இழுத்து வேட்டி உடுப்பதுபோல உடுத்து, தொங்கும் “வால்” களைச் சொருகவேண்டிய இடங்களிலே சொருகிக்கொண்டு, தன்னைப் பூரண அலங்காரம் செய்துவிட்டதாக எண்ணிக்கொண்டுவருகிறான்.

“யார் இந்தப்பொடியன்.” என்று வந்தவள் கேட்கிறாள். மாமியின் முகம் சுளிக்கிறது. பாக்குக்கடிக்கிற நேரத்தயக்கம். மாமி கண்சிமிட்டுகிறாள். “அதெல்லாம் பெரிய கதை; பிறகு சொல்லுகிறென்.” என்று சிமிட்டிய கண் பேசுகிறது. முத்துவுக்கு சுரீரென்கிறது. தான் போனபின்னர் தன்னைப்பற்றி மாமி இவளுக்குச் சொல்லப்போகிறாள் என்ற உள்ளுணர்வு முத்துவைச் சுடுகின்றது.

“முத்து பெரியகடைக்குப் போய், பத்து ரூபாவுக்கு இறைச்சி வாங்கிவா. சுணங்காமல் வா.” என்று சொல்லி மாமி பத்துருபா கொடுக்கிறாள். முத்துவால் அதை நம்பமுடியவில்லை. பத்துசதத்திற்கு இறால் பூச்சி வாங்கவே பத்துமுறை தயங்கும் மாமி ....ஆமாம், பத்து ரூபாவுக்கு இறைச்சி வாங்குமளவிற்கு வந்தவர்கள் பெரியவர்களாகத்தான் இருக்கவேண்டும். இறால் போட்டுச் சுறாப்பிடிக்கும் வித்தை இது என்று எண்ணிக்கொள்கிறான்.

என்றாலும் உடனே அவன் போய்விடவில்லை. தன்னைப்பற்றி வந்தவர்களிற்கு மாமி என்ன ஓதப்போகிறாள் என்பதை அறியும் ஆசைப்புழு அவனுள்ளே ஊர்கிறது. போவது போலப் போக்குக்காட்டிவிட்டு வேறொருவழியாக வந்து ஒட்டுக்கேட்கிறான். உள்ளே குரல்கள் இழைகின்றன.

“யாரவன்” வந்தவள் கேட்கிறாள்.

“அவன்...... அவன் வேலைக்காரப்பொடியன். நாலுவீடு தள்ளி அவன் வீடு. கஞ்சிக்கும் வழியற்ற பஞ்சைகள். தாயுமில்லை. தகப்பனுமில்லை. தாய் கசம் வந்துபோய்விட்டாள். தகப்பன் எங்கோ களவெடுத்து மறியலுக்குப்போய்விட்டான். தகப்பனுடைய கள்ளக்குணம் இவனுக்கும் இல்லாமல் போய்விடுமென்று எப்படி நம்புவது.” மாமி தன் கௌரவத்தைச் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் பேசுகிறாள்.

“அப்படியானால் ஒன்று செய்யேன். எங்களுக்கொரு ஆள் தேவை” வந்தவள் பேசுகிறாள்.

“அதற்கென்ன? அவனைச்சாட்டி கடன் ஐநூறுருபாய் நிற்கிறது.”.

"அதென்ன பெரியகாரியமோ? நான் தந்துவிடுகிறேன்."

முத்து அதிர்ந்துபோய் நிற்கிறான். குமுறி அழுது மனச்சுமையை இறக்க வேண்டும்போல் உணர்வு படர்கிறது. மாமி தன்னைத் தன் தமையன் மகன்; ஆசை மருமகன் என்று எவருக்குமே அறிமுகப்படுத்தாள் என்பது முத்துவுக்குத் தெரியும். ஆனால் அப்பாவைக் கள்வனாக்கி, தன்னைக் கள்வன் மகனாக்கி, அதனால் தன்னை நிரந்தரமாகக் கைகழுவி விட, விலைபேசி விற்றுவிடத் துடிக்கிறாள் என்பதை எண்ணியபோது.........அவன் மெய்சிலிர்கிறது. மாமி இட்ட சோற்றில் ஊறிய இரத்தம் அவமானக் கலப்பினால் நீராகி ஓடுவதாக உணர்கிறான். "இனியும் ஒருபிடி சோறு இங்கே உண்ணவோ" என்ற எண்ணம் இயல்பாகவே அவனில் விளைகிறது.

மீண்டும் உள்ளே குரல்கள் இழைகின்றன.

"ஆனால் ஒரு இரகசியம்" மாமி கீழ்க்குரலில் சொல்லுகிறாள்.

"என்ன என்ன?" வந்தவள் கேட்கிறாள்.

"இன்று தனக்கு விடுதலையாகிறதென்று இவன் அப்பா எழுதியிருக்கிறான். எப்படியும் மாலையில் வந்துவிடுவான். அதற்கிடையில்.."

"ஓ அதற்கென்ன"

மனப்பாரம் உடற்பாரம் எல்லாம் குறைந்து விண்வெளியிற் பறப்பதுபோன்ற உணர்வு முத்துவை ஆட்கொள்கிறது. அவன் போய்விடுகிறான்.

திரும்பி வந்தபோது மாமியும் வந்தவளும் முத்துவை அமோகமாக வரவேற்கின்றனர். பலியாட்டுக்கு அலங்காரம் செய்து மகிழ்பவர்களைப் போல அவர்கள் காணப்படுகின்றனர். ஆனால் பலியாடு அவர்களை மதியாமற் பொருதுகிறது. பலிபீடத்திற்கு போகமறுத்துத் துள்ளிக்குதிக்கிறது.

முத்து தீர்மானமாகச் சொல்லிவிடுகிறான் "யாருடனும் எங்கும் செல்லமுடியாது."

மாமியும் வந்தவளும் அதிர்ந்து மரமாய் நிற்கின்றனர். மரங்கள் மனிசிகளானபோது நெருப்பாய்க் காய்கின்றனர்.

வந்தவள் போய்விட்டாள். மாமி துர்க்கையாய் மாறி மகிஷாசுரனை சங்கரிக்க ஆயத்தமாகிறாள்.

"தங்கச்சி முத்து எங்கே?" என்ற புதுக்குரல் கேட்கிறது.

"யார் அண்ணையா? இப்பதான் வருகிறாயா? முத்து கிணற்றடியில் நின்றான்..... தம்பிமுத்து இங்கே வாடா ராசா. உன்

அப்பா வந்துவிட்டார்." மாமியின் காலாக்கினிமேல் நீறு படர்ந்துவிட்டது தெரிகிறது. முத்து எட்டிநின்று பார்க்கிறான். முதுகு கூன் விழுந்து, ஒட்டி உலர்ந்து கருவாடாய், நரை தெறித்த தாடியும் மீசையுமாய்... இவரா என் அப்பா என்று எண்ணிக்கொண்டு திகைத்து நிற்கிறான்.

பன்னிரண்டு வயதுச்சிறுவனை அந்த அப்பா, சிறுகுழந்தை பாக்கி தூக்கி அணைத்து மகிழ்கிறார். அவரது கண்ணீர் முத்துவை அபிஷேகிக்கிறது.

தூக்கிய முத்துவை அவர் கீழே விடவில்லை. யாருடனும் எதுவும் கதைக்கவில்லை. தோளிற் கிடந்தமிக மிக அருமையான சுமையோடு புறப்படுகிறார்.

"அண்ணை எங்கே போகிறாய்? சாப்பிடாமல்" மாமியின் குரல் வழிமறைக்கிறது. சிறிது நேரத்தயக்கம்.

"வேண்டாமம்மா நீ, பெரிய மனிசி; அப்புவும் ஆச்சியும் இறந்துபோக, சின்னக்குழந்தையான என்னை உன் நெஞ்சுக்குள்ளே இருத்திக் காத்தேன்.... ம்... இவனை உன் மகனை.... என் மருமகனை.... நீ எப்படிப்பார்த்தாய் என்பதை இவனில் நான் காண்கிறேன். இவனை உயிரோடு வைத்திருந்தாயே; கோடிபுண்ணியம் அம்மா. வருகிறேன்."

தூக்கிய முத்துவை அவன் அப்பா இறக்கி நடக்க அனுமதிக்கவில்லை. அடிக்கொருதரம் தன் கன்னத்தையும் அவன் கன்னத்தையும் ஒட்டவைத்துச் சுகம் காணுகிறார். அந்த வேளையிலெல்லாம் "சளி" நாற்றத்தை முத்து உணர்கிறான். இப்படித்தானே அம்மாவுக்கும் மணத்தது என்று நினைத்தபோது அவன் நெஞ்சக்குகையில் பயங்கர உணர்வு கர்ச்சிக்கிறது.

இரண்டு வருட கால வெள்ளத்தில் அடிபட்டு கவனிப்பாரற்று வெயில் மழை காற்று என்பன சுயமாகவே பிரதிட்டை செய்யப்பட்ட பழைய கொட்டில் வீடு அவர்கள் புதுவீடாகிறது. இந்தப் புதுக்குடித்தனமும் நெடுங்காலம் நிலைபெறாது என்று முத்துவின் அந்தராத்மா அடிக்கடி துடிக்கிறது என்றாலும் அப்பாவின் அணைப்பில் பட்டினி கிடந்தும் சுகம் காண விழைகிறான். எதிர்பார்த்தது போல் ஒருநாள் அப்பா படுத்த படுக்கையாகிவிடுகிறார். தொண்டைக்குழியில் மாத்திரம் உயிர்மூச்சு துடிக்கிறது. முத்து பக்கத்தில் இருந்து "கூடு" கட்டி எரியும் விளக்குக்கு உயிர் கொடுக்க முனைகிறான்.

ஆழக்கிணற்றில் இருந்து பேசுவதுபோல் அந்த அப்பாவின் குரல் சன்னமாக வெளிப்படுகின்றது. அவர் கை முத்துவின் தலையை

என்றும் இல்லாத் பரிவுடன் தடவுகிறது.

"மகனே நான் அதிஷ்டம் கெட்டவன். உன் அம்மா இன்றைக்கும் வாழ்ந்திருக்கலாம். அதிக வயதில்லை அவளுக்கு. ஆனால், அவள் இறப்பதற்குக் காரணமானவன் நான். என்னுழைப்பை என் தங்கையின் உன் மாமியின் கண்ணீரைத் துடைக்க தாரைவார்த்துவிட்டு உன் அம்மாவைப் பட்டினிபோட்டேன். அவளுக்கு கசம் பற்றிக்கொண்ட ஆரம்பநிலையில் என் அலட்சியத்தால் அதை வளர்த்து அதுமுற்றியபோதுதான் என் அறிவு விழித்தது. உன் அம்மாவை காப்பாற்றத் துடித்தேன்.

"ஒருநாள்.... நான் கணக்கப்பிள்ளையாய் இருந்த வ.வே.உ.பெ.சாமி கடையில் நினைக்க மனம் கூசுகிறது. ஐநூறுருபாவைத் திருடினேன். எவ்வகையிலும் உன் அம்மாவைக் காப்பாற்றிவிட்டால் போதும். அப்போதைய எண்ணம் அது. ஆனால் உன் அம்மாவைக் காப்பாற்ற முடிந்ததா? ஐயோ உனக்குந்தான் ஒரு நற்பெயர் உண்டா?.... நீ திருடன் மகன்" நெஞ்சை இருகைகளாலும் அழுத்திப்பிசைத்து அந்த வேதனையை எடுத்தெறிந்துவிடப் பார்க்கிறார்.

"முத்து. நான் திருடனாகி இரண்டுவருட சிறைத்தண்டனை பெற்றும் என் மனம அமைதியடையவில்லை. அந்தக்கடன் தீராதவரையில் நான் செத்தாலும் என் உயிர் தத்தளித்துக்கொண்டுதான் இருக்கும்" அப்பா துடிக்கிறார். கண்ணீர் பெருகிவழிகிறது.

முத்துவும் விம்மி விம்மி அழுகிறான். கடைசியில் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவன்போல அப்பாவின் கண்ணீரைத் துடைக்கிறான்.

அப்பா ஆறுதல் பெருமூச்சு விட்டு மெல்லச் சிரிக்கிறார்.

அந்த அப்பா போய் மூன்று நாட்கள் ஆகிவிட்டன. அரை அநாதையான முத்து பரிபூரண அநாதையாகிறான். அப்பாவின் தலைமாட்டிலே கிடந்த.... அவனுக்காகவே விடப்பட்டதுபோன்ற .... ஐந்து ரூபா காசுடன் புறப்படுகிறான். யாழ்ப்பாணம் பஸ்நிலையம் அவனைத் தன் மகனாக்கிக் கொள்கிறது. உணவு உடை உறைவிடம் எல்லாவற்றிற்கும் அதுவே வழி செய்கிறது.

அந்த ஐந்துருபாவை முதலாக்கி, பத்திரிகை வாங்கி விற்கத்தொடங்குகிறான். கவர்ச்சிகரமாகத் தலையங்கங்களைப் பொறுக்கி எடுத்துக்கூற வேறு யாராலும் முடியாது. அதோடு முகவசீகரமும் எல்லாரையும் தொட்டிழுக்கிறது. காலை பத்து மணியோடு எந்தப்பத்திரிகையும் அவனிடம் இராது. எல்லாவற்றையும் பணம்பண்ணி விடுகிறான்.

பிறகு சினிமா பாட்டுப்புத்தக வியாபாரம். இனிப்பு வியாபாரம். ஊசிவியாபாரம் இப்படி என்னென்னவோ.....

மாலையானதும் வா.வே.உ.பெ.சாமி கடையின் புதுக்கணக்கப்பிள்ளை வருகிறான். முத்து இலாபக்காசில் சாப்பாட்டுக்காக ஒரேஒரு ரூபாவை எடுத்துவைத்துக்கொண்டு மீதி முழுவதையும் அவனிடம் கொடுத்துவிடுகிறான். தந்தை தண்டனை பெற்றுக் கடனை ஈடுசெய்தபோதிலும் அவர் கண்ணீருக்குக் கட்டுப்பட்டு மகன் கொடுக்கிறான். முத்துவின் பாஸ் புத்தகத்தில் கணக்குப் பதிவாகிறது.......... 480ரூபா .........

3

நினைவுச்சுழலிலகப்பட்டு எண்ண ரூபமாய்ப் போய்விட்ட முத்து ஒருவாறு விடுபட்டு எழுந்து ஆசனத்தில் இருந்தான். கொட்டாவிகள் ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டியிட்டுக்கொண்டு வெளியேறின. முதல்நாள் மத்தியானத்தோடு அவனிடமிருந்த கடைசிக்காசும் தீர்ந்துவிட்டது. என்னிலை வந்தாலும் கடன் படுவதில்லை என்ற தீர்க்கசித்தத்தில் விளைந்த உறுதி அவனைப் பட்டினி கிடக்கவும் தயார்படுத்தியது.

மாலை நாலு மணி.........

ஆசுபத்திரி வீதியின் மேல் கோடியில் இருந்து ஆரவாரம் ஒன்று உருவாகி வளர்ந்து தெளிவுபெற்று முன்னேறி வந்தது. அந்த ஆரவாரம் மாபெரும் ஊர்வலம் ஒன்றின் கட்டியக்குரலாகத் தெரிந்தது. ஊர்வலம் முன்னேறி வந்து பஸ் நிலையத்தருகில் நின்றது.

ஒரு தடித்த குரல் "பட்டினி கிடந்தும்" என்று அதிர்ந்தது. அதைத்தொடர்ந்து பல குரல்கள் "உரிமை பெறுவோம்" என்று முழங்கி வாக்கியத்தை முடித்தன. மீண்டும்

"வேலை இழந்தவர் பத்துப்பேர்.."

"பட்டினி கிடப்பவர் நூறுபேர்...."

"வேலைநீக்கத்தை..."

"வாபஸ் வாங்கு...."

"பத்துப்பேருக்கு....."

"வேலைகொடு..." சுலோக ஒலி சூடுபிடித்து உச்சஸ்தாயியைத் தொட்டுவிட்டது. உணர்ச்சி வெறித்தன்மை பெற ஆட்டமும் பாட்டும் அவர்களை அறியாமலே தலைகாட்டின.

இந்த ஆரவாரம் முத்துவை அசைத்துவிட்டது. மின்சார நிலைய மூலையிலே போய்நின்று ஊர்வலத்தைக் கவனித்தான். எல்லாம் அறிந்த முகம்: பெயர் கூட மனப்பாடம். எல்லாரும் டிரைவரும், கொண்டக்டரும். எல்லாரும் கொடி, சுலோக அட்டை முதலிய ஆயுத பாணிகளாய் அணியணியாய்ச் செல்கிறார்கள். பின்னால் வேடிக்கை பார்க்கும் கூட்டம்.

'ஓகோ...இவர்கள் தானோ ஸ்ரைக் செய்தவர்கள். என் வாயில் மண் போட்டவர்கள். பட்டினி கிடக்கிறார்களாம் பட்டினி. கிடக்கட்டும் கிடக்கட்டும். நல்லாய்க் கிடக்கட்டும். நானுந்தானே பட்டினி' என்று எண்ணினான் முத்து. பக்கத்தில் நின்ற ஒருவர் "கண்டதெல்லாத்துக்கும் ஸ்ரைக். பொதுமக்களைப் பற்றி யார் யோசிக்கிறார்கள். பட்டினி கிடந்து சாகட்டும்" என்று தன் மனஉளைச்சலை வெளிக்காட்டினார். ஆமாம் உண்மைதான் என்று ஆமோதித்தது முத்துவின் மனம். ஊர்வலத்தின் வால்பகுதி முத்துவைத் தாண்டிச் சென்றுவிட்டது. முத்துவும் ஊர்வலத்தின் பின்னால் சென்றான். கோட்டை மைதானத்திற் பிரமாண்டமான கூட்டம். மைதானம் சிறிது என்னும்படி கூட்டம் பெருத்துவிட்டது. கோட்டை அகழியோரமாகப் பெரியதொரு மேடை. மேடையில் தலைவர், பேச்சாளர் மாத்திரமன்றி வேறும் யார் யாரோ இருந்தார்கள். கூட்டத்துள் ஒரு சிறு கூட்டமாக அம்மேடை காட்சியளித்தது.

கூட்டத்தைக் களியாட்டமாக்கி உலாவி சிரித்து மகிழ முத்துவால் இயலவில்லை. தான் நின்ற இடத்திலிருந்தே கூட்டத்தைக் கவனித்தான். மேடையில் யாரோ ஒருவர் கனல் கக்க பிரச்சினையை அலசி அலசி விளக்குவதாக எண்ணிக்கொண்டு, சேறுகுளப்பினார். ஆங்காங்கே நாலைந்துபேர் கூடிக்கூடி நின்று அபிப்பிராயங்களைப் பிரசங்கித்தனர்.

முத்துவுக்கு எதிலும் புலன் போவில்லை. பத்துப்பேரையும ஏன் வேலைநீக்கம் செய்தார்கள். குற்றமில்லாமலா? குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படத்தானே வேண்டும். அப்பா குற்றம் செய்தார்: தண்டிக்கப்பட்டார். அப்படித்தானே. இவர்களும். அதற்காக ஸ்ரைக்கா?" என்று முத்துவின் நினைவு ஓடியது.

முத்து மேடைப்பக்கமாக ஊர்ந்துசென்றான். மேடையில் வேலைநீக்கம் செய்யப்பட்ட பத்துப்பேரும் அவர்களை அண்டி வாழ்பவர்களும் இருந்தனர். கிழவர்கள் குமரர்கள், கிழவிகள் குமரிகள், தாய்மார்கள், கைக்குழந்தைகள், குழந்தைகள், சிறுவர் சிறுமியர் எல்லார் முகத்திலும் பசிக்களை, சோர்வு, சக்தியின்மை ஆணியறைந்து விடப்பட்டிருந்தன. வயதுவந்தவர்களிடையே எதிர்காலத்தைப்பற்றிய

பயப்பிராந்தி அலைமோதியது. முத்துவுக்கு இந்தக்காட்சி பெரும் புதுமையாயிருந்தது. உள்ளத்தின் பாதாளக்குகையில் சிறு ஊற்றொன்று தோன்றி உள்ளத்தை நிறைத்து உடலெங்கும் பரவுவதாக உணர்ந்தான். மெல்ல மெல்ல மேடை அருகில் வந்திருந்து கூட்டத்தை அவதானிக்கத் தொடங்கினான்.

மேடையிற் கைக்குழந்தை ஒன்று அழுதது. சிறுமி ஒருத்தி வீரிட்டாள். தாய் அதையும் அவளையும் சீறிச்சினந்து அடக்க முயன்றாள். பல முகங்களுள்ள பெருநெருஞ்சி முள் குத்தித் துன்புறுத்தியதுபோல முத்துவின் மனம் துடிதுடித்தது.

முத்துவின் கண்கள் மீண்டும் மேடையிலே சுழன்றோடின. மேடையின் ஒரு மூலையில் இருந்த அந்த உருவத்தை அவன் கண்டான். புதுமையிற் புதுமையாகி பற்றுப்பாசம் எதுவும் இன்றி இயந்திரமயமாகிவிளங்கும் பஸ்நிலைய உலகத்திலே கண்டபோது சிரித்து, ஒருகணமாவது தரித்து, அவனது சுகம் பற்றி விசாரித்து வியாபாரப்போக்கைக் கேட்டு அன்புபாராட்டும் ஒரே மனிதன் தான் அந்த இராமசாமி. அவன் சொற்பொழிவோடு ஒன்றிப்போய் சிலிர்த்தும் வெம்பியும் கண்ணீர் வடித்தும் சில சமயம் மெல்லச் சிரித்தும உணர்ச்சிப் பிண்டமாய் இருந்தான்.

பக்கத்திலே போய்நின்று முத்து மூன்று நாலுமுறை கூப்பிட்டபோது இராமசாமி உணர்வு உலகில் நின்றும் இறங்கவில்லை. தொட்டு அசைத்தபோதுதான் கீழிறங்கிச் சிரித்துக்கொண்டு வந்தான்.

"இதெல்லாம என்னண்ணை" என்று விசாரித்தான் முத்து. "தெரியாதா உனக்கு. பத்துப்பேரை வேலை......" என்று சாவகாசமாக ஆதியோடந்தமாக விளக்க முயன்றான். முத்துவுக்கு அத்தனை பொறுமையில்லை.

"அதெல்லாம் எனக்குத்தெரியும். ஏன் வேலையிலிருந்து நீக்கினார்கள். அதைச்சொல்."

"கலிமுத்திப்போய்ச்சு தம்பி. அதனால் நியாயம் அநியாயமாகவும் அநியாயம் நியாயமாகவும் படுகிற காலமிது. பார் தம்பி. இந்தப் பத்துப்பேரும் காரைநகர் டிப்போ மனேச்சரைத் தாக்க முயன்றார்களாம். அதனால் மனேச்சருக்கு செல்வாக்குள்ள மேலிடம் இவர்களுக்கு வேலை இல்லை என்று உத்தரவு பிறப்பித்து விட்டது."

"கலிகாலத்திலும் நியாயம் நியாயம் தானே."

"இல்லையென்று யார் சொன்னது? நிரபாதிகள் தண்டிக்கப் படுவதைத் தான் நாம் எதிர்க்கிறோம். விசாரணையின் பின்தான் யாரையும வேலை நீக்கம் செய்யவேண்டுமென்று மேலிடத்தைக்

கேட்டுக்கொண்டோம். மேலிடத்தின் மௌனத்தை உடைத்து நியாயம் பெறுவதற்குத்தான் இந்த ஸ்ரைக்."

முத்து எதுவும் பேசவில்லை. எல்லாம் மனதில் இறங்க மனம் அவைகளை அசைபோட்டு முடிவைக்காண விரைந்துசென்றது.

முத்துவின் பசிக்களை ஒட்டிவிட்ட முகத்தை இராமசாமி பார்க்க. இராமசாமியின் பட்டினிக் கோலத்தை முத்து கண்டான். இராமசாமி ஏன் பட்டினி கிடக்கவேண்டும். இவன் வேலைநீக்கம் செய்யப்படவில்லையே என்று முத்துவின் எண்ணம் குறுக்கே பாய்ந்தது. ஒவ்வொருவரும் தன்னதைத் தான் அறிந்து பாராமல் பிறரதை வெகுதெளிவாகக் கண்டனர்.

தள்ளுவண்டிக்காரனிடம் ஒரேஒரு சோடா மாத்திரம் கேட்ட இராமசாமியைப் பார்த்து முத்து "உனக்கு" என்றான்

"எனக்கு வேண்டாம். இந்த ஸ்ரைக் முடிகிறவரையில் பச்சைத்தண்ணீர்தான்" என்றான் இராமசாமி" எனக்கும் வேண்டாம். இப்போதே ஒருநாள் உபவாசம் முடிந்துவிட்டது. இந்த ஸ்ரைக் முடியும்வரையில் நானும் உபவாசம் கிடப்பதால் இந்த உயிர் போனால் போகட்டும்" என்றான் முத்து. ஒவ்வொரு சொல்லும் இரும்புக்குண்டு.

கூட்டம் முடியப் பதினொரு மணியாகிவிட்டது. மௌனமாக மெல்ல நடந்துகொண்டு, ஏதோ புரியாத சிலவற்றை மனத்திரிகையிற் போட்டு அரைத்து அரைத்து பதப்படுத்திக்கொண்டு, பஸ்நிலையத்தை. அடைந்தான்.

தன் ஆசனத்தில் படுக்கப்போன அவன், தான் முன்னெறிந்துவிட்ட கரிக்கட்டியைத் தேடி எடுத்தான். தான் முன் எழுதிய வசனத்தில் ஒரு எழுத்தை "வீ" யை "வா" என மாற்றினான்.

மங்கிய தெருவிளக்கொளியிலும் அது தெளிவாகத் தெரிந்தது.

"ஸ்ரைக் வாழ்க"

❖❖❖

# 07. மனித மிருகம்

வெண்மையான மேனி; அதற்கு மெருகிட்டது போலக் கருநிற மயிர்கள் பிடரிலிருந்து அதன் "குட்டை" வால்வரையும் பரந்திருந்தன. வெண்மையிலே தளதளக்கும் ஜொலிப்பு; கட்டமைந்த சதைப்பிடிப்பு - இவை அதன் தோற்றத்திற்கு ஒரு பொலிவை அளித்தன. அதன் சாதிக்கேற்ற குணம் அதன் முக ஒளியில் பிரதிபலித்தது. இத்துடன் முறுகி எழுந்த கொம்புகளும் மடிந்து கன்னத்தைத் தடவும் செவிகளும் அதன் காம்பீரியத்திற்கு ஒரு நகாஸ் வேலை செய்துவிட்டன. தாடையின் கீழ்ப் புறத்திலே வெண்ணித்தாடி முன்னோக்கி வளர்ந்திருந்தது. பருவத்தின் அறிகுறியாக இந்த இலட்சணங்கள் வாய்த்தது. அந்த உருவம் பார்ப்பவர் மனதையும் கண்ணையும் கொள்ளை கொள்ளக்கூடிய உருவம்.

அது நன்றாக இறுக்கப்பட்ட முளைக்கட்டை ஒன்றில் கட்டப்பட்டிருந்தது, அடிமை வாழ்வின் ஒரு சின்னமாக. அதன் முன்னால் ஒரு அம்பாரம் குழைக்கட்டு ஊசலாடிக் கொண்டிருந்தது. அதில் இங்கொன்றும் அங்கொன்றுமாக நாலைந்திடங்களில் சுவையாராய்ச்சி செய்திருந்தது. இன்னும் சிறிதுதூரத்தில் ஒரு பழைய சட்டி; அதிற்பிழிந்த தேங்காய்ப்பூ. இன்னொன்றில் கழுநீர். இவைகளெல்லாம் அலங்கோல நிலையில் காட்சிதந்தன. ஆ! அந்த உருவத்தின் வாழ்விலேற்றபட்ட துணைகள் மணந்து ருசித்து மகிழுந் துணைகள் இவைகள் தாமோ என்னவோ?

பாவம்! அந்த ஆட்டுக்கடாவின் மரணம் இல்லை மனிதன் நிச்சயித்துவைத்த மரணம் கிட்டிவிட்டது. அதன் வாழ்வின் கடைசி எல்லை அதோ தெளிவாகப் புலப்படுகிறது. அதன் மரணவாடையும்

வீசுகிறது. அந்த மரணத்தின் எக்காளத்தை அல்லது அந்தப் பட்டாக்கத்தியின் கூர்மையை அது எவ்விதந்தான் உணரும். கேவலம். பகுத்தறிவற்ற ஜீவன் தானே!.

இன்னுஞ் சில மணிநேரம்: அதன் பின்....... அதன் பின்..... ஆம். நாளைக் காலையில் அதன் வாழ்வு முடிவடையப்போகிறது. அதன் உடல் வேறு. உயிர் வேறாக வெட்டப்படப்போகிறது. இலலையில்லை: மனிதன் அந்தர்த்தானமாயிருக்கும் "தெய்வங்கள்" என்ற சாக்கில் தன் வயிற்றை ஊனால் நிரப்பச் செய்யும் சூழ்ச்சிக்குப் பலியாகப்போகிறது. இந்தச் சூழ்ச்சியெல்லாம் அதற்குப் புரியுமா? புரிந்தால் எல்லை கடந்த அதன் காம்பீரியம் அதை விட்டு நழுவிவிடுமே.

## 2

இரவு ஒன்பது மணி சமயம். அந்தக்குடியையினுள்ளே இருள் மண்டிக்கிடக்கிறது. இருளோடு இருளாகப் படுத்திருக்கிறான் முருகன். அவன் தான் அந்த ஆட்டின் சொந்தக்காரன்: வளர்புக்காரன்: எசமான். அவன் மனம் இன்று அமைதியை இழந்துவிட்டது. கொந்தளிக்கும் கடலைப்போலக் குமுறி எழுகிறது. நாளைக் காலை அதை நினைக்கும் போதே வயிறு பற்றி எரிகிறது. அந்தக்காலை அது அவனால் விடை காணமுடியாத ஒரு புதிர்தான்!

இந்த நிலைமையில் தான் ஆட்டிற் கொண்ட காதல் அவன் நினைவுக்கு வருகின்றது. வளர்ப்புப் பிள்ளையில் ஊறிவரும் அன்பையும் மிஞ்சுகிறது இந்தக்காதல். இதற்கு உதவியாக மனம் கடந்த சம்பவங்களைக் கற்பனையில் காண்கிறது.

'ஒரேயொரு குட்டியாக. அதன் தாயின் ஒரேயொரு செல்வமகனாக பிறந்தது இந்த ஆடு. அது பிறந்த அன்று நான் அளவிறந்த மகிழ்ச்சி கொண்டேன். என் ஏழை வாழ்வுக்கு ஒரு சிறுமுதலையாவது கொடுக்கும் என்பதால். இருந்தும் என்மனதில் ஒரு ஏக்கம் அதன் உயிரைப்பற்றி. என்னசெய்வேன்? அதைக் காப்பாற்றிவிடவேண்டும் என்று எண்ணி அரச மரத்து முனிக்குக் காணிக்கையாக்கி விட்டேன். அவன் பாதுகாத்துத் தருவான் அல்லவா?

'அதுதான் ஒருபுறம் போகட்டும். அதை நான் வளர்த்த வளர்ப்பென்ன 'மாசு மண்டிபடாமல் அதற்கு உணவூட்டினேன். கிளுவை. முள்முருக்கு போன்ற அதன் வாய்க்கினிய உணவுகளைக் கொண்டு வந்து கொடுத்தேன். எத்தனை நாட்கள் அதன் கழுத்துக்கயிற்றுடன் எத்தனை பற்றை பற்றையாக அலைந்திருப்பேன். இத்தனை கஷ்டங்களும் யாருக்காக? எனக்காகவா? என் செல்லப்பிள்ளை என் வளர்ப்புக்குழந்தை

அந்த ஆட்டுக்கிடாய்க்காகத்தானே! அதனால் தானே அதன் உடலில் வாட்டம் காணவில்லை. நாளுக்குநாள் வலிமைகண்டது! என் வாழ்வின் பாதிநாட்கள் அதன் உணவுக்காக அலைந்ததில் முடிந்தனவே! அதை இன்றும் என் கையில் உள்ள முள்குத்திய தழும்புகளே சொல்லுமல்லவா? இப்படி வளர்த்துத் தான் அது இந்தநிலையில், காளை முறுக்கில் நிற்கிறது. அந்தக்காளை முறுக்கும் கட்டமைந்த தேகமும் நாளைக்காலையில் இந்தக்கைகளினால் அழியப்போகின்றன. என் மனமோ தவிக்கிறது. ஆனால் அது அந்த முனியின் காணிக்கை நைவேத்தியம் அல்லவா?

இந்தச்சிந்தனைச் சுழல்களின் ரூபமாக அவன் கண்ணயர்ந்து விட்டான்.

3

இடியிடிக்கிறது; முன்னொரு போதும் கண்டு கேட்டறியாத பேரொலியுடன். அடுத்தகணம் வானத்தில் சிறிது சிறிதாக வெடிப்புத்தோன்றியது. விரைவில் அது ஒரு பெரிய வெளியாகிவிடுகிறது. பிரபையானசோதி அந்த வெளிக்கூடாக வீசுகிறது. கண்கள் கூசும்படியாக.

சில கணங்கள் சென்றன. ஒரு உருவம் அந்த வெடிப்பைக் கடந்து கீழே இறங்குகின்றது. ஆ! என்ன விசித்திர கோலம். ஒரு பெண். வெள்ளை வெளேரென்ற ஆடை அவளுடையது. முதுகைத் தடவுகிறது அவள் கேசம். வாயைத் தடவுகிறது புன்சிரிப்பு. கணக்களில் உணர்ச்சியின் உண்மைஒளி. அதில் எத்தனை உணர்ச்சிக் கலவை? அத்தனையையும் மிஞ்சி விடுகிறது கருணைச்சோதி. அவளுடைய ஒரு கை ஒரு ஆட்டுக்கடாவைப் பிடித்திருக்கிறது. மற்றது....... ஐயோ! என்ன கொடுமை! ஒரு மனித வயிற்றின் பகுதியைச் சுமக்கிறது. மற்ற இரண்டும் சாதாரண தெய்வக்கரங்கள்.

அடையவேண்டிய இடத்தை அடைந்துவிட்டாள் பெண் தெய்வம்.

"முருகா" இது அவள் குரல். இதில் அசட்டை தொனிக்கிறது.

"சரி, சரி; இது யாருடைய ஆடு தெரியுமா?" என்றாள் சற்றும் எதிர்பாராத வகையில்

"என்.....னு.......டைய.......து ஸ்வாமி"

"இதை ஏன் வளர்த்தாய்?" என்றாள், எதையோ விளக்க நோக்கங்கொண்ட ஆசிரியனைப் போல.

"ஸ்வா......மி இதை என் பக்தியின் சின்னமாக..... பலியிட."

"அப்படியா? நல்லது இது என்ன?"

"ஐயையோ! இது எங்கள் வயிறு; மனித வயிறு. அப்பப்பா! இது என்னே கொடுவாழ்வு. மனிதன் வளர்த்த – நாங்கள் வளர்த்த -

ஆடு மீண்டும் எங்கள் வயிற்றை அடையச்செய்யவா இந்தச் சூழ்ச்சி? இதற்காகத்தானா பலி...... பலி வேண்டாம்! அது இனிமேல் வேண்டாம். அது சேமமாக வாழட்டும்."

விந்தையிலும் விந்தை! பெண் தெய்வத்தைக் காணவில்லை. ஆடு மாத்திரம் நிற்கிறது. அதே இடத்தில் மின்வெட்டுப்போல ஒரு கத்தி தோன்றிப் பளிச்சிடுகிறது. அடுத்த கணம் அம்மா என்று ஒரு அலறல்.

முருகன் துள்ளிக்குதித்து எழுந்தான். அவன் கண்ட கனவு இன்னும் கண்களை விட்டு அகலவில்லை. விறைத்துப்போய் இருந்தான், பிள்ளையைச் சாகக்கொடுத்த தாயைப்போல.

4

வைரவ கோயிலின் பறைமுழக்கம் காதைத்துளைக்கிறது. "வைரவ மடை" முடிந்துவிட்டது. வைரவ கோயிலில் ஒண்டிக்கொண்டிருந்த அரச மர முனியின் பலி ஆயத்தமாகப்போகிறது. ஏராளமான ஆட்டுக்கடாக்கள் கம்பீரமாக நிற்கின்றன, கடைசிவரைக்கும் மனங்கோணா வீரனைப்போல. ஏராளமான சனக்கூட்டம் இல்லை. இறைச்சிப்பங்கெடுக்கும் சீவன்கள் இல்லையில்லை, ஊனை உண்ணும் மனித வயிறுகள் காத்துக்கிடக்கின்றன.

பலிக்கு ஆயத்தம். அதோ கத்தி மின்னுகிறது; ஆடுகளை வெட்டத் துடிக்கிறது. இனி, பலிக்களத்தின் முதற்கிடாய் தான் வரவேண்டும். என்ன தயக்கம்? பக்த கோடிகளின் முகங்கள் வெலவெலத்துப்போய்விடுகின்றன. "முதற்கிடாய் எங்கே? எங்கே?" என்ற சத்தம் எதிரொலிக்கின்றது. மூலை முடுக்கெங்கும் தேடுகின்றனர். "எடே முருகா" என்ற அழைப்பு கொதிக்கும் அக்கினி போலக் கடுகடுப்பாய்க் கிளம்புகின்றது.

ஆம், முருகனையும் காணவில்லை; அவன் கிடாய் முதற்கிடாய் அதையும் காணவில்லை. முருகன் எங்கே? அவன் ஆடு எங்கே?

அது விடுதலையடைந்துவிட்டது. அதை முருகன் விடுதலை செய்துவிட்டான். இனி அது சுதந்திர பிராணி.

சிறிதுநேரத்தில் பலிக்களத்தில் வழமைபோல சடங்குகள் ஆரம்பமாகின ஆ! "அம்...மா!" என்ற பயங்கர அலறல் ஒன்று வெடிக்கிறது. தூரத்திலேயும் "அம்.மா" என்ற ஒரு மகிழ்ச்சியழைப்பு. அது அந்தச் சுதந்திர ஆட்டினுடையது.

❖❖❖

# 08. ஒரு புதுவகைத் துறவி

## சுந்தர உபாத்தியாயர்

புத்தனைப்போல நானும் இன்று உலகத்தின் கட்டுக்கடங்காமற் திரியும் ஒரு துறவி. உயர்ந்த உத்தியோகத்தையும். ஆஸ்தியையும் வெறுத்துச்செல்லும் என்னைத் துறவி என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லப்போகிறீர்கள்.

நான் ஒரு புதுவகைத்துறவி. ஆகவே என் பழைய ஆசைகளின் வாடை என் மனதில் வீசத்தான் செய்யும். ஆனால் இவை முன்பு மோதிய புயற்காற்றுகளல்ல. சிறு தென்றல். இதனால் அவ்வப்போது என் பழைய வாழ்வின் சிறு சிறு துண்டங்கள் என் மனதிலே தோன்றுகின்றன. என் செய்வது? உலகத்திடம் வாய்விட்டு அழுதாற்தான் அவ்வெண்ணங்கள் என்னை விட்டு அகலும்போல் இருக்கிறது.

அன்று எனக்கு வயது 59. இந்தக்காலத்திலே 25 வயதிலேயே வயோதிபக்களை தட்டும் வாலிபர்கள் உண்டே; அவர்களைப் போன்றவனா நான்? அந்த 59 வயதிலேயும் என் உடலிலே வாலிபத்தின் முறுக்கு நெளிந்தது. எந்த முயற்சியையும் செய்யக்கூடிய தென்பும் இருக்கவே இருந்தது. அப்பழுக்கற்ற இரத்தம் என்னுடல் பூராவும் குதித்துக்குதித்தோடியது. இரண்டொரு தலைமயிர் நரைத்திராவிட்டால் நான் வயோதிபன்; எனக்கு வயது 59 என்ற ஞாபகமே தோன்றியிராது.

நான் என் 57வது வயது முடிவிலே என் நாலாவது தாரத்தை இழந்தேன். எனக்கு அவள் இறந்ததைப்பற்றி அணுவளவேனும் கவலை

இல்லை. ஏன்? அன்புள்ள இடத்தில் அல்லவா துக்கமும் கவலையும் உண்டு. நான் அவர்களை என் உடல் இன்பம்தரும் இச்சைப்பொருளாகவே கருதினேன். வேறு எவ்விதமான சிந்தனைகளும் அந்தக்காலத்திலே என் மனதில் இடம்பெறவில்லை.

நான் அந்தவருடம் கோடை விடுமுறையின்போது உல்லாசப் பிராயணம் செய்ததனாலும் என் உத்தியோக முயற்சிகளாலும் என்னைப்பற்றி அவ்வப்போது எழும் ஆசைகளில் எவ்வித கவலையும் கொள்ளவில்லை. கடுவிசையுடன் நாட்கள் சென்றன.

59வது வயது ஆரம்பத்திலே மறுபடியும் என் மனதிலும் தேகத்திலும் ஒருவிதமான குதுகுதுப்பு ஏற்பட்டது. சில சமயங்களில் என்ன எனக்கு 59 வயதுதானே! மனித வாழ்நாளில் அரைவாசிப் பகுதிதானே ஓடிவந்திருக்கிறோம். அதற்குள்ளா உலகம் என்னைக் கிழவன் என்று அழைக்கிறது? சீ, இன்னும் என் வாழ்நாளின் முன்னே ஒரு நெடுவழி தெரிகிறது. அதைக்கடக்க வேண்டுமென்பது இந்த மூட உலகத்திற்குத் தெரியாதா என்ன? என்ற எண்ணங்கள் என்னையறியாமலே ஓடிவரத்தொடங்கின.

பணத்திமிரும் இரத்த வெறியும் சூழலாக நின்று மனதைப் பண்படுத்தினால் வேறு எவ்வகையான எண்ணங்கள் தான் தோன்றும். மேளக்கொட்டுப் போல உள்ளே நலிந்த பெலவீனமான மனதை வைத்திருந்த நான், எவ்விதம் அதை அடக்கி ஆள முடியும்? அது சின்னச்சிட்டுப்போல எங்கும் பறந்து திரிந்தது. கொப்பு தாழ்ந்த நெற்கதிர்கள் தங்கள் செய்கையற்று காற்றின் திசையிலேயே சாய்கின்றன. காற்று, தன் வன்மையை அதிலே பதிய வைக்கிறது. அங்ஙனமே நானும் மனம் போன போக்கின்படியே நடப்பவன் ஆனேன். இவ்விதமான மனப்போக்கினாலே நான் மறுபடியும் விவாகம் செய்யவேண்டும் என்ற ஆசை எவ்வளவோ ஆழமாகப்பதிந்துவிட்டது. கடைசியாக எவளோ ஒரு பெண்ணின் பரிசத்திற்காகத் தவம் கிடக்க வேண்டிவந்தது. தவம் கிடந்தாலும் நடக்கிற காரியமா? அதுவும் ஐந்தாம் தாரமாக.

## 2

நீங்கள் என்ன சொன்னாலும் நான் அதிட்டம் செய்தவன் தான்! இல்லாவிட்டால் இந்த 59 வயதிலே இப்படியொரு கட்டழகி கிட்டுவாளா? அவளுடைய சோபையினாலே உள்ளும் புறமும் ஒளிபெற்றன. அவளுக்கு

வயது 19. அவளது பால்வடியும் முகத்திற்கு நான் எதையும் துறக்கத்தயங்கமாட்டேன். அவள் மனம் நோவது என் மரணத்தைப் போலப் பயத்தை விளைத்தது.

என்னுடைய சித்தாந்தம் இது: எதிர்த்துருவமுள்ள காந்தங்கள் இரண்டு: அவை என்றோ ஒருநாள் பிரிவின்றிக் கவரப்படும். அவள் என் வசமாவாள் என்பது. ஆனால் அந்தக்காந்தங்கள் இரண்டும் ஒரே துருவங்கள் என்பதை நான் ஏன் சிந்திக்க வேண்டும். அவள் எவ்விதவேறுபாடுமின்றி தன் வேலைகளைக் கவனிப்பதுடன் இரா நேரங்களில அறிவையும் தேடிவந்தாள். நானோ அந்த நேரங்களில் அறிவை இழந்து பித்தனாகியுழன்றேன்.

ஒரு நாள் இரவு.

அன்று. இவ்வளவு நாளும் என்னுள்ளே நின்று அரித்துவந்த ஆசை வெளிப்படையாகத் தன் வேலையைக் காட்டத்தொடங்கியது. இனி, அவளது ஸ்பரிசம் படாமல் ஒரு கணமும் சீவிக்க இயலாது போலிருந்தது. என்ன செய்வேன்! அவளறைக்குச் சென்றேன். அவளைக் கண்டவுடனே அவளை அணைய முடியாத விதமாய் ஏதோ அக்கினி கொழுந்துவிட்டெரிவதுபோன்ற பிரமை ஏற்பட்டது. அவள் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். என்னைக் கவனிக்கவில்லை. ஒரு மனைவி அதிலும் புதுமனைவிபுருஷனை மரியாதை செய்யாது விட்டால் எப்படி இருக்கும்?

அடுத்த கணம் 'சரி சரி, அவள என்னைக் காணவில்லையாக்கும். அதனால் அவள் பேரிலா தப்பு' என்று எண்ணிக்கொண்டு அவள் பக்கத்தில் ஒரு கதிரையை இழுத்துப்போட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது தான் அவள் திடுக்கிட்டு என்னைப் பார்த்தாள். இப்படியான சமயங்களில் உண்மையான சிரிப்புகளெல்லாம் ஓடிமறைந்துவிடும். வெறும் அசட்டுச்சிரிப்புத்தான் வருவதுண்டு

"என்ன, உங்களுக்கு ஏதாவது சுகவீனமா? ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்றாள். நானோ அவளுக்கு மேலாக ஒரு போடு போடவேண்டும் எனக்கருதி,

"அப்படி இருப்பது உனக்கு ஆசையா? என்ன? " என்றேன்

"ஆம் ஆசைதான்..... இச்...ச்....ச்...... இது என்ன உங்கள் கண்ணிலே?"

"என் கண்ணிலே என்ன? ஆம் நீ தான்......" என்று சொல்லி அவள் கன்னத்திலே கிள்ள வேண்டுமெனக் கையை எடுத்தேன்.

"உங்களுக்கு எப்போதும் பகிடிதான். ஏன் உங்கள் கண்கள் இப்படிச் சிவந்திருக்கின்றன? ஏன் என்றுதான் கேட்கிறேன்"

"எல்லாம் உன்னாலே தான்"

"என்னாலா? இதுவும் ஒரு வேடிக்கை தான்."

"ஆம். உன்னை என் கண்களிலின்றும் நீக்குவதற்காக எத்தனையோ தடவை கசக்கினேன். கண்ட பலன் இதுதான்.

"போங்கள் ஏன் இவ்வளவு வெறுப்பா என்னில."

"வெறுப்பு எப்படி வரமுடியும். ..ம்.....ம் சந்தோஷம் தான்; பேச்சளவில்" இதைச்சொல்லி விட்டு அவள் முகத்தை நிமிர்ந்துபார்த்தேன். காற்றுப்பட்டுக் குடிபோன கற்பூரம் போல அவள அழகு எங்கோ போய்விட்டது. அவள் முகம் வெளிறிக்காணப்பட்டது. சட்டென்று அவள். ஒரு புன்சிரிப்பை உதடுகளில் ஓடவிட்டு.

"ஆம் பேச்சளவில் இல்லாமல் செய்கையில் எப்படி முடியும்?"

"ஏன்?"

"ஏன் என்றா கேட்கிறீர்கள்?"

அவள் மனத்திடத்திலிருந்து உதயமான வார்த்தைகள் இவை. இந்தத் திடசித்தத்தின் பிரதிபலிப்பு அவள் முகத்தில் சாயை அடித்தது. என மனப்பலவீனம் பயத்தை வருவித்துக்கொண்டது. மரணத்தின் முன்னே வரும் ஒருவித தென்பைப்போல மனதைத் திடப்படுத்திக்கொண்டு.

"ஆம் அதைத்தான் கேட்கிறேன்" என்றேன்

"அதையா? இளம் புறாக்கள் இரண்டு ஆணும் பெண்ணும். இரண்டும் உள்ளம் ஒன்றிக் குறுகுறுத்துக் கொண்டிருக்கின்றன. அவை இரண்டிடத்தும் பிரிக்கமுடியாத தகுதி காணப்படுகிறது. அவைகளைப போல நாமும் இருந்தால் ......."

"இருப்பதற்கென்ன"

"அதுதான் தகுதியில்லையே"

"யாரிடம்?"

"இருவரிடமும் தான். இருவரும் வித்தியாசமான வயதும் போக்கும் உடையவர்கள். அதனால் தான் தகுதியில்லை" என்கிறேன்.

இதைக்கேட்டதும எனக்கு அடக்கமுடியாத ஆத்திரம் தோன்றியது.

"அப்படியானல் நீ என்னை ஏன் விவாகம் செய்தாய்" என்று குளறினேன்.

"ஆம், நீங்கள் கேட்பது சரிதான. ஆனால் நான் 59 வயதிலே ஒரு பெண்ணின் சேர்க்கையை விரும்பும் ஒரு மிருக வெறியனைச் சிறிதேனும் இச்சிக்கவில்லை. அவன் பணத்தைத் தான் இச்சித்தேன்"

உயிருடன் யாரோ எனக்குக் கொள்ளி வைத்தது போல் இருந்தது. என் மூளை மின்சார விசிறிபோல் சுழல ஆரம்பித்தது.

"ஆ! துரோகி" என்றேன். அந்த நிலைமையில் வேறு எதைச்சொல்ல முடியும்.

"ஆம். அப்படியிருக்கலாம். பணமென்ற போர்வையினுள்ளே மிருக ஆசாபாசங்களை வைத்துக்கொண்டு உலகை மயக்கி, இளம் பெண்களின பரந்த இன்பஉலகிலே பல அணுக்குண்டுகளை வாரிப்பொழியும் நீங்களா? நானா துரோகி? பேரக்குழந்தையின் மலர் வதனத்தில் முத்தமிட்டு மகிழ வேண்டியிருக்க, கேவலம்! ஒரு பெண்ணை முத்தமிட ஆசைகொள்ளும் நீங்களா? நானா துரோகி? ஆசை ஒழித்து அறிவை விளக்கி உண்மையை நாடிச்செல்லாமல், திரும்பவும் மாய உலகில் மயங்கும் நீங்களா? நானா துரோகி? சொல்லுங்கள்.....! சொல்லுங்கள்............"

என்னால் ஒன்றுஞ் சொல்லமுடியவில்லை. சூனியநிலை ஏற்பட்டுவிட்டது. நான் அவ்விடத்தை விட்டு அகன்றுபோய் படுக்கையில் விழுந்தேன். சில நிமிஷங்கள் கழிந்தன. நிலமை சற்றுத் தெளியத்தொடங்கியது.

'ஆ! அவள் சொன்னதிலே எவ்வளவு உண்மை இருக்கிறது. நாங்கள் பணத்தினால் எதையும் சாதிக்கலாம் என எண்ணுகிறோம். அப்படியே செய்தும் விடுகிறோம். அந்தப் பணம் எங்கள் வசப்படுவதில்லை. நாங்கள் அதன் வசமாகிவிடுகிறோம். அதனால் கடவுளைப்பற்றியாவது நன்மைதீமையைப் பற்றியாவது சிந்திக்க முடியவதில்லை. ஆ! எவ்வளவு அறிவினன் நான். பேரக்குழந்தையை கண்டு மகிழ வேண்டிய நான் மீண்டும் சிருஷ்டித் தொழில் மேற்கொள்வதென்றால்......?,' இந்த நினைப்பு எனக்கு முற்றிலும் அருவருப்பையே அளித்துள்ளது. ஐயோ! இந்த வயதிலுமா இந்த ஆசை? இவைகளை நீக்கி நிர்விசாரியாகத் திரியக்கூடாதோ?அப்பனே! எவ்வித பந்தங்களையும் விட்டு ஒழி' என என் அந்தராத்மா ஓலமிட்டது. அந்தக் குரலிலேயே ஒரு முடிவும் தெளிவாயிற்று. யாமக்கோழியின் கூவல் மோனத்தைப்பிளந்து எங்கும் பரந்தது.

நான் அந்தக் காரிருளில் கலந்தேன். உலக பந்தமறுத்த புத்தனைப் போல.

## சுந்தரவல்லி அம்பாள்:

அன்று அந்தத் தரகர் வந்துபோனதிலிருந்து இந்தக் கலியாணமும் ஒரு வியாபார கச்சவடம என்ற உண்மை எனக்குத தெளிவாயிற்று. இல்லாவிட்டால் அந்தக் கலியாணத்தரகன் என்னை அதுவும் 59

வயதுக்கிழவனுக்கு. அதுவும் ஐந்தாம் தாரமாக கொடுக்கும்படி என் கிழத்தாயைச் சம்மதிக்கச் செய்வானா? அவளும் சம்மதிப்பாளா? உலகம் எதையும் மேற்போக்காகவே பார்த்துவிடுகிறது. அதன் கண்களுக்கு ஏழையும் பணக்காரனும் தான தெளிவாகத் தெரிகிறது. சாவதானமாக விஷயங்களை ஆராய்வதற்கு அது கூசுகிறது. இப்படியான உலகத்திடம் நான் என் இன்னல்களைச் சொல்லி முறையிடுவதா?

நடப்பது நடக்கட்டும். என்னைப்பொறுத்தவரை நான் எத்தனை எத்தனை துன்பங்களையும் பொறுக்கத்தயார். ஆனால் முக்கியமாக வயதுபோன என் தாயின் ஆவலைத் தணிக்கவேண்டும். என் அருமந்த பிள்ளை ஒரே ஒரு பிள்ளை நல்ல இடத்தில் நல்லாய் வாழ வேண்டும் என்ற ஏக்கத்தை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு தான் அந்த விவாகத்திற்கு உடன்பட்டேன். அன்றியும் வறுமையின் குரங்குப்பிடியில் அகப்பட்ட நான் செல்வச்செழிப்பில் குதூகலிக்க விரும்புவது இயல்புதானே.

எனக்குக் கணவராகப்போகும் சுந்தர உபாததியாயர் வீட்டிலே எனக்கு வேலை சொற்பமல்ல. அவரின் பணிவிடைகள் பார்ப்பதும் அவர் குழந்தைகளைப் பராமரிப்பதும் தான் என்வேலை என்றும் ஒரு செய்தி கிடைத்தது.இச்செய்தி என் மனதில் பன்னீர் தெளித்தது. என்றாலும் மனதின் ஒரு மூலையிலே இப்பொழுது நான் என் பருவசுகங்களையும் அடக்கி ஒடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஏன்? ஏழை என்ற ஒரு காரணத்தால். ஆ! கடவுளே! ஒரு ஏழை ஒழுங்காகச் சீவிக்க விரும்பினால் உலக சுகங்கள் எல்லாவற்றையும் மறக்கவேண்டுமா? இது நீயிட்ட நியதியா? என்ற ஏக்கமும் எழாமல் இருப்பதில்லை.

விதியிட்ட சூழ்ச்சியினாலே ஒரு சுபதினத்திலே நான் சுந்தர உபாத்தியாயரின் ஐந்தாவது மனைவி என்ற பெயரைப்பெற்றேன். கல்யாணச் சந்தடியில் இரண்டு நாட்கள் கழிந்தன. நான் அங்கே செய்யவேண்டிய வேலைகளைச் சிரத்தையுடன் செய்துவந்தேன்.

தரித்திரத்தின் வெம்மையிலே வாடிய நான் இங்கே கற்பகதருவின குளிர் நிழல்போன்ற சுகங்கண்டேன். கற்பகதரு சுகந்தருவது உண்மைதான். ஆனால் அதில் பலசாதி விஷநாகங்களும் இருக்குமோ என்னவோ? நான் அவரைக்காணும் சமயங்களிலே எத்தனை எத்தனையோ விஷநாகங்கள் படம்விரித்து ஆடுவதாக உணருகிறேன். அவருடைய கண்ணும் முகமும் அப்படி உணரச்செய்கின்றன. இந்தச் சமயங்களிலே அவரின் மேல் பயமும் அனுதாபமும் உண்டாகும்.

பாவம்! இந்தக் கிழவனுக்கு இன்னும் புத்திவரவில்லை. எப்படித்தான் புத்தி வரும். ஆசை அடங்கினால் தானே. இந்த

வயதுசென்றும் பெண்ணாசையை விடமுடியவில்லை. அவ்வளவு பெலவீனமான மனது. அதற்கென்ன செய்வது என்று அனுதாபப்படவேண்டி இருக்கும்.

கடல் எந்தச்சமயமும் அமைதியாகவா இருக்கிறது? சில சமயம் ஏதோ ஒரு காரணத்தால் கொந்தளிக்கவில்லையா? இந்தக் கடலைப்போல என் மனதும் சில சமயம் கொந்தளிக்கும். அப்பொழுது எல்லாம் கடைசிவரையும் இவருக்கு நான் இடங்கொடுக்கக்கூடாது. கேவலம்! இந்தக் கிழவரின் பெயரால் ஒரு குழந்தை பிறப்பதைச் சகிக்கமாட்டேன். இவருடைய காமவெறியை அடக்கமுடியாதா? அடக்கியே தீருவேன். பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் இருந்தால் அபாயம் என்கிறார்களே. அவை இரண்டும் ஒன்றை ஒன்று அணையாவிட்டால் எப்படி அபாயம் ஆகும் என்று தீர்க்கமாகச் சிந்தித்து முடிவும் கட்டியிருந்தேன்.

ஒரு நாள் இரவு நான் என்னறையில் படித்துக்கொண்டிரந்தேன். அவர் அங்கு வந்ததைக் காணவில்லை. ஆனால் அவர் என் பக்த்தில் இருப்பதைக் கண்டேன். எனக்கு மிகவும் கூச்சமாய் இருந்தது. அவரது கண்ணும் முகமும் காமவெப்பத்தைப் பிரதிபலித்துக்காட்டின. அதனால் உள்ளூர எனக்கு வேதனை உண்டானது. இந்த நிலைமையில் யார் முன்னுக்குக் கதைப்பது என்ற பிரச்சினையில் கொஞ்சநேரம் மௌனமே நிலவியது.

சிலர் பெண்களைப் பெரிய"சாகசக்காரிகள்" என்று சொல்லுகிறார்கள். அதில் எவ்வளவு உண்மை இருக்கிறது தெரியுமா? அவர்களுக்கு இந்தத் தற்பாதுகாப்புச் சாதனம் இருந்திராவிட்டால் அவர்களில் எத்தனையோ பேர் கற்பிழந்த கன்னியராக வேண்டி வரும் அல்லவா? ஆகவே மிகுந்த சாவதானத்தோடு நானே முதலில் பேச்சை ஆரம்பித்தேன். அமைதியாக நடந்து வந்த சம்பாஷனையின் நடுவே அவரது மிருகவெறி பேசத்தலைப்பட்டது. தத்துபித்தென்று ஏதோ குளறித்தள்ளினார். இந்தக் குளறலுக்கு நான் அஞ்சி ஒதுங்கவில்லை. மனசைத் திடப்படுத்திக் கொண்டேன். ஆத்திரமிகுதியால் வாய்க்கு வந்தபடி ஏதேதோ பேசியிருக்க வேண்டும். இப்பொழுது நினைத்தால் ஏன் இப்படிப் பேசினோம் என்றிருக்கிறது. நான் அப்பொழுது பெண்களின் உண்மையான இந்தத் தந்திரங்களைக் கையாளாவிட்டால் இந்தக் கிழட்டுக்கட்டையிடம் இருந்து எப்படித் தப்பமுடியும்? அந்தக் கணமே அவர் என் அறையை விட்டு அகன்றார்.

இந்தக் கிழவர் பெண்களைப்பற்றி என்ன நினைத்தக்கொள்கிறார். பெண்களென்றால் அவருடைய இச்சைப்பொருள் தானா? இதற்கு மேலாக உலக அறிவுள்ள மனிதருக்கு இவைகள் விளங்காதா? தகாத

பருவத்திலே தோன்றும் முனைப்பற்ற அர்த்தமற்ற வேட்கையைத் தீர்க்க இவர் என்னை உகந்த பொருளாகக் கருதுகின்றார் அவ்வளவுதானே! இவ்விதமாகப் பெண் வேட்டையாடும் பத்துப் பணக்காரக் கிழவர்கள் உலகில் முளைத்தால் பெண்மையின் பரிசுத்தம் கெடவேண்டியதுதான். பெண்களிலே தாய்மையின் பேரொளியைக் காண முடியாத மனிதனை நான் மிருகமென்றுதான் கருதுவேன். பணம், அகங்காரம் என்ற நச்சுவாள்களைக் கொண்டு பெண்மையென்ற வைரத் தூணைப் பிளக்க முடியுமா? இப்படி நான் சிந்தித்துக்கொண்டே கண்ணயர்ந்துவிட்டேன்.

மறுநாட் காலை அவரை வீட்டிலே காணவில்லை அவர் துறவியாகி விட்டதாகக் கேள்வி!.

❖❖❖

# 09. பூ

அப்பாவாம் அப்பா...... கண்டறியாத அப்பா. ஐயையோ. அப்பாவைப் பேசலாமோ? அப்பாவைப் பேசினால் பாவம் பிடிச்சிடுமோ? எங்கடை வாத்தியார் சொல்லியிருந்தார். ம்...... போச்சு: மறந்தே போச்சு. அவர் சொன்னது தொண்டைக்குள்ளை கிடந்து துடிக்குது. வெளியாலை வரமாட்டுதாம். எப்பவுமே எனக்கு இப்படித்தான். எதுவுமே சட்டுப்புட்டென்று நினைவு வராது. விக்கிக்கொண்டு கிடக்கும்.

இதோ...... இதோ...... வந்துட்டுது ........ 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' அப்படியெண்டால் அம்மாவும் அப்பாவும் சுவாமி மாதிரி: அப்பா ஒரு சுவாமி, சிவன் மாதிரி. அம்மா ஒரு சுவாமி: அம்மன் மாதிரி. வசந்த மண்டபத்திலை அம்மனும் சிவனும் இருக்கிறமாதிரி. அவையெல்லாம் பேச மாட்டினம். நடக்கமாட்டினம்: அப்பா பேசுவார் நடப்பார்; அவர் உயிர்ச்சுவாமி. அம்மா..... அவவும் மற்ற அம்மாக்களைப் போலைப் பேசித்தான் இருக்கவேணும். எனக்கென்ன தெரியும்? நான் மண்ணிலை விழுந்தபோதே சுவாமி அம்மாவை அழைச்சிட்டாராம். பாட்டி அப்படித்தான் சொன்னா அம்மா- அவவை எனக்குத் தெரியாது. அவ எப்பிடியிருப்பா? நினைச்சு நினைச்சுப் பாக்கிறேன். ஒண்டுமே தெரியல்லை. ஒருவேளை எங்களைப் படிப்பிக்கிற அக்காமாதிரி, ஒண்டரைக் கண்ணும் நீள நீளப் பல்லுமாய். அடுப்புக்கரி மாதிரிக் கறுப்பாய் வெடு சுடு வெண்டு இருப்பாவோ? சீச்சீ, என்னைப்பெத்த அம்மா அப்படியா இருப்ப? இருக்கவே இருக்காது. கமலியின்ரை அம்மா மாதிரிச் சிவப்பாய்.... சிவப்பாய்..... மனசுக்குள்ளை வடிவாய்த் தெரியுது. சொல்லத் தெரியவில்லை. அவ்வளவு அழகு. இப்பவும் எனக்கு நல்ல

நினைப்பாயிருக்கு. ஒருநாள் அப்பா வீட்டிலையிருந்தார். நான் அப்பதான் கமலியோடை விளையாடிவிட்டு வீட்டுக்குப் போனன். அப்பா பின் வாசலை வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருந்தார். வைச்ச கண் வாங்கவில்லை. நான் போனதுகூட அவருக்குத் தெரியவில்லை. அப்பிடி ஒரு பார்வை. கொஞ்சம் கிட்டப் போனன். திகைச்சுப் போய் நின்றிட்டன். தலையைச் சுத்திறமாதிரி இருந்தது.

என்ன, அப்பாகூட அழுவாரா? இவ்வளவு பெரிய அப்பா கூட அழுவாரோ? மழை பெய்கிறபோது தாவாரத்தாலை தண்ணி ஊத்திற மாதிரி கண்ணாலை தண்ணி வடிஞ்சுது. அதுக்குள்ளை ஒரு சிரிப்பு. நிலவெறிச்ச மாதிரி. அப்பா ஆரையோ பார்த்துச் சிரிக்கிறது போலை தெரிஞ்சது. கொஞ்சநேரம் அப்பாவையே பார்த்துக்கொண்டு நிண்டன். எனக்குத் தாங்க முடியல்லை. ஓடிப்போய் அப்பாவின்ரை மடியிலை தொப்பெண்டு விழுந்தன். அப்பாவுக்கு வெறி பிடிச்சிட்டுதோ! அப்படியே என்னைத் தூக்கிக் கொஞ்சுகொஞ்செண்டு கொஞ்சினார். எனக்கு வெக்கம் வந்திட்டுது. "போ அப்பா" என்று செல்லமாய்த் தள்ளினன். அப்பா என்ரை முதுகைத் தடவிக்கொண்டு சொன்னார்: "செல்லம். இவ்வளவு நேரமும் அரைப்பார்த்துக் கொண்டிருந்தன் தெரியுமா? உன் அம்மாவைத்தான். அச்சொட்டாய் உன்னைப் போலத்தான் இருப்பா. உன் அம்மா பூமாதிரி மெதுமெதுவெண்டு. குத்துவிளக்கு மாதிரி பளிச்செண்டு. மொட்டு விரிகிறமாதிரி சிரிச்சுக்கொண்டு, கோயிலை உள்ள அம்மன் மாதிரி...... ம்..... நீயும் நானும் கொடுத்து வச்சது அவ்வளவுதான்."

ஐயோ! அம்மா! திரும்பிப்படுக்க முடியலிலே. எப்படி வலிக்குது தெரியுமா? நெஞ்சுக்குள்ளை முள்ளுக்குத்துறமாதிரி. ஒண்டு, இரண்டு, மூன்று - இங்கையொண்டு நாலு.....ஐஞ்சு. இன்னும்கிடக்கு எத்தனை தளும்பு. புரண்டு ஐயையோ துடிச்சுத் துடிச்சு குதிச்சுக் குதிச்சு. விழுந்து விழுந்து புரண்டு அழவேணும் போலகிடக்கு. அது ஏலாது. சாமமாய்ப் போய்ச்சு. அதோட நாலைஞ்சு விழவோ?

'மலர்கள் கடவுளின் குழந்தைகள்' அண்டைக்கு வாத்தியார் சொல்லித்தந்தார். அப்ப சோதி எண்ட பையன்.

"அப்படியானால் நாங்கள்" எண்டு கேட்டான்

"ஓ! நீங்களும் மலர்கள் தான் உங்களையும் மெதுவாய்த்தான் தொடவேண்டும்", என்று வாத்தியார் சொன்னார். அப்ப எனக்கு ஏதோ தெரிஞ்சதுபோலையும் இருந்தது. தெரியாதது போலையும் இருந்தது. இப்ப பொழுதுவிடிஞ்சது மாதிரிக்கிடக்கு. வாத்தியார் சொன்னது மாதிரி

நானும் ஒரு பூத்தானே. றோசாப்பூ - இல்லாட்டிலும் ஏதோ ஒரு பூ. அப்பாவுக்குப் பூவைத்தொடவே தெரியாது.

அப்பா அடி அடி எண்டு அடிச்சுப்பியத்துப்போட்டார். அண்டைக்கு அம்மாவை நினைச்சு அழுத அப்பாவா இந்த அப்பா! ஐயோ? எத்தனை அடி! ஒண்டா இரண்டா? நினைச்சாலே என்னவோ செய்யுது. அதுதான் சாகிறமாதிரியாக்கும்.

அப்பாவாம் அப்பா! எனக்கு அப்பா வேண்டாம்; அம்மா தான் வேணும். அம்மா......அம்மோ! இதைப் பாரம்மா. இஞ்சை கன்னத்திலையும் கிடக்குது. முதுகிலையும் கிடக்கு. இருட்டிலை உனக்குத் தெரியாது தடவிப்பாரம்மா. ஓகோ... நீ எப்படிப்பார்ப்பாயாம். இல்லை இல்லை, நான்தான் உன்னைப் பார்க்கேலாது ஆனால் மனசுக்குள்ளை அதுக்குமுள்ளை நீ போல ஒண்டு தெரியுது. புகை மாதிரி. சுவாமியோடை இருக்கிற ஆட்கள் எல்லாத்தையும் எல்லாரையும் பார்க்கலாமாம். எனக்கென்ன தெரியும். பாட்டிதான் சொன்னா. அப்படியெண்டால் நீ என்னை பார்க்கிறாய் தானே அம்மா.

அம்மா நீ இருந்தால் என்மேல் அடிபட விடுவியா அம்மா? அப்பா அடிக்க வரயிக்க நீ என்னைத் தூக்கி உன் வயிற்றுக்குள்ளை புதைச்சு என்மேல குனிந்து உன்னாலை என்னை மூடிவிடுவியே. இல்லையா அம்மா. ம்...... நான் கொடுத்துவச்சது அவ்வளவுதான்.

என்ன என்ன? என்ன அம்மா கேட்கிறாய்? அப்பா ஏன் அடிச்சார் என்டா கேட்கிறாய? இஞ்சை அப்பாவும் நானும் படுகிற பாடு.....

இண்டைக்கு அப்பாவுக்கு பெரிய பெரிய கோபம் வந்திட்டுது. கண்ணெல்லாம் பெரிசாய், கோழிமுட்டை அளவாய்ப் போச்சு. அப்படியே விழுந்திடும் போல இருந்தது. நல்லாய்ப்பழுக்காத நாவற்பழம் மாதிரி சிவந்துபோய்ச்சுது. ஆ.... ஊ...... தாம்....தூம்... அப்படியாய் போச்சோ என்று நெருப்பெடுத்தார். இம்மளவுக்கும் நான் ஒண்டும் செய்யவில்லை அம்மா.

நேற்று பொழுதுபட்டு விளக்கு வச்ச வேளை அப்பா என்னைக் கூப்பிட்டார். போனேன்.

'இந்தாசெல்லம் புத்தகமெல்லாம் எடுத்துக்கொண்டா. பாடம் சொல்லித் தரப்போறன் எண்டு சொன்னார். எனக்குச் சிரிப்பு வந்திட்டுது. இந்தளவு பெரிய அப்பா, இறம்ப இறம்ப படிச்ச அப்பா, எனக்கும் பாடம் சொல்லித்தரப்போறாராம். பெரிய பெரிய வகுப்புக்கெல்லாம் படிப்பிக்கிற அப்பா, சின்ன வகுப்பிலை படிக்கிற எனக்குப் பாடம் சொல்லித்தரப் போறாராம். சீச்சீ; அப்பாவுக்கு வெட்கமில்லைப்

போலக்கிடக்கு. இப்படி நினைக்க சிரிப்பு வந்திட்டுது. பிறகு பயமாயும் கிடந்தது. அப்பா சொல்லுற மாதிரியிலே இண்டைக்கே எல்லாத்தையும சொல்லித்தந்திடுவார் போல இருக்கே. நான் என்ன செய்யிறது. எல்லாத்தையும் நினைப்பிலே வச்சிருக்க ஏலுமா? சீ. இந்த அப்பாவுக்கு ஒண்டுமே தெரியாதோ? நான் பேசாமல் நிண்டன்.

"ம்...... கணக்குப் புத்தகத்தை எடு. நாலு கணக்கு சொல்லித்தாறன்" என்டார். பையைத் துறந்தன். கணக்குப் புத்தகத்தைக் காணவில்லை. நெஞ்சுவிறைச்சுப் போய்ச்சு. முழி பிதுங்கிப்போய்ச்சு. கண்ணிலை தண்ணி வந்திட்டுது. அப்பாவுக்கு விளங்கிப்போச்சு. அவர் என்னை ஒரு பார்வை பார்த்தார். மற்றவைக்குத் தெரியாது. எனக்குத் தெரியும் அந்தப்பார்வையிக்க என்னகிடக்கென்று.

"சரி. துலைச்சுப்போட்டியா? வாசிப்பு; புத்தகத்தை எடு" என்றார்: பையிக்கை கையை விட்டு தடவினன். அதெங்கை கிடக்கப்போகுது. அதுதான் எப்பவோ துலைஞ்சு போச்சே. சும்மா சாட்டுக்குத் தடவிக்கொண்டிருந்தன். இப்ப அழுகையே வந்திட்டுது வேர்த்து மேலெல்லாம் தண்ணியாய்ப் போச்சு

ஐயையோ அதையும் காணன். எங்கையோ துலைஞ்சுபோச்சப்பா. என்று விக்கித் தக்கிச் சொன்னன்.

"என்ன துலைஞ்சுபோச்சோ? கழுதை..... புத்தகமென்ன செட்டை முளைத்துப் பறந்துபோகுமோ? எல்லாத்தையும் துலைச்சுப்போட்டு வந்துநிற்கிறியா?" அப்படி இப்படியெல்லாம் ஏசினார். அப்பாவைப் பார்க்கவே முடியவில்லை. அழகான அப்பா முகம் அலங்கோலமாய்ப் போச்சு. கண்ணை மூடிக்கொண்டன். நடக்கிறது நடக்கட்டும் என்று நினைச்சன்.

இந்தா. நாளைக்கு இந்த இரண்டு புத்தகத்தையும் கொண்டு வராட்டி தோலை உரிச்சுப்போடுவன். போய்த்துலை மூதேவி" எண்டு திட்டினார். தப்பினேன் பிழைத்தேன் என்று நினைச்சுக்கொண்டு போய்ப் படுத்திட்டன்.

"அப்பாவுக்குக் கோவம் வருமா அம்மா? அப்படியெண்டால் கமலி சொன்னது பொய்யா?

எங்கப்பா கனக்கக் கனக்க படிச்சவர். அவருக்குக் கோபமே வராது. உங்கப்பாவும் அப்படித்தானாம்? நல்லாய் நல்லாய் படிச்சவராம். அதனால எங்கும் மதிப்பாம். அப்படியெண்டு எங்கப்பா சொன்னார், என்று சொன்னாளே. எனக்கொன்றும் தெரியவில்லை. கிணற்றடிச்சேறு மாதிரி குழப்பமாய்க் கிடக்கு. பயமாயும் கிடக்கு. கண்ணை மூடிக்கொண்டு

கிடந்தன். கண்ணுக்குள்ளே கால் முளைச்ச புத்தகம் ஓடி ஓடி வருது. கெக்கெக்கே என்று சிரிக்குது. இறகுகளை அடிக்கிறமாதிரி ஒற்றைகளை ஆட்டிக்கொண்டு பறந்துவருது. என்னைப்போல அழுகுது. அப்பாவைப்போல கோவிக்குது. இதென்ன புத்தகமா? அப்பாவைப் போல தெரியுதே. உடனே கண்ணை முழிக்கிறன். எல்லாம் ஓடிப்போச்சு.

சீச்சீ, இந்தக் கள்ளப் பொடியளோடை என்னண்டு படிக்கிறது. புத்தகத்தைக் களவெடுக்கிறாங்கள். பெஞ்சிலை களவெடுக்கிறாங்கள். அங்கை இங்கை விலத்தினால் ஒண்டையும் விடுறாங்கள் இல்லை. இப்ப நான் அப்பாட்டை திட்டுவாங்க வேண்டிக்கிடக்கு. நாளைக்குப் புத்தகம் எப்படி வரும்? சுவாமி அப்பனே! எடுத்தவை தந்திடவேணும். உனக்கு ஐஞ்சு சதத்திற்கு கற்பூரம் கொளுத்துவேன். ம்.... எடுத்தவை நருவினையோ? ஐயோ, பெரிய சங்கடமாய்க் கிடக்கே. அம்மாவை சுவாமி அழைச்சுக்கொண்டமாதிரி என்னையும் அழைச்சிட்டாரெண்டால்.... அதெங்கை நடக்கப்போகுது...... வேறென்ன வழி....?

இண்டைக்கு பள்ளிக்கு போனன். ஓய்வுநேர மணி அடிச்சுது. பொடியள் எல்லாம் விளையாடப்போட்டினம். நான் மாத்திரம் போகவில்லை. வயித்துக்க குத்துது எண்டு சாட்டுச்சொல்லிப்போட்டு நிண்டன். ஒரு பெடியன்ரை இரண்டு புத்தகத்தை மெதுவாய் எடுத்தன். எடுக்கையிக்கை நெஞ்சு பக்குபக்கென்று இடிச்சுது. கை நடுங்கிச்சு. சுவாமி எடுக்காதே எடுக்காதே என்று சொல்லுறமாதிரி இருந்தது. அப்படியெண்டால் அப்பாட்டை அடிவாங்கிறது ஆர்? முடியாது. அப்பா தானே உயிர்ச்சுவாமி. அப்பா தான் கொண்டரச்சொன்னார்.

ஒரு மாதிரி புத்தகத்தை எடுத்து பெயரெழுதிக்கிடந்த முதலொற்றையை கிழிச்சுப்போட்டு என்ரை பேரை எழுதினன். ஒருநாளும் களவெடுத்துப்பழக்கமில்லை இதுதான் என்ரை முதல் களவு. அப்ப துவக்கம் என்ரை மனசுக்குள்ள ஊசியாலை குத்தறமாதிரி வலி. தேகமெல்லாம் நடுக்கம் ஆரைக்கண்டாலும் பயம்.

எங்கட பள்ளியிலை ஒருவாத்தியார் இருக்கிறார், பொலிசுமாதிரி. எந்த வகுப்பில களவு போனாலும் சரி பிடிச்சுப்போடுவார். தப்ப ஏலாது. ஐயோ! அவர் வந்திட்டாரே. நான் சந்தோஷமாய் இருக்கிறதுபோல சிரிச்சுக்கொண்டு நிண்டன். ஐயையோ. அந்தப் படுபாவிப்பெடியன் நாலு ஒற்றையிலும் தன்ரை பெயரை எழுதி வச்சிருக்கிறானென்று எனக்கெப்படி தெரியும்? நான் களவாணியாய்ப் போய் நடுங்கிக்கொண்டு அழுதுகொண்டு நிண்டன். வாத்தியார் முதுகில தட்டி செல்லம் இனிமேல இப்படிச்செய்யாதை எண்டு சொன்னார். ம்.... இனி அப்பாவுக்கு எப்பிடி

புத்தகம் காட்டுறது

விட்டை போனன் நல்ல காலமாய் அப்பா இன்னும் வரவில்லை. மணி எட்டாச்சு. அப்பவும் வரவில்லை. அப்பா வரமுந்தி படுத்து நித்திரையாய்ப் போவமெண்டு நினைச்சுப் படுத்தன். நித்திரை வரவில்லை. கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் படுத்துக்கிடந்தன். அப்பதான் அப்பா வந்திருக்கவேணும். செல்லம் எண்டு கூப்பிட்டார். நான் பேசவில்லை.

"ஏ. செல்லம். இங்க வாடி. என்ன சாலம் விடுறாய்" என்று இரைஞ்சார். நான் பேசலை. இனி போகாமல் ஏலாது. நடுங்கிக்கொண்டு போனன்.

"ஏனடி, புத்தகம் களவெடுத்தாயாம். மெய்தானோடி. மானம் போச்சடி" என்றார். நான் பேசவில்லை.

"ஏனடி களவெடுத்தாய்" நான் பேசவில்லை

"அவ்வளவு தூரத்திற்கு வந்திட்டியோ" நான் பேசவில்லை.

"பேசமாட்டாய்" அதுக்கும் நான் பேசல்லை. அப்பாவுக்குப் பொல்லாத கோபம் வந்திட்டுது. எங்கையோ கிடந்த ஒரு பிரம்பை எடுத்தார். உடனே நான் நடுங்கிக்கொண்டு,

"என்ரை புத்தகத்தை ஆரோ எடுத்தினம். அவயின்ரை புத்தகத்தை நான் எடுத்தன் அப்பா" என்று விக்கி விக்கிச் சொன்னன்.

"ஓ! அப்படியாய்போச்சோ! நீ....நீ களவெடுக்கலாமோடி. என் மரியாதை போச்சடி" என்று அடிக்கத்தொடங்கினார். அடி அடி என்டு அடிச்சார். சுத்தும் பித்தும் அடிச்சார்.

அம்மா, வலிக்குதே அம்மா...... அம்மா..... நான் குத்தம் செய்திட்டனா அம்மா...... சொல்லம்மா.....

## 2

அப்பாவாம் அப்பா...நானும் ஒரு அப்பாவோ?

இந்த உலகத்தில் எந்த ஒரு குழந்தைக்கும் அப்பாவாயிருக்கத் தகுதியற்றவன் நான். மலரின் மென்மையை அனுபவிப்பதுபோன்று குழந்தையுள்ளத்தைத் தொடத்தெரியாதவன், அப்பாவாகும் நிலையை அடையவே கூடாது என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆவிபடிந்த கண்ணாடியைத் துடைத்துத் தூய்மையாக்கி விட்டதுபோல் இப்போது என்மனம், தான் வடித்த கண்ணீரினாலே கழுவப்பட்டுத் தெளிந்திருக்கிறது. அதனால் என்னிலுள்ள என்னைக்

காணமுடிகிறது. என் பலவீனங்கள், அம்மணமாய் நிற்கும் என சுயநல எண்ணங்கள், வெளிவேடங்கள் எல்லாம் இரசம் பூசப்பட்ட கண்ணாடிப் பிம்பங்கள் போலக் காணுகின்றன. அந்தச் சுயநலக் "கரு" வை அழுந்த ஒட்டியிருந்த வெளிவேடத்தை உரித்துப் பார்த்தபோதுதான நான் எவ்வளவு பரிதாபத்திற்குரியவன் என்பது தெரிகிறது.

நான் என் செல்லத்தின் தளிருடலிலே தழும்பு பட அடித்தேனென்றால் அதற்கு என்ன அர்த்தம்? என்ன காரணம்? என் மரியாதை, என் புகழ், என் அந்தஸ்து என்ற எனதுகளுக்கு இழுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவல்லாமல் வேறு சொல்லமுடியாமா? அல்லாமல் என் குழந்தையைத் திருத்துவதற்காக அடித்தேனென்றால், அதைவிட நான் என்னை ஏமாற்றிக்கொள்ளக்கூடிய உயர்ந்த கற்பனை வேறிருக்க முடியாது. நேற்றுத்தொடக்கம் இந்த இளங்குருத்தின் நெஞ்சுக் குழியில் ஏற்பட்ட பயங்கர சலனத்தை, பிரளயத்தை, எரிமலைக் குமுறலை உணர முடிந்திருந்தால்......

எனக்கு என் சிறுவயது தொடக்கமே பிறர் மனங்களில் நுழைந்து விசித்திர சித்த இயல்புகளைக் காண்பதிலே ஒரு தனி ஆசை. அவர்களின் மெய்ப்பாடென்றும் சொல்லென்றும் செயலென்றும் வரும் இரதங்களிலேறி அவர்களுள் நுழைந்து, அவர்களது அடிமனதிலுள்ள விகாரங்கள், நப்பாசைகள், கனவு நிலைகள், எண்ணக் குமுறல்கள், குவியல்கள் ஆகிய மனக்கோலங்களையும் குறைகளையும் அனுபவிக்க ஆசை.

மனப்பலவீனங்கள் மறைக்கப்படும்போது எல்லாருமே பேரறிஞர்களாகிவிட முடியுமோ? இல்லாவிட்டால் என்னையும் உலகம் ஓர் அறிஞனாக, சிறந்த ஆசிரியனாக ஏன் கொண்டாடுகிறது? என் பேச்சும் எழுத்தும் செயலும் மனத்தின் படங்களென்று ஏன் புகழ்கிறது? இப்பபொழுது இந்தக் கொண்டாட்டங்களும் புகழ்ச்சிகளும் யாருக்கு வேண்டும்போல் தோன்றுகின்றன. அன்று அவை எல்லாம் என்னில் அகங்கார வித்தைத் தூவி வெறி உணர்வைப் பயிராக்கிவிட்டன. அப்போது புகழும் வெறியூட்டக்கூடிய போதைப்பொருள் என்பதை உணரமுடியவில்லை. அவையெல்லாம் எனது முன்னேற்றத்தின ஏணிப்படிகள் என்று எண்ணினேன். அந்த வெறி உணர்வில் என் இதயத்தின் உள் இதயமாய் உயிரின் உள் உயிராய் வாழ்வின் உள் வாழ்வாய் இணைந்து எனக்கு முழுமை தந்த அவளை உணரமுடியவில்லை. இன்று அவளதும் எனதும் உயிர் உடல் உணர்ச்சி எண்ணம் ஆகிய எல்லாவற்றினதும் கூட்டுத்தொகையின் சரிபாதியாய் பிரிந்து எங்கள் பிரதிபிம்பக் கலப்பாய் தெரியும் செல்லத்தை உணரவில்லை. இவர்களது

மனப்போக்கை அனுசரித்து நடப்பது மகா இழிவு என்றோர் எண்ணம் அன்று என்னில் கவிந்திருந்தது. இவர்களை உணர முயல்வதிலும் பார்க்க, பிறரை உணர்ந்து திருத்த முயல்வதனாற் பிறரின் பாராட்டுக்கிடைக்கும். அந்தப் பாராட்டே எனது புகழுக்குணவாகும் என்று எண்ணினேன். அதனால் உட்சுவர் இருக்க புறச்சுவர் தீற்றிக்களித்தேன்.

வெளிப்பூச்சுகள் எல்லாம் கலைந்ததினால் சுயகோலம் கொண்ட என் மனம், நேற்றுவரை எதனாலோ சிங்காரித்துக்கொண்டிருந்த தன்னைப் பார்த்து சிரிக்கிறது. அந்த ஏதேதுகளில் ஒன்று பொறாமை போலவும் தோற்றுகிறது. வேறொன்று போலவும் சாடைகாட்டுகிறது.

அக்கரைப்பச்சையை மாத்திரமன்று. அயல்வீட்டுச்செழிப்பையும் என்னாலே தாங்கமுடியாது. எவரெவரோ எல்லாம் எப்படியோ செழித்துக்கொழிப்பதைப்போல் நானேன் இல்லையென்ற ஏக்கப்பெருமூச்சு என்னைவிட்டு என்றுமே மடிந்ததில்லை. அந்த இயலாமை என்னில் சீற்றத்தையும் சிடுசிடுப்பையும் வளர்த்துவிட, அவை இரண்டும் விளையாடும் களங்களாக என் அவளும் செல்லமும் வாய்த்தார்கள். வீடு படு நரகமாவதற்கு வேறு என்ன வேண்டும்? மனைவியையும் மக்களையும் உணரமுடியாமையை விட, நரகம் என்று தனியாக ஒன்று வேறெங்கே இருக்கப்போகிறது என்று இப்போது எண்ணுகிறேன்.

நேற்றுவரையில் மங்கிமறைந்து இல்லையாகிவிட்ட ஒரு நினைவு, அவளைப்பற்றி எண்ணியபோது வெகு தெளிவாகக் கண்முன்னே நடப்பதுபோலத் தோன்றுகிறது.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் என அவள் தாயாகிவிட்ட செய்தி கிடைக்கிறது. அதை அறிந்ததும் என் உள்ளத்தில் ஊற்றொன்று சுரந்து அதை நெகிழ்வித்து உருக்கி நீராக்கி அமுதச்சுனையாக்குகிறது. மீண்டும் மீண்டும் ஊறி ஊறி, பெருகிப்பெருகி என் உடலில் உள்ள அணுக்கருக்களைத் தொட்டுத் தித்திக்கிறது. அது என் கட்டுக்குள் அடங்காத ஓர் ஆனந்தப்பரவச நிலை. வான்வெளியில் மிதந்து மேலே மேலே அதற்கும் மேலே செல்வதைப்போன்ற ஒரு பிரமை.

போகும் வழியெல்லாம் என் குழந்தையைப் பற்றியே எண்ண அலைகள் கூத்தடிக்கின்றன. யாரிந்தக் குழந்தை? எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? இதற்கும் எனக்கும் என்ன சொந்தம்? ஓகோ! முன்னே பல பிறவிகளிலே ஒட்டி உறவாடிய ஓருயிர் தாமரைப்பூவின் செவ்வண்ண அகவிதழ்களை உடலாகப் பெற்று பிறந்திருக்கிறது. அது எனக்குச் சொந்தம்.

நான் ஆசுப்பத்திரியிலே அவள் படுத்திருந்த அறை வாசலிலே நிற்கிறேன். அவள் சரித்து விட்ட வெண்கலச்சிலை போலக்கிடக்கிறாள்.

கண்மூடி மௌனியாய் அசைவின்றி அவள் படுத்துக்கிடந்ததை என்றுமே கண்டறியாத நான் திகைக்கிறேன். அவள் தன் அடிவயிற்றிலே போற்றிக் காத்த உயிர்ப்பொறையை வெளிக்கொணர்ந்த சோர்வாற கிடக்கிறாளா? அல்லது ஆனந்தம் பரவி இனிக்கும் உள்ளத்திலே தூங்கிக்கொண்டிருக்கும் ஆழ்ந்த அமைதியிலே கிடக்கிறாளா? எனக்கென்ன தெரியும்? அவள் அயர்ந்து தூங்குகிறாளென்று எண்ணுகிறேன். அவளுக்குப் பக்கத்திலே சின்னத் தொட்டிலிலே இந்த செல்லம்மா சின்னஞ்சிறு சிசுவாகக் கிடக்கிறாள். அதைத் தொடக் கை துடிக்கிறது. மனம் கூசித்தடுக்கிறது.

அவளிடம் சென்று அவள் நெற்றியில் கைவைத்து வருடுகிறேன். அவள் கண்திறந்து பார்க்கிறாள். அந்தக்கண்ணிலோ முகத்திலோ எந்த உணர்ச்சித் துடிப்பும் நெளியவில்லை. என்றுமே அவள் அப்படித்தான். அவள் ஒரு முகமூடி என்று நினைத்துக்கொள்கிறேன். அவள் கையைத் தொட்டுப் பார்க்கிறேன். பனிக்கட்டியைத் தொடுவதுபோல உணர்கிறேன். என் மன அந்தரங்கத்திலும் கடும்குளிர் பரவுகிறது. அவள் காற்பக்கம் சென்று காலைத்தொடுகிறேன். அவளில் ஒரு சலனம் துடிக்கிறது. சீச்சி. இதென்ன வேலை என்று அவள் முனகுகிறாள். முகத்தைச் சுளிக்கிறாள். தன் காலைத்தொட அவள் என்றுமே என்னை அனுமதிக்கப்போவதில்லை என எண்ணி மனதால் சிரிக்கிறேன்.

ஒரு நர்ஸ் வருகிறாள்.

"ஐயா நீரும் ஒரு கணவனா? நோயை முற்றி விளையவிட்டு......" அவள் முடிப்பதற்கிடையில் என் அவள்.

"அம்மா, சும்மா இருங்கள். உங்களை யார் இவையெல்லாம கேட்கச்சொன்னது? அவர் என்ன செய்வார்" என்று பொருமிச்சிறுகிறாள் கண்ணீர் முத்துக்கள் அவள் காதோரத்திலே தெறிக்கின்றன. நான் வெம்புகிறேன். மரமாய், கல்லாய் நிற்கிறேன்.

"என்ன, ஏன் அழுகிறீர்கள். எனக்கொன்றுமில்லை என்று சொல்லவும் விரும்பவில்லை......... எங்கெல்லாமோ பறந்துபோவதுபோல் இருக்கு....... ம்....... இந்தப் பச்சை மண்ணின் மனதை மாத்திரம் நோகவிடாதையுங்கோ" என்று அவள் குரல் இழைகிறது. ஐயோ! நான் என்ன செய்யப்போகிறேன் என்ற என் உணர்ச்சியைத் தவிர. நானே இல்லையாகிவிட்டதுபோலக் தோன்றுகிறது.

அடுத்த நாளே அவள் போய்விட்டாள். இப்பொழுது ஏற்படுகிற பயங்கரத் தெளிவில், நான் என்னைப் பூரணமாக உணருகின்றபோது. அவள் முகமூடியையும் என் மனமூடியையும் கிழித்தெறிந்து அவள்

மனதைத் தொடாமையால் அவள் போய்விட்டாளோ என்று ஏங்குகிறேன்.

செல்லம். தன் மனஏட்டில் தன் கண்ணீரால் எழுதிக்குவித்துள்ள உணர்ச்சிக்குமுறல்களை நான் கருத்துடன் படிக்கும் இவ்வேளையில் அவளைப்பற்றி எண்ணாமல் இருக்கமுடியவில்லை. அன்றொருநாள் என் பாலிய நண்பன் சேகரனது மகனாக வந்து, என் மாணாக்கனாகி காலப்போக்கில் என் மகனாகவே மாறி விட்ட அந்தச் சுந்தரத்தை நான் பார்க்கிறேன். அவனது இளமைப்பருவம் - அது எனக்குத் தெரியாவிட்டாலும் நிறையக் கேட்டறிந்திருக்கிறேன். சுந்தரத்தின் தந்தையே அவனைப்பற்றிச் சொன்ன சில என்றும் பசுமையானவை.

வேங்கைப்புலியின் கண்களிலே தெறிக்கும் மனோதிடமும் குரூரவெறியும் அவன் இளமைப்பருவத்தில் எப்படியோ அவனில கவிந்துவிட்டனவாம். கணத்துக்குக் கணம் குமுறி எழும் எரிமலை ஒன்று அவன் மனதில் சதா தீக்கங்குகளைக் கக்கிக்கொண்டிருந்ததாம். அந்த வெறியும் இந்தத் தீயும் இணைந்து அவனை வழிநடத்தியபோது, கோணல்மாணலான ஒரேஒரு வழிதான் அவன் முன் விரிந்து கிடந்ததாம். அந்த வழியிலே அவன் ஓடியபோது இடறுண்டவர்கள். அவன் ஒத்த பாலர்கள் மாத்திரமன்றி பெரியவர்களும் தானாம்.

ஒருநாள் வகுப்பிலே ஆசிரியர் கேட்ட ஒரு கேள்விக்கு திக்கித்திணறி பதில்சொல்ல முயன்றபோது, சிறுமி ஒருத்தி சிரித்துவிட்டாளாம். அவ்வளவுதான்; தன்னையும் தான் இருக்குமிடத்தையும் எல்லாவற்றையுமே மறந்த ஒரு வெறியில் கையிலிருந்த சிலேட்டால் அவள் தலைக்குக் குறிவைத்து எறிந்துவிட்டுச் சிரித்தானாம். அன்று அவனுக்குத் தண்டனை கொடுத்த ஆசிரியர். மற்றொருநாள் தலைக்கட்டுடன் வகுப்பிற்குள் நுழைந்தபோதும அவன் சிரித்தானாம்! அந்த ஆசிரியர் அந்த வழியில் வரும் வேளைக்காக பகல் முழுவதும் பட்டினியோடு வழியோர நாவல் மரத்திற் காத்திருந்து, மாலை மயங்கும் நேரத்தில் அவர் அவ்வழியால் வர அவன் எப்படிக் குறிபார்த்து எறிந்தானோ என்று செய்தி அறிந்த எல்லோரும் ஆச்சரியப்பட்டார்களாம்.

கோவைப்பழம் போல வெற்றிலையை மென்று மென்று சுவைத்திருந்த அவனை அந்த வழியால் வந்த வெள்ளை வேட்டிக்காரர் தனது பெருந்தன்மையைக் காட்டிப் பேசிக்கண்டிக்கப் போய் அவனது வெற்றிலை எச்சிலால் அபிஷேகிக்கப்பெற்று திரும்பிய பரிதாபக் கதையை ஊரவர்கள் பேசிக்கொண்டார்களாம். ஊர்ச்சிறுவர்கள் உள்நடுக்கத்தோடு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு

அவனைப்பற்றிக்கதைப்பார்களாம். அவனைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டாலும் வேதனையாம்; சேர்க்காவிட்டாலும் வேதனையாம். ஊர்ப்பெரியவர்களுக்கோ அவன் தீராத தலைவலியாம்.

அந்த வண்ணமலரின் இதயத்தை அரித்து நாசமாக்கும் இந்த வண்டு எவ்விதம் வந்துசேர்ந்தது என்பதை வெகுவிரைவிற் கண்டுகொண்டேன். சுந்தரத்தின் வெறிஉணர்வு நதிமூலமும் அன்று; ரிஷிமூலமும் அன்று. அவனது சிற்றன்னையே அந்த மூலம். அன்பின் அணைப்பிலே மலரவேண்டிய அம்மலர் அலட்சியத்தாலும் அடக்குமுறையாலும் கருகியது. சிறுகுழந்தைகளின் உணர்ச்சி இறப்பர் பந்துபோன்றது. அடக்க அடக்க. அடிக்க அடிக்க வெகுவேகமாக மேற்கிளம்பும். வீட்டிலே அடக்கப்பட்ட சுந்தரமும் வெளியிலே வெறியனாக எழுந்தான்.

அவனை வீட்டில் இருந்து பிரித்து என்னுடன் வைத்துக் கொண்டேன். அவ்வளவோடு என் வேலை முடிந்தது. மீதிச்சுந்தரத்தை என் அவள் தான் உருவாக்கினாள்.

அப்போது செல்லம்மா பிறக்கவில்லை. அதனால் அவள் என்னிடத்திலே காணவும் பாராட்டவும் அனுபவிக்கவும் முடியாத அன்பை அவனிடத்திலே வைத்துப் பாராட்டி அனுபவித்திருக்க வேண்டும். அந்த அன்புவெள்ளம் அவன் வெறியை அடக்கி ஆண்டுவிட்டது. ஏதோ என்னுடன் இருந்து படித்துத் தொலையட்டும் என்று எண்ணிய நான். என்னையறியாமலே அவனது தந்தையானேன்.

அந்த அவள் - மகாலட்சுமி - இன்று இல்லை. அவள் அதோ அருபியாய் நின்று கண்ணீர் வடிய என்னைப் பார்க்கின்றாள். அவள் உதடுகள் பிரிகின்றன.

"என்ன. உங்களைத்தானே. ஊர்க்குழந்தைகளின் மனதைத்தொட்டு அணைக்கிற நீங்கள்....?" ஐயோ! போதும். வசனத்தை முடியாதே. என்னால் தாங்கமுடியாது. என்னைக் கொல்லாதே. உனக்குப் புண்ணியம் உண்டு.

## 3

இருந்த இடத்திலே இருந்து தன்னுள் ஆழ்ந்து மூழ்கி. தன்னைக் கண்டு. தன்னை முற்றாக உணர்ந்து விளங்கிக்கொண்ட

ஆசிரியா் கந்தசுவாமியின் கண்ணெதிரே பொழுது புலா்ந்தது. கன்னங்கரிய இருள் மூடிவிட. தான் எங்கென்று அறியாமல் தடவி அலைந்த அவருக்கு தன் வாழ்வில் விடிவு ஏற்படுவதுபோலத் தோன்றியது. இரவு கண்விழித்ததனால் கண் எரிந்து புகைந்தது. தன்னை மறந்து தபசிகளைப் போல நினைவுலகிலே சஞ்சரித்து நிலைத்திருந்ததனால், உடல் கனத்துச் சோர்ந்தது. என்றாலும் அவை ஒன்றும் அவருக்குப் பிரமாதமாகப் படவில்லை. தன் மனவிருள் விடிந்தது என்ற சுயதிருப்தி, சுயநலப்போக்கு - தான் கண்டறியாத ஒன்றைக் கண்டுவிட்டதைப்போல வெகுபிரமாதமாகப்பட்டது.

உடலைச் சிலிர்த்துக்கொண்டு எழுந்த அவர், நேரே செல்லம்மா படுத்துக்கிடந்த இடத்துக்குச் சென்று அவள் பக்கத்தில் அமா்ந்தார். அவளை எடுத்து, வெளிவாங்கியிருந்த தனது மனதிற் புதைத்து மறைத்து விடவேண்டும் போல அவருக்குப் பட்டது. அவளையே பார்த்துக்கொண்டிருந்தார். செல்லம்மா இரவிரவாக வடித்த கண்ணீா் பெருகிப்பெருகி ஈற்றில் வறண்டுவிட்ட சுவட்டை மாத்திரமன்றி, கன்னத்திலும் தோளிலும் முகத்திலும் கிடந்த தனது அரக்கத்தனத்தின் சுவடுகளையும் கண்டார்.

அவர் கண்கள் குளமாகிக் கட்டுடைத்துவிட்டன. அவர் செல்லம்மாவின் முகத்தோடு முகம் வைத்துப் பார்க்கக்குனிந்தார். கண்ணீர்த்துளிகள் பொலுபொலுவென்று அவளது முகத்தழும்பின் மீது சொரிந்தன. செல்லம்மா மெதுவாகக் கண்விழித்துப் பார்த்தாள். அப்பாவின் மார்புக்கூட்டுக்குள் புகுந்துவிடுவதைப்போல அவரைக் கட்டி அணைத்துக்கொண்டாள்.

"அப்பா மன்னிச்சிடுங்கோ அப்பா."

இப்போதும் அவள் நெஞ்சு பயத்தால் நடுங்குவதைக் கந்தசாமி உணா்ந்தார். பெரியதொரு மலரைத் தாங்குவதுபோல அவள் தலையைத் தன்னிரு கைக்குள் அடக்கிக்கொண்டு அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் உதடுகள் துடித்து வெம்பின.

"செல்லம், பூவைத்தொடத்தெரியாத பாவி நான். மன்னிச்சிடு அம்மா"

❖❖❖

# 10. தோழன்

"அம்மா, அம்மா, ரவி எங்கே அம்மா!"

..............................

"அம்மா அம்மா என் ரவி எங்கே"

..............................

"எங்கே போய்விட்டான்? கூப்பிடம்மா!"

அவன் கேட்ட கேள்விகளுக்குப் பதில்சொல்ல அங்கே அவன் அம்மா இல்லை. வேறு எந்த அம்மாக்களும் இல்லை. அதனால். தான் கேட்டகேள்விக்குத் தானே பதில்சொல்லித் தன்னில் திருப்தி காண முயன்றுகொண்டிருந்தான் சுந்தரம்.

அவனுக்கு ஏழு அல்லது எட்டுவயதுதானிருக்கும். சந்தனத்துள் கொஞ்சம் செம்பஞ்சுக் குழம்பைக் கொட்டிக்கலக்கிவிட்ட நிறம். ஆனால் அது இப்போது நிழலுக்குள் வளர்ந்த அவரைக்கன்று போல் வெளிறிக்கிடந்தது. துருதுருத்த அந்தச் சிரிக்கும் விழிகள் அத்தன்மைகள் வற்றிச் செத்துக்கொண்டிருந்தன. செம்பவள வாயில் ஒரு கருமை பூத்துக்கிடந்தது. அவன் நரம்புகளில் இளமை இரத்தம் குதித்தோடவில்லை. சோர்வுதான் ஓடியது. பேசும் சக்தி அணுஅணுவாய் தேய்ந்துகொண்டிருந்தது. "பிளேக்" நோய் அவன் உயிரைத் தெள்ளிப்பது போல் அரித்துப் பதம் பார்த்துக்கொண்டிருந்தது.

அவன் கண்ணைத் திறந்து பார்த்தான். தான் பார்க்க விரும்பிய அம்மாவையோ அப்பாவையோ அவன் காணவில்லை. பதிலுக்கு அந்த வாட்டிலுள்ள நோயாளிகளைத் தான் கண்டான். அவர்கள் முனகல் சத்தம் பேரிடியாய் அவன் இதயத்தை நொருக்கியது. கண்ணை மூடிக்கொண்டான்.

தன் ஒரே ஒரு மகனைத் தொற்றுநோய் ஆசுபத்திரிக்கு அனுப்பும்போது அவள் உயிரே துவண்டது - துடியாய்த் துடித்தாள். அவனுக்குப் பக்கத்தில் துணையாய் இருந்து சிஸ்ருஷை செய்ய விடும்படி அந்த அதிகாரிகளைக் கெஞ்சினாள்: மன்றாடினாள்: காலில் விழுந்துபார்த்தாள்: கதறினாள். சட்டம் அதைக் காதில் ஏற்றுக் கொள்ளவில்லை .அந்தச் சட்டத்திற்கு உள்ளம் இருந்தால். உணர்விருந்தால். அந்தத் தாயுள்ளத்தின் தீராத தவிப்பை நிச்சயமாக உணர்ந்தே இருக்கும்! கதறியிருக்கும்! அவளை அது மதித்திருக்கும். பாவம்! அவன் அப்பாவோ மனதை ஏதோ ஒரு நெருப்பிலிட்டு நீறாக்கித் தவித்துக்கொண்டிருந்தார்.

அவன் மீண்டும் கண்ணைத் திறந்து"பார்த்தான். அப்பாவையும் காணோம்: அம்மாவையும் காணோம். அந்த வாட்டின் மூலையில் எழுந்த 'ஐயோ, ஐயோ' என்ற வேதனைக்குரல்கள் அவனை வெருட்டின. மூடிய கண்களுக்குள்ளே அவன் உயிராய் நேசித்த ரவி நின்றான். அவனைத் தடவிக்கொடுக்க வேண்டும்; முகத்தோடு முகம் சேர்த்து மகிழவேண்டும் என்ற ஓர் உணர்ச்சி அவனுள் எழுந்தது. புன்சிரிப்பு மலர்ந்தது. மனம் ரவியையே பார்த்துக்கொண்டிருந்தது.

2

ஒன்றரை வருடங்களிற்கு முன் ஒருநாள்.

பள்ளிக்கூடச் சிறையில் இருந்து விடுபட்டுப் புத்தகப்பையை லாகவமாகச் சுழற்றிக்கொண்டு, அம்மா மடியில் ஆசைவைத்து துள்ளல். நடைபோட்டுக்கொண்டு வந்தான் சுந்தரம்.

கிளைக்குக் கிளை தத்தித் தத்தி தன் குஞ்சுகளுக்கு நல்லதொரு கதை சொல்லிக்கொண்டிருந்தது தாய்ப்புளினி. குஞ்சுகளைக் கூப்பிட்டு இரைகாட்டி விட்டு ஒதுங்கிநின்றது தாய்க்கோழி. வாலின் அடிப்பக்கத்தை நக்கிக்கொண்டு இரங்கி இரங்கித் தன் கன்றுக்குப் பால் கொடுத்துக்கொண்டு நின்றது அந்தத் தாய்ப்பசு. இவ்வளவும் சுந்தரத்தைக் கவர்ந்தனவாயினும் நடையைத் தடைசெய்யவில்லை. ஆனால்..........

அவன் கவனத்தைக் கவர்ந்து நடையைத்தடை செய்து அம்மாவின் மடியை மறக்கச் செய்தது அந்தக் குரல்; பலவீனக்குரல்; பரிதாபக்குரல். அந்தக்குரல் உதவிசெய்யுங்கள் என எல்லோரையும்

அழைத்தது. ஆனால் அதை ஒருவரும் கேட்கவில்லை. சுந்தரம் தான் கேட்டான். பதிலுக்குக் குரல் கொடுத்தான்.

"மியாவ்..... மியாவ்..... மியாவ்..... மியாவ்..... மியாவ்.... மியாவ்..... மியாவ்.....”

வேறொன்றுமில்லை; ஒரு பூனைக்குட்டி வேலியோரத்தில் ஓலைத்தளிரின் மெல்லிய நிழலில் உயிரைக்காப்பாற்றிக்கொண்டு கிடந்தது. கத்திக்கத்தி அதன் உயிர்ச்சத்து வெளியேறிக்கொண்டிருந்தது. வயிற்றின் பக்கம் தசைகள் இரண்டும் ஒட்டி ஒன்றையொன்று தொடத் துடித்தன. அதற்குத் தாய் இல்லை; தந்தையை அறியாது. அது அநாதை. சிறிதுநேரம் இரண்டு உள்ளங்களும் மனத்தந்தி மூலம் பேசிக்கொண்டன. ஒன்றையொன்று புரிந்தும் கொண்டன. சுந்தரம் அதை மெல்லத் தூக்கி வயிற்றுடன் அணைத்துக்கொண்டு நடந்தான்.

"அம்மா, அம்மா இவனைப பாரேன்" என்று கூவிக்கொண்டு சுந்தரம் நேரே சமையற் கட்டிற்குள் நுழைந்தான். கைவேலயாய் இருந்த தாய் திரும்பிப்பார்த்தாள். குழந்தையும் பூனைக்குட்டியும் - இல்லை பூனைக்குட்டியா அது? தாய் முகத்தைச் சுழித்தாள்.

"சீ! இதென்னடா? தெருத்திண்ணையில் கிடக்கிற தெல்லாவற்றையும் விட்டுக்குள் கொண்டுவந்து..... கொண்டுபோ. தூரவீசு. அவலட்சணம்" என்று எரிந்து விழுந்தாள். சுந்தரத்தின் கண்கள் கலங்கின. பூனைக்குட்டியைத் தடவிக்கொடுத்தான்.

"இல்லையம்மா. இது என் தம்பி; செத்துப்போனானே ரவி, அவன்தான் இவனம்மா; பாவம்!"

இப்போது தாயின் கண் கலங்கியது. நாலு மாதத்திற்கு முன் இறந்துபோன ரவிச்சந்திரனை நினைத்துக்கொண்டது அவள் மனம். 'சுந்தரமும் ரவியும்' 'ரவியும் சுந்தரமும்' அசைபோட்டது மனது. தவித்தது தாயுள்ளம். எல்லைகளை முட்டி மோதிக்கொண்டு எழுந்தது தாயுள்ளத்தின் வேதனை. கண்ணீர்த்திரைக் கூடாகச் சுந்தரத்தையும் பூனைக்குட்டியையும் பார்த்தாள். அவலட்சணம் அழகாக மாறியது அந்தக் கரிய. ஒட்டியுலர்ந்த பூனைக்குட்டியில் தன் ரவியின் ஆத்மாவைக் கண்டாள். அத்தாய்: அநுதாபம் பிறந்தது. இப்போது அவளும் அந்தப் பூனைக்குட்டியை விரும்பினாள்.

சுந்தரம் பூனைக்குட்டியின் பட்டுடலை அன்பொழுகத் தடவிக்கொடுத்தான். அது அவன் சட்டைக்குள் முகத்தைப் பொத்திக்கொண்டது.

## 3

இப்போது தானும் அம்மாவின் மடிக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்ற உணர்ச்சி அவனுள் தென்றற் காற்றுப்போல் கிளுகிளுத்தது. கண் விழித்துப் பார்த்தான் மீண்டும் ஏமாற்றம்; எத்தனை ஏமாற்றங்களை அந்தப் பிஞ்சுமனம் அனுபவிக்க வேண்டுமோ!

"வாட"டில் நிலவிய பயங்கர அமைதி பூதமாய். பிசாசாய் அவனை வெருட்டியது. கண்ணை இறுகமூடிக்கொண்டான். கண்ணுள் பல காட்சிகள் தோன்றின.

ஒரு நாள் ...........

அவனும் ரவியும் சோந்து எடுத்த புகைப்படம் அது. தானும் ரவியும் சேர்ந்து படமெடுத்துத் தங்கள் சம்பந்தத்தை என்றும் அழியாது நினைவாக்கி விட வேண்டும் என்ற கனவு அன்றுதான் நனவாயிற்று.

அன்று அடுத்த வீட்டு மாமா அவனையும் ரவியையும் சேர்த்து படம் எடுத்தார். படம் கழுவி வருவதற்கிடையில் அவன் பட்டபாடு அப்பப்பா! ஒரு நாளைக்குப் பத்துத் தரம் அந்த மாமா வீட்டுக்குப் போய் விசாரிப்பான். அந்த மாமாவும் என்ன செய்வார்.! பாவம்! "ஸ்ருடியோ"க்காரன் இந்தக் குழந்தையின் தவிப்பையோ அது அழித்தழித்துத் தீட்டும் கற்பனையையோ உணர்ந்திருந்தால் .......... அந்த மாமாவைப் போல் உணர்ந்திருந்தால் ..........

மாமா அவன் மனத்தைக் குத்தாமல் கசக்காமல், மெதுவாகத் தடவி விட்டுக்கொண்டிருந்தார்.

அன்று அவன் கையிற் படம் கிடைத்துவிட்டது. என்ன ஆனந்தம்! உள்ள மகிழ்ச்சியைத் தேக்கி நிறுத்தும் வயதா அது? ஆடினான்; தெரிந்தவர் தெரியாதவர் எல்லோருக்கும் காட்டினான்; உற்று உற்றுப் பார்த்து ரசித்தான். "நான் கொஞ்சம் தலையை நிமிர்த்தியிருந்தால் நன்றாயிருக்குமே. சட்டையைச் சீராக்கி இழுத்து விட்டிருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும். ரவியைக் கொஞ்சம் நிமிர்த்திப்பிடித்திருந்தால் என்ன அழகாயிருக்கும்" என்று தன்னுள் தானே விமர்சனம் செய்தான்.

உண்மையிலேயே அந்தப்படம்... அந்தப்படம் அழகாகத்தான் அமைந்துவிட்டது. ரவி - ஒட்டியுலர்ந்த வயிறும் பஞ்சடைந்த கண்ணுமாய்க் கிடந்த ரவியா அது? புஷ்டித் தன்மைக்குக் கட்டியம் கூறிக்கொண்டு அந்தக் கறுப்புநிறத்தில் ஒளி நிழலுருவில், என்ணெய் வழுக்குப் படித்திருந்தது. சீவகளை அதன் முகத்தில் சுடர்விட்டது.

அவன், அதை இரண்டு கைகளாலும் அணைத்துக்கொண்டு நின்றான். அவன் முகத்தில் - இல்லை கண்ணில் - ஏதோ ஒரு உணர்ச்சி தொங்கிக்கிடந்தது. அது சகோதர பாவமா?..... தெய்வத்தின் அருட்பார்வையா?..... யாருக்குத் தெரியும்.

இன்னொருநாள் ............

சுந்தரம் பள்ளிக்கூடத்திலிருந்து வீடுவரும் நேரம் வழக்கம் போல் ரவி வழிமேல் விழி வைத்துக்காத்துக் கிடந்தான்.

தெருவழியியே போய்க் கொண்டிருந்த நாய் ஒன்று ரவியைக் கண்டுவிட்டது. சென்ம வைரி இரண்டும் சந்தித்து விட்டன. காரணமின்றியே போர் மூண்டுவிட்டது. நாயின் "கர்ர்....கர்ர்..." என்ற உறுமலுக்கு உர்ர்.... உர்ர்.... என்ற பதில் வந்தது ரவியிடமிருந்து. நாயின் மடிந்த செவிவிறைப்பாய் நிமிர்ந்து விட்டது. கண்ணில் சூடேறிவிட்டது. ரவியும் நாயின் சண்டித்தனத்தைக் கண்டு அசையாதவன் போல் நிமிர்ந்து இருந்தான். நாய் ஒவ்வொரு அடியாய் முன்னேறுகிறது. ரவி ஐந்தும் கெட்டுச் சுவரோடு சுவராய் ஒட்டிப்பின்னடையப் பார்க்கிறான். இனி நாய்க்கு முன்னேற இடமில்லை; ரவியின் மேல் பாயத்தான் இடமிருந்தது.

ரவிக்குப் புதுத்துணை வந்தது. சுந்தரம் வந்துவிட்டான். ரவி எழுந்தான்; நாய் ஒரு அடி பின்வாங்கியது. ரவி முன்னங்கால்களையும் பின்னங்கால்களையும் நீட்டி நெளித்தான்; நாய் முன்ஜாக்கிரதையாக இன்னொரு அடி பின்வாங்கியது. ரவி நாய் மேல் பாயவில்லை; சுந்தரத்திடம் தாவியது.

சுந்தரம் ரவியைத் தடவிக்கொடுத்துக்கொண்டு ஒரு குதி குதித்தான். திடுக்கிட்டு வாலைப்பின்னால் கால்களிற்கிடையில் செருகி உடம்மை வில்லாக்கிக்கொண்டு நாய் பறந்தோடியது. சுந்தரம் சிரித்தான். ரவியும் கண்களால் சிரித்தான்.

இன்னொரு நாள்.......

சுந்தரத்திற்கு அதிசயம் தாங்கமுடியவில்லை. ரவி எங்கே? ரவியை ஏன் வாசலில் காணவில்லை? என்ற கேள்விகள் தாம் அவன் மனதில் சுழன்றன. உள்ளே சென்றான். ரவி எங்கெல்லாம் இருக்குமோ அங்கெல்லாம் தேடினான்; காணவில்லை. குரல் கொடுத்தான்; பதிலில்லை. அம்மாவைக் கேட்டான்: அவள் சிரித்தாள். அப்பாவைக் கேட்டான்; கையை விரித்தார். அவன் மனம் கலங்கியது. கண்களில் நீர் துளிர்த்தது. குரல் கொடுத்துக்கொண்டே சமையல் அறைக்குச் சென்றான்.

ரவி கள்ளத்தனமாய்ப் பால் குடித்துக்கொண்டிருந்தான். சுந்தரம் ஆத்திரம் கொண்டான். ரவி களவாகப் பால் குடிக்க வேண்டிய தேவையில்லையே. பின் ஏன்? பிறவிக்குணமோ? பால் கெட்டுவிட்டதே என்பதற்காக அவன் வருந்தவில்லை! அம்மா கோவிப்பாளே என்பதற்காகவும் அவன் வருந்தவில்லை. ரவி களவெடுக்கிறானே! என்ற எண்ணமே அவனை வருத்தியது. கையில் அகப்பட்ட அகப்பைக் காம்பால் நாலைந்து அடி கொடுத்தான். ரவி கத்திக்கொண்டு ஓடினான். சுந்தரத்தால் தாங்கமுடியவில்லை. கண்ணைப்பொத்திக்கொண்டு வெம்பி வெம்பி அழுதான்.

சுந்தரத்தின் கண்ணின் கடையிலிருந்து கண்ணீர் வழிந்து, வந்த வழியைச் சூடாக்கி, காதைச் சுட்டது. கண் திறந்து பார்த்தான். அவனுக்கு வைக்கப்பட்டிருந்த பாலை ஏதோ ஒரு வழியாக அந்த வாட்டுக்குள் நுழைந்த கள்ளப்பூனை நக்கி நக்கி சுவை பார்த்துக்கொண்டிருந்தது. சுந்தரம் சிரித்தான். அது குடிக்கட்டும் நன்றாகக் குடிக்கட்டும். அதற்கு இடைஞ்சல் வேண்டாம், என்றோ என்னவோ அவன் கண்ணைமூடிக்கொண்டான்.

## 4

இரவு காலத்தில் சுந்தரம் ரவியை அழைப்பதில்லை. அழைத்தாலும் அது கண்ணிற் படாது. கண்ணில் பட்டாலும் வராது. இரவில் ரவிக்கு எலிகளுடன் விளையாடுவதிலும் அவைகளில் இரண்டொன்றைப் பதம்பார்ப்பதிலும் பரமானந்தம். அதனால் சுந்தரம் ரவியை அதன்போக்கிலே போகவிட்டிருந்தான்.

ஆனால் அன்று இரவு ........

ரவி சுந்தரத்திற்குப் பக்கத்தில் படுத்துக்கொண்டது. அதன் பஞ்சணையுடலின் ஸ்பரிசம். அவனுக்கு வெகு இதமாய் இருந்தது. அணைத்துக்கொண்டான் தாய் சேயை அணைப்பதுபோல. உள்ளம் நிறைந்த அன்பைத் தடவித்தடவி ரவிக்கு ஆவாகனப்படுத்திக்கொண்டே தூங்கிவிட்டான்.

பொழுது புலர்ந்தது.

சுந்தரம் எழுந்தான். ரவி எழுந்திருக்கவில்லை. எழுப்பினான்; கண்ணைத் திறந்து பார்த்தது. ஆனால் எழும்பவில்லை. அணைத்துத் தூக்கினான். அவன் மனத்துள் வேதனைகள் அத்தனையும் நுழைந்து கூத்திட்டன. அவன் துடித்தான்.

ரவியின் முகம் வீங்கிக்கிடந்தது. கண்ணில் காணும் சிவகளை குடிபோய்விட்டது. மிருதுரோமங்கள் குத்திட்டு நின்றன. அவற்றின் ஊடாகத் தோலின் நெளிவு சுளிவுகள் அத்தனையும் தெரிந்தன.

சுந்தரம் பயந்தே போனான்.

"அம்மா அம்மா, ரவிக்கு என்னம்மா? ரவியின் முகம் ஏனம்மா வீங்கிக்கிடக்கிறது" என்று பதறினான். உள்ளத்து அன்பில் பாசியாய் படர்ந்த வேதனை முழுவதும் அதில் கொட்டிக்கிடந்தது.

தாய் மகனையும் மகனின் தோழனையும் மாறி மாறிப்பார்த்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"இதுதானா? நானும் என்னவோ ஏதோ என்று நினைத்துவிட்டேன் எல்லாம் சரியாய் விடும் நாளைக்கு"

அவள் பதில் அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை அப்பாவிடம் ஓடினான். "அப்பா அப்பா. ரவிக்கு என்னப்பா? இவனைப் பாரப்பா...". என்றான் தேம்பிக்கொண்டு.

அப்பா அனுபவஸ்தர். அந்தப்பொல்லாத "அரக்கன்" இந்த வீட்டிற்குமா வரவேண்டும்? அவர் திடுக்கிட்டார். அவர் முகம் கறுத்தது. ரவிக்கு நோய்; அதுவும் பிளேக் ...... தன் மனத்தை யாரோ மாபெரும் சம்மட்டியால் தகர்ப்பதுபோல் உணர்ந்தார். அந்த எண்ணம் அணுவாய்த்தோன்றி. அண்டத்தளவாய் வளர்ந்து ஒவ்வொரு இரத்தத்துளியையும் வறளச்செய்தது. அவரால் தாங்கமுடியவில்லை. அது ரவிமேல் உள்ள அன்பால் அன்று; மகன் மேல் வைத்த பாசத்தால்.......

அவர் சமயோசித புத்தி உள்ளவர். குழந்தை உள்ளத்தை விளங்கிக்கொண்டவர். மிகவும் ஆறுதலாய் "இதுவா? எலிக்கும் ரவிக்கும் சண்டை வந்திருக்கும். எலி பிறாண்டி இருக்கும். அதனால் தான். இதொன்றும் செய்யாது. நீ பள்ளிக்கூடம் போ. நான் ரவியை டாக்டரிடம் காட்டிவருகிறேன்" என்றார் அப்பா.

"நானும் வாறேன் அப்பா" அவன் சிணுங்கினான்.

"சீ, கூடாது. பள்ளிக்கூடம் போகவேண்டும். அதுவும் இன்றைக்குப் பரீட்சை."

வார்த்தைக்கு வார்த்தை கண்டிப்புத் தெறித்தது.

"இல்லையப்பா நானும் ........"

"ஏண்டா குஞ்சு, எனக்கு ரவிமேல் ஆசை இல்லையா? நான் காட்டிவாறேன்."

அப்பாவின் கண்ணின் ஓரத்தில் கண்ணீர் துளிர்த்திருந்தது. அரைமனதுடன் புத்தகப்பையை தூக்கிக்கொண்டு நடந்தான் சுந்தரம். அப்பா ரவியை எடுத்துக்கொண்டு நடந்தார்.

❖❖❖

சுந்தரம் பாதிவழியில் நின்றுவிட்டான். பள்ளிக்கூடப்பரீட்சை, அப்பாவின் கண்டிப்பு எல்லாவற்றையும் மறந்துவிட்டான். அந்தப் பிஞ்சு மனதை ஆக்கிரமித்திருந்த ஒரே ஒரு வஸ்து - ரவி. ரவியின் உப்பிய முகம், குத்திட்ட மயிர். ஒளியிழந்த கண் எல்லாம் அவன் மனக்கண்ணில் தெரிந்தன. மேலே செல்ல கால் மறுத்துவிட்டது. திரும்பினான். அவன் அப்பா எதிர்த்திசையாக நடந்துகொண்டிருந்தார். அவனும் அப்பாவைப் பின்தொடர்ந்தான்.

அப்பா டாக்டர் வீட்டுக்குப் போகவில்லை வயல்வெளியூடாக நடந்துகொண்டிருந்தார். அந்த வயல்வெளியின் ஓரத்தில் அந்தச் சிறுகாடு தொடங்கியது. அப்பா நேரே அந்தக்காட்டுக்குள் சென்றார். சுந்தரம் ஒடிப்போய் மறைந்துகொண்டான். அவன் மனதில் அவனுக்கே தெரியாத ஒரு பயங்கரம் பயமுறுத்தியது. ஏதோ ஒரு கெடுதியின் முன்னறிவிப்பாய். அடுத்த கணம் டுமில் என்றொரு வெடிச்சத்தம். “ஐயோ, ரவி” என்றொரு அலறல். சிந்தனையே உருவான அப்பாவுக்கு அந்தச்சத்தம் எங்கே கேட்கப்போகிறது? அவர் சிறு கைத்துப்பாக்கியுடன் நடந்தார்.

ரவி சுடப்பட்டுக்கிடந்தான். அவன் பட்டுடலைக் குண்டு துளைத்திருந்தது. குண்டுதுளைத்து வாய் வழியாக இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. சுந்தரத்தின் இதயத்திலும் இரத்தம் கொட்டியது தெருவில் கிடந்த பூனைக்குட்டியைக் கண்டெடுத்து, அதன் மீது பிஞ்சு மனத்து விளைந்த அன்பு அத்தனையையும் கொட்டியிருந்தான். பூனைக்குட்டி இல்லை - ரவி - அது அவன் பிள்ளை; தோழன். அவன் இப்போது மண்ணோடு மண்ணாய் மாண்டு கிடக்கிறான். மழலை மொழி பேசி தளிர் நடை பயின்று வரும் ஒரே ஒரு மகனை இழந்த தாய் அந்த மகனின் ஒவ்வொரு சின்னச் சேட்டையையும் நினைந்து மனதைச் சாம்பராக்குகிறாள். அந்த நிலையில் தான் சுந்தரம் இருந்தான். அழுதான்;. குழறினான். ரவி ..... ரவி ...... என் ரவி எங்கே போனாய்? என்று கத்தினான். அணைத்தான்; முத்தமிட்டான்; கட்டிப்புரண்டான்.

புரண்டான் - ஸ்பிறிங் கட்டில் கிரீச்சிட்டது.

“அம்மா அம்மா, ரவி எங்கேயம்மா?” பதில் சொல்லும் அந்த அம்மா வீட்டில், தான் பெற்ற ஒரே ஒரு மகனை நினைந்து நெஞ்சை வேதனைத்தீயில் இட்டு வேகவைத்துக் கொண்டிருந்தாள்.

❖❖❖

# 11. காலத்தின் தண்டனை

அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த குழந்தை எதையோ நினைத்துக்கொண்டு கண்விழித்துப் பார்த்தது. சுவரோடு சுவராயச் சாய்ந்துகொண்டு வேதனை மொய்ப்பைச் சிந்தனையோட்டத்தினாலே பிளந்து போராடிக்கொண்டிருந்த தந்தை தான் அதன் கண்ணிற் பட்டது. தன் மனதிலே நிறைந்த இட்டுமுட்டை. பலநாள் ஆசையை வெளிப்படுத்த அதுதான் தருணம் என அந்தக் குழந்தையின் இதயம் அடித்துக்கொண்டது.

"அப்பா"

"........"

"அப்பா.... ஆ"

"என்னடா மோனை"

குழந்தையின் 'பரட்டை' வாய்ந்த, பல நாள் எண்ணெய் காணாத தலையை அந்தத் தந்தையின் அன்புக்கரங்கள் தடவிக்கொடுத்தன. குழந்தையின் வேண்டுகோளை கேட்பதற்கு அவன் மனம் அலைந்துதவித்தது. பலவீனத்தால் சோர்ந்துபோன கண்களை மூடிக்கொண்ட பாலன் மீண்டும் கண்களைத் திறந்துகேட்டான்.

"அப்பா....ங்ங்.......ங்.....ங்ங்"

"என்னடா செல்லம், என்னவேணும் சொல்லேன"

"ங்....ங்......க......ஞ்....சி"

"எங்கட தம்பி நல்ல பிள்ளை; கெட்டிக்காரன்: சொல்வழி

கேட்கும். நான்தான் என்ன செய்வேன் குஞ்சு. அந்த டாக்குத்தர் இன்றைக்குக் கஞ்சிகொடுக்க வேண்டாமாமே"

குழந்தையின் இஷ்டம் நிறைவேறவில்லை; ஏமாற்றமடைந்து விட்டது. உடனே குழந்தை உள்ளம் அழுகை – சிணுங்கல் - இவைகளை வரவழைத்துக்கொண்டு போராடக் கிளம்பியது.

"ம்.....ம்....ம் எனக்குத் தெரியாது பசிக்குது........கஞ்சி"

"என்ரை செல்லக்கண்டு; சர்க்கரைக்கட்டி! இன்றைக்கு வேண்டாமடா நாளைக்குத் தாறேன்"

"ம்....ம்ம் இன்றைக்குத்தான் வேணும்"

"உந்த வீட்டு மணி ஒரு கூடாத பெடியன். சொல்வழி கேளாதவன். எங்கடை ராசா நல்ல பிள்ளை. சொல்வழி கேட்டு நாளைக்குத்தான் கஞ்சி குடிக்கும்."

பிறரிலும் பார்க்கத் தன்னை 'நல்ல பிள்ளை' என்று தந்தை புகழ்ந்தது பொருமிக் கொண்டிருந்த அவனுக்குச் சிறிது சாந்தியளித்தது; அவனுடைய பிடிவாதமுஞ் சிறிது தளர்ந்தது. என்றாலும் கஞ்சி ஆசையின் முனைப்பு முற்றாக நீங்கிவிடவில்லை.

"அப்படியானால் நாளை விடியத் தரவேணும்."

"அதற்கென்ன ராசா நன்றாகத் தருகிறேன்."

ஒரு விதமாகத் தந்தைக்கும் தனயனுக்குமிடையே நடந்த வாதம் முடிந்தது. சிறிது நேரஞ்செல்ல ஒன்றையும் அறியாதது போலக் குழந்தை சோர்வுற்று அயர்ந்துவிட்டது.

## 2

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த தன் மகனின் பால் வடியுங் குஞ்சு முகத்தை, கள்ளங்கபடமற்ற உள்ளப் பிரதிபலிப்பை நோக்கிக் கொண்டு நின்றான் சுந்தரம். உள்ளே பொங்கிக் கொண்டிருந்த மனவேதனையின் சின்னமாக அவன் கண்கள் கலங்கின. தனக்கும் தன் மகனுக்குமிடையே நடந்த கஞ்சிப் போராட்டத்தைச் சர்ச்சை செய்து கொண்டிருந்தது அவன் மனம்.

என்ன என்னுடைய செல்லம். தன் பசித் துடிப்பினால் ஒரு சொட்டுக் கஞ்சிதானே கேட்டது. ஆம் அந்த டாக்குத்தரும் இன்றுதான் பத்தியம் கொடுக்கும்படி சொன்னவர். ஆனால் நானோ பாவி...... என்னுடைய இயலாமையால், ஒரு பிடி அரிசி கிடைக்காமையால் தவணையிட்டு விட்டேன். எவ்வளவு கல்நெஞ்சம் படைத்தவன் நான். ஐயோ!..... நாளைக் காலை வரையில் அந்த இளஞ்சீவன் பசியால்

துடிக்கப்போகிறதே. பலவீனமான அதன் உடம்பைப் பசியுஞ் சோர்வும் சேர்ந்து வாட்டினால்....ஆ! இதுவுமொரு கொடுவாழ்வு தானோ! அவனது மூளையைக் குழப்பிவிட்டது இந்தச் சிந்தனை. உணர்வற்ற ஜடம்போல அவன் அசைவற்றிருந்தான். இடையிடையே சர்ப்பச் சீறல் போன்ற பெருமூச்சுக்கள்.

பாவம்! அவன்தான் என்ன செய்வான். காலம் ஆங்காங்கே நடித்துவிடும் அரங்க நாடகங்கள் தானே இவை.

## 3

அன்று சனிக்கிழமை அந்தக் கிழமையிலே அவனுக்குக் கிடைக்கும் அரிசிப்பங்கும் 5/8 கொத்தரிசியும் - இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது வழங்கப்பட்ட பங்கீட்டு அரிசி - தீர்ந்து விட்டது. ஒரு அரிசியின் சிதரைக்கூட அவன் வீட்டிலே காணமுடியாது. இந்த நிலையில் எதிர்பாராத விதமாக டாக்குத்தரும் "பத்தியம்" கொடுக்கச் சொல்லிவிட்டார். குழந்தையுமோ அன்றுதான் கஞ்சியும் கேட்கிறது. இந்த நிலைமையை அவன் எவ்விதஞ் சமாளிக்க முடியும்? யாரிடமேனும் கடனாக அரிசி கேட்கலாமென்றால் யாரிடம் கேட்பது? அவனைப் போன்ற எல்லோரும் அடுத்த வாரத்தின் தொடக்கத்தை எதிர்நோக்கும்போது.

என்ன செய்தும் நாளைக் காலையிலே அந்த இளஞ்சீவனின் உயிர்ப்பிச்சையாகக் கஞ்சி வார்த்துத்தான் ஆகவேண்டும். ஆனால் அரிசி - அது எங்கே கிடைக்கும்? ஆம் அவன் களவெடுத்தோ பொய் சொல்லியோ ஒருபிடி அரிசி சம்பாதித்துத்தான் ஆகவேண்டும். இது விஷயமாக அந்தத் தந்தையின் பாசம் எண்ணற்ற கனவுச் சுழல்களை அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

அடுத்த கணம் சுந்தரம் தன்னைத் தானே திடப்படுத்திக்கொண்டு வெளிக்கிளம்பினான். காலக் குறும்பைத் தகர்த்துத் தன் மைந்தன் மீதுள்ள அன்பின் உறைப்பைக் காட்டுவதற்காக.

## 4

அந்த ஊரிலே நாலுபேர் மதிக்கக்கூடிய ஒரு பெரும் புள்ளியாக விளங்கினார் முத்துச்சாமி முதலியார். பரந்த நிலப்பரப்பின் சொந்தக்காரர் அவர். எத்தனையோ பனை வளவுகள், தென்னந்தோட்டங்கள், வயல்கள் இவையெல்லாம் அவரது பாதுகாப்பிலே கிடந்தன. இவைகளைக் குத்தகைக்காரர்கள் செய்து வரும்படியைக்

கொடுத்து வந்தார்கள். பரந்த காணிகளின் சாட்டிலே பிறர் உழைப்பின் சாரத்தை உறிஞ்சிச் சுகசீவனஞ் செய்து வந்தார் முதலியார்.

என்றாலும் அவரின் சீவிய தசை வரையுந்தான் அவரின் ஆஸ்திகளெல்லாம் அவருக்குச் சொந்தம். பிற்காலத்திலே அவைகளை அனுபவிப்பதற்காக ஒரு பிள்ளையாவது பகவான் அவருக்குக் கொடுக்கவில்லை. அவர்கள் மலடர். உலக சம்பிரதாயப்படி மலடர்களுக்கு இருக்க வேண்டிய லோப குணமும் அவர்களிடம் அதிகமாக இருந்தது. ஒரு செம்புக் காசுகூட வழுவ விடமாட்டார்கள். ஏன்? எச்சிற்கையாற் காகந் துரத்தாத பேர்வழிகள், அவ்வளவு கருமிகள்.

இந்த இரண்டாவது உலக யுத்தம் வரும்போதே முதலியார் அவர்களின் வெள்ளி திசையையும் இழுத்து வந்து விட்டது போலும்! மளமள வென்று நெல்லின் விலையேறவே அவர்கையிலும் பண நோட்டுக்கள் கற்றை கற்றையாக வந்து குவிந்தன - அந்த வருட 'வெட்டு மிதிப்பு' முடிந்தவுடனே 'கள்ள விலை'யில் நெல் வாங்குவோர் அவரைச் சுற்றி வட்டமிடத் தொடங்கினர். முதலியாரும் என்ன செய்வார்! கள்ளவிலைக்கு நெல் முழுவதையும் விற்றுவிட்டார், தன்னுடைய சீவியத்துக்கு வைத்து மிகுதியை.

5

**தை**காசி மாதத்திலே ஒரு சனிக்கிழமை இரவு பத்து மணி சமயம்; முதலியார் சாப்பிட்டு விட்டுப்படுக்கைக்குப் போகும் நேரம். "ஐயா. ஐயா" என்று வாசலிலே யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. முதலியார் திடுக்கிட்டுவிட்டார். இந்த அகால வேளையில் யார்? ஒரு வேளை கள்ளனோ? என்று அவர் மனம் அடித்துக்கொண்டது. ஆனால் அது ஒரு பழகிய குரல் தான் என்று அவர் செவிகள் சொல்லிக்கொண்டன.

"யாரது" என்றார் முதலியார்.

"நான் தான் ஐயா, தெரியவில்லையா" என்றது அந்த உருவம்.

"யார் சுந்தரமா?"

"ஆம் ஐயா ஆம்"

"என்னப்பா இந்த அகால வேளையில் ....."

"ஒன்றுமில்லை ஒரு சிறு விசேஷம்"

"அப்படியென்ன?"

"ஐயா, என்னுடைய குழந்தைக்குச் சில நாட்களாகக் காய்ச்சல் ....."

"அடடா, அப்படியா, இப்போது எப்படி?"

" ம்.....ம;......"

" அவன் கஞ்சி கேட்கிறான் "

" தாராளமாகக் கொடுக்கிறது தானே"

" ஆனால் ஒருபிடி அரிசியுமில்லையே ஐயா"

" ம்...ம்......ம்"

" அதுதான் ஒரு சிறங்கை அரிசியாவது........"

" அதையேன் கேட்கிறாய்; இன்று நாங்களும் கடன் வாங்கித் தானே சமைத்தோம்."

" என்னய்யா. நீங்களே இப்படிச் சொன்னால்?"

" ஆமாம் 'ஊரோச்சம் வீடு பட்டினி தான் "

" என்ன செய்தாவது ஒரு பிடி அரிசி தாருங்கள், அந்தப் பிள்ளையின் சீவனைக் காப்பாற்ற"

"ஒருபிடி அரியுமில்லை. இரண்டுபிடி அரிசியுமில்லையப்பா. வேறெங்காவது போய்ப்பார் "

"ஐயோ! நான் என்ன செய்ய, எங்கே போக? உங்களைக் கும்பிடுகின்றேன். அரைக்கொத்து நெல்லாவது தாருங்கோ. பிறகு குத்தகை நெல்லில் அரைப்பறையை எடுத்துக்கொள்ளுங்கள். "

"என்ன சொன்னால் கேட்கிறாயில்லையே! எங்களிடம் நெல்லுமில்லை; புல்லுமில்லை. போ அப்பா....... போ....போ"

சீ! என்ன உலகம்! அந்தத் தந்தை தன் மகன் மீதுள்ள பாசப்பிணைப்பால் மீண்டும் மீண்டும் இரக்கிறான். அவன் இதயம் அன்புக் குரலால் ஓலமிட்டு ஒலிக்கிறது. ஆனால் அந்த இதயத்துடிப்பை அந்த மலட்டுள்ளம் கேட்குமா? கேட்டால் இந்த வாதமேன்?

பாசப் பிரவாகம் வற்றி வரண்ட உள்ளம் தானே இந்த மலட்டுள்ளம். ஏமாற்றமும் சோகமுங்கலந்து உருவான சுந்தரம் தன்னினை வற்றுச் சென்று கொண்டிருந்தான். புத்திர வாஞ்சையின் உச்சஸ்தாயியில் எத்தனை சோக கீதங்களை மீட்டியதோ அவன் மனம்?

## 6

காலவேகத்தோடு சம்பவங்களின் கதியும் பின்னப்பட்டு ஓடுவதுதான் இயற்கையோ? மேற்படி சம்பவங்கள் நிகழ்ந்து அநேக நாட்களின் பின் ஒரு நாட் காலை, சுந்தரம் கூலிக்கு உழுதுவிட்டு முதலியார் வீட்டைக் கடக்குஞ் சமயம் எதிர்பாராத விதமாக முதலியாரின் மனைவி ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தாள். சுந்தரம் திகைத்து விட்டான். என்ன

முதலியாரின் வீட்டிலும் சோகத்தின் குறியா? அவனால் நம்பவே முடியவில்லை. பண்பட்ட உள்ளத்திலே இரக்கந் தலை நிமிர்ந்த உடனே அவன் முதலியார் வீட்டுள் நுழைந்தான். ஆ! அவன் கண்ட காட்சி என்ன?

முத்துச்சாமி முதலியார் தரையிலே கிடந்து அங்குமிங்குமாகப் புரளுகிறார். அவர் கண்கள் ஓராறு கண்ணீரை ஒருமித்து வடிக்கின்றன. அவர் முகம் அழுதழுது வீங்கியிருந்தது. இன்னது செய்வதென்று அறியாத மனநிலைக்கு அவர் ஒரு உதாரண புருஷனாகக் கிடந்தார். சுந்தரத்தைக் கண்டதுமே அவருடைய துயரம் எல்லையின்றிப் பெருக ஆரம்பித்தது. அதன் வேகந் தணியும் வரையும் முதலியாரால் ஒன்றுஞ் செய்யமுடியவில்லை. ஆனால் விக்கல்களினிடையே, என்ன செய்ய? என்ன செய்ய? என்ற வார்த்தைகள் மாத்திரம் புறப்பட்டன.

சுந்தரத்திற்கு விஷயமொன்றும் விளங்கவில்லை. அவர்களுடைய பரிதாபகரமான நிலையைப் பார்க்க அவனுக்கும் அழுகைதான் வந்தது. அவர்களது வேதனையமளி ஓய்ந்த நிலையில் தான் "என்ன சங்கதி?" என்று கேட்டான் சுந்தரம்.

"என்னவா? அதையேன் கேட்கிறாய் நாங்கள் படும்பாட்டை"

"என்ன அப்படிப் பிரமாதமாய் வந்தது? சொன்னால் தானே"

"ஐயோ! ஒரு மணி நெல்லுமில்லாமல்..."

"நெல்லா எங்கே?"

"ஆ! அரசாங்கம் வாய்க்கரிசிக்கு எடுத்துக்கொண்டதே..... எங்கே போவன்....ஐயோ....ஆ.....ஆ!

இப்பொழுதுதான் சுந்தரத்திற்கு விஷயம் விளங்கியது. ஒரு பரப்புக்கு 3/4 பறை நெல் வீதம் அரசாங்கம் திறை வாங்கியது. அதிலே இவர் சீவியத்துக்கு வைத்திருந்த அத்தனை நெல்லும் அடிபட்டுப்போய்விட்டது. முதலியார் முன்பு நடத்திய அவ்வளவு நாடகங்களுக்கும் பாடங்கற்பித்தது - இல்லை, பழிவாங்கி விட்டது. அரசாங்கம்! ஆம் இதுதான் காலம் இட்டமுதற் தண்டனை! ஆனால் சுந்தரத்தின் இதயத்தில் அத்தகைய கொடூரவுணர்வொன்றும் தலைகாட்டவில்லை. இரக்கந்தான் பொங்கியது. ஆனால், காலம் ஓடியது. முதலியாருக்கு இடும் கடைசித்தண்டனை ஒன்றை நோக்கிக்கொண்டு.

## 7

அன்று செவ்வாய்க்கிழமை. அந்த ஊரின் 'சங்கக்கடை' வாசலிலே ஏகப்பட்ட கூட்டம். ஆண், பெண் என்ற பேதமேயில்லாமல் நான் முந்தி நீ முந்தி என்று நெருக்கப்படும் பரிமளிப்பான காட்சி! இந்த

மனித ஜென்மத்தில் அந்தக் கோலாகலக் காட்சியைக் காணாத கண்ணுமொரு கண்ணோ!

அந்தக் கூட்டத்தோடு கூட்டமாகச் சுந்தரமும் அவன் மகன் கிருஷ்ணனும் நிற்கிறார்கள். ஒரு பெட்டி ஒரு குட்டான். ஒரு 'உமல்' இவைகளின சகிதமாக. கிருஷ்ணனுக்கு இந்த அரிசி வேட்டையில் பங்குபற்ற மனமில்லை. தூரத்திலே விளையாடிய சிறுவர்களுடன் தானும் விளையாடினாலென்ன என்ற போராட்டத்திற்றான் அவன் மனம் சென்றது.

என்ன ஆச்சரியம்! இரண்டு 'உமல்' களைத் தாங்கிய வண்ணம் ஸ்ரீமுத்துசாமி முதலியாரும் நிற்கிறாரே!

சிறிது நேரஞ்சென்றது. அமளியெல்லாம் ஓய்ந்து கடைவாசலுக்கும் காற்றுப் பிடித்தது. அப்பொழுதுதான் முத்துச்சாமி முதலியார் மூன்று றாத்தல் மா வாங்குகிறார். அரிசி கூப்பனில் அரைவாசியை அரசாங்கம் கிழித்து விட்டமையால். கிருஷ்ணன் ஒரு கொத்தரிசி வாங்குகிறான். அந்த அரிசியை முதலியாரின் திருட்டுக் கண்கள் முழிசி முழிசிப் பார்க்கின்றன. தனக்கு அரிசி இல்லையே என்ற அங்கலாய்ப்பு அவருக்கு!

பாவம்! முதலியாருக்குக் காலம் இட்ட கடைசித் தண்டனை இதுதானோ!

❖ ❖ ❖

# 12. தகிப்பு

ஊமைக்காயமாகி வெளிப்பார்வைக்குப்படாது, கொது கொதுத்துக் கொதிக்கும் என் மனத்தை விண்டு சொன்னாற் கேட்பவர்கள் சிரிப்பார்கள். "ஓ! இதுதானா? இதற்குத்தானா இவ்வளவு துடிப்பு? ஐயோ, பைத்தியமே உன் தொழிலுக்கு இவை எல்லாம் வெகுசாதாரணம்' என்பார்கள். கேலியும் ஏளனமும் தெறிக்கப் பிறர் சிரித்தும் பேசியும் பலன்கிடைத்துவிடுமோ? விதைத்தவன் அறுக்கவேண்டும். அதுதான் விதி.

எதை விதைத்தேன்? எப்படி அறுப்பது?

நல்லதை விதைத்தால் அதைப் பயிராக்கி ஒன்று, பத்தும் நூறுமாகப் பலன் கண்டு அறுக்கலாம்? தீயதை விதைத்துவிட்டு அதைப்பயிராக்கி வளர்த்து ஒன்று. பத்தும் இருபதுமாய் பெருகி அறுத்துச் சுமப்பதென்றால் ............ அப்பப்பா, அதை நினைக்க நினைக்க நெஞ்சின் உயிர்ப்பகுதிகளெல்லாம் துடிக்கின்றனவே; விம்மிப்புடைத்து வெடித்துவிடும் போலத் தோன்றுகின்றனவே. ஏன்? விதைத்த தீயதை ஒன்றுவிடாமற் பொறுக்கி எடுத்துக்கொண்டால்: அல்லது முளையிலேயே அழித்துவிட்டால் - இல்லை இல்லை, அழிக்க முயற்சி செய்தால் அதுவே எனக்கு ஆன்ம திருத்தி. அழித்தே விடுவேன் என்று வீம்புபேசவும் நான் யார்?

மனதின் கோணற் போக்குகள் மாத்திரமன்றி, மனத்தின் ஜீவத்துடிப்புக்கூட இருளின் தனிமையிலே அவையவை பிறந்த பிறந்த

கோலமாய் எழுகின்றன. அந்த வேளையிலே போலிக் கௌரவம், பொய்யான தகுதி. தன்னைத்தானே ஏமாற்றும் கற்பனை என்னும் வேடங்களெல்லாம் கழன்றுவிட, சுயமனத்தின் சுயரூபங்களெல்லாம் வெகு தெளிவாகத் தெரிகின்றன. அந்த இரவின் தனிமையிலே எனக்கு இந்த வரஞ் சித்தித்தது.

அன்று காலையில் நிகழ்ந்த அந்தச் சம்பவத்திற்குப் பகல் முழுதும் எனக்குத் தெரிந்தும் தெரியாமலும் என்னுள் விசாரணை நடந்திருக்கிறது. மனம் வாதியாகவும் பிரதிவாதியாகவும் நின்று வாதிட்டிருக்கிறது. ஆனால் தீர்ப்பு இருளின் தனிமையிலே. அந்த ஜீவத்துடிப்பின் ஒரு அலையிலே பிறந்தது: மின்வெட்டு நேரத்திலே தோன்றியது.

'நீ செய்தது பிழை; பொறுக்கி எடு அல்லது முளையிலேயே அழித்துவிடு அல்லது அழிக்கமுயல்'

சகிக்கமுடியாத தூய்மை பொலியும் அந்தத் தீர்ப்புக்குத் தலை வணங்கினேன்.

சிறிதுந் தாமதஞ் செய்யாமல் அவனைக் காண்பதற்காக எழுந்துநடந்தேன்.

அவன் - அவனைப்பற்றிய நினைவுமுள், 'சுரீர்' என என்னுட் பாய்ந்து வலித்தது. அவன் என் மாணாக்கன். ஆறாம் வகுப்பிலுள்ள முப்பத்தொரு தனித்துவமான பிஞ்சு மனங்களில் ஒன்று.

அவன் பெயர் சோதிநாதன்.

என்னையே உள்நோக்கி விமரிசித்துப் பார்க்கும் இப்போதுதான், எனக்கு அவன்மீது ஒரு நிரந்தர வெறுப்பு ஏன் கவிந்தது என்று உணர முடிகிறது.

அவன் ஓர் அவலட்சணம். கட்குழியினுள் ஆழ்ந்த சின்னஞ்சிறிய கண்கள்; சிறிய மூக்கு; முன்னே புடைத்து நிற்கும் வாய்; இல்லையென்னும்படியான நாடி; கரிய நிறம் - இவையெல்லாவற்றையும் சேர்த்து மாணவர் அவனைச் 'சிம்பன்சி' ஆக்கிவிட்டனர். பிஞ்சு மனங்களின் உள் நுழைந்து அவற்றின் குணக்கோலங்களை மிக்க பரிவோடும் அனுதாபத்தோடும் அவதானிக்கவேண்டிய தொழில் என்னது. இந்தத் தொழில் முறையிலே தோல்விகண்டவன் நான் என்பதை இப்போதுதான் உணர முடிகிறது. நான் ஆசிரியனா அல்லது மற்றவர்களைப்போல் வெளியுருவத்தைக்கொண்டு விருப்பு வெறுப்படையும் சாதாரண மனிதனா? நிச்சயமாக நான் சாதாரணத்திலும் ஒருபடி தாழ்ந்தவன். இல்லாவிட்டால் என்னையறியாமலே நான் அவன்மீது எவ்வாறு பரிபூரண வெறுப்புக் கொள்ள முடியும்?

அன்று காலையில் என் அப்பாவின் கடிதம் வந்தது.

அப்பா – அவர் என்னை மன்னிப்பாராக – அறுபது வயது அனுபவத் தடிப்பினாலும் 'நான்' சாகாத மனிதர் அவர். ஊரிலுள்ள காணிகளின் எல்லைகளெல்லாம் தானறியாக் காலத்திலேயே பிழையாகிவிட்டன என்ற பிரமை அவரைப் பற்றிக்கொண்டதனால், அவர் கோடேறி வழக்குரைத்துப் பணங் கரைத்தார். அது அவருக்கு நல்ல பொழுதுபோக்கு; எனக்கு வேதனை. இப்பொழுதும் ஏதோ ஒரு வழக்குக்கு அவசியம் பணம் வேண்டுமாம். நான் தாமதமின்றி அனுப்பவேண்டுமாம்.

கடிதத்தைப் படித்ததும் மனம் தீப்பிடித்து எரியத்தொடங்கியது. பணம் ஆலமரத்துச சருகல்லவே; பொறுக்கி எடுத்து அனுப்புவதற்கு. அது உழைப்பால் வருவது. யாரோடு நோவது? அங்கே அந்தப் பூனைக்கு விளையாட்டு; இங்கே இந்தச் சுண்டெலிக்கு உயிர் போகிறது.

மனம் தீப்பிடித்து எரிந்து அணைந்துபோனாலும் அந்தத் தீயின் கதகதப்புத் தணியவில்லை. அந்தச் சமயத்திலேதான் வகுப்பில் நுழைந்தேன். அப்போதுதான் 'என்னை மன்னித்துக்கொள்ளுங்கோ' என்றான். வெள்ளம் பள்ளத்தை நாடி ஓடுவதுபோலச் செல்லா இடத்துச்சினம் செல்லிடத்தை நாடி ஓடுமாம். இப்போது செல்லிடமாய்ச் சோதிநாதன் நின்றான். நீறுபூத்த தணலாய் முன்னமே கனிந்திருந்த வெறுப்பைச் சினம் ஊதிவிட்டது. இந்நிலையில் நான் அவனைப் பார்த்தேன்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க அவன் நின்றான். எண்ணெயும் வியர்வையும் ஐக்கியப்பட்டுப் பிசுக்கேறிய முகம்; அதிலே தோன்றும் ஒருவகை அநாகரிகப் பளபளப்பு; தோட்பட்டையிற் கிழிந்துபோன அழுக்குச் சட்டை; ஒரு காலத்தில் நீல நிறமாய்ப் பிறந்து இப்போது வெளிறியும் வெளிறாமலும் விசித்திர வண்ணம் காட்டும்காற்சட்டை; முழங்கால் வரை படிந்த தெருப்புழுதி, அவனைக் கண்ட என் மனம் அருவருப்பை உமிழ்ந்தது.

அடிமனத்தில் ஆழ்ந்து புதைந்துவிட்ட எண்ணங்களின் செயல் நிலைகளே அலாதியானவை.

நான் வகுப்புக்குப் பிந்திவந்தமையைக் குற்றமென்று, நான் உணரவில்லை; ஆனால் சோதிநாதன் பிந்தி வந்தமையைக் குற்றமென்று உணர்ந்தேன். இப்போதுதான் அந்த உணர்வின் விசித்திரத்தன்மை துலாம்பரமாய்த் தெரிகிறது.

எல்லா வகுப்புக்களிலும் எல்லா ஆசிரியர்களுக்கும் சில சில செல்லப்பிள்ளைகள் உண்டு. இது எல்லா ஆசிரியர்களுக்குமுள்ள ஒரு பலவீனம். கருணாகரன் என் செல்லப்பிள்ளை. இந்தச் செல்லப் பிள்ளைகளுக்குச் சமய சந்தர்ப்ப பக்குவங் கண்டு காரியஞ் சாதிக்கும்

மூளைத் திறன் எப்போதும் உண்டுபோலும்!. அவன் அப்பொழுது எழுந்து நின்று கண்ணைக் கசக்கினான்; வெம்பினான்; பொருமினான். என்னுள்ளம் உருகிவிட்டது. மெத்தப் பிரியத்தோடு அவனை நோக்கினேன்.

'இவன் பள்ளிக்கு வருகிறபோது என்னைத் தள்ளிவிழுத்தி அடித்தான். கையும் காலும் வீங்கிவிட்டன. இந்தக் கையைப் பாருங்கோ' என்று அவன் கையைக் காட்டினான். விங்கிய அந்தக் கை பளபளத்தது.

எவ்வித ஆய்வுமின்றி என் மனம் சோதிநாதன் மீது குற்றங்கண்டு தீர்ப்பு வழங்கிவிட்டது. தீர்ப்பின் பின் நடைபெறும் விளக்கத்தில் வெறுமையே நிழலாடும். ஒப்பாசாரத்துக்காக விளக்கம் நடந்தது. ஆனால தீர்ப்பு மாறவில்லை.

தீர்ப்பு விளைந்து முற்றி தண்டனை வழங்கும் நிலை வந்தபோது. கோபம் பிறந்து என்னை மயக்கிக் குருடாக்கிவிட்டது. குருடனுக்கு விண்மண் ஒன்றும் தெரிவதில்லை. எங்கும் இருள்.

அசுரவேகம் என்னில் ஊறியது. அந்த வேகத்தோடு அவனைத் தாக்கினேன். தாக்கிய வேகத்திலே சோதிநாதனின் தலை சுவர் விளிம்பில் மோதியது. "ஐயோ. அம்மா" என்ற அலறலோடு இடக்கண்ணைப் பொத்திக்கொண்டு அந்தப் பிஞ்சு கீழே வாடி விழுந்தது. இடக்கண்ணின் மேலிமை விளிம்பில் ஒரு ஆழமான வெட்டு; இரத்தம் குபிரிட்டுப் பாய்ந்தது. எல்லாம் ஒரு கணப்பொழுதில் நிகழ்ந்து முடிந்தன.

நினைவிழந்து கிடந்த அவனைத் தூக்கவே துணிவின்றி என் உடல் பதறியது. மனம் கறங்காய்ச் சுழன்றது. அறிவில் வெறுமை ஓடியது.

மாணவரெல்லாம் பிரமை பிடித்து நின்றனர். அப்பொழுது ஒரு மாணவன் என்னளவிற் கிணற்றுள் இருந்து பேசுவதுபோற் பேசினான். "சார்; கருணாகரன் பொய் சொன்னான். நேற்று வருகிறவழியிற் சறுக்கி விழுந்ததாய்ச் சொன்னான். என்னுடன் தான் வந்தான்."

அப்பொழுது மனதும் மனத்தின் உள் மனதும் அங்கு விளைந்த எண்ணங்களும் எண்ணங்களின் உள் எண்ணங்களும் எல்லாமே பற்றி எரிந்தன. எரிந்தெரிந்து என்னையே சாம்பராக்கி விட்டாற்கூட நல்லதுபோலத் தோன்றியது. ஆமாம், அன்பில்லாத என்னை அறம் காய்த்தது.

சோதிநாதன் மருந்து கட்டப்பட்டுத் தகுந்த துணையுடன் வீட்டுக்கனுப்பப்பட்டான். ஆனால், என் மனத்தகிப்புக்கு மருந்திட முடியாமல் எனது அறிவு, சக்தி குன்றிச் செயலிழந்து கிடந்தது.

எனது இந்தத் தகிப்பு நிலையில் என் அனுபவங்களைக் கொண்டே நான் பிற மனிதரை அளவிட முயலும் அந்நிலைபோய், என்னையே நான் அளவிடும் ஒரு நிலை சிந்தித்தது..

அந்த அனுபவத்தில் அப்பாவும் நானும் வாதிகளாக நிற்கிறோம். மூர்த்தி வாத்தியார் பிரதிவாதியாக நிற்கிறார்.

'போளை' அடிக்கும் விளையாட்டில் வெற்றிக்காகக் கிடைக்கும் ஒவ்வொரு போளையின் மதிப்பும் அதை இரசித்து அனுபவித்து விளையாடும் எனக்கல்லவா தெரியும்? ஒரு குண்டை இழக்கவேண்டி வந்துவிட்டால் என்னையே இழப்பதுபோன்ற ஓருணர்வு படரும். அப்போது எனக்கு வயது பதினாறு. விளையாட்டுக்குக் காலமும் நேரமும் உண்டென்பதை என்னால் அப்போது உணரமுடியவில்லை. எல்லா நேரமும் எனக்கு விளையாட்டு நேரமே. பள்ளிக்கூடம் தொடங்கிவிட்டாலும் எதிரியிடமுள்ள அத்தனை குண்டுகளையும் பறிக்கிறவரையில் விளையாட்டு நீடிக்கும். அது என்னுள் முற்றிய நியதி.

அன்று வகுப்புள் நுழையும்போது காலை பத்துமணியாகி விட்டது. மூர்த்தி வாத்தியாரின் பாடம் நடந்து கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் பையன்கள் சிரித்து விட்டார்கள். நானும் சிரித்துவிட்டேன். பொய்வேடம் போட்டு மாய்மாலக் கண்ணீர்விட எனக்குத் தெரியவில்லை. அதனால், சிரித்துவிட்டேன். அந்தச் சம்பவத்தை இன்றுள்ள நிலையில் எண்ணும்போது கூடச் சிரிப்புவருகிறது.

"யார் நீயா, எங்கடா போயிருந்தாய்." மூர்த்தி வாத்தியாரின் அதட்டல் என்னைக் குழப்பியது. சிரிப்பு மெல்ல மெல்ல மறைந்தது.

"நான் வாத்தியார் ........ வந்து......வந்து........வந்து......" நினைத்ததைச் சொல்லமுடியாமல் திக்குவதை நினைத்தபோது மீண்டும் எனக்குச் சிரிப்பு வந்தது. சிரித்து விட்டேன். வகுப்பும் மீண்டும்; 'கொல்' லென்று சிரித்துவிட்டது. ஆனால் வாத்தியார் சிரிக்கவில்லை. அவர் எப்போதும் அப்படித்தான். அவர் சிரித்தால் நாங்கள சிரிப்போம். நாங்கள் சிரித்தால் அவர் சிரியார்.

"என்னடா நான் கேட்கிறேன்; நீ சிரிக்கிறாய்?"

நான் மௌனியானேன். என்ன பதிலைச் சொல்வது?

"அடே. எங்கே போயிருந்தாய்?"

"விளையாட" வேறெதைச் சொல்வது? உண்மையைத்தான் சொன்னேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

என் தொழில் அனுபவத்தைக் கொண்டு அவரை அளந்துபார்க்கும் இப்போதுதான் அவர் நிலை எனக்கு விளக்கமாகிறது.

"விளையாட நேரம் காலம் வேண்டாமா? இன்றா, நேற்றா ஒவ்வொருநாளும் இதேகதைதானே."

அவர் வாய் சொல்லிக்கொண்டிருந்தபோதே அவர் கையிலிருந்த பிரம்பு. பழம் பழமாய்ச் சொரிந்தது. நான் துடித்துப்போய் "வேண்டாம்

வாத்தியார். வேண்டாம் வாத்தியார். இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்" என்றேன். இந்தப் பதிலால் பிரம்பின் நர்த்தன வேகம் உயர்ந்து பொலு பொலுவெனப் பழங்கள் சொரிந்தன. என் கைமணிக்கட்டில் இரண்டு அழகான பிரப்பம் பழம்! அதன் சுவையோடு என் மனத்திலும் ஒருவகை அசுத்த உணர்ச்சி நிறைந்தது.

வீட்டுக்குப் போனதும் அந்தப் பிரப்பம் பழங்களையும் மறைவிடங்களிற் கிடந்த காய்களையும் பிஞ்சுகளையும் அப்பாவிடம் காட்டிவிட்டேன்.

மறுநாள் பாடசாலையிற் பெரும் பூகம்பம். அப்பா ஆடிய ஆட்டத்திலும் பேசிய பேச்சிலும் பாடசாலையே கிடுகிடுத்தது. மூர்த்தி வாத்தியார் கூனிக்குறுகிச் சிறுத்துவிட்டார். அவரைப் பழிவாங்கிவிட்ட இன்பம் என்னைப் பூரிக்க வைத்தது. அவரிலும் பார்க்க நான் மிகப் பெரியவனாய் மாறிவிட்டதுபோல உணர்ந்தேன். பள்ளிக்கூடத்தில் என் அந்தஸ்து ஒருபடி உயர்ந்து விட்டதாக நான் என்னில் எண்ணி மகிழ்ந்தேன்.

அதன் விளைவுகள்.

ஆம். இப்போது அவை என்னை நடத்துகின்றன: என்னை அனுபவிக்கின்றன.

நான் நடந்துகொண்டிருந்தேன். ஆழ்கடலில் ஒரு சிறு கூழாங்கல் ஏற்படுத்திய சலனம் போற் சிறு சலனமொன்று. சுழித்து வட்டமிட்டு எங்கோ சஞ்சரித்துத் திரிந்த எனக்கு நான் எங்கே நிற்கிறேன் எனக் காட்டியது.

நான் ஒரு கிராமத்தின் எல்லையில் நிற்பதை உணர்ந்தேன். நான் நினைத்து வந்த அது இதுவே. இதமான தார்ச்சூட்டை அனுபவித்துக்கொண்டு பொய்யுறக்கம் உறங்கிய இரண்டொரு தெருநாய்கள் ஒரே குரலில் வரவேற்று என்னை நானாகும்படி அருட்டிவிட்டன. சுற்றுமுற்றும் பார்த்தபோது, வாழ்க்கையிற் குதிர்ந்துவிட்ட சமனற்ற தன்மைபோல, சிறிதும் பெரிதுமான பல வீடுகள் மங்கிய நிலவொளியிலே திட்டுத் திட்டாகக் காட்சியளித்தன. அவைகளும் எனது தகிப்பை உணர்ந்துகொண்டு இருளை வயிற்றிலடக்கி, உயிர்க்களையிழந்து கிடந்தன. மரங்கள் நரைத்தலையுடைய கரும் பூதங்கள்போல அவைகளைக் காத்துக்கிடந்தன. எந்த ஒரு வீட்டிலும் ஒரு சிறு ஒளித்துளியுமில்லை.

நான எங்கு செல்ல வந்தேனோ அந்த வீட்டின் வாயிலில் நின்றேன். உள்ளே "ஐயோ அம்மா: ஐயோ அப்பா...." என்ற வேதனைக்குரல் நிசப்தப் பின்னணியிலே பெருத்துக் கொழுத்துப் பேருருக்கொண்டு என உள்ளத்தைப் பிழிந்தது. அந்தச் சொற்கள்

கோடையிடிபோல என்மனச் செவியிலே முழங்கி என மனத்துணிவுக்குச் சவால் விட்டன. எங்கோ மறைந்து கிடந்த கோழைத்தனம் ஓடிவந்து என் செயல் நிகழ்ச்சியின் கடைசி இழையை அறுத்துவிடப் பார்த்தது. திரும்பிப் போய்விடலாமா என்ற எண்ணம் மின்னி மறைந்தது. பின்வாங்கித் திரும்பிய மனத்தை இழுத்துப் பிடித்து நேர்வழியிற் செலுத்துவதற்கு நான்பட்ட வேதனை கொஞ்சமன்று.

ஒருவழியாக நடுங்குங் கரத்தாற் கதவிலே தட்டினேன்: உள்ளே ஒலித்த முனகல் நின்று, "யார் அது..." என்ற கேள்வி வந்தது.

"நான்" என்குரலின் நடுக்கம் என்னைத் திகைக்க வைத்தது.

"யார் வாத்தியாரா? இதோ வந்துவிட்டேன்."

கதவைத் திறந்துகொண்டு, தலைக்கட்டுடன் என்னெதிரிலே தோன்றியசோதி, கைகூப்பி வணங்கினான். கூப்பிய அவன் கையை என்னிருகையாலும் பொத்திக் கொண்டு, அவனறியாமல் அவனை நான் வணங்கி ஆன்மசாந்தி பெற்றேன். வணங்காவிட்டால் அந்தத் தகிப்பு நிலையில் எனக்குச் சாந்தி ஏது?

பேச்சுக்குரலைக்கேட்டு சோதிநாதனின் அப்பாவும் அம்மாவும் எழுந்து வந்தனர். என்னைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றனர். பேச்சுவரவில்லை. என்னைக் குருபீடத்தில் அமர்த்தி, வணக்கத்திற்குரியவனாக்கிய மேலான உணர்வாலே வாயடைத்து நின்றார்களா? அல்லது....... அவர்கள் கொண்ட எந்தவகை உணர்வு அவர்களின் வாயை அடைத்ததோ? அதனால், நானே பேசினேன்.

"இப்போது எப்படி இருக்கிறது" ஒரு சில விநாடிக்குமுன் எப்படி இருந்தது என்பதை நிச்சயமாக உணர்ந்த நான் உபசாரத்துக்காகக் கேட்டேன்.

சோதிநாதன் சிரித்தபடியே "இப்போது பரவாயில்லை" என்றான்.

"அடி கொஞ்சம் பலந்தான் - நாலு இழை போட்டிருந்தார்கள். நீர்க்கொள்ளாது பார்க்கவேண்டுமாம்". அப்பா பேசினார்.

"அப்படியா......"

"இன்னும் ஒரு மயிரிழை தவறியிருந்தால்........" அந்த அம்மாவால் மேலே பேசமுடியவில்லை. பொங்கி வந்த கண்ணீரே வாக்கியத்தை முடித்தது. அந்த 'ஆல்' விகுதி பின் உள்ள பயங்கரமான குருட்டுக்கண் ஒன்றைக் காட்டிற்று. அந்தப் பயங்கரத்தோற்றத்தை மனங்கண்டு சிலிர்த்து நடுங்கியது. அதனால் வாய் பேசவில்லை. என் பெருமூச்சுத்தான் அப்போது பேசியது.

"வாத்தியார். நீங்கள் தான் தெய்வம் மாதிரி. இவனைக் கொஞ்சம் கவனித்துக கொள்ளவேண்டும்" என்றார் தந்தை. என்மனம் படபடத்தது. எதன் ஆரம்பம் அது? முடிப்பு எங்கே? விளைவு என்ன?

"எதற்குச் சொல்கிறேனென்றால் இவன் படுசுட்டி. இன்று ஏதோ ஓட்டமாம். கண்மண் தெரியாமல் ஓடிப்போய் கல்லில் விழுந்து கண்ணைக் கெடுக்கப் பார்த்தான்: நல்ல காலம் புருவத்தோடு போயிற்று......."

என்னாலே தாங்கமுடியவில்லை. என்னுள் ஏதோ உருண்டு புரண்டு நெளிந்தது. மனக்குறளி "உண்மையைச் சொல்: சொல்" என்று தூண்டியது.

"இல்லை நான்தான்........." என்று தொடங்கினேன்.

"வாத்தியார்" – சோதிநாதன் நான் சொல்ல வந்ததைச் சொல்ல விடாமற் குறுக்கிட்டு என்னைப பார்த்து முறுவலித்தான். அந்தச் சொல்லின் கண்டிப்பும கட்டளையும் என்னைத் திகைக்க வைத்தன.

நான் கூனிக்குறுகி ஒரு அணுவளவாய் நின்றேன். அவன் உயர்ந்து வளர்ந்து மலையளவாக எனக்குக் காட்சி தந்தான். ஜீவத்துடிப்பின் ஒரு அலையிலே பிறந்த தீர்ப்பு. அவனது ஒரு முறுவற் கீற்றினாலே நிறைவேற்றப்பட்டது.

"சரி அதற்கென்ன" மந்திரத்தாற் கட்டுண்டவன போற் கூறினேன். நான் விதைத்த தீமை முளையில் அழிக்கப்பட்டது போல எனக்கொரு சாந்தி: அது என் மனத் தகிப்பைத் தணித்துக் குளிர்வித்தது.

❖❖❖

# 13. சிற்றன்னை

குழந்தை வீரிட்டழுதது. என்றாலும் வெளியே இருந்த கங்காதரன் திடுக்கிடவில்லை. ஆச்சரியப்படவுமில்லை. அவன் அதையும் எதிர்பார்த்திருந்தான்.

வெளிச்சாலையில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தான் கங்காதரன். அவன் கைகள் பத்திரிகையைத் தூக்கிப்பிடித்து உதவி செய்ய, அந்த உதவியை அவன் மனமும் கண்ணும் புறக்கணித்து மற்றச் சகாவான காதுடன் சேர்ந்து கூத்தடித்துக்கொண்டு, உள்ளறையில் சென்று அங்கேயே லயித்துவிட்டன. அங்கு நடைபெற்ற ஒவ்வொரு சிறுநிகழ்ச்சியும் அவன் மனதில் இன்பத்தை அள்ளித் தெளித்தது.

உள்ளறையில் வஸந்தியும் அவள் அம்மாவும் இருந்தார்கள். வஸந்தி மூன்றரை வயதுக்குழந்தை. கங்காதரனின் ஒரேயொரு செல்வ மகள். அவள் அம்மாவின் உயிர். எனவே அவளது பிடிவாத குணமும், விஷமச் செயல்களும் கூட அவர்களுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தன.

வஸந்தியைச் சுற்றிவர ஏராளமான விளையாட்டுச்சாமான்கள் சிதறுண்டு பல பல நிலையில் பரிதாபமாகக் கிடந்தன. அவைகளுடன் வஸந்தி செய்த போரிலே காலற்று, கைமுறிந்து தலை பிளந்துபோய் அவைகள் போர்க்களத்தை நினைவூட்டின. கங்காதரன் தன் மகளுக்கு ஆசையுடன் வாங்கி வந்த அந்தப் பட்டுக்குடைக்கு புவனம் சிரமப்பட்டுப் பூவேலை செய்திருந்தாள். ஆனால் வஸந்தியின் கையிலிருந்த

கத்தரிக்கோல் அதைப் பதம்பார்த்துச் சித்திரவதை செய்திருந்தது. இந்த விஷமக் குணங்களை ஒருவராவது பொருட்படுத்தவில்லை. குழந்தையின் இயற்கைச் சுபாவம் என்று கண்டிக்காமல் இருந்தார்கள்.

இப்பொழுது புவனம் தன் மூன்று வயது மகளுக்காக ஒரு மூன்றுமாடி வீட்டைக் கட்டிவிட்டாள். புத்தம் புதிய ஒரு சீட்டுக்கட்டைப்பிரித்து அறைகள் வகுத்து மாடி எழுப்பி கூரைவேய்ந்து அழகாகச் செய்திருந்தாள் புவனம். அதுவரையில் அதையே மிகக் கவனத்துடன் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் வஸந்தி. அதற்கு மேல் அவளால் பொறுக்க முடியவில்லை. 'பூ' என்று ஊதி விட்டாள். அது 'பொலுபொலு'வென்று விழுந்தது. வஸந்தியின் சந்தோசம் தாங்கமுடியவில்லை. அந்தக் கடதாசி வீட்டின் ஆக்கமும் அழிவும் ஆகிய இரண்டும் அவள் இளம் இதயத்திற்கு இன்பத்தையூட்டின. அவள் 'கலகல'வென்று சிரித்தாள். தன் சிரமம் குழந்தையின் மகிழ்ச்சியில் அமிழ்ந்து மாண்டு போகத் தாயும் சிரித்தாள்.

வஸந்தி 'துருதுரு'வென்று சீட்டுக்களைப் பொறுக்கிச் சேர்த்துக்கொண்டு 'அம்மா நான் வீடு கட்டட்டுமா?' என்றாள்.

'எங்கே கட்டு பார்ப்போம்' என்று தன் சிரிப்பின் மூலம் உற்சாகமூட்டினாள் புவனம்.

'எப்படியம்மா வைப்பது இப்படித்தானே, பாரம்மா'

'இல்லை. இப்படி கண்ணே, பார் காட்டுகிறேன்' என்று புவனம் சில சீட்டுக்களை எடுக்கப்போனாள்.

'வேண்டாம்; நீ தொடவேண்டாம். நான் செய்கிறேன்.' என்று இரைந்தாள் வஸந்தி.

தாய் எடுத்த சீட்டுக்களைக் கீழே வைத்துவிட்டுத் தன் செல்வக் குழந்தையையே பார்த்துக்கொண்டிருந்தாள். எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் குழந்தையால் முடியவில்லை. இரண்டு சீட்டுக்களை நிறுத்தி வேறொன்றை மேலே வைத்தாள். கை எடுத்தவுடன் கொஞ்சமும் கருணையின்றி அவைகள் கீழே விழுந்து விட்டன. இப்படி எத்தனை முறை தான் அவளால் செய்யமுடியும்? அவள் பொறுமை எல்லை கடந்தது. அதனுடன் தாயின் சிரிப்பு எரிச்சலைக் கொடுத்தது. அவளுக்கு ஏற்பட்ட இரு உணர்ச்சிகள் சிறு வெறியாகப் பரிணமித்தன. எல்லாவற்றையும் கையால் சிதறிவிட்டு எழுந்தாள். எழுந்ததும் அவள் கண்ணிறப்பட்ட அந்த வஸ்து மனதைப் பறித்தது. அது ஏனோ பட வேண்டும்?

கண்ணையும் கருத்தையும் சிதறவிடாமல் அதிலே பதித்து அலங்காரமாகத் தையல் வேலைகள் செய்து பள்ளிக்குப் போகவிருக்கும் வஸந்திக்காக அன்பின் பரிசான அந்தப்புத்தகப் பை சுவரிலே

தொங்கிக்கொண்டு கிடந்தது. அவள் கண்ணைக்கொள்ளை கொண்ட அதையா அவள் விடுவாள்?

'அம்மா அதை எடுத்துத் தரமாட்டாயா?' என்று கெஞ்சினாள்.

'கண்ணே வஸந்தி. உனக்கு அது வேண்டாம். இதோ பார் வீடு' என்று அவள் கவனத்தைத் திருப்பமுயன்றாள் புவனம்.

'ம்'....ம்.....' எனக்கு வீடு வேண்டாம். பைதான் வேணும். எடுத்துத்தா'' என்று சிணுங்க ஆரம்பித்தாள் குழந்தை

“முடியாது. நீ அதை வெட்டிவிடுவாய். எடுத்துத்தரமுடியாது. வேணுமானால் இதோ உன் பூக்குடை இருக்கிறது'' என்று தீர்மானமாகச் சொன்னாள் தாய்.

“எனக்கு அதுதான் வேணும், எடுத்துத் தா........ தா....... தா......'' என்று பிடிவாதத்துடன் அழத் தொடங்கினாள்.

தன் குழந்தையின் பிடிவாதத்துடன் போராடி வெல்லும் சக்தி புவனத்துக்கில்லை. நாலு அறை கொடுத்து அடக்கிவிடவும் அவள் தாய்மை விடவில்லை. எரிச்சலோடு சென்று அந்தப் பையை எடுத்தாள். அவள் நெஞ்சின் ஆழத்திலிருந்து பெருமூச்சொன்று வெடித்துக்கிளம்பியது.

தான் விரும்பிய வஸ்துவைப் பெற்ற சந்தோஷம் முன்பிருந்த அழுகையின் இடத்தை நிரப்பியது. அவள் அதைக்கொண்டோடினாள். பையைச் சுழற்றிச் சுழற்றிச் சிரித்தாள். அதனுள்ளே கையை விட்டுத் துழாவினாள். பையைத் தோளில் இட்டு உல்லாசமாக நடந்து பார்த்தாள். எல்லாம் ஒருநிமிஷ நேரந்தான். அடுத்த கணம் பை ஒரு மூலையில்வீசி எறியப்பட்டுக் கேட்பாரற்ற அநாதைபோல் கிடந்தது. அவ்வளவிலும் வஸந்தி திருப்தி அடையவில்லை. மிதிக்க ஓடினாள்.

“மிதியாதே அம்மா வஸந்தி, உன் சித்தியடிப்பாள்'' என்று பதட்டத்துடன் கூறினாள் புவனம்.

தாயின் சொல்லைத் தட்டாத நல்ல பிள்ளையைப் போல அவள் பையை எடுத்தாள். அவள் மனம் தான் இழந்துவிட்டதாக் கருதிய சித்தியை நோக்கிப் பறந்தது. குழந்தைகளின் மன எழுச்சி பெண்களின் சோகத்தைப் போன்றது. அதை அவர்களால் அடக்கவே முடியாது. அதை அவர்கள் எவ்விதமோ வெளியிட்டு விடுகிறார்கள்.

“அம்மா, இது சித்தி தந்தது. என்ன?'' என்ற கேள்வி வஸந்தியின் வாயிலிருந்து வெளிப்பட்டது. அவள் மனத்துடன் உறவாடிக்கொண்டு.

'ஆம்' என்று மழுப்பினாள் புவனம். அந்த எண்ணத்தை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு. ஆனால் குழந்தை,

'சித்தி ஏனம்மா வரவில்லை?' என்றாள்

'தெரியாது'

'சித்தி எங்கே போயிட்டா அம்மா'

'தெரியாது'

தாயின் பதில் ஒன்றும் குழந்தைக்குத் திருப்தி அளிக்கவில்லை. குழந்தையின் கேள்விகளும் புவனத்தின் மனதைக் குத்திக் குத்தி எரிச்சலையே கிளப்பின. வஸந்தியுமோ அத்துடன் நிறுத்துவதாக இல்லை. அதற்கு என்ன தெரியும்?

"சித்தி வரமாட்டாளா அம்மா"

"..........................."

"சித்தி வரமாட்டாளா அம்மா"

"வரமாட்டாள் பேசாமல் இருக்கமாட்டாய்?" புவனத்தின் எரிச்சல் கோபமாக முடிந்தது.

"அம்மா, எனக்குச் சித்தி வேணும். சித்தி எங்கே? எனக்குச் சித்தி தான் வேணும்" என்று குழந்தை அழத்தொடங்கியது. புவனத்தினால் பொறுக்கமுடியவில்லை அவள் கோபம் அணைகடந்தது.

'செல்லம் கொடுத்துக் கொடுத்துக் குட்டிச்சுவராப்போச்சு. சனியன். சும்மாய் இருக்கமாட்டாய்" என்று எரிந்துகொண்டே படீர் படீர் என்று நாலு அறை கொடுத்தாள். குழந்தை வீரிட்டு அழுதது.

அந்த அடி ஒவ்வொன்றும் கங்காதரனின் மனதில் ஆயிரம் இடியேறு போல் தாக்கியது. அவன் குழந்தையின் றோசா இதழ் போன்ற மனதின் வாட்டம் அவன் உயிரைப் பிழிந்தது. அவனால் தாங்கமுடியவில்லை. ஆனால் தாங்கித்தான் ஆகவேண்டும். அந்தச்சமயத்தில் தன் மனைவியுடன் சண்டைபோட அவன் அவ்வளவு முட்டாள் அல்லன். போசாமல் இருந்தான்.

ஆனால் அவன் மனம் பேசியது.

அவன் மனக்குரங்கு கடந்த சம்பவங்களென்ற கிளைகளைத் தாவி விளையாடத்தொடங்கியது.

2

அன்று புதிதாக ஒரு 'டைபிஸ்ட்' வருவதாக அதிபர் சொல்லி இருந்த போதிலும் அது ஒரு பெண்ணாக இருக்குமெனக் கங்காதரன் கனவிலும் நினைக்கவில்லை. காரியாலயத்தில் அவள் பிரசன்னமானபோது அவன் திகைத்தான். தன்னோடு வேலை பார்க்கும் இலிகிதர்களின் பலவீனங்கள் அத்தனையும் அவனுக்குத் தெரிந்திருந்தபடியால் அவளை வைத்துச் சமாளிக்க வேண்டுமென்ற பயமும் அவனை உள்ளூர வாட்டியது.

அன்றியும் மனேஜரின் கேள்விப்படி அவளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுக்கும் பொறுப்பும் அவன் தலையில் இருந்து.

அவள் செய்ய வேண்டிய வேலைகளைக் காட்டிவிட்டுத் 'தங்கள் சொந்த ஊர் எது?' என்று கேட்டான் கங்காதரன்

"யாழ்ப்பாணம் சேர்" அவள் கண்கள் அவன் முகத்தில் ஓடியாடி அவனை அளவெடுத்துக்கொண்டிருந்தன.

"யாழ்ப்பாணமா?.. நல்லது. எங்கே அடித்ததைத் தாருங்கள் பார்ப்போம்" என்றான் லேசாகச் சிரித்துக்கொண்டே

"சரி, நீங்கள் எங்கே தங்கப்போகிறீர்கள்? ஏதாவது வசதி உண்டா?"

"அதுதான் யோசிக்கிறேன். முன்பின் தெரியாத இடம். நானோ தனித்தவள்" அவளுடைய கண் கலக்கத்தையும் "தனித்தவள்" என்ற வார்த்தையிலுள்ள உணர்ச்சியையும் கண்டுபிடிக்க அவனுக்கு அதிக நேரம் செல்லவில்லை. சிறிது நேரம் யோசித்தான்.

"தங்களுக்குச் சௌகரியமிருந்தால் பின்னேரம் என் வீட்டுக்கு வரமுடியுமா?" என்று கேட்டான்.

தன்மீது விழுந்த பொறுப்பை நினைத்து தன்னால் செய்யக்கூடிய உதவிகள் அவள் விருப்பத்தோடு ஒட்டியிருக்கின்றனவா? என அளவிடுவது தான் அவன் எண்ணம்.

"சௌகரியமா? அவசியம் தங்களைப் பார்க்க வேண்டுமென்று நானே நினைத்துக்கொண்டிருக்கிறேன்." என்றாள் புன்சிரிப்புடன். அதில் நன்றியறிதலும் கள்ளமற்ற மனதும் தெளிவாகத் தெரிந்தன.

"மிகவும் நல்லது, வாருங்கள், வந்தனம்"

"வந்தனம்"

## 3

மார்க்கிறெட் - இதுதான் அவள் பெயர். பெண்களுக்குத் தேவையான அழகும் சுறுசுறுப்பும் அவளில் நிறைந்து இருந்தன. ஆடம்பரப் பிரியை அல்லள் என்பதை அவள் அணிந்திருந்த கதர் சேலை ஒன்றே எடுத்துக்காட்டியது. ஒருசோடி தோடும் வளையலுந்தாம் அவள் அணிந்திருந்த ஆபரணங்கள். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற திருப்தி அவள் சிரிப்பில் தெரிந்தது. தனது வேலையில் கண்ட அனுபவக்களையோ – அல்லது குடும்பப் பாரத்தைச் சுமந்த களையோ – ஏதோ ஒரு களை அவள் முகத்துக்குச் சோபையூட்டியது! அவளுக்கு இருபத்தெட்டு வயதிருக்கலாம்.

சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்துவிட்ட அவள் தனது சுய முயற்சியாலே இந்த நிலைக்கு வந்திருந்தாள். தவிர அவளுக்குக் கீழே இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் இருந்தார்கள். அவர்களைக் காப்பாற்றிக் கல்வியூட்டி, சமூகத்தின் பிரஜைகளாக்க வேண்டிய பொறுப்பும் அவளுக்கு இருந்தது. அதனால் அவள் எளிமையை மேற்கொண்டு விவாகஞ் செய்வதில்லை என்ற தீர்மானத்துடன் இருந்தாள். என்றாலும் தன்னைச் சூழநின்ற ஆண் சமூகத்தின் பிடியிலிருந்து தன்னைக் காப்பாற்றித் தன்னிலையை உயர்த்தி வைத்துக்கொள்ளக்கூடிய தைரியம் அவளுக்கிருந்தது. அவள் தெளிந்த சிந்தனை சேர்ந்த தன் மனதின் குரலைக் கேட்டு அதன்வழியே நடந்தாள். அவள் வாழ்க்கைப் பாதையிலுள்ள மேடு பள்ளங்களைத் தாண்ட வழிகாட்டிய மனக்குரல் அவளைக் கங்காதரனின் முன்னால் கொண்டு நிறுத்தியது.

"கடமையைச் செய் - பலனை எதிர்பாராதே" என்ற கொள்கையை உடையவன் கங்காதரன். தன்னால் எவ்வளவு சேவை மற்றவர்களிற்குச் செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்துவிட வேண்டும் என்ற ஆசை அவன் உயிருடன் பிணைந்திருந்தது. உதவியைப் பெற்றவர்கள் செய்யும் இன்னல்களையும் சந்தோஷமாக ஏற்றுச் சகித்துச் சிரிக்கப் பழகியிருந்தான். "எல்லோரையும் திருப்தி செய்ய முயன்றால் ஒருவரையும் திருப்தி செய்ய முடியாது" என்பது அவனுக்குத் தெரிந்திருந்துங்கூட. எங்காவது ஒரு இதயத்தில் அந்தத் திருப்தி நிலவினால் அதுவே பூரணம் என்ற நினைப்பில் தன் கடமைகளைச் செய்தான். அந்த இதயம் மாக்கிறெட்டினுடையதாக இருந்தால்........?

ஆம், மாக்கிறெட்டின் துன்பம் நிறைந்த பாதையும் அவள் தியாக உணர்ச்சியும் அவன் உள்ளத்தை உருக்கின. ஏதோ ஒரு சகோதர பந்தம் தனக்கும் அவளுக்கும் உண்டென அவன் அந்தராத்மா துடிதுடித்துச் சொன்னது. தன்னால் முடிந்த உதவிகளை அவளுக்குச் செய்யவிரும்பினான். அந்த விருப்பத்துக்குப் புவனத்தின் பூரணமனதும் அவசியமாயிருந்தது. இல்லற சகடத்தில் பூட்டப்பட்ட காளைகள் இரண்டும் ஒரே நோக்குடையவனவாய் அமைய வேண்டும் என்ற திட நம்பிக்கையுள்ள அவன், புவனத்தின் விருப்பத்தை எதிர்நோக்கி ஏங்கினான். அவன் தனியனாய் இருந்தால் மாக்கிறெட் அவனின் பூரண ஆதிக்கத்துட்பட்டிருப்பாளோ என்னவோ?

புவனம் நிலைமையைச் சரிவரப் புரிந்து கொண்டாள். தன் கணவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதும், மாக்கிறெட்டின் நிலமைக்கு உதவி புரிவதும் தன் பிரதான கடமையென அவள்மனச்சாட்சி சொல்லிற்று. கங்காதரன் தன் விருப்பத்தை அறிவதற்காகத் தன்னை அடிக்கடி நோக்குவது அவளுக்குப் பெருமகிழ்ச்சியாயிருந்தது. "ஏன் அவள்

எங்களுடன் கொஞ்சநாளைக்கு இருந்தாலென்ன? ஆறுதலாகப் பார்த்துக் கொள்ளலாமே வேறிடம்" என்றாள் நிர்ச்சலனமாக.

கங்காதரனும் அதைத்தான் விரும்பினான். அந்தக் 'கொஞ்ச நாள்கள்' நெடுநாட்களாக மாறும் என்பது அவனுக்குத் தெரியும். தன் மனைவியின் குணங்களை அறிந்தவனல்லவா?

கங்காதரன் குடும்பத்தில் மாக்கிறெட்டும் ஒரு அங்கமானாள். வஸந்திக்கும ஒரு சித்தி கிடைத்தாள். மற்றவைகளை விட மேலான உயிருள்ள ஒரு விளையாட்டுப பொருளும் அவளுக்குக் கிடைத்து.

காலம் தன் செலவுடனே கங்காதரன் குடும்பத்துக்கும், மாக்கிறெட்டுக்குமிடையே நீங்காத தொடர்பை அன்பை வளர்த்துக்கொண்டு சென்றது. கங்காதரனும் புவனமும் தங்களுக்குக் கிடைத்த ஒரு சகோதரியாகவே அவளை மதித்தார்கள். எந்த வித வித்தியாசமும் காட்டாது தங்கள் சுக சீவியத்தில் அவளுக்கும் பங்கு கொடுத்தார்கள். அவர்கள் முகம் சுண்டினால் அவளால் பொறுக்கமுடியாது. தனியே இருந்து அழுவாள். பாவம்! குடும்ப நிர்வாகத்தில் ஏற்படும் நுட்பமான சிறு பிணக்குகளை அவள் அறியாள். அவைகளை விளங்கிக்கொள்ளும் அனுபவ அறிவு அவளுக்கில்லை.

குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற, விஷ குணங்கள் படியாத மனம், தன்னைப்போன்ற வேறொன்றை அதிசயிக்கத்தக்க விதமாகக் கண்டுபிடித்து அதனுடன் இழைந்துவிடுகிறது. இவ்விதமான மனப்பண்பு மாக்கிறெட்டிடமும் இருந்ததோ என்னவோ? சதா சர்வநேரமும் வஸந்தி மாக்கிறெட்டுடன் தான் இருந்தாள். "சித்தி, சித்தி" என்று வாய் நிறையக் கூப்பிடுவாள். சோறுாட்டுவது, குளிப்பாட்டுவது தூங்கவைப்பது விளையாட்டுக் காட்டுவது எல்லாவற்றையும் மாக்கிறெட்டே செய்தாள். மற்றவர்களுடைய சொற்களோ, செயல்களோ ஒன்றுமே அவளுக்குப் பிடியா.

மாக்கிறெட் தனது வேலைக் களைப்பையோ, கவலைகளின் சுமையையோ வஸந்தியின் பால் வடியும் முகத்தின் மூலம் மறந்தாள். அவள் உடல் சோர்ந்ததானால் அவள் உள்ளம் கொதிக்கும். இவ்விதமான அதிசய தொடர்பை நினைத்து அவளே சில சமயம் ஆச்சரியப்பட்டதுண்டு.

## 4

புவனத்தின் மனம் சிரித்தது. அந்தச் சிரிப்புத்தான் அவள் மனதில் நிகழ்ந்த போராட்டத்தின் முத்தாய்ப்பு.

அன்று முழுவதும் அவள் மனதில் சந்தேகத்துக்கும் நம்பிக்கைக்குமிடையே கடும் போர் நிகழ்ந்தது. அந்தப் போராட்டம் அவளுக்கு ஒரு புது அநுபவம். கடந்த ஏழுவருட வாழ்க்கையில் எதிர்ப்படாத தொன்று.

அன்று காலையில் அவள் மனதில் சந்தேகம் மூடுபனிபோல் சூழ்ந்து கொண்டது. அதன் பேய்க்கூத்தில் அவள் தன்னை மறந்தாள். தன் தொழிலை மறந்தாள். தன வாழ்க்கையையே வெறுத்தாள். ஆண் சமூகத்தைக் காறித்துப்பினாள். அந்தச் சந்தேகம், தானே அவளாய் அவளையாட்கொண்டு அவளை எண்ணாத எண்ணங்களுள் இழுத்துச் சென்றது.

ஆண்களின் மனம் பழுத்த இலந்தைப் பழமோ? அந்தப் பழத்தினுள்ளேயுள்ள புழுக்கள் வெளிப்பார்வைக்குத் தெரிவதில்லையே. எத்தனை எத்தனையோ கெட்ட எண்ணங்களை உள்ளே வைத்துக்கொண்டு வெளிப்பார்வைக்கு நல்லவர்களாகத் தெரிவது தான் ஆண் இனத்தின் சுபாவமோ? ஆ! தெய்வமே! நான் என் உயிரை, என் இதயத்தை, என் வாழ்க்கையை, ஏன் என்னையே அவர் காலடியில் அர்ப்பணித்து நம்பினேனே; அந்த நம்பிக்கை பொய்யா? நான் நம்பியது பிழையா? நான் அறிவேனா அவர் இதயத்துள் இவ்விதமான ஒரு சூழ்ச்சியுண்டென்று. ஏன் மனதைத் திறந்து காட்டவில்லை? எல்லாம் கபட நாடகம். அதற்குச் சாட்சி தான் என்னிடமிருக்கிறதே. என்னுடைய ஸ்தானத்தில் இன்னொருத்தி ஆட்சிபுரிய, நான் அதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமாம். இது தான் ஏழு வருட இல்வாழ்வில் கண்ட பலனோ? அவளைத் தனக்குத் தெரியும் என ஒரு வார்த்தை சொன்னாரா? அவளை இவர் கூட்டிவந்து பட்டபாடும் தவித்த தவிப்பும் தெரியாதா? பாவம்! என்னைப் போன்ற பேதையென்றெண்ணி அரவணைத்தேன். அவரிடமுள்ள அழியாத நம்பிக்கையால் அவளை அரவணைத்தேன். அதற்கு நான் கண்ட பலன்.....? என் கதி......?

அவள் விம்மி விம்மி அழத்தொடங்கினாள். தன் தலையில் அடித்துக்கொண்டாள். மயிரைப் பிய்த்துக் கொண்டாள். பிரமை பிடித்தவள் போலானாள். அவள் மனச்சுமை அழுகையினால் சிறிதுகுறைந்தது. சந்தேகத்தின் வெறி தணிந்தது. இந்த நிலையில் அவள் கணவனிடமுள்ள நம்பிக்கை மெதுவாக மேலெழுந்து இடித்து அவளை ஆற்றியது. உயிர் நண்பனைப்போல.

'ஆம்' நீயும் மனித குலம்தானே. நீ அவரிடத்தில் சந்தேகப்படவேண்டியதும் நியாயமே. அதற்கு ருசுவும் உன்னிடம் இருக்கிறது.

'ஆனால் அந்த ருசு.....? அதைப் பற்றிச் சிறிதாவது யோசித்தாயா? முன் பின் அறியாத ஊர் பேர் இல்லாத ஒருவனின் எழுத்துக்களல்லவா அவைகள். அவைகளால் நித்திய உண்மையை மறைக்கவோ மூடவோ முடியுமா? பொய் மெய்யை மறைத்து விட்டால் உலகத்தின் கதி என்ன? இவ்வளவு கால வாழ்க்கையில் உன்னையே உயிராய், உன்னையே

வாழக்கையாய், உன்னையே எல்லாமாய், இல்லை உன்னையே தானாய் வாழ்ந்து வந்த அவரிடமா கபடநாடகம். அவர் தம் மனதை வேறு எவ்விதம் திறந்து காட்டுவது? அவரிடம் கள்ளத்தன்மையிருந்தால், அதை அவர் மனச்சாட்சியே குத்திக்கிளறி வெளியிடச் செய்யாதா? அழகு? வெகு அழகு தான் நீ நினைப்பது. நீ உன் சந்தேகத்திரையை விலக்கி அவர் மனத்துள்ளே நுழைந்து பார். எல்லாம் வெட்ட வெளிச்சமாகும். ஒரு அன்னியனுடைய எழுத்துக்களை நம்புகிற நீ, ஏன் உன் கணவனை நம்பவில்லை. அப்படியானால் உன் அன்பு பொய்! உன் வாழ்க்கையே பொய்!! பொய்!!!.'

நம்பிக்கை கொடுத்த சாட்டையினால் அவள் திகைத்துப்போனாள். அன்பு பொய்யோ? வாழ்க்கை பொய்யோ? என்ற எண்ணம் அவள் மனதை உடைத்தது. அவள் தன்னுள்ளே தன்னைப் பார்த்துக்கேட்டு விடைபெற்றாள். நான் கொண்ட அன்பு பொய்யா? இல்லை அழியாத உண்மை. என் வாழ்க்கை - அதுவும் உண்மைதான். அப்படியானால் நான் கொண்ட சந்தேகம் பொய்! பொய்!

அவள் தன் கணவனிடம் கொண்ட நம்பிக்கை மீண்டும் அவள் மனதில் ஆட்சிபுரியத் தொடங்கியது. அவள் மனப் புயலின்வேகம் தணிந்து அமைதி நிலவத் தொடங்கியது. சரி அவர் வரட்டும்; எல்லாவற்றையும் கேட்டு விடுகிறேன். ஒரு நாளும் அவர் என்னிடம் எதையும் ஒளித்ததில்லையே என்று எண்ணிய போது முன்பு நடந்த மனப் போராட்டத்தைக்கண்டு அவள் மனம் சிரித்தது.

## 5

புவனம் என்று அன்பொழுகக் கூப்பிட்டுக்கொண்டு வந்தான் கங்காதரன்.

ஏன் புவனமும் வஸந்தியும் தூங்குகிறார்கள் என்ற பதிலைக்கேட்டுக் கங்காதரன் சிரித்தான். "கோற்" றைக் கழற்றிச் சுவர் மூலையில் மாட்டப் போகும் சமயம் மேசை மேலிருந்த கடிதம் அவன் கண்ணில் பட்டது. புவனத்தின் விலாசமிடப்பட்டு வந்திருந்தது. அது இந்த ஏழு வருட காலத்தில் அவ்விதமான கடிதம் எதுவும் வந்ததில்லை. அவன் பரிகாசமாகச் சிரித்துக்கொண்டே,

"ஏது, ஒருநாளும் இல்லாத திருநாளாகக் கடிதம் வந்திருக்கிறது" என்றான்.

"ஏன் வரக்கூடாதோ"

"யார் அப்படிச் சொன்னார்கள்? அவ்வளவு அவசியமாக யார் உன்னை நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்று தான் கேட்டேன்"

"ஒரு சினேகிதி"

"யார் அந்தச் சினேகிதி?" என்று பரிகாசமாகச் சிரித்தான்.

"ஏன் உங்களுக்குத்தான் சிநேகிதர்கள் எனக்கு....."

"தாராளமாக இருக்கப்பிரார்த்திக்கிறேன்"

"பின் நான் சொன்னால் உங்களுக்குத் தெரியுமாக்கும்"

"தெரியாவிட்டாலும் அந்த அதிசய சிநேகிதியை அறிந்து வைத்திருப்போம் என்று நினைத்தேன்" வெடித்து வந்த சிரிப்பை அடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அடக்கினான். அவன் பரிகாசம் அவளுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. பேசாமல் மறுபுறம் திரும்பினாள். அவன் வேட்டியை உடுத்துக்கொண்டு அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"நான் நினைத்தேன்....?" என்றான் கங்காதரன்

"என்ன நினைத்தீர்களாம்...." என்றாள் பதட்டத்துடன்

"இல்லை... பூர்வாசிரமத்தில்....."

"பூர்வாசிரமத்திலா? நீங்கள் தான் - ஆண்கள் தாம்...."

அவள் மனம் மீண்டும் ஒரு கணம் கொந்தளித்தது. கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அவளுடன் கிண்டல் செய்து மகிழ எண்ணிய அவனுக்கு ஒரு அணுக்குண்டா கிடைக்கவேண்டும்?

அவன் கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அவன் கண்கள் நிலை கொள்ளாமல் சுழன்றன. மனம் பாதாள லோகத்திற்குப் பிரயாணம் செய்வது போன்ற உணர்ச்சியடைந்தது. அதில் சிலவரிகள் அவன் கவனத்தில் ஊன்றின.

"இளமையில் உன் கணவனுடன் காதல் நாடகமாடிய புஸ்பம், மாக்கிறெட்டாக மாறி உன் வீட்டிலிருக்கிறாள். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அறியாதவர்போல் நடிக்கிறார்கள். அவர்கள் மனதில் உள்ள "விஷவித்து" முளைத்து வளர ஆரம்பித்துவிட்டால் உன் கதி? தெருவில் நிற்க வேண்டியதுதான்...."

கடித முடிவில் பார்த்தான். பெயரில்லை. அது அநாமதேயக் கடிதம். மொட்டைக்கடிதம். ஆம் இந்தக் கடிதம் ஒரு புயல்மையம். இந்தக்கடிதத்தின் மூலம் என் குடும்பத்தில் பெரிய ஒரு சச்சரவை, பிளவை, அழிக்கமுடியாத ஒரு வசையை ஏற்படுத்தவேண்டுமென யாரோ முனைந்திருக்கிறார்கள் என்று உடனே அவன மனதில் பட்டது.

ஆனால் அந்தக் கடிதத்தில் உள்ள ஒரு விஷயம் அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. 'அந்தப் புஸ்பமா இந்த மாக்கிறெட்? புஸ்பம் எப்படி மாக்கிறெட் ஆனாள்? இவளில் புஸ்பத்தின் முகச்சாயல் தெரிந்தும் ஏன் நான் அவளை நினைக்கவில்லை? புஸ்பம் மாக்கிறெட் ஆவாள் என்று எப்படி நினைக்க முடியும்? எல்லாம் புதிராகவல்லவா

இருக்கிறது' என்று அவன் மனம் சுழன்றது. அந்தச் சுழற்சியில் அவன் இளமை வாழ்வு ஒளிவிட்டது.

மாக்கிறெட் - புஸ்பம் - புஸ்பவல்லி எவ்வளவு தூய்மையானவள். அவள் எவ்வளவு அன்புள்ளவள். அவள் என் ஆசைச்சகோதரி. பக்கத்துவீட்டிலிருந்த அவள் சிறுவயதிலே என்னுடன் விளையாடினாள். படித்தாள், பள்ளிக்கூடம் வந்தாள். இளமையிலே தொடர்ந்த அன்பு நாங்கள் பருவம் அடைந்தபோதும் அறுந்துவிடவில்லை. பருவமும் சுற்றாடலும் எங்களுக்கு எல்லைக்கோடு கீறமுடியவில்லை. சகஸமாகப் பழகினோம். அந்தப்பழக்கத்தை ஊடுருவி மூலாதாரமாய் நின்ற அன்பு, காதலா சகோதரத்துவமா?

அந்த உண்மை எங்களுக்கல்லவா தெரியும்? அணுவளவும் வித்தியாச மனப்பான்மையின்றி ஊடாடின உண்மை இறைவனுக்கல்லவா தெரியும். ஆனால் உலகக்கண்கள் அதைக்காதல் என்று சொல்லி விட்டன. அவைகளுக்கு என்ன தெரியும்? ஒவ்வொருவர் மனதிலுமுள்ள உண்மை என்ற அழியாப்பொக்கிஷம் அதற்கு எங்கே தெரியப்போகிறது? வெளிப்போக்கைக் கொண்டு அது தீர்ப்புக் கூறுவதுடன் அம்பலப்படுத்தியும் விடுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் சகசமாகப் பழகினால் அந்தப் பழக்கம் காதலாகத் தான் இருக்கவேண்டுமோ? சகோதரத்துவமாய் இருக்கக்கூடாதென்பது விதியோ? என்ன உலகம்? அதன் கண்களுக்கு என்றும் உண்மை புலப்படாமல் தான் போய் விடுமோ? அதன்பின் நான் பிரிந்தேன், அவள் பிரிந்தாள், அவள் எங்கு சென்றாளோ? எக்கதி அடைந்தாளோ? இந்த மாக்கிறெட் என் புஸ்பமாய் இருந்தால்....? அந்தச் சகோதரி மீண்டும் கிடைத்துவிட்டால்....?

கிடைத்துவிட்டால் என்ன? புதிய ஒரு கஷ்டத்தைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படும். புவனம் என்ன நினைப்பாள்? முன்பின் அறியாத ஒருத்தியைச் சகோதரி என்றால் நம்புவாளா? பாவம்! அவள் பெண். தன் புருஷன் இன்னொரு அந்நிய ஸ்திரியில் அன்பு கொண்டிருக்கிறான். அது சகோதர பந்தம் என்றால் அவளால் அது விளங்கமுடியாத புதிர்தான். அவள் அதற்கு விடைகாணும்போது விபரீதமாகத்தான் படும். அவள் என்னைப்பற்றி என்னென்ன எண்ணினாளோ? அவள் மனம் என்ன பாடுபட்டதோ? ஆம் உண்மைகளை அறிந்து கொள்வதும் அவ்வளவு சுலபமான காரியம் அல்லவே என்று அவள் மனம் சிந்தனை உலகில் பறந்தது. மாக்கிறெட்டின் உண்மையான உருவம் எதுவெனத் துடிதுடித்தது.

வெறும் மொடைக்கடிதம் தான்; குடும்ப விஷயத்தைச் சுமந்து கொண்டுவந்த அதற்குத்தான் எவ்வளவு சக்தி. எத்தனை மனங்களில் மனப்போராட்டத்தைக் கிளறி விட்டிருக்கின்றது அது.

கங்காதரன் உள்ளம் துடிதுடித்தது. சிந்தனை உலகில்

வட்டமிட்டது. ஆனால் பாரமடையவில்லை. காலவேகத்தில் மறந்து தன் நினைவுக்கு இட்ட முகமூடியை விலக்கி உள்ளே பார்த்தான். தன்னுடைய பாலிய வாழ்வில் ஏற்பட்ட புனிதமான மன நெகிழ்ச்சியூட்டிய சகோதர அன்பைப் பார்த்து இரசித்தான். அந்த அன்பு அவர் நினைப்பின் தெறிப்பால் இன்ப கீதமாக அவன் மனத்தரங்கில் பிரதிபலித்தது. அதை அப்படியே புவனத்துக்கும் சொல்லிவிட்டான். அது உண்மையைத் தன் கடமை என்பது அவன் எண்ணம். அதன் பலாபலன்களுக்கும் அவனுக்கும் எவ்விதமான தொடர்புமில்லை. அந்தச் சந்தர்ப்பத்துக்குப் புவனம் கொள்ளும் அர்த்தத்திலேதான் அதன் பலாபலன் தங்கியிருந்தது.

இவைகளைக் கேட்டவுடனே புவனம் திடுக்கிட்டாள். அவளால் நம்ப முடியவில்லை. தன் கணவனுக்கும் புஸ்பத்துக்கும் இடையிலுள்ள தொடர்பு காதலா சகோதரத்துவமா என விளங்கிக் கொள்ள முடியாது கஷ்டமாய் இருந்தது. 'காதலாயிருந்தால் என்னிடம் பூரண அன்பு செலுத்தும் அவருக்கு அது முதற்காதல் தானே; முதற் காதல் சதுப்பு நிலத்து மரம். அதன் வேர் பிடிப்பற்றும் பெலயின்றியுமிருக்கும். மேலே கொழுகொழுவென்று பரிமளிப்பதாய்த் தோன்றும். ஒரு சிறு புயற்காற்றாற் சாய்ந்து விடக்கூடியது. அது. இளமையில் உணர்ச்சி வேகத்தில் யாருக்கும் ஏற்படக்கூடிய மனித சுபாவம். சகோதரத்துவமாயிருந்தால் என் கணவன் ஒரு உன்னத புருஷன்; அமரன், இரண்டுமின்றி வேறொன்றாயிருந்தால்....' அதை அவளால் நினைக்கவே முடியவில்லை. அந்த எண்ணம் ஒரு விஷசர்ப்பமாய் அவள் மனதில் படம் விரித்தாடியது. புஸ்பம், மாக்கிறெட் உருவில் தன் உயிருண்ண வந்த ஒன்றோ எனச் சந்தேகித்தாள். அடுத்தகணம மாக்கிறெட் ஏன் தனது முழு உருவத்தையும் வெளிப்படுத்தவில்லை. அதனுள் ஏதாவது கெட்ட எண்ணம் மறைந்து கிடக்குமோ? யார் கண்டார்கள்? மனித மனம் விசித்திரமானது. மாக்கிறெட்டின் மனம் எப்படிப்பட்டதோ என்று எண்ணிய அவளுக்குப் புதிய பிரச்சினை பிறந்தது.

மாக்கிறெட்டிடம் அந்தக் கடிதத்தைக காட்டுவதா? விடுவதா? காட்டினால் அவள் ஏதாவது வித்தியாசமாய் விளங்கிக்கொண்டு விசித்திரமான முடிவுக்கு வந்துவிட்டால் என்ன செய்வது? காட்டாவிட்டால் உண்மை புலனாகாதே. அது தெளிவடையாவிட்டால் என் மனம் ஆறாது. சந்தேகம் தெளியாது. நான் ஏன் அந்தக் கடிதத்தை ஒளித்து வைக்கவேண்டும்? காட்டவேண்டியது தான் என்று தீர்மானித்தாள்.

மாக்கிறெட் அந்தக் கடிதத்தை ஒருமுறை படித்தாள். இரண்டு மூன்று முறை படித்தாள். அந்த அநாமதேயக்கடிதத்தை ஊடுருவிக்கொண்டு அவளுக்குப் பொறாமை நிறைந்த உலகம் தெரிந்தது. அந்நியர்களான ஆண் பெண் கூட்டுறவால் காம உணர்ச்சிதான் செறிந்திருக்கும் என்று

தீர்ப்புக்கூறும் உலகின் மடமை தெரிந்தது. புனிதமான சகோதர அன்பை இன்னதென அறிந்த கங்காதரனின் உள்ளம் தெரிந்தது. அவைகள் எல்லாவற்றிற்கும் மேலாகச் சிகரம் வைத்தாற்போலப் புவனத்தின் இருதயம் ஒளிவீசிக்கொண்டிருந்தது. அந்த இருதயத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது மாக்கிறெட்டின் மனம்.

'புவனம் ஒரு பெண். நானும ஒரு பெண். இந்த நிலமையில் நான் இரந்தால்? நான் புவனத்தைப் போல நடந்திருக்க முடியாது. அதற்கு என் உறுதி போதாது. ஆனால் புவனம் - என் அக்கா எப்படி நடந்துகொண்டாள்? அவள் மனதில். சந்தேகம் இல்லையா? தன் புருஷன் பரஸ்திரி தொடர்புள்ளவன் என்ற நினைப்பு அவள் மனதில் சந்தேகம் இல்லையா? தன் கணவனும் தன்னைப் போலவே என்னிடம் அன்பு செலுத்தினான் என்ற முடிவும் அவள் பதி பக்தியுமல்லவா அவள் அமைதியைக் காப்பாற்றின. அவள் வாழ்வுக்குப் புத்துயிரளித்தன.

'இருந்தாலும் பெண்ணுள்ளத்தின் சுபாவமான சந்தேகம் மீண்டும் தலையெடுத்தால் அவர்கள் குடும்பம் அமைதி இழந்து தத்தளிக்குமே; அதற்கு நான் தானே பொறுப்பு. என்னால் ஒரு குடும்பம் பிரிய நேரிட்டால் நான் உயிர்வாழ்ந்து என்ன பிரயோசனம்? இவ்வளவு காலம் என் வாழ்வில் கண்ட பலன் இதுதானோ?

'நான் வந்த அன்றே என அண்ணாவை கங்காதரனைத் தெரியும் என்று சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அவர்கள் வேதனையடையச் சந்தர்ப்பம் ஏற்பட்டிராது. ஏனோ என் மனம் இடங்கொடுக்கவில்லை. புஸ்பவல்லி மாக்கிறெட் இந்தப் பெயர் மாற்றம் தானே இவ்வளவிற்கும் காரணம். நான் கிறிஸ்தவளானது அவர்களுக்கு எப்படித் தெரியும்? இவைகளை நான் சொல்லியிருக்க வேண்டும்.

'நான் தான் தவறு செய்தவள். ஆனால் உண்மையுணர்ந்த புவனம் கலங்கவில்லை. அவள் ஒரு தெய்வப் பெண். அவளுடைய அன்புக்கு நான் தகுந்த பாத்திரமா?' என்று அவள் உள்ளம் கலங்கியது. அந்தக் கலக்கத்திலிருந்து ஒரு தெளிவும் பிறந்தது.

## 6

அன்று காலையிற் புவனம் பெருங்குரலில் அழுதாள். கங்காதரன் விம்மி விம்மி அழுதான். வஸந்தி அழவிலலை. தூங்கிக்கொண்டிருந்தாள். அவர்கள் காலடியில் கிடந்த மாக்கிறெட் தேம்பித் தேம்பி அழுதாள்.

கங்காதரனும் புவனமும் எவ்வளவு சொல்லியும் அவள் எழும்பவில்லை. அவர்கள் பாதங்கள் அவளுக்குச் சாசுவதமாய்க்

கிடைத்துவிட்டால் அதுவே அவள் பூரண திருப்தி. அவள் மனம் உடைந்து அன்பு வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. அவள் விக்கி....விக்கித் தன் மனதைத் திறந்து காட்டினாள். "அக்கா.... அண்ணா, உங்கள் அன்பு எல்லையற்றது. உங்கள் உதவி வானத்தில் பெரியது. இவைகளுக்குப் பிரதியாக நான் எதையும் செய்ய முடியாது. என் உயிரைக் கொடுத்தாலும் அது அவைகளுக்கு ஈடாகாது. நான் பாவி. இப்பாவியின் கூட்டுறவால் தங்கள் குடும்பத்திற்கே களங்கம் ஏற்பட்டுவிட்டது.

"அக்கா.... நான் தங்களுக்கு எந்தவிதமான துரோகமுஞ் செய்யவில்லை. அண்ணா, நான் உங்கள் புஸ்பம் தான். அதைச் சொல்ல முதலில் என்னால் முடியவில்லை. ஆனால் பிரியாமல் இருப்பதும் முடியாதது. என் செல்வம் வஸந்தி என்னைக் கேட்டபாள். உங்களை நச்சரிப்பாள். அவளைக் கோபிக்கவேண்டாம். இந்தப் பையைக் கொடுங்கள். நான் போகிறேன். ஆசீர்வதியுங்கள். நீங்கள் என் மனதிற் குடிகொண்டிருக்கும் தெய்வங்கள். உங்களை நான் என்றுமே மறக்கமுடியாது. என்னை இனிமேல் மறந்துவிடுங்கள்" நெஞ்சின் ஆழத்திலிருந்து அன்பில் தோய்ந்து கண்ணீர் வெள்ளத்துடன் கலந்து வந்த வார்த்தைகளைக் கேட்க அவர்களால் முடியவில்லை. அவர்கள் அவளைத்தூக்கி நிறுத்தி ஆறுதல் சொன்னார்கள். ஆனால் அவள் கடைசித் தீர்மானத்தை மாற்ற அவர்களால் முடியவில்லை.

மாக்கிறெட் போய்விட்டாள். அவர்களது அருமந்த சகோதரி போய்விட்டாள். வஸந்தியின் சித்தி போய்விட்டாள். இனி வரமாட்டாள்.

## 7

"அப்பா, சித்தி எங்கே அப்பா?" என்ற குரல் கேட்டு அவன் மனக்குரங்கு ஸ்தம்பித்தது. சிந்தனைத் தொடர்பு அறுந்தது.

"சித்தியா? அம்மா..... அவள்.... அவள்...." அவன் வார்த்தைத் தொடர்பும் அறுந்தது. அவன் கண்கள் கலங்கின. "ஏனப்பா சித்தி எங்கே?" என்றது மீண்டும் குழந்தை. அவனால் பொறுக்க முடியவில்லை. குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டான். ஆனால் அவன் அந்தக் குழந்தைக்கு நாலு அறை கொடுக்கவுமில்லை; அது வீறிட்டு அழவுமில்லை.

❖❖❖

# 14. அக்கினி

"பார்வதி நீயும் ஒரு பெண்ணா? பெண் பெண்ணாய் வாழ்வதற்கு வேண்டிய சில குணங்கள் உன்னிடம் இல்லையே. கொஞ்சம் பொறாமை, சந்தேகம், பிடிவாதம் என்பனவும் பெண்மைக்கு உப்புப்போல அவசியம்."

என்னக்காவின் எண்ண ஓட்டத்தில் வெளிப்பட்டு வெடித்த சில குமிழிகள் இவை. அக்காவின் இந்த அறிவுரைக்கு நான் என் சிரிப்பினாற் பதில் கூற எண்ணினேன். அக்காவின் முன் வாய்கொள்ளாமற் சிரிப்பது என்மட்டில் அநாகரிகமாகத் தோன்றியது. சிரிப்பைப் பலாத்காரம் பண்ணி கோணல் மாணலாய் அடக்கிக் கொண்டேன்.

"உப்பு சுவை கூட்டும் ஒரு பொருள்; இல்லையா அக்கா?"

"ஆமாம் உப்பும் அளவுக்கு மிஞ்சிவிட்டால் கரிக்கும். பண்டம் பாழாகிவிடும். அதனாலேதான் பொறாமை, சந்தேகம், பிடிவாதம், பெண்மையிலே திமிரும் ஆண்மை எல்லாம் பெண்ணின் வாழ்வுக்கு அளவோடு தேவை என்கிறேன்."

"என்னவோ உன் கருத்தின் ஆழத்தைத் தொட என்னால் முடியவில்லையக்கா."

"இதில் ஆழமென்ன அகலமென்ன? தன்னைக் கொண்டவனைத் தவிரப் பெண்ணுக்குச் சுவைப்பொருள் - வாழ்வு கிடையாது. அந்தச் சுவையை அனுபவிக்க, தன்னைக் கொண்டவனைத் தன்னுடையவனேயாக்கிக் கொள்ள அவையெல்லாம் வேணும். என்னுடைய அனுபவம் இது. புத்தியுள்ள பெண்ணாய் நடந்துகொள்."

விதைக்க வேண்டியதை விதைத்த பின்னர் அக்கா போய்விட்டாள். தான் விதைத்த விதை கருக்கட்டி முளைவிட்டு வளர்ந்து விளையுமோ

விளையாதோ? அதைப்பற்றி அவளுக்குக் கவலையில்லை. என்மீது அவள் கொண்ட பாசம் தன் அனுபவங்களைக் கூறத்தூண்டியது. அது பாசத்தின் கடமை. அவ்வளவுதான்.

என் அக்கா தூவிய வித்துக்கள் என் மனநிலத்தில் விழுந்து புதையவில்லை. அவை பதராகிக் காற்றிலே பறந்துவிட்டன. அகற்றவேண்டிய நச்சுக்குணங்களைப் பயிரிடவேண்டுமென்று அக்கா கூறியது எனக்கு வேடிக்கையாயிருந்தது. முதன் முறையில் என்றென்றைக்குமாய் என்னைப் பற்றிக்கொண்ட அவரை, மீண்டும் மீண்டும் என்னுடையவராக்கிக் கொள்வது என்பது தருக்கப்பிசகு. அக்காவுக்கு இந்த விஷயம் ஆண்டுதோறும் புதுப்பிக்கும் ஏதோ ஓர் அனுமதிப்பத்திரம் போலத் தோன்றுகிறதோ! அதை நினைக்கும்போதே என் மனம் குமட்டியது. வாழ்க்கையின் உன்னதமான ஒளிச்சிகரங்களிலும் துன்பமுஞ் சுமையுமான இருட்குகைகளிலும் கண்ணனின் விசுவரூபதரிசனம் போல அன்பின் தரிசனந்தான் தோன்றவேண்டும். இந்த எனது விருப்பம் - வேட்கை - என் சொந்தமல்ல. பழக்கவாசனை. அவரின் கண்ணில், புருவச்சுழிப்பில், சிரிப்பில், கன்னக் குழிவில், பேச்சில், செயலில், நான் கண்ட அன்பின் மிருதுவின் ஒரு கூறில் என்னை இழந்ததன் விளைவோ அந்த வேட்கை! என் சீமானுக்கு இப்படி ஓர் அன்பு - உலகத்தைத் தன்மயமாக்கி அணைத்துக்கொள்ளும் அன்பு. இந்த அருள் இவருக்கு எப்படி வாய்த்தது? அதை நினைக்கும்போது என் நெஞ்சு வெடிக்கிறதோ, விம்முகிறதோ, உருகி இல்லையாய்விடப் பரவசமொன்றுதான் மிஞ்சுகிறதோ எப்படிச் சொல்வேன்.

நான் என் பதியின் உபாசகி. பத்து வருடங்களிற்கு முன் அவர் கைகொடுத்த அன்று தொடங்கிய உபாசனை என்றுமே முடியக்கூடாது. அந்த உபாசனையின் நிவேதனமாய் நான் என்னைச் சமர்ப்பிக்கும்போதும், அந்தச் சமர்ப்பணத்தில் குடும்பமென்னும் பாற்கடல் தோன்றும்போதும், உடல் அழிய உள்ளம் ஆகி ஆகிக்கொண்டு வருகிறது. தேங்காய்ப்பூச் சிதறலாய் நரை படர்ந்து, கீறுகள் விழுந்த கண்ணாடியாய் முகஞ்சுருங்கி, முதுமை எட்டிப்பார்க்கத் தொடங்கிய இப்பொழுது.....

மாதுளம் பழத்துக்கு அதன் குமரிப்பருவத்து மருட்டும் நிறமும் அழகும் தளதளப்பும் மங்கிப் போகலாம். ஆனால் அதனுள்ளே இரசகுண்டுகளாய் விளையும முத்துக்கள் தானே அதற்குப் பெருமை.

நான் மாதுளங் காயல்ல; மாதுளம் பழம்.

சிறு நரையும் சிறு திரையும் எனக்குக் குறைகளோ!

என் நரையும் திரையுமே என் அக்காவுக்குத் தோன்றின. அவளால் மெய்யான என்னைக் காண முடியவில்லை. அதனால் பொய்யான

என்னையும் அவ்வரையும் ஒப்பிட்டு எச்சரிக்கை விட்டிருக்கிறாளோ! அவளல்ல, எங்களைச் சோடி சேர்த்துப் பார்க்கும் எவருமே "பார்வதி, புத்திசாலியாய் நடந்துகொள்; என்றுதான்" சொல்ல வேண்டும். இவ்வளவுக்கும் அவருக்கு நாற்பத்துநாலு வயது; எனக்கு முப்பத்தைந்து.

எனக்கு ஆச்சரியம்! அன்றைக்கு இன்று ஒரு மாற்றுத்தானும் குறையாமல் எப்படி அவரால்.... வேண்டாம். திருஷ்டிக்கும் விஷம் உண்டாமே....

அப்படி ஒரு தேகவாகு அவருக்கு.

எப்பொழுதும் கோவிலில் வசந்த மண்டபப் பூசையைக் காண என்னுள் ஒரு கிளுகிளுப்பு நெளியும். பூசை முடிந்த பின்னும் அந்த இடத்தை விட்டு நகர இயலாமல் நின்றுவிடுவேன். என் கண்ணில் ஏனைய நான்கு புலன்களும் சங்கமித்து ஒன்றாய்விடும். துடிக்கும் குத்துவிளக்கொளியில் சந்தனக் காப்பிட்ட திருமேனியும் அருளொழுகு கண்ணும் குறுஞ்சிரிப்பும் கொண்ட கோலக் குமரன்; அவன், அழகுக்கொள்ளை; கொள்ளை அழகு. அவனைக் கண்ணாற் காண்பேன்: கண்ணாற் சுவைப்பேன்: கண்ணால் அணைவேன்: கண்ணால் முகருவேன்: கண்ணாற் கேட்பேன்.

அப்படியானால் அவனில் அவரைக் காண்கிறேனா?

அப்படியானால் அவர் அவனின் சொருபமா?

அதனாலேதான் அப்படி ஒரு தேகவாகோ?

அதனாலேதான் அன்றைக்கும் இன்றைக்கும் ஒரு தோற்றமோ?

அதனாலேதான் என்னில் அவர் இருக்கிறாரோ - அல்லது அவரில் நான் இருக்கிறேனோ.

அந்தக் கோலம் - கோலத்தின் பூரணம்.... அதைப் பற்றி எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஐயோ, ஐயோ என்று அங்கலாய்க்கத்தான் வருகிறது.

ஆனால் எனக்கு ஒன்று தெரியும். அக்கா பயப்படுவது போல அந்த அழகு கொள்ளை போகாது.

அது அச்சமற்ற அழகு.

ஏதோ சொல்வார்களே, நிருத்தக்கலையின் உன்னத தேஜஸ் என்று. அதுதான் அந்த அழகு.

அவருக்கு நிருத்தம் ஆடவும் தெரியும்; ஆட்டுவிக்கவும் தெரியும். பழகவும் தெரியும்; பழக்குவிக்கவும் தெரியும். நாட்டியக் கலாலயத்தின் அதிபனும் ஆசிரியனும் அவர்தான். இந்நாட்டிலுள்ள புகழ்பெற்ற நாட்டியக் கலாவல்லிகள் எல்லாம் அவரால் உருப்பெற்றவர்கள். அவரின் நிருத்தக்கலை வழிந்தோடும் வாய்க்கால்கள் அவர்கள்; அவரின் முத்திரையும் பாவமும் பாணியும் சுருதியும் தாளக்கட்டும் எல்லாமே அவர்களிலும் பிரதிபலிக்கின்றனவாம்.

"சிவலிங்கனார் பாணி" என்று முத்திரை குத்துமளவுக்கு நிருத்தக்கலையில் ஒரு புதுயுகத்தைத் தோற்றுவித்து விட்டாராம். கேட்கும்போது என்னுள்ளெ பெருமை பாய்கிறது. அவரின் நாட்டிய கலாலயத்தில் எல்லாரும் மாணவிகளாம். வாளிப்பான உடற்கட்டும் அழகும்கொண்ட பருவமங்கைகளாம். எல்லாம் அவரே சொல்லிக்கொண்டவை. கலாலயத்தைப் பற்றிச் சொல்வதென்றால் அவருக்கு ஒரு தனிச்சுவை: கேட்பதில எனக்குத் தனியோர் உருசி. ஒருநாள் அவர் சொல்லுகிறார்:

"கலாலயம்தான் என் கோயில். கலாலய மாணவிகள் தாம் அங்குள்ள அழகொழுகு தங்கவிக்கிரகங்கள்."

"ஒரு சந்தேகம்" நான் குறுக்கிடுகிறேன்.

"என்ன?"

"அந்தக் கோவிலின் மூலமூர்த்தி யார்? நீங்கள் தானே?" என்னுள் அடங்காமை ஒன்று பிறந்துவிட, அந்த முகபதுமத்தை இரு கையாலும் மெல்லென ஏந்திக்கொள்ளுகிறேன். என் கைகளுட் கிடந்த அவர் முகத்திற் கண்கள் சிரிக்கின்றன.

"உ-ஹூம்."

இருவரும் சிரிக்கிறோம்.

"ம் மேலே... சொல்லுங்கோ" நான் கெஞ்சுகிறேன்.

"அந்தக் கோவிலின் மூலமூர்த்தி நானானால் நிச்சயமாக அந்த மூர்த்தியின் தேவி நீதான்: சக்தியில்லாமல் சிவமா-"

என் நெஞ்சை ஆனந்தம் பந்தாடுகிறது. அவருக்கு வெறி பிறக்கிறது.

"கலாலயம் என்கோயில்; திருக்கோயில்; திருத்திருத் திருக்கோயில். மாணவிகள் தங்க விக்கிரகங்கள். நிருத்தக் கலை என் மூச்சு. அதனால் நிருத்தம் உள்ளவரையும் நான் நித்தியன். என் உயிரின் உயிர் சாகாது. வெளி உயிர் என்றோ ஒருநாள் நிருத்தம் ஆடி ஆடியே சாகும். வெளி உடல் வெந்து சாம்பரானாலும் அந்தச் சாம்பரில் நிருத்தம் மணக்கும்."

நான் அவரிலே பதித்த கண்களைப் பறியாமல், கல்லாய்ச் சமைந்துவிடுகிறேன்.

"இன்னும் கேள் - நான் என் சிஷ்யைகளின் கையைப் பற்றுவேன்; காலைத் தொடுவேன்; அவர்கள் முகமலரைத் தாங்கிக் கொள்வேன்; கண்ணால் அவர்களுடன் பேசுவேன்; அவர்களை அணைத்துக்கொண்டு அவர்களுடன் ஆடுவேன்."

உயிர்க்கூடு வெடித்து உள்ளேயிருந்த என் உயிர்ப்பறவை தப்பிவிடுவது போன்ற உணர்வு. ஆயிரம் ஆயிரம் நாக்குகளை நீட்டி. அக்கினி ஒன்று என்னை அணைப்பது போன்ற மயக்கம். என்றாலும் என் கண்கள் அவர் முகத்திலேதான் ஒட்டியிருக்கின்றன.

"அப்பொழுதெல்லாம் அந்த மாணவிகள் அங்கிருக்கமாட்டார்கள். நீதான் இருப்பாய். அவர்களையா தொடுகிறேன். அணைக்கிறேன். உன்னைத்தான் தொட்டு அணைக்கிறேன். அவர்களுடனா ஆடுகிறேன். உன்னுடன் கைகோத்தல்லவா ஆடுகிறேன். அப்படி ஒரு பாவனை - மிக மிக வலுவான பாவனை - இல்லாவிட்டால் நான் நானாக இருப்பேனா?"

என் அடிவயிற்றிலிருந்து தோன்றிய அந்தப் பெருமூச்சு, இப்போது என்னுள்ளத்தைக் குளிர்வித்து வெளியேறுகிறது. நான் சொக்கிய கண்ணளாய் அவர் மார்பிற் புதைகிறேன். அவர் கைகள் என்னை இறுக அணைத்துக்கொள்கின்றன. சுகம் - சுகம் - சுகமயக்கம்.

ஆழக்கிணற்றிலிருந்து வருவதுபோல அவர் குரல் கேட்கிறது.

"என்ன பார்வதி, உனக்குத் தலை நரைத்து விட்டதா? இதென்ன முகத்திலே சுருக்கம். இவ்வளவு நாளும் நான் காணவில்லையே."

நான் துடிக்கிறேன். ஐயோ, இதென்ன, என்றென்றுமே காணக்கூடாதவற்றை அவர் கண்கள் கண்டுவிட்டனவே; உணரக் கூடாததை மனம் உணர்ந்துவிட்டதே; அவர் பார்வையிலும் மனத்திலும் ஒரு பேதம் விளைந்துவிட்டதே. என்றாலும் என் உள்ளப் புலம்பல் அவருக்குக் கேட்கக்கூடாது; தெரியக்கூடாது என்று எண்ணுகிறேன். உள்ளம் ஒன்றாகையால் எனது எண்ணத்தின் கள்ளம் அவருக்குத் தெரிந்துவிடுகிறதோ? அதனால் சமய சந்தர்ப்பம் தெரியாமல் அவர் பேசுகிறாரோ!

"இன்று மாலை உன்னக்கா கலாலயத்திற்கு வந்தார். சிறிதுநேரம் இருந்து பார்த்தார். எதுவும் சொல்லவில்லை. புறப்பட்டுவிட்டார்."

"அவர் நேரே என்னிடம் வந்துவிட்டுத்தான் போகிறார்"

அணுப்பிரமாணமான கரும்புள்ளி ஒன்று என்னுள் இறங்கிவிட்டதோ? அதனாலேதான் இப்படிப் பேசுகிறேனோ?

"ஓகோ அப்படியா - நல்லது" சொல்லிவிட்டுச் சிரிக்கிறார். வழக்கமான அதே சிரிப்பு. அதே கன்னக் குழிவு. அதே கண்ணின் மலர்ச்சி.

ஆமாம்; எது நல்லது என்று நான் சிந்திக்கத் தொடங்குகிறேன்.

## 2

கலாலயம் அவர் கோயில்; வீடு என் கோயில்; ஆனால் இரு கோயிலுக்கும் மூலவர் ஒருவர். இந்த எண்ணத்தாற் பூசை, வழிபாடு செய்த எனக்கு, அன்று ஏனோ கலாலயத்துக்குப் போகவேண்டும் என்ற எண்ணந்தோன்றியது. அன்று கலாலயத்தின் வெள்ளிவிழா. அவர் ஒருமுறை அழைத்தபோதே உடன்பட்டுவிட்டேன். அவருக்கு ஒரே திகைப்பு - ஆனந்தத் திகைப்போ - அல்லது.... ஆனால் அவர் வழமைபோலச் சிரித்தார்.

ஆணி முத்துக்களைப் பொறுக்கி எடுத்துப் பளிங்குத் தரையில் உருளவிட்டால் - ஆமாம் அதைப்போல நிகழ்ச்சிகளெல்லாம் கன கச்சிதம்.

விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்று அர்த்தமாம். விருந்தை உண்ணமுடியாது; அனுபவிக்க வேண்டும் என்பதை அன்று நான் உணர்ந்தேன். அந்த நிகழ்ச்சிகளை ஆட்டுவிப்பனுக்குள்ள பெருமை. புகழ் என்பனவற்றிற் சரி பாதி சக்தியான என்னையும் வந்தடைந்தபோது....

நான் ஒரணுவாய்க் காற்றிற் கலந்து எல்லையற்ற பிரபஞ்சத்தை வலம் வந்துகொண்டிருந்தேன்.

நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும் நான் நானாகி அவரைப் பார்த்தேன்.

அவர் பழைய, புதிய, எதிர்வரும் புதிய சிஷ்யகோடியின் மத்தியில் வழமையான அந்தச் சிரிப்போடு மலையாய் நின்றார். மிகப் பழைய மாணவிகளில் ஒருத்தி, தன் தாலியை நெருடிக்கொண்டு, அவரை விழுங்கி விழுங்கி....... ஆமாம், அப்படியே விழுங்கினாள். அந்த நீலச்சேலைக்காரிக்கு அவ்வளவு எச்சில் எங்கிருந்து வந்ததோ, உதடு முழுவதையும் எச்சிலாக்கி அதையே சுவைத்துச் சுவைத்து அவரைப் பார்த்துக்கொண்டு நின்றாள். இன்னொரு பூங்கொடி, இதோ உங்களிலே படர்ந்து விட்டுத்தான் மறுவேலை என்பதுபோல அவரிலே தாவத் துடித்தாள். இன்னொரு துணிச்சற்காரி அவர் கைகளைப் பற்றிக்கொண்டு வருடினாளா? கசக்கினாளா? பிழிந்தாளா?.....சீச்சி....

அவர் எல்லோரோடும் பேசுகிறார்; எல்லோரோடும் சிரிக்கிறார்; போதும் போதாததற்குக் கண்களாலும் பேசுகிறார்.

பாதரசத்தை கையாற் பற்றி அகப்படுத்திவிட முடியாதாம். ஒரு சிறு குழாய்க்குள் சிறைப்பிடித்துக்கொண்டால் சீதோஷ்ணத்துக்கேற்பத் துடிக்குமாம்.

நிச்சயமாக அவர் பாதரசந்தான்.

எவளாவது ஒருத்தி குழாயாய்ச் சிறைப்படுத்திக் கொண்டால்...

யாரோ என் தலையிலே கருங்கல்லுத் திரிகையை வைத்துச் சுற்றுகிறார்கள். நான் சோர்ந்து நிலத்தில் விழுவதை, சாகாமற் கிடந்த பிரக்ஞையில் ஒரு துளி கொண்டு உணருகிறேன்.

## 3

"பார்வதி, பார்வதி!"

யாரோ என்னைக் கூப்பிடுகிறார்கள். யாரோவா? அவர்தான் என்னைக் கூப்பிடுகிறார். மெல்லக் கண் திறந்து பார்க்கிறேன்.

அவர்....

என் தலையைத் தன்மடியில் ஏந்திக்கொண்டு அவர்.... அவர் முகத்துக்குச் சோகத்தின் கனிவும் அழகு பேசுகிறது. இத்தகையதொரு சோகக் கனிவை காண்பதும் என் தவம். அந்தச் சோகம் பரிபூரண அன்பைப் பாஷையாக்கிப் பேசுகிறதோ? அப்படியானால் அந்தப் பேச்சைக் கேட்பதற்கு ஓராயிரந்தரம் மயங்கி விழலாமே. மயக்கமே நீ வாழ்க! மயக்கமா அது; அன்பின் பரிசோதனைக்களம். இந்த நிலை என்னுள் ஆனந்தத்தை எழுப்புகிறது. நான் அவர் முகத்தைப் பார்த்துச் சிரிக்கிறேன். அங்கே இருள் விலகி ஒளி படர்கிறது.

நான் அவர் கையை மார்பிற் பொக்கிஷமாக்கி வருடுகிறேன்.

"பார்வதி, பார்வதி"

அப்போது முனகல் தான் என்பேச்சு. அதற்குமேல் எனக்குப் பேசத்தெரியவில்லை.

"பார்வதி, இப்போது உனக்கு என்ன வேண்டும்; சொல். கொண்டு வருகிறேன்." அவர் எழும்ப முயலுகிறார். நான் அவர் கழுத்தைக் கட்டிக்கொள்கிறேன்.

"ஒன்றும் கொண்டவரவேண்டாம். இங்குள்ளதைத் தாருங்கள்."

"எதை"

"உங்களை.... உங்களையே தாருங்கள்"

அவர் முகத்திற் பழைய மலர்ச்சி; பழைய சிரிப்பு; பழைய கன்னக்குழிவு - கண்ணின் பழைய பாஷை.

"ம்... இப்பொழுது எப்படித் தரமுடியும். எப்போதோ தந்தவிட்டேனே.

"இல்லை முழுமையாகத் தாருங்கள்" அவர் மார்பிற் புதைந்து உள்ளே போய்க்கொண்டிருந்தேன். அவர் சிரித்துக்கொண்டு என் முகத்தை நிமிர்த்தி ஏந்துகிறார்.

"முழுமையாக என்றால்"

அவர் கேள்வி விளக்கம் கோருகிறது. விளக்கம் கொடுக்க எனக்குத் தெரியவில்லை.

"முழுமையாக - முழுமைக்கு முழுமைதான் பொருள். அதாவது நீங்கள் பாதரசமாகக் கூடாது. யாராவது கண்ணாடிக் குழாயில் அடைத்துவிடுவார்கள்" நான் கொஞ்சிச் சிணுங்கிச் செல்லமாய் வேண்டுகிறேன்.

"ஓகோ இதுவா, நான் என்றுமே பாதரசமல்ல, அக்கினி"

"ஐயோ அக்கினியா, சுடுமே."

அவர் முகத்திற் சிந்தனை நிழலிடுகிறது.

"சுடாது. உன்னைப்போல அதற்குப் பலியாகி அர்ப்பணமாகி விடத் துடிப்போர்க்குச் சுடாது. சுகஞ் செய்யும். மற்றவர்கள் பார்க்கலாம்; வியக்கலாம்; இரசிக்கலாம்; குளிரானால் அணுகியிருந்து காயலாம்; ஆனால், தொடக்கூடாது.

"எனக்கு எதுவுமே விளங்கவில்லை; ஏதேதோ சொல்கிறீர்கள். உங்கள் முகமும் அக்கினியாய்ச் சுவாலிக்கிறது. வேண்டாம்; ஒரு தரம் சிரியுங்கள்"

அவர் சிரிக்கிறார். நானும் சிரிக்கிறேன்.

என்றாலும் என் மனத்தில் விழுந்த அந்த அனுவத்தனை கரும்புள்ளி கரையவில்லை.

4

"பார்வதி இன்றும் கலாலயத்தில் ஒரு கலைவிழா. வருகிறாயா"

அவரில் அக்கினியின் வெம்மையில்லை. ஆனால் ஆற்றல் இருந்தது.

"என்ன, அதற்குள்ளாக இன்னொரு விழாவா?"

"ஆமாம் மிகப் பிரதானமானதொரு தேவை வந்துவிட்டது. இவ்விழாவுக்கு நீதான் தலைவி"

"ஐயையோ, அடிமைக்குத் தலைமையா? வேண்டாம்"

"பார்வதி, தலைமை அடிமையாவதும் அடிமை தலைமையாவதும் அந்தந்த வேளையைப் பொறுத்தது. விரும்பாவிட்டால் விடு. நான் தலைவனாகிவிடுகிறேன். ஆனால் விழாவுக்கு நிச்சயம் வரவேண்டும்"

விழாவுக்கு நூறே நூறு பேர் தான் வந்திருந்தார்கள். எல்லாரும் பெண்கள். அவரின் சிஷ்யைகள்.

பழைய நினைவில் மனம் சுழித்தது. நிச்சயமாகப் பறிபோகாது என்பது தீர்க்கமானாலும் பறிபோய் விட்டாலோ என்ற சலனத்தையுள்ளடக்கிய நினைவு. அதை நினைக்கும்போது வெட்கமும் தலைதூக்கியது.

நூறு பேருக்கு ஒரு விழாவா? அந்த நிலையில் எனக்குத் தொகை முக்கியமேயன்றி தரம் முக்கியமாகப் படவில்லை.

வேளை வந்தது. திரையகன்றது. காட்சி மலர்ந்தது.

பிட்சாடனமூர்த்தி அரங்கிலே தோன்றுகிறார். பின்னிய செஞ்சடை, நீண்டு தொங்கும் தாடி, சாம்பல் படர்ந்த மேனி, கையிற் கபாலம், ஏறக்குறைய நிர்வாணக்கோலம். ஆனால் உள்ளத்தை உருக்கி நெகிழ்விக்கும் பொலிவு; தெய்வீக ஒளி.

யார் இந்தப் பிட்சாடனமூர்த்தி? அவரா? அவரே தான். அவருக்கு இத்தகையதொரு தோற்றம், கோலம் எப்படிச் சித்தித்தது. இது புறத்தில் ஒப்பனை ஒன்றினால் வாய்த்த வடிவமல்ல. உள்வடிவம்; மனக் கோலம். நான் மனம் புத்தி சித்தங்களைக் கண்ணுள் வைத்துக்காணுகிறேன்.

பிட்சாடனர் தாருகாவனத்துக்குச் சென்று கபாலத்தை நீட்டிப் பிச்சைக்காக மனைவாயில் தோறும் இரக்கிறார். உள்ளத்தைக் கவ்வும் மெல்லிசை பின்னணியில் இழைகிறது. இசை துரிதகதியில் ஆரோகணிக்கிறது. தாருகாவனத்து முனிபத்தினிகள் இடுதற்காக ஏந்திய பிச்சையுடன் அரங்கிற் காட்சியளிக்கின்றனர். ஆகா, அந்த முனிபத்தினிகள், தவத்தின் திண்மையும் கற்பின் கனலும் பிணைந்த இணைவு; எழிலின் ஆட்சி; எளிமைக் கோலம். அவர்கள் பிட்சாடனரைக் காண்கிறார்கள். தம்மை மறந்த நிலையிற் பார்க்கிறார்கள். பிட்சாடனரில் இரண்டறக் கலந்துவிடும் நிலை; பிச்சிநிலை; உள்ளம் ஒரு நெறிப்பட்டுச் செல்லும் நிலை; லயநிலை. அவர்களுக்குத் தங்கணவர் யார்? தாம் யார்? எதற்கு வந்தோம்? என்ன செய்கிறோம் என்ற எல்லாமே குடிபோன நிலை. வளைசிந்த. உடைசிந்த. நாண்சிந்த. கற்புச்சிந்த நிற்கும் நிலை. பிட்சாடனர் பிட்சாடனராயே நிற்கிறார். அவரில் மாற்றமில்லை.

அந்த இசை நடனம் முடிகிறது. திரை விழுகிறது.

அவர் வருகிறார். முன்போலவே ஒருத்தி தாலியை நெருடுகிறாள். நீலச்சேலைக்காரி தன் எச்சிலைத் தானே சுவைக்கிறாள். பூங்கொடியொன்று படரத் துடிக்கிறது' அவரின் கையை வருடுகிறாள் ஒருத்தி.

இப்போது நான் மயங்கி விழவில்லை. இரசிக்கிறேன். உள்ளத்தைத் திறந்து இரசிக்கிறேன்.

அவர் என்னசெய்வார்? இல்லை. என்ன செய்கிறார்?

அக்கினியைப் பார்க்கவும் இரசிக்கவும் குளிர்காயவும் யாருக்கும் உரிமை உண்டு.

இனி. இதற்கு என் மனம் நிறைந்த அனுமதியுண்டு.

இப்போதுதான் அவர் முன்பு சொன்ன முழுமையின் பொருள் புலப்பட்டது.

அவர் முழுக்க முழுக்க முழுமையாக என்னுடையவர். அதனால் அவர் அக்கினி.

உண்மையில் இப்போதுதான் நான் புத்திலிசாலிப் பெண்.

❖❖❖

# 15. அன்புக்கறை

மீனாட்சி கடையிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தாள். கடைக்காரர் சொன்ன உண்மை அவனது சொற்றிறமையால் அவள் மனதிற் புதைந்து, அவள் மனப்பாறையில் ஊறிக் கருக்கொண்டு அவளது அதே சிந்தனையின் தெறிப்பால் அதிசய வளர்ச்சியடைந்து ஒரு கோப விருட்சமாய் விட்டது. அந்தக் கோபம் அவளை ஆக்கிரமித்து, தானே அவளாய் அவன் முகத்தின் மூலம் எட்டிப்பார்த்தது. கூரம்பைப் போல ஒரேயொரு குறியை நோக்கிப்பாய்ந்தது. அந்தக் குறிக்கு எந்தத் தண்டனையும் விதிக்கலாமென்றும் தீர்மானித்தது.

'கூடப்பிறந்த குற்றத்துக்காகத் தன் தங்கை விட்டுச்சென்ற அவளைக் காப்பாற்றி வளர்த்ததற்காகவா அந்தச் சிறுக்கி அவ்விதம் செய்தாள். ஐந்தே ஐந்து சதம். ஒரு அப்பக் காசு தான். என்றாலும் அது என் ஒரு நாள் சீவியத்தில் எவ்வளவு மாறுதலைச் செய்யும்? ஐந்து சத நஷ்டம். அதுவும் ஒவ்வொரு நாளும். ஆ! என்ன கொடுமை!! பயத்தின் உருவான அவளுக்கு இந்தத் துணிவு எங்கிருந்து வந்தது? இன்று இந்தக் கடைக்காரன் உண்மையைச் சொல்லாதிருந்தால்..... அவள் இன்னும் என்ன தான் செய்திருப்பாளோ?' என்று எண்ணிய மீனாட்சியின் நினைவு, அங்கே கிடந்த புத்தகத்தின் மேல் பாய்ந்தது. சற்று முன்பு படிக்கப்பட்டு, விரித்தபடியே எண்ணமும் செயலுமற்ற சடமாய், அநாதைக் குழந்தைபோல் கிடந்த அதுவுமா அவள் கோபத்துக்குத் தூபம் போடவேண்டும்.? 'அவள் வேலை செய்கிற இலட்சணத்தில் படிப்பு வேறு வேண்டுமாக்கும். சரிதான், நான் சொன்ன வேலைகள்..?' என்று எண்ணிக்கொண்டது அவள் மனம்.

அவள் வாய். "அடி கள்ளி" என்று உரக்கக் குழறியது. கனன்றுகொண்டிருந்த மனப் பீரங்கியிலிருந்து வெளியே தள்ளப்பட்ட வெடிகுண்டு அது. தாக்க வேண்டிய குறியைத் தாக்கி அதன் பிஞ்சு மனதைச் சின்னபின்னமாக்கி, நடுங்கச் செய்துவிட்டது

அந்த நடுக்கத்தையும் ஊடுருவிக்கொண்டு "அம்மா" என்று குரல் கொடுத்தாள். அச்சிறு பெண். ...தில் தொனித்த அன்பையும், அபயம் வேண்டி இரங்கும் அந்த உள்ளத்தையும் துர்ப்பழக்கங்களில் புதைந்து. அவைகளே தானாய் உருவேற்றப்பட்டு. அவைகளால் உழுத்துப் போன மீனாட்சியின் கோது மனம் உணருமா?

"இவ்வளவு நேரமும் என்னடி செய்தாய்?"

"அம்மா.... நான்..... சட்டி....கழுவினேன்" கமலத்தின் முழி பிதுங்கிய கண்களும் நடுங்கிய கால்களும் குழறிய வார்த்தைகளும் அவள் பயத்தை எடுத்துக்காட்டின.

"மாய்மாலக்கள்ளி, வேலை செய்கிறாளாம் வேலை. ஒவ்வொரு நாளும் காலையில் என்னடி செய்தாய்? துடைகாலி"

"ஒன்று செய்வில்லையே. அம்மா"

ஒன்றும செய்யவில்லை. கடைக்குக் கொண்டு போன அப்பத்தில் ஒவ்வொன்றை விழுங்கினியாக்கும். வயிற்றுமாரி, தின்னத் தருகிறது போதாமல் களவெடுத்தும் தின்கிறாயா? கழுதை"

"அம்மா, அம்மா நான் தின்னவில்லை...."

"பின் என்னடி செய்தாய் தின்னாமல். பொய்யா சொல்லுகிறாய்?"

"ஐயோ... அம்மா, நான் தின்னவேயில்லை....நான்...வந்து" அவள் வார்த்தையை முடிக்கவில்லை; உள்ளே குமுறிக்கொண்டிருந்த மீனாட்சியின் உள்ளம் எரிமலை போல வெடித்தது.

"பார் பார், வேறேதோ சொல்லப்போகிறாள். சுத்துமாத்துக்காரி. இவளை.... இவளை" மீனாட்சிக்கு வார்த்தைப் பஞ்சம் ஏற்படவே அவள் மன உக்கிரம் செயலாக வெடித்தது. தனக்கு முன்னே நிற்கும் குழந்தை. அதன் மெல்லியல்பு. மாசுமறுவற்ற அதன் மனப்பண்பு. அன்பு ததும்பும் இதயம் எல்லாமே அவள் எண்ணத்தில் அமிழ்ந்து மறைந்துவிட்டன.

அடுத்த கணம்...

## 2

நாகரிக சின்னமாய் முழங்காலுக்கு மேலே உயர்ந்த சட்டை அணிந்திருந்தாலும் அதன் பக்கத்தில் பெரும் பீறலொன்று தோன்றி அவள் உடம்பை வெளிக்காட்டியது. தகுந்த போஷணையின்மையால்

தக்க வளர்ச்சியடையாமல் வாடியிருந்த உடம்பு அவள் வயதைக் மிகைப்படுத்திற்று. அவள் கையிலும் சட்டையிலும் படிந்திருந்த அழுக்கு. அவள் வீட்டு வேலைகளுக்குச் சாட்சி கூறின. ஆனால் அவளுள்ளே பரிசுத்தமான அன்பு நிறைந்த இதயம் உண்டென்பதை அவள் மலர்ந்த முகமும் துடி துடிக்கும் விழிகளும் காட்டிக்கொண்டன. அவள் தலையிலே ஒரு ஓலைப்பெட்டி - புனிதத்தோடு அலங்காரங்களுடன் கூடிய ஓலைப்பெட்டி இருந்தது. அதற்குரிய புனிதத்தைத் தானும் அவளுக்குச் செய்ய மறுத்தாளோ அவள் எசமானி. அந்த ஓலைப்பெட்டி நிறைய அப்பங்களைச் சுமந்துகொண்டு மெல்ல மெல்ல நடந்து வந்தாள். அச்சிறு பெண் கமலம். ஏழெட்டு வயதிருக்கும். தாய் தந்தையரை இழந்து நிர்க்கதியாய் அநாதையாய் நின்ற கமலத்தைப் பெரியதாய் என்ற தோரணையில், தன் மீது விழுந்த பொறுப்பென்ற முறையில், புண்ணியமாகட்டும் என்ற தர்ம சிந்தனையில் வளர்ப்பதாக எண்ணிக்கொண்டாள் மீனாட்சி.

ஆனால்.....

உலகக் கண்கள் இதோ உன் கணவன் அவனே தான் என்று தீர்மானமாகக் காட்டின, மீனாட்சிக்கு. அவன் அந்த ஊரில் உள்ள பெரும்புள்ளியாய் விளங்கி எல்லார் கண்களிலேயும் இருந்தான். அந்த அவனை மீனாட்சியின் மனம் கவரமுடியவில்லையே ஏன்?

மீனாட்சியின் மன இரும்புக்கு அன்புக்காந்தம் ஏறியிருந்தால்.....

சிறுவயதிலேயே அன்பின் சிறுமையினால் அவள் மனம் ஈரம் வற்றிவிட்டது. பின் உரிய பருவத்தில் தன்னைத் தான் அடக்காமல் மனம் போன வழியே சென்று ஆண் சமூகத்தின் பிடியில் அகப்பட்டாள். அந்தப் பழக்கத்தின் செறிவு அவனில் நிலையான அன்பைச் செலுத்த மறுத்து, அவளை ஏதேதோ செய்யத்தூண்டி துர்க்கிருத்தியங்களின் நிலைக்களனாக்கிவிட்டது.

என்றாலும் தனது அதிகாரத்தைத் தடையின்றிப் பிரயோகிக்க ஒரு மனிதப்பூண்டு கிடைத்தது, மீனாட்சிக்குப் பெருமையாக இருந்தது. மீனாட்சியும் கமலமும் இருந்தது பெரிய மாளிகையன்று. சிறு கொட்டில். அதற்குள் கிடந்த அத்தனை வேலைகளும் கமலத்தின் வேலைகளே. அத்துடன் காலையில் மீனாட்சி சுட்ட அப்பங்களைக் கடைக்குக் கொண்டுபோக வேண்டிய வேலையும் அவளுக்கு இருந்தது. அதில் தான் அந்தக் குஞ்சுமனம் சிறிது சந்தோஷம் கண்டது, சிறையிலிருந்து விடுபட்ட கைதியைப் போல.

3

ஒருநாட் காலை ஆறுமணி. அன்றும் வழக்கம்போலக் கடைக்குச் சென்றாள் கமலம். அந்தக் குழந்தையுள்ளத்துக்குக் கடைவீதியிலுள்ள காட்சிகளும் சம்பவங்களும் பழக்கமாக மாறி, கண்களுக்கும் மனத்துக்கும் அப்பாலாய் சுவையற்ற விஷயங்களாய், கவரும் சக்தியை இழந்துவிட்டன. அதனால் அவள் தானே உலகமாய், தானே உலகில் உள்ளவையாய், ஏன் தானே எல்லாமாய் தன்பாட்டில் சென்றாள்.

அந்தச் சந்தைக் கடந்து தான் அவள் வாடிக்கைக் கடைக்குப் போக வேண்டும். இவ்வளவு நாட்களும் அவள் கண்ணிலே பட்டுப் புலனிலே உறுத்தி, பிரக்ஞையிலே பதியாத அந்தச் சந்துக்கு இன்று என்னதான் சக்தி ஏற்பட்டதோ? அவள் அங்கே நின்றாள். தன்னை மறந்து, தன் தொழிலை மறந்து, தன் கண்ணையும் மனத்தையும் பறிகொடுத்த அந்த ஒன்றிலே ஒன்றி நின்றாள், உண்மைப் பக்தனைப் போல. அந்த "ஒன்று" சந்துச் சுவரோரத்தில் இருந்தது.

அந்த ஒன்று:...

அந்த ஒன்றில் மனித உயிர் நிறைந்து நின்றது. இல்லாது போனால் அதன் முகத்தில் அவ்வளவு களை நிரம்பி இராதே. அந்தக் களை நிரம்பிய கவர்ச்சிகரமான பால்வடியும் முகம் அதன் வயதை அளவிட்டுக்காட்டியது. பத்து வயதுச் சிறுவனென்று. அவன் ஒவ்வொரு அங்கங்களிலும் இயல்பான சுறுசுறுப்பு பசியினால் அடங்கி ஒடுங்கியிருந்தது. கட்டுக்கடங்காமல் நாலு புறமும் சிதறிக்கிடந்த தலைமயிரில் கொஞ்சம், கண்களை மறைத்து முரண்டு பிடிக்க, அதை மேலே தள்ளி விடுவதே அவனுக்கு வேலையாயிருந்தது. அவனுக்குச் சொந்தமென்று சொல்லக்கூடியது அந்த ஒரு துவாய்தான். பச்சைக் கரைபோட்ட அதுவும் அழுக்கின் அடிமையாய்த் தன் சுயகுணத்தை விட்டுக்கிடந்தது. மெல்லிய காலைக்குளிருக்குப் போர்வையாய் பாவித்துக்கொண்டு குந்தியிருந்தான். தன்னுள்ளே தன்னிலையை எண்ணினானோ அல்லது....?

"அண்ணா" இந்த உலகத்திலே தன் தாயை இழந்த பின்பு அவ்வளவு கனிவு நிறைந்த சீவனுள்ள வார்த்தையை அன்றுதான் அவன் கேட்டான். எதிர்பாராத அக்குரலைக்கேட்டதனாலோ அல்லது அக்குரலின் கனிவில் ஏற்பட்ட மயக்கமோ அல்லது மீண்டும் அக்குரலைக் கேட்க ஆவல் கொண்டானோ என்னவோ, அவனால் பதில் சொல்ல முடியவில்லை. திரும்பிப்பார்த்தான். அவள் நின்றாள்.

"அண்ணா, நீ ஏன் இங்க இருக்கிறாய்"

"சும்மா இருக்கிறென். நீ யார்?"

"நான் கடைக்கு அப்பம் கொண்டு போறேன். உன்னை இவ்வளவு நாளும் காணவில்லை. ஆள் புதுசாயிருக்கே. உன் வீடு எங்கே?"

"அதோ" அவன சுட்டிக்காட்டிய இடம் அந்த கடையின் தாழ்வாரமாய் இருந்தது. அதையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த கமலம்.

"அப்படியானால் அப்பா அம்மா....?"

"இல்லை"

"ஓகோ, என்னைப்போலத்தானே நீயுமாக்கும்"

"ஏன் உனக்கும் இல்லையா?"

"இல்லை"

அந்த 'இல்லை' வார்த்தைகள் இரண்டும் நெஞ்சின் ஆழத்தில் இருந்து வந்தவை. அவை கண்ணீருடன் கலந்துவந்தன. அதில் அவர்கள் தாயன்புக்காக ஏங்கும் ஏக்கம் தெரிந்தது. அதனால் ஒரு நிமிஷ நேர மௌனம்.

அந்த ஒரு நிமிஷ நேர ஒற்றுமையிலே அந்த இரண்டு உள்ளங்களும் ஒன்றையொன்று அறிந்து பலநாட் பழகியவர்கள் போலப் பிணைந்துவிட்டன. அந்த அன்புப் பிணைப்பைவிட வேறு ஏதாவது அந்த இளம் உள்ளங்களை மகிழ்விக்குமா?

"ம்...ம்.. அந்தப பெட்டியில் என்ன?" இந்தக் கேள்வியை அவன் தான் கேட்டான். அவன் கவர்ச்சி முழுவதும் இப்பொழுது அந்தப்பெட்டியிலேதான் நிலைத்து நின்றது.

"அப்பம்; கடைக்குக் கொண்டுபோறன்"

"எனக்கு என்று ஹூம் வேண்டாம" முதனாட் பட்டினியில் கொழுந்துவிட்டெரிந்த அவனது பசி நெருப்பு, இரவு நித்திரையால் அடங்கி, அந்தப் பெட்டியைக் கண்டதால் மீண்டும் புகையத்தொடங்கி, அப்பம் என்ற வார்த்தையினால் கொழுந்துவிட்டெரிந்தது. அந்தப்பசி உணர்ச்சியையும் மீறி அவளுக்கு ஏதாவது நேர்ந்தால் என்ற ஏக்கம் அவன் மனதையரித்தது.

"ம்...ம்.....வேண்டாம் உனக்கு ஏதாவது நேர்ந்தால்"

"ஆம் என பெரியம்மாம் அடிப்பாள் தான்"

அவள் இதயத்தில் போராட்டம் ஏற்பட்டது. தன் புதிய சகோதரனிடம் ஏற்பட்ட அன்பும் அவனது பசித்துடிப்பும் அவள் மனதைப் பிழிந்தெடுத்தன. பாவம்! அவனுக்கு ஒன்று கொடுத்தால் - ஒரு அப்பந்தானே. அடுத்த கணம் தன் பெரிய தாயின் ராட்சத ரூபம் அவளைப்பயமுறுத்தியது. அவள் மனதில் அன்புக்கும் பயத்துக்கும்

இடையே போராட்டம். முடிவு? அவள் அன்புதான் வென்றது. அவள் ஒன்றும் பேசவில்லை. ஒரு அப்பத்தைக் கொடுத்தாள். அவன் ஆவலுடன் வாங்கினான்! இப்படியே சில நாட்கள் ஓடின.

4

வழக்கம் போலக் கமலம் அன்றும் வந்தாள். அன்பும் ஆவலும் பொருந்திய சுந்தரத்தின் கண்கள் அவளை வரவேற்றன. ஆனால் அவனது கூர்மையான பார்வையும் அன்பு செழித்த மனமும் அவளை ஆராய்ச்சி செய்தன. அவள் முகத்தில் முன்பிருந்த மலர்ச்சியில்லை. அந்தக் கண்களில் முன்பிருந்த செழிப்பும் குறுகுறுப்பும் மாயமாய் மறைந்தனவாயினும் அவைகள் ஏன் இவ்வளவாகச் சிவந்துபோய் வீங்கியிருக்கின்றன. அவளதுமுகவாட்டமும் நடையிலேற்பட்ட தளர்ச்சியும அவன் மனதை வாட்டின. 'ஏன் இந்த வாட்டம்? ஏன் இந்தத் தளர்ச்சி? பாவம்! நேற்று எப்படி இருந்தாள்? இன்று' என்று நினைத்த அவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

அவளும் அவன் சமீபத்தில் வந்து நின்றாள். சுந்தரம் திடுக்கிட்டான். அவன் இளம் இதயம் அவள் கோலத்தைக் கண்டு நைந்தது. அந்தக் கோலம் அவன் மனதைக் குத்தி அவன் மனத்திருந்த அன்பைப் பெருகச் செய்தது. தன் அருமந்த சகோதரி பட்ட துன்பம் அவள் ஒவ்வொரு அவயவங்களிலும் தெளிவாகத் தெரிந்தது. ஆ! அந்தக் கைகள் - பிஞ்சுக்கைகள் என்ன என்னபாடுபட்டனவோ? எத்தனை தழும்புகள் குறுக்கு நெடுக்குமாக. அவ்வளவும் இரத்தம் கண்டிப்போய் அந்தச் சிவப்புத் தோலில் முழிக்கின்றனவே. ஐயோ! அந்த நேரத்தில் அவள் எவ்வளவு வேதனையை அனுபவித்தாளோ? எப்படித்தான் சகித்தாளோ? ஐயோ பாவம்... அவன் தன் கற்பனையில் அவள் வேதனையைக் கண்டான். அதன் பலனாக அவன் கண்கள் வேதனையைச் சொரிந்தன. அவன் வெம்பி வெம்பி அழத்தொடங்கினான். அவன் தன்னையேயறியாமல் அவள் கையைப் பிடித்து அந்தத் தழும்புகளைத் தடவிக்கொடுத்தான். அந்தத் தடவுதலில் இருந்த அன்புதான் அதற்கு மருந்தோ?

அன்பு பரிபூரணப்பட்ட ஸ்பரிசத்தை அவளால் அனுபவிக்க முடியவில்லை. ஏன் பொறுக்கவே முடியவில்லை. தேற்றுவாரற்று அடக்கியடக்கி வேதனையால் சுமை கண்ட அவள் மனம் மிகமிகப் பாரமாயிற்று. "ஓ" என்று அழுதுவிட்டாள். அன்புள்ள இரண்டு இதயங்கள் சந்திக்கும்போது தான் துயரம் பொங்கி வேகங்கொண்டெழுந்து தணிகிறதோ என்னவோ? பாசத்தினால் ஒன்றுபட்டு இன்பமும துன்பமும்

ஒன்றாய் ஒன்றிப்போன அந்த இரண்டு குழந்தைகளும் அழுதன. வெம்பி வெம்பி அழுதன.

அநாதைக் குழந்தைகள், அவற்றின் இதயங்கள் - இவை வாழ்வைப் போராட்டமாக்கி உழன்று அங்கே நடமாடிய மனிதக் கண்களுக்குத் தெரியுமா என்ன? நீண்ட நேர மௌனத்தைக் கலைத்துக்கொண்டு கமலம் “இந்தா” என்றாள். கடதாசியில் சுற்றப்பட்ட ஒரு அப்பம் அவள் கையிற் கிடந்தது. வாங்குவதா விடுவதா என்று தீர்மானிப்பதற்கு முன்பே அவன் கைகள் அதை ஏற்றுக்கொண்டன.

“ஐயோ, உனக்கு நல்லாய் வலிக்குமே” என்றான் சுந்தரம். அவன் குரல தழுதழுத்தது.

“ம்...ம்... இல்லை லேசாகத்தான் வலித்தது.”

“பொய் சொல்கிறாள். இந்த அடிக்கு உயிரே போய்விடுமே. இப்படி யார் அடித்தது.”

“பெரியம்மா அடித்தாள்”

“ஏன்”

“அம்மா! அடித்தாள் அதையேன் உனக்கு”

“சொல்லமாட்டாய்” அவன் கண்கள் கலங்கின. அந்தக் கலகத்துக்கு அவள் மறுமொழி சொல்லாமல் இருக்கமுடியுமா?

“ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அப்பத்தைத் தொலைத்தேனாம். அடித்தாளாம்.”

அவன் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் யோசித்தான். ஆனால் மீனாட்சியின் கோபம், கம்பு உருவிலே வந்து அவள் கையிலே கிடந்து கமலத்தின மேனியில் ஆடிய பேய்க்கூத்தையும் அதனால் தழும்புகளைச் சுமந்துகொண்டு, அவைகளின் வேதனை அவள் மனத்தை அழுத்த, அதனை வெம்பல் எடுத்துக்காட்ட, தானும் பூமியுமாய் தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டு கிடந்ததையும் எங்கே அவனறிவான்?

“அப்படியானால் இந்த அப்பம்”

“இந்த அப்பமா?” அவள் முகத்தில வெற்றிக் குறியின் சாயை தட்டியது. அவள் வார்த்தையில் எவருமே செய்யமுடியாத ஒரு தியாக உணர்ச்சி தொனித்தது.

“இந்த அப்பமா? இது என் அப்பம்” இது என் சொந்த அப்பம். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“நேற்றெல்லாம் கடைக்குக் கொண்டு போன அப்பத்தில் ஒன்றைத் தந்தேன். அதற்குத்தான் பெரியம்மா அடித்தாள். இன்று...” தன் செய்கையைத் தானே மெச்சிக் கொள்பவள் போல நின்றாள்.

"வழக்கமாக இரண்டு அப்பம் தருவாள் தின்பதற்கு. இன்று நான் ஒன்றைத் தின்றேன். ஒன்றைப் பத்திரமாகக் கடதாசியில் சுற்றி ஒளித்து வைத்தேன். வரும்போது மெதுவாகத் தூக்கி வந்தேன்"

"உனக்குப் போதுமா?" சுந்தரத்தின் பெருமூச்சையும் கிழித்துக்கொண்டு வந்த வார்த்தை அது.

"ஏன் போதாதா? உனக்கொன்று. எனக்கொன்று நீ சாப்பிடு. நான போகிறேன். கடைக்காரன் ஏசுவான்..." பதிலையும் எதிர்பாராமல் அவள் போய்விட்டாள். கடைக்காரனின் மிரட்டலை எண்ணிக்கொண்டு.

கையிலே அப்பத்தை வைத்துக்கொண்டு தன்னுணர்வற்றுத் தன் சகோதரியைப் பற்றியே நினைத்துக் கொண்டான் சுந்தரம்.

பாவம்! என்னைப் போன்ற அநாதை. முன் பின் தெரியாதவள். அவளுக்குத்தான் எவ்வளவு அன்பு. ஆ! அடி வாங்கித் துடிதுடித்திருப்பாள். ஆனால் இன்றும் என்னை மறக்கவில்லையே. தன் பங்கில் அரைவாசியை எனக்குத் தந்துவிட்டாள். அவளுக்குப் பசியாதா? நான் ஏன் இதை வாங்கினேன்? எல்லாம் என்னால் தானே. இன்னும் என்னென்ன தோன்றிற்றோ அவனுக்கு.

5

வழக்கம் போல் கமலம் அன்றும் வந்தாள். அன்பும் ஆவலும் ததும்பிய கண்கள் இன்று அவளை வரவேற்கவில்லை. தூரத்தில் வரும்போதே அவள் கண்ணில்படும் அவன் உருவத்தையும் காணவில்லை.

"ஓகோ, இன்றைக்கு அண்ணா வெளியே வரவில்லை. குளிரோ இல்லையோ? போர்த்துக்கொண்டு பேசாமல் இருக்கிறான்...." என்ற நம்பிக்கையில் அப்பத்தை எடுத்துக் கையில் கொண்டு சந்து முனையை அடைந்தாள்.

ஆ! அங்கே அவனைக் காணவில்லை. அந்த ஒரு கணம்...... அவளும் அங்கேயில்லை. அவள் தன்னை மறந்து தன் உணர்ச்சிகளை மறந்து. தன். மனக்குரலைக் கேளாமல் சூழலை மறந்து. ஏன் எல்லாவற்றையுமே மறந்து நின்றாள். பிரமை பிடித்தவள் போல. தேடித்தேடி அலுத்துப் போய்தன் அநாதை வாழ்வில் கிட்டாதென ஏங்கிய அந்த வஸ்து - அன்பு - தன் பெரிய தாயின் கொடுமையினால் மெருகேற்றப்பட்டு மதிப்பற்றதாய் தன் சகோதரன் உருவில் வந்தபோது. கடவுளுக்குச் சகியாமல் அதுவும் மறைந்துவிட உயிரற்ற பாவை போல் அவள் நின்றாள். அவள் உயிர் அவன் தானே.

இன்னது செய்வதென்றறியாத நிலையில் அவன் இருந்த இடத்தையும் சந்தையும் வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது. என்ன நினைத்துக்கொண்டாளோ சந்தின் ஓரத்திலிருந்த கடையின் தாழ்வாரத்துக்கு ஓடினாள். அதுதானே அவன் வீடு. அங்கேயும் அவன் இல்லை. அவனுக்குப்பதிலாக ஒரு சாக்கு விரிக்கப்பட்டுக் கிடந்தது, இரவு அவன் அங்கே படுத்திருந்தான் என்பதன் சின்னமாய். அதுதான் அவன் பாய், மெத்தை, தலையணை, போர்வை எல்லாமாயும் இருக்குமாம்.

எங்கு சென்றானோ என்ற நினைவு ஏக்கமாய் அவள் மனதை உலுக்கியது. இங்கும் அங்கும் தேடினாள். யார் யாரையோ கேட்டாள். பலன் இல்லை. ஐயோ! அவன் எங்கே? எங்கே? எங்கு சென்றானோ? பாவம் பசிக்குமே. இரவில் படுத்தவன் காலையில் எங்கு சென்றான். யாராவது கூட்டிச் சென்றிருப்பார்களோ? இனி வந்து விடுவான். நிச்சயமாக வருவான். வரட்டும் வரட்டும் சொல்கிறேன். என்ற நினைப்பில் அவள் தன் வாடிக்கைக் கடையை அடைந்தாள்.

வந்தானோ என்னவோ என்ற ஏக்கம் அவள் மனதை மிதிக்க வந்திருந்தால் என்ற அங்கலாய்ப்பு நலிந்த மனதுக்கு ஆறுதல் கூற வந்திருப்பான் என்ற எண்ணம் சந்தோசத்தையூட்ட அவள் அந்தச் சந்துக்குத் திரும்பவும் வந்தாள்.

ஆனால் அவனைக் காணவில்லை!

குழந்தைகளின் நம்பிக்கைகள் தான் அவர்கள் பிற்கால வாழ்வை நிர்ணயிப்பன. கமலத்திடமிருந்த துளியத்தனை நம்பிக்கை கூட இப்போது மறைந்துவிட்டது. எங்கு சென்றான்? எங்கு தேடுவேன்? வரமாட்டானோ? என்ற ஏக்கத்துள் அவள். வீடுவாசல் வேலைகள் சிற்றன்னையின் ராட்சத ரூபம் எல்லாமே மறைந்துவிட்டன. அவள் சின்னக் கண்களில் அவள் சகோதரன் மட்டுமே நடமிட்டான். அவள் அவனைத் தான் கண்டாள். வேறொன்றையும் காணவில்லை.

கமலம் தானறிந்த சுற்றாடல் முழுவதும் தேடினாள். அவள் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் அவள் மெல்லிய கால்கள வலியெடுத்தன. காலையிலே ஒரு அப்பத்தினால் நிரப்பப்பட்டு அதுவும் காலியாகிவிட ஏதோ ஒரு முனைப்பினால அடக்கப்பட்டு அம்முனைப்பின் முனைப்பும் கெட்டுவிட மேற்கொண்டெழுந்த பசி அவள் உடலை வாட்டியது.

இரவு பட்சபாதமற்ற நீதிபதியின் தீர்ப்புப்போல குறித்த காலத்தில் வந்து சேர்ந்தது. அந்த அநாதைக் குழந்தையைத் தாலாட்டித் தூங்கச்செய்யும தாதியாகவும் அது வந்திருக்கலாம். இரவு ஒன்பது

மணி சமயம். தெருவிளக்குகள் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருந்தன. ஒரு விளக்குக்கம்பம் - அதன் கீழே ஐம்பொறிகளும் சோர. ஏமாற்றம் அன்பு மனதுக்குத தீயிட, இன்னது செய்வதென்றறியாத கமலம், அந்த இரவை அதிலே கழிப்பதெனத் தீர்மானித்து முழங்கால்களுக்கிடையே தலையை வைத்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரம். அதிலும் அவளுக்கு அமைதியில்லை. தலையை. நிமிர்த்தினாள்.

## 6

"அம்மா குழந்தாய். என் இங்கே இருக்கிறாய்" என்று கனிவுடன் கேட்டார் அப்பெரியவர். அவளுடைய பரிதாபகரமான தோற்றம் அந்த வழியே சென்ற பெரியவர் மனதை உருக்கியதோ என்னவோ? கமலம் அவரையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த இளம் இருதயத்துக்கு அந்த நேரத்தில் ஏதோ ஒரு உதவி வேண்டியிருந்தது.

அவள் சொன்னாள் "என் அண்ணாவைக் காணவில்லை. தேடிப்பார்த்தேன் காணவில்லை. இருக்கிறேன்"

அவள் கண்கள கலங்கின.

"உன்னண்ணாவா? யார் அது?" அந்தப் பிராந்தியத்தின் மூலைமுடுக்குகளையும் அங்குள்ள மனிதரையும் அறிந்தவர் போல் பேசினார் அவர்.

"என் அண்ணாவா? அவனைக் கண்டீர்களா? அவன் தான் சுந்தரம் பச்சைக்குறித்துவாய் உடுத்தியிருப்பான்" ஒரே மூச்சில் எல்லாவற்றையும் சொல்லி விட்டாள் அவள். மனத்திருந்த ஆசை செய்த வேலை அது. பெரியவர் எதையோ யோசித்துக்கொண்டு மௌனமானார். எதைத்தான் எண்ணினாரோ?

"ஆம், அவன் தானே அவனைக் கண்டேன் அடுத்த ஊரில். ஒரு...." அவர் வார்த்தையை முடிக்கவில்லை. அவள் குதித்தெழுந்தாள். அவர் கைகளைப் பற்றிக்கொண்டாள். "அவனைக் கண்டீர்களா? ஐயா. என்னையும் அவனிடத்தில் கூட்டிக்கொண்டு போய் விடுங்கள். புண்ணியமுண்டு" என்று கெஞ்சினாள். தன் சகோதரனைக் காணப்போகிறோமே என்ற சந்தோசம் அவளுக்கு.

தன் அண்ணனைத் தேடி அவனையே நினைத்திருந்த கமலத்துக்கு அவர் வார்த்தை அமிர்தமாகியது. அவனைக காண வேண்டுமென்ற ஆசை முன்பின் அறியாத அவரிடத்தில் சகசமாய்ப் பழகச் செய்தது. அப்பெரியவர் அவளை அன்புடன் அணைத்துக்கொண்டு அவ்வூர் ஸ்ரேசனை அடைந்தார். மணி பதினொன்று. இன்னும் அரை மணித்தியாலம் இருந்தது புகையிரதம் வருவதற்கு.

பெரியவர் இருந்த இருப்பில் தூங்கி வழியத் தொடங்கினார். பாவம்! காலத்தின் கைக்குழந்தையாய் அதன் வேகத்தால் முதியவரான அவரால் கண்விழிக்க முடியுமா? ஆனால் அவர் பக்கத்தில் இருந்த கமலம் தூங்கவில்லை. அங்கு நடமாடிய மனிதக்கும்பலின் வெளிப்பகட்டிலும் செய்கையிலும் கண்ணைப்பதித்து தன் அண்ணனின் சந்திப்பைக் கற்பனை பண்ணி அதில் மனசைப் பதித்துக்கொண்டிருந்தாள்.

புகையிரதம் வந்தது. அவர்கள் போக வேண்டியதன்று; வேறொன்று. புகையிரத இரைச்சலில் தூங்கிக்கிடந்த எல்லோரும் எழுந்தனர். ஸ்ரேசன் பரபரப்படைந்தது. முண்டியடித்துக்கொண்டு போவோரும் வருவோரும் கமலத்துக்குக் காட்சியாகவிருந்தனர். அதையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

கமலம் திடுக்கிட்டாள்

அவள் கண்கள் அவளுக்கே துரோகம் செய்கின்றனவோ? இல்லையில்லை; அவனே தான், அவள் தேடிய அதே ஆள் தான்.

"அண்ணா என் அண்ணா" அந்த ஸ்ரேசன் இரைச்சலையும் கிழித்துக்கொண்டு அந்தச் சொற்கள் இரண்டும் கணீர் கணீர் என ஒலித்தன. அந்தப் பவித்திரமான ஓசையிலே அந்த ஸ்ரேசனே ஒரு கணம் அமிழ்ந்துவிட்டது. அதில் நிரம்பி வழிந்த உணர்ச்சிக்குழம்பை அந்த இரு குழந்தைகளாலும் தான் உணரமுடியும். மற்ற மனிதப் பிண்டங்களுக்கு அவைகளையுணரச் சக்தியில்லை. அவர்கள் மட்டில் அவைகள் வெறும் சொற்களே.

ஸ்ரேசனிலிருந்து வந்து கொண்டிருந்த சுந்தரம் அவளைத் தாங்கினான். ஏமாற்றத்தால் அவனைக் காணத்தாகம் கொண்ட அவள் மனத்துள்ளே அமுங்கிக் கிடந்த அன்பு பொங்கிப் பாய்ந்தது. அவள் விம்மி விம்மி அழத்தொடங்கினாள். அந்த விம்மல்களையும் துளைத்துக்கொண்டு "இனிமேல் என்னை விட்டுட்டு போகாதே அண்ணா" என்ற வார்த்தைகள் கிளம்பின.

அவள் கடதாசியிலே சுற்றிவைத்துத் தன்னுடனே கொண்டு திரிந்த அந்த ஒரு அப்பத்தையும் அவனிடம் கொடுத்தாள். அவன் கண்கள் கடல் ஆகின.

அவர்கள் மனப்பளிங்கிலும் அன்பு அழிக்கப்படமுடியாத கறையாகிவிட்டது. அதை அழிக்கவும் எந்தச் சக்தியாலும் முடியாதே.

கிழவர் கண் திறந்து பார்த்தார்

கிழவர்!

யாருடனோ செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி வேலைக்காரச் சிறுமியைத் தேடித்திரிந்த அவருக்குக் கமலம் நல்ல விருந்தானாள்.

அவர் அவளை அஸ்திபாரமாக்கி அதன்மேல் அவளால் வரும் பணத்தைக் கொண்டு பெரியதொரு மனமாளிகை கட்டி சந்தோசமாக அதனுள் குடிபுகுந்திருந்தார். அவர் உள்ளே கிடந்த அவர் எண்ணம் அவளது தாபம். அன்பு இவைகளைப் புறக்கணித்து அனுதாபமென்ற மேறபோர்வையிட்டு அவளை அணைத்துக்கொண்டு ஸ்ரேசனையடையச் செய்தது. அவரது திட்டங்களையெல்லாம் அக் குழந்தையின் அன்பின் சக்தியும் நம்பிக்கையும வென்றுவிட்டன. அவரது மனமாளிகையைப் பொடிப்பொடியாக்கின.

அவள் அவனை அவர் கண்முன்னே அங்கே சந்தித்துவிட்டாள். இனி அவளுக்கு பெரியவரின் துணை தேவையில்லை. அவருக்கும் அவள் பிரயோசனப்படாள்.

கிழவரின் ஒரு வியாபார நாடகம் முடிந்தது. நஷ்டமடைந்து விட்டது. அவர் மனம் அடுத்த நாடகத்துக்கு ஆயத்தம் செய்தது. கண்கள் அக்குழந்தையின் பின்னே சென்றன.

வெளியுலகுக்கு அநாதைகளாகத் தோன்றிய அவர்கள் தங்களை தாங்களே அன்பினால் பிணைந்து எவராலும் பிரிக்க முடியாமல் ஒன்றிப்போய் தங்கள் அநாதைத் தன்மையை மறந்து தங்கள் மன உலகில் பிரியாத இரு சிட்டுக்குருவிகளாயினர்.

கைகோத்துக்கொண்டு சென்ற இரு குழந்தைகளையும் வெளியே பரந்திருந்த காரிருள் அணைத்துக்கொண்டது.

❖ ❖ ❖

# 16. பாரிசவாதம்

இறந்த காலத்தில் விஸ்தாரமாகச் சஞ்சாரஞ் செய்தும், அதில் ஒவ்வொன்றையும் பலகாலும் பல கோணத்திலே தரிசனஞ் செய்து அசைபோட்டும், நிகழ்காலத்தில் எனனைக் கேளாமலே நிகழ்ந்து விடுகின்ற நிகழ்ச்சிகளின் வலுவான வலையிற் சிக்குண்டு பெருமூச்சு விட்டும் கிடப்பதுதான் இப்போதுள்ள என் தகுதி. எதிர்கால வாழ்வில் ஆழமான நம்பிக்கையுள்ளவர்களே வாழ்க்கைக் கனவுகளைச் சித்திரித்து, அதில் லயித்து, அதனைப் பற்றுக்கோடாக்கி வாழ முடியும். இன்றும் இனியும் பசைப்பிடிப்பில்லாத என்னிடம் எதிர்காலச் சீவியக் கனவுகளோ, கற்பனைகளோ நம்பிக்கைகளோ எவ்வாறு தோன்ற முடியும்.?

ஐந்து வருடங்களுக்கு முன்பே என் வாழ்வு முடிந்துவிட்டது. ஆனால், உயிர்ப்பு அடங்கவில்லை. உயிர்ப்பு அடங்காமையால் உள்ளமும் அதிலே குமிழி விட்டு அலையும உணர்வுகளும் அடங்கவில்லை.

"பச்சைக்குழந்தையும் பாரிசவாதக்காரனும் - அழகான உண்மை. பொருத்தமான உவமை. இல்லையா? இருவருக்கும் எதற்கும் எப்போதும் துணைவேண்டும். அத்துணையில் தாய்மை நிறைய வேண்டும். இல்லாவிட்டால் ...... ஆனால் ஒரு வேற்றுமை. குழந்தைக்குக் குழந்தமை உண்டு; பாரிசவாதக்காரனுக்கு மனத்துள்ளே குமுறிக்கொந்தளிக்கும் கடல் உண்டு. காலாக்கினி உண்டு. சூறாவளி உண்டு." இதைத்தான் அன்று சுந்தரத்திடம் கூறிச் சிரித்தேன்.

இப்போதெல்லாம் சிரிப்புத்தான் என் பாஷை. என்னில் அழுதழுது பலன் கிட்டாததால் இப்பொழுது எதற்கும் சிரிக்கத் தொடங்கியிருந்தேன்.

சுந்தரத்திற்கு என் சிரிப்பும் பேச்சும் அசம்பாவிதமாய்ப் பட்டிருக்கவேண்டும். அவன் என் சிநேகிதன். விந்தை என்னவென்றால் இன்றும் அவன் மாறவில்லை. எனது இந்த நிலையிலும் அவன் அடிக்கடி

என்னிடம் வரவில்லையென்றால் நான் பேசுவதையே மறந்திருப்பேன். ஒருவேளை பரமோன நிலை எனக்குச் சித்தித்திருக்குமோ! இப்போது அவன்தான் என் எண்ணங்களின் வாய்க்கால். ஒரேஒரு பேச்சுத்துணை.

"அடே, இப்போதுதான் உனக்குத் தத்துவம் தரிசனம் ஆகிறதோ? இந்த ஞானம் முந்தியே வெளித்திருந்தால் இந்தப்பாடேன்? நான் சொல்லியும் நீ கேட்கவில்லை. தேவர்கள் ஏன் தேவர்களானார்கள் தெரியுமா? அமுதபானம் பண்ணித்தானே என்று சொல்லி முட்டிக் கணக்காகத் தென்னம்பாலைப் பானம் பண்ணினாய். சாராயம் என்ற அக்கினித் திராவகத்தைக் குடித்தாய். சிலவேளைகளில் இரண்டையும் கலந்து தீர்த்தாய். விதைப்புக்கேற்ற அறுவை – "பாரிசவாதம்" சுந்தரம் சிறிது எரிச்சலோடுதான் கூறினான். ஆனால் அது எனக்கு மிகவும் உவப்பாயிருந்தது.

தத்துவங்கள் இன்னின்னாருக்குத்தான் தரிசனம் ஆகுமென்று இலக்கணம் உண்டோ? குடிகாரனுக்கு அவை தெரிந்தால், அவை தீட்டுப்பட்டு விடுமோ? அப்போதெல்லாம் நிறை வெறியிலும் சிலவேளை யோக நிலை கைகூடிவிடும். அப்பொழுது என்னென்னவோ காட்சிகள், கோலங்கள், ஏன் தரிசனங்கள் கூட எனக்குத் தோன்றின. விளக்கமில்லை. இப்பொழுது படுத்த படுக்கையாகிவிட்ட எனக்கு முழுயோகநிலை சித்தித்து விட்டது. என்னில் என்னையும் உலகத்தையும் கண்டு சிரிக்கிறேன். இத்தகையதொரு சிரிப்புத்தானே ஞானவெளிச்சத்தின் அடையாளமாம்.

சுந்தரம் என்னை உற்றுப்பார்த்தான். நான் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு "உனக்கு முதலியார் கந்தசாமியைத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"தெரியாமலென்ன? சிவப்பழம். இந்த ஊரில் நல்ல மனிதர் உண்டென்றால் அவர் ஒருவரேதான். அவருக்கென்ன?" என்றான் அவன்.

"ஒன்றுமில்லை; அவருக்கு வந்த நோய் என்ன தெரியுமா?" என் கேள்வியின் நோக்கத்தை அவன் உணர்ந்துகொள்ளவில்லை.

சிறிதுந் தாமதமின்றி "வேறென்ன; பாரிசவாதந்தான்" என்றான்.

இப்பொழுது என்னை என்னால் அடக்கமுடியவில்லை. சிரித்துக்கொண்டே "அவரும் என்னைப்போலப் பெருங்குடிகாரரா?" என்றேன். சுந்தரம் மௌனமானான்.

'சாட்டில்லாமற் சாவில்லை' என்ற பழமொழி பொய்யன்று. என் நோய்க்கு என் குடிப்பழக்கத்தைக் காரணமாக்கிய சுந்தரத்தால் முதலியாரின் அதே நோய்க்கு அதனை காரணமாக்க முடியவில்லை.

நான் சுந்தரத்தின் மௌனத்தைக் கலைக்கவிரும்பி "சுந்தரம், இதற்கெல்லாம் காரணம் தேடிப்பயனில்லை. எந்த நிலயைிலும் எவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய காரணம் அவரவர் விதி. இல்லையா?" என்றேன்.

விதியின் செயலுக்கு மதியும் ஓரளவு காரணமாயிருந்தால் என்று அவன் கேட்கவில்லை. கேட்டிருந்தால் என் கடந்தகால மதியீனத்தை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டி வந்திருக்கும்.

மௌனம் திரையாய் விழுந்த வேளையில் விறகுச்சுமையோடு என் மனைவி வந்தாள். அவளைக் கண்ட சுந்தரம் நெற்றியைச் சுருக்கிக்கொண்டு "என்ன உன் மனைவிதானே" என்று ஆச்சரியப்பட்டான்.

நாளும் பொழுதும் கண்ட என் கண்களே 'அவள் உன் மனைவிதானா' என்று எதிர்வினா எழுப்பும்போது இவன் எப்படி நம்புவான் என்று எண்ணிச் சிரித்தேன்.

அவனும் சிரித்துக்கொண்டே, "இவள் எப்போது முனிபத்தினியானாள்? யோகியாகிவிட்ட உனக்காக அவளும் யோகினியாகிவிட்டாளே? நடு வீட்டிலேற்றிவிட்ட குத்துவிளக்காய், பூரண கும்பமாய், ஒளிவீசிய அவளுக்கா இந்தத் தோற்றம்?" என்று உருகினான்.

உணர்வுகளும் பகிர்ந்து அனுபவிக்கப்படும்போது தான் நெகிழ்வடைகின்றன. என் கண்கள் பனித்தன. "சுந்தரம் காற்றைப் போசனஞ் செய்து யாரும் குத்துவிளக்காகிவிட முடியாதது. வறுமை யாரையும் கொழுக்க வைப்பதில்லையே. கூலிவேலை செய்து மூன்று சீவன்களைக் காப்பவளுக்கு நிறை குடத்தின் அழகு எப்படி வரும்? பார், காலையிலே போனவள் எந்த நேரம் வருகிறாள்? இப்போது ஐந்து மணி இருக்குமா? இனி அவனும் வந்து விடுவான்."

"ஆமாம் உன் மகன் எங்கே?"

"சுருட்டுக் கொட்டிலுக்கு அனுப்பியிருக்கிறேன். தொழில் பழக."

"என்ன அவனையா? கெட்டித்தனமாகப் படித்தானல்லவா?"

"அதற்கென்ன செய்வது? பணத்தைச் செலவிட்டு பல வருடம் பொறுமையோடு காத்திருந்தால் தான் அவன் படிப்பு எங்களுக்கு உதவும். இந்தப் படிப்பு வியாபாரம் பணக்காரர்களின் விளையாட்டு. எங்களுக்கு உடனடியாக வேண்டியது அரிசி.

சுந்தரம் சிந்தனையில் ஆழ்ந்தான். நான் சிந்தித்துச் சிந்தித்து முடிபு கட்டியதை அவன் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறான். ஆனால் வரும் பயன் என்ன தெரியுமா? பூஜ்யம்.

அப்போது அவள் அங்கே வந்தாள். முகத்தைச் சுளிக்காமல் என் சலப் பேணியையும் மலத்தட்டையும் எடுத்துச்சென்றாள். சுந்தரம் அருவருப்பை அடக்க முடியாமல் அடக்கிக்கொண்டே "நீ பூர்வத்தில் புண்ணியம் செய்துதான் இருக்கிறாய்" என்றான்.

"அப்படி ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியாதே"

"என்ன, உன் புண்ணியம் உன் முன்னால் நடமாடுகிறதே; அதை நீ காணவில்லையா?'

"ஓகோ" வழமை போல நான் சிரித்தேன்.

"சிரிப்புக்கும் அர்த்தம் வேண்டாமா? உன் மனைவி இப்போது மனைவியல்ல; தாயடா தாய். நீ அவள் குழந்தை."

உண்மையிலே நான் குழந்தையாகிவிட்டேன். உணர்வுகளைப் பிறரோடு பங்கிடும்போது மாத்திரமல்ல; பிறர் அதைச் சுட்டிக்காட்டும்போதும் குழைவு பிறக்கிறது. நான் வெம்பினேன்.

அவள் திரும்பிவந்து பாத்திரங்களை அந்தந்த இடங்களில் வைத்தாள். "தங்கச்சிக்குத் திரும்பவும் மயக்கம் வந்துவிட்டதாம். குஞ்சாச்சி சொன்னாள். நான் ஓடிப்போய்ப்பபார்த்துவிட்டு வருகிறேன். தம்பி வந்ததும் எடுத்துச் சாப்பிடுங்கோ" அவள் போய்விட்டாள்.

"சுந்தரம் உனக்குப் பொன்னம்மாவைத் தெரியாதோ? அவள் மகாலட்சமி. யார் யார் வாழ வேண்டுமோ அவர்கள் பிஞ்சிலே வெம்பி விழுந்து விடப்பார்க்கிறார்கள். வாழவேண்டாதவர்கள் பிறருக்குப் பாரமாய் அழுந்துகிறார்கள். இதற்கு விடை யாரிடம் கேட்பது? பாவம்! அவளுக்கு இருதயநோய். அது பணத்தையும் ஏன் பிறருயிரையும் பறிகொண்டு தான் மாறும். என்றாலும் பரமசிவம் - அவன் தான் என் சகலன் எந்தகணமும் ஆயத்தம். ஆனால் அது யாருயிரையும் கேட்கவில்லை; அவளுயிரையல்லவா கேட்கிறது" என்றேன்.

என்றாலும் என் அனுதாபத்தினுள்ளே சுயநலம் கருக்கட்டியிருப்பதை உணர்ந்தேன். சுயநலம் கிடைச்சித் துண்டைப்போல. எப்படித்தான் நீருக்குள்ளே அமுக்கினாலும் அது நீர்மட்டத்துக்கு வந்துவிடும். இந்த வீட்டில் வேளா வேளைக்கு அடுப்பிலே உலை ஏற்றப்படுகிறதென்றால் அதற்குக் காரணம் இந்தப் பொன்னம்மாவும் பரமசிவமுந்தான். இதை ஒப்புக்கொள்வதில் என்ன கௌரவக் குறைவு இருக்கிறது என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் போலிக் கௌரவம் இதைச் சுந்தரத்திடம் சொல்லவிடமாமல் வாயைப் பூட்டிற்று

சுந்தரம் குனிந்த தலையோடு எழுந்து போய்விட்டான். அவன் மனமும் கனத்துத்தான் இருக்கவேண்டும். இனி என்னை அருட்டி என்னோடு மனம் விட்டு அளவளாவ அவன் என்று வருவானோனா? இனி நான் ஏறக்குறைய மௌனி; மௌனம் சர்வ மனரோக சஞ்சீவி; மௌனம் கலக நாஸ்தி.

## 2

ஒரு நாள்..................

உறைந்து தடிப்பேறத்தொடங்கிய மௌனத்தைக் கலைத்துக்கொண்டு பரமசிவம் வந்தான். மனைவியை இழந்து, அறமுற்றி விளைந்த சோகமே இப்பொழுது பரமசிவமாய் வருகிறதோ? இந்தச் சோகத்தினூடாக அன்பு விகசிப்பதை நான் உணர்ந்து சிலிர்த்தேன்.

அவன் என் கால்மாட்டிலிருந்து "அண்ணா அவள் போய்விட்டாள் என் கட்டித்தங்கம் போய்விட்டது. ஐயோ, எங்கும் இருள், இருள்.... நிச்சயமாக அது என்னை உண்டுவிடும்." என்று பயங்கரமாகப் புலம்பினான்; விம்மினான்; வெடித்தான்; துடித்தான்; உருகியுருகி அழிந்தான். இது காதலின் துடிப்பு.

தலையை நிமிர்த்திப் பார்த்தேன். தலைமாட்டில் என்னவள் இந்தச் சோகப்புயலிலே துரும்பாய்ப் போய் வெம்பி வெம்பியழுதாள். இது சகோதரபாசத்தின் புலம்பல். என் மகன் செத்தை மறைவில் நின்று மூக்கை உறிஞ்சும் சத்தம் கேட்டது. இங்கே யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? இந்தச் சோகவெள்ளம் வடிவதற்கு வார்த்தைகள் என்ற ஒற்றைக்கண் மதகு போதாது; காலத்தின் வெம்மைதான் அதைக் குடித்துச் சுவறச்செய்யும்.

இப்பொழுது என் மனத்துக்குச் சிரிக்கும் சக்தியில்லை. பாசம் துடிதுடித்து ஓலமிடும்போது சிரிப்பேது? உள்ளம் அலையெறிந்து குமுறத்தொடங்கிவிட்டால் அமைதி ஏது? அலைகள் மனக்கரையில் மோதி நுரை கக்கிச் சிதறின.

அந்த நாளில் மாலைவேளையில் நான் வீட்டக்குவந்து விட்டால் வீடு போர்க்களமாய் மாறிவிடும். வெறியின் நிறைகலையில் நிற்கும் எனக்கு எல்லாமே ரசிப்பாயிருக்கும். சிலவேளை எனக்கு வீரம் பிறந்துவிடும். முடிபு..... என்னவள் கண்ணீரும் கம்பலையுமாய் அடுப்படி மூலையிற் படுத்துவிடுவாள். இப்போது பொன்னம்மா அரங்கிலே தோன்றுகிறாள். உணவை எடுத்துக்கொண்டு சிரித்த முகத்துடன் வருகிறாள். வெற்றி வீரருக்குப் பசியெடுத்திருக்கும்; விருந்து சாப்பிடுங்கள் அத்தான். அக்கா கண்ணீர்விட்டுக் குமுறினாலும் உங்கள் செங்கமலக் கைகள் பட்ட இடமெல்லாம் அவளுக்கு இனிக்கும். இல்லையா அத்தான்?" என்று கூறிச் சிரிக்கிறாள். அவள் சிரிப்பு இனி இல்லை.

பாரிசவாதம் பிடித்துப்படுத்த படுக்கையாகிவிடுகிறேன். அந்த ஆரம்ப நாட்களில் எவரைக் கண்டாலும் விம்மல் பொருமலோடு அழுகை

வந்துவிடும். கண்ணீரை நெய்யாகப் பெய்து நான் பாகம் செய்த காலம் அது. ஒருநாள் பொன்னம்மா வருகிறாள். "பொன்னு. வாடியம்மா வா" என்று கூறிப் பொருமுகிறேன். "அத்தான் அவளும் வெம்புகிறாள். "அத்தான்...." அவரும் நானும் உங்களுக்கு வேறா? இனி நாங்கள் குடிக்கிற கஞ்சியையோ கூழையோ இரண்டாகப் பகிர்ந்து கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்" என்கிறாள். அவள் ஆதரவு இனி இல்லை.

"ஐயோ, பொன்னு என் பொன்னுக் கண்ணு" - அதற்கு மேல் என்னால் எதுவும் பேசமுடியவில்லை. கண்ணீர் வழிந்தது. உடலெங்கும் மின்னதிர்ச்சியாய் நடுக்கம் பரவியது. பரமசிவம் ஆதரவோடு தடவிவிட்டான்.

"தம்பி, போனவர்களோடு போய்விடும் வரம் இன்னும் மனிதனுக்குச் சித்திக்கவில்லை. இந்த மண்ணுக்கு ஒரு தன்மை உண்டு. எந்தச் சோகத்தையும் மறப்பிக்காது விட்டாலும் மாற்றிவிடும். எனக்கு உடலிலே பாரிசவாதம்; உனக்கு உள்ளத்திலே பாரிசவாதம். இனி இந்த இரண்டு நோயாளிகளுக்கும் இவள் தான் தாய். இவ்வளவு நாளும் நீ தந்ததை நீ இல்லாமல் உண்டோம். இனி உன்னோடு உண்போம்; இல்லையா?" என்று என்னவளைப் பார்த்தேன். அவள் கண்களால் ஆமோதித்தாள்.

## 3

"அம்மா எனக்கு இரண்டு ரூபா வேண்டும்"

"ஏன்"

"ஏனா? படம் பார்க்கத்தான். வேறெதற்கு?" என் மகன் குரலிலே அலட்சியம் தெறிக்கிறது

"என்னடா விளையாடுகிறாய்? இங்கே குடிக்கக் கூழுக்கழுகிறோம். தம்பி கொப்பளிக்கப் பன்னீர் வேணுமாம். உன்னப்பா கிடக்கிற கிடையைப் பார்த்தாவது உனக்குப் பொறுப்புவர வேண்டாமா? படமாம் படம்; அதைப் பாக்காவிட்டால் என்ன?"

"அம்மா, அம்மா..... அம்மா" எரிச்சலோடு கதறுகிறான்.

"அம்மா, அப்பா சாகிறவரைக்கும் இப்படித்தான் கிடப்பார். அதற்காக நான் எல்லாச் சந்தோஷத்தையும் மறக்கவேண்டுமோ? படம் பார்க்கிற இந்தச் சிறியதைக்கூட" அவன் கொஞ்சமும் கூச்சமின்றி எரிச்சலோடு பேசுகிறான்.

"ராசா, இன்பங்களை அனுபவிக்க யாருக்குத்தான் ஆசையில்லை. நாங்கள் இருக்கிற நிலையில் எதற்கும்.... வழிவகை வேண்டாமா... அவள் தயங்கித் தயங்கி வசனத்தை முடிப்பதை நான் உணர்கிறேன்.

அப்போது "இப்போ வழிவகைக்கு என்ன குறைவு. ஏதோ என்னால் முடிந்தவரையில் உதவுவேன்..... ம்.... இரண்டு ரூபாதானே இந்தா" பரமசிவத்தின் குரல் தெளிவாக என் காதில் ஒலிக்கிறது.

வெளியே நடைபெற்ற இந்த உரையாடல் முடிந்தது. ஆனால் அது ஒலியுருவில் அலைகளாகி என் மனச் செவியிற் சுழன்றது. அதன் பொருள் படிப்படியாக என்னில் இறங்கியபோது நான் மருண்டு நடுங்கினேன்.

வாழத்துடிப்பவர்களிடம் ஆசை அற வேண்டுமென்று உபதேசஞ் செய்யமுடியுமா? அவர்களுக்கெல்லாம் ஆசைகளின் நிறைவிலேதானே இன்பஞ் சுரக்கிறது. என் வீட்டில் இந்த நிலைக்கு நான் தடையாய் கிடப்பது இப்போதுதான் என் புத்தியிற் படுகிறது. என்னொருவனுக்காக என் மனைவியும் மகனும் தத்தம் ஆசைகளுக்குத் தீயிட வேண்டுமா? படுத்த படுக்கையாகிவிட்ட எனக்காக இந்த வீட்டிலும் மனிதரிலும் சவக்களை கவியவேண்டுமென நான் விரும்பலாமா? அதை நான் விரும்பாமலிருக்கும்போதே நான் அதை விரும்புவதாக அவள் கற்பனை செய்கிறாளே. அதைத்தான் என்னாலே தாங்க முடியவில்லை.

"அப்பா சாகிறவரைக்கும் இப்படித்தான கிடப்பார். அதற்காக நான் எல்லா இன்பங்களையும் மறக்க வேண்டுமா?" பாவம் அவன் மனத்தில் எத்தனை எத்தனை ஏக்கக் குமுறல்கள். அவன் என் மகனாகப் பிறந்து என்ன இன்பங்கண்டான்? அவனோடொத்த சிறுவர்களின் தெள்ளுத் தெறிக்கும் துடிப்பும் அரிசிவிலை தெரியாத ஆனந்தமயமான வாழ்வும் என் மகனுக்கு மாத்திரம் சொந்தமில்லையா? பாவம்! அவனைப் பொறுத்தவரையில் ஆனந்தம் என்பது வெறும் ஏக்கப் பெருமூச்சே. அந்த ஏக்கத்தின் மருந்தாய் அவன் காணும் கற்பனைக் கனவுகளிலும் இந்த முடம் அடிக்கடி தோன்றிக் குறுக்கிடுமோ? அற்பத்திலும் அற்பமான ஆசைகள் கூட நிறைவேறாமையால் அந்தப் பிஞ்சு என்ன பாடுபடும்?

"இன்பங்களை அனுபவிக்க யாருக்குத்தான் ஆசையில்லை?" - இதன் பொருள் என்ன? அது விளங்குவது போலத் தோன்றுகின்றது; ஆனால் தெளிவில்லையே அவளும் இன்பங்களை அனுபவிக்க ஆசைப்படுகிறாள் என்பதுதானே பொருள். ஆமாம். அவளும் சாதாரண ஒரு பெண்தானே. யாரும் முப்பது வயதிலே கிழவியாகி விடுவதில்லையே! இயற்கையின் குறும்புகளும் பூசைகளும் கற்பனைகளும் அவளிடம் தோன்றக்கூடாதா? தோன்றினாற் குற்றமா? நீ அனுபவித்தது போதும். இனி ஆசைகளைப் பொசுக்கி இன்பங்களை நீறாக்கித் துறவியாகிவிடு என்று அவளிடம் நான் சொன்னால்.....? ஐயையோ அது மனங்களின் பிரச்சினை.

நான் களைத்துப்போனேன்.

3

ஒரு நாள் நடுநிசி.

சலோபாதையினால் நன்றாக விழித்துக்கொண்டேன்.

கனவு நிலையிற் பல்லாயிரம் அதிசயங்கள் - கொம்பு முளைத்த மனிதர்கள்; தலையால் நடப்பவர்கள் - இப்படி எத்தனை எத்தனையோ தோன்றலாம். பூரண விழிப்பு நிலையில்......

நான் பேரதிசயத்தின் விளிம்பில் நின்றேன். ஒரு கண நேரத்தில் அதிசயமாய்த் தோன்றுவது மற்றக் கணத்திலே சர்வசாதாரணமாய் விடுவதை நான் அப்போது உணரவில்லை.

வீட்டினுள்ளிருந்து அவளின் விசும்பல் ஒலி கேட்டது. அந்தக் கணத்தில் அது என்னை முறுக்கிப் பிழிந்தது.

"தெய்வமே, இதென்ன சோதனை. ஐயோ அவரைப்பற்றி எண்ணும்போது வேண்டாம்..... வேண்டாம்........ இந்த வாழ்க்கை."

"அவருக்காகத்தான் இந்த வாழ்க்கை வேண்டுமென்கிறேன். நீங்கள் இப்போது அவருக்குத் தாயொழியத் தாரமல்லவே"

"அந்தத் தாயே தாரமுமாய் இருப்பதால்..............

"இருப்பதாக எண்ணி எண்ணி ஏமாறலாமேயொழிய, வாழ்ந்து விடமுடியாது. எண்ணங்களினால் மாத்திரம் ப ரும் வாழ்ந்துவிடுவதில்லை."

"அப்படியென்றால்....."

"எண்ணங்களையெல்லாம் சிலவேளை உணர்ச்சிகள், உணர்ச்சிமயமான வாழ்க்கைத் தூண்டல்கள், தூண்டல்களைப் பற்றிக்கொண்டெரியும் ஆசைக் கனல்கள் வென்றுவிடுகின்றன..... உண்மையா? பொய்யா?"

மீண்டும் விசும்பல் ஒலி கேட்டது.

"ஏன் இருக்கிறீர்கள். போங்கள்; போய்விடுங்கள். என் மனதை ஏன் கலைக்கிறீர்கள்"

"யார் கலைக்கிறார்கள்? அது தன்னிலே கலைகிறது. தன்னிலே கலைவதை யாரும் தடுக்க முடியாதே; இயற்கைதானே; வருகிறேன்"

"எங்கே போகிறீர்கள். இருங்கள்.... ஐயோ இந்த வாழ்வு.... அது முடியாதோ?

"முடியாது. என்னாலும் முடியாது; உங்களாலும் முடியாது. அப்படியாக வாழ்வதாக நடிக்கலாம். ஆனால் நினைவுகளின் போக்குகளுக்குப் பதில் சொல்லவேண்டும்.

"நான் பதில் சொல்லுவேன். என்னால் தனித்து வாழமுடியும்."

மீண்டும் விசும்பல் ஒலி வெடித்தது.

"ஐயோ, போங்கள்...... போய்விடுங்கள்."

அறையிலிருந்து விறாந்தையை நோக்கிவந்த காலடியோசை பாயின் சரசரப்போடு அடங்கிவிட்டது.

அறையிலிருந்து அவள் விம்மி விம்மி, அதை அடக்கி அடக்கி அழுமொலி கேட்டது.

திகைப்பின் உச்சநிலையிலும் மனம் வெறுமையாகி விடும்போலும்! என்னுள் ஒன்றையும் நான் காணவில்லை. சிறிது நேரத்தின்பின் தான் உணர்ச்சிகள் சீறி எழத்தொடங்கின.

'பரமசிவம், குடும்பமென்றால் அங்காடியல்ல; கோயில். கோயிலின் தெய்வீகத்தை இழிவுபடுத்தப்போகிறாயா? நீ ஆதரவுதந்து எங்களைக் காத்த தெய்வம். மறுக்கவில்லை. ஆனால் அந்தத் தெய்வம் என் மனைவியைப் பலிகேட்குமென்று கனவிலும் கருதவில்லையே. அடே, பொன்னம்மா செத்து மூன்றுமாதங்கூட ஆகவில்லையே, நீ என்னமிருகமா?'

உணர்வுகள் சீற்றமடங்கி படமொடுக்கி மனப்புற்றுக்குள் நுழைந்துவிட்டன. அந்நிலையிற் சிந்தனை பிறந்தது. பரமசிவத்தினிடத்தில் நானும் என்னிடத்தில் அவனும் என் மனைவியினிடத்தில் பொன்னம்மாவும் இருந்திருந்தால் ..... நான் என்ன தேவனா? முற்றுந்துறந்த மகரிஷியா? இப்பொழுது நிகழ்ந்தது நிகழ்ந்திருக்கலாம்.... எல்லாம் மனிதப் பெலவீனங்கள்..."

இரண்டு மனிதப் பெலவீனங்கள் இணைந்துவிட்டால், ஒரு புது வாழ்க்கை உதயமாகக்கூடும். அதைப்பற்றிக் கேட்பதற்கும் மறுப்பதற்கும் நான் யார்? என் மனைவி - இப்போது அவள் என் மனைவியா? தாய். தாயின் குறைகளைப் பச்சை குழந்தை பார்த்துக் கொண்டிருக்குமே தவிர, அதற்குக் கேட்கத் தெரியுமா?

## 5

ஏறக்குறைய ஒரு வருடத்தின் பின் ஒரு நாள் சுந்தரம் என்னிடம் வந்தான். ஏனோ இவ்வளவு காலதாமதம் செய்து வந்தான்? நிகழ்ச்சிப் பின்னல்களின் இறுக்கம் காலமாய் வளர்ந்திருக்கிறது. அதுவே அவன் தாமதத்திற்குக் காரணமோ? எப்படியும் என்னை நினைத்து வந்திருக்கிறான்; நல்லவன்.

மாலைப்பொழுது குறுகி உதிர்ந்துவிட என் மனத்தைப்போல கனத்த இருள் எங்கும் கவிந்து கிடந்தது. விளக்கேற்றுபவள் எங்கும் விளக்கேற்றி விட்டாள். அதனால் முழு இருளும் நான் கிடந்த இடத்தைச் சூழ்ந்துவிட்டது. விளக்குவருமா?

"வீட்டுக்காரர் வீட்டுக்காரர், என்ன வெளிச்சத்தை காணோம்? சுந்தரம் முற்றத்தில் நின்று கூப்பிட்டான். அந்த ஒலி சந்திரகிரண இழையாகி என் மனத்தில் விளக்கேற்றியது.

"யார் சுந்தரமா! வா வா. நான் இங்கே கிடக்கிறேன்." நான் அவனை வரவேற்றேன். அப்பொழுது என் மகன் விளக்கொன்றைக் கொண்டுவந்து வைத்துவிட்டு ஓடிவிட்டான். அவன் முகத்தைப் பாக்கவேண்டுமென்ற பாசத்துடிப்பு முட்டி மோதி அலைக்கழித்து அடங்குகின்றது. அவனைப் பார்த்து எத்தனை நாட்கள்? அந்தத் துடிப்புக்கும் அநேகமாக ஏமாற்றந்தான்.

சுந்தரம் அங்கு வந்திருந்தான். அவன் பார்வை அங்குமிங்குமாய் அந்த இடத்தை அலசிவிட்டு என்னைப் பார்த்தது.

"சுந்தரம், முந்திய இடத்திலே கிடப்பது அவர்களுக்கு வசதிக்குறைவு. அதனால் இந்தப் பத்தியை இறக்கித் தந்திருக்கிறார்கள். ஏன் எனக்கு இந்த மாளிகை போதாதா?" நான் சிரித்தேன்.

"ஏன் போதாது? இதுவே உன் தகுதிக்குக் கூடத்தான். என்றாலும் இந்த மாற்றம்...." என்று அவன் தயங்கினான்.

"ஏன் தயங்குகிறாய்? இப்போது நீ இந்த மாற்றத்தின் பொருளைக் கேட்கிறாயா? அல்லது அதன் கதையைக் கேட்கிறாயா? மாற்றம் தானே வளர்ச்சியின் அறிகுறியாம். நான் மாறமுடியாதவன். அதனால் என்னிடம் மாற்றமில்லை. அதனை நான் இந்த உலகத்திடம் எதிர்பார்க்கலாமா?" அர்த்தமின்றிச் சிரித்தேன்.

"அப்படியென்றால்...." என்றான் அவன்.

அப்போது அவள் அங்கே வந்தாள். அவள் யாருடனும் பேசவில்லை. சலப்பேணியையும் மலத்தட்டையும் எடுத்தாள். அப்போது அவள் முகத்தில் மின்னற் கீற்றாய் அருவருப்பின் சுளிப்பு நெளிந்து மறைந்ததை அவன் காணாதிருந்திருக்க முடியாது. ஏனென்றால் அவள் அங்கு வந்த நேரம் தொடக்கம் சுந்தரத்தின் பார்வை அவளைத்தானே மொய்த்திருந்திருக்கிறது. முதலில் அவன் கண்கள் அவளுடைய முகத்தில் நிலைத்து நின்றன. பின் சிறிது சிறிதாக அளவு வித்தியாசப்பட்ட வயிற்றுப்பகுதியில் நிலைகுத்திக் கீழிறங்கி நின்றன.

எனக்கு எல்லாமே பழக்கமாகி விட்டன. அவனுக்கு.

அவள் போய்விட்டாள்.

சுந்தரம் ஆயிரம் ஆயிரம் சந்தேகங்கள் நிழல்விட என்னைக் குறிப்போடு நோக்கினான். முன்னர் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

"அப்படியென்றால்?"

சுந்தரத்தின் முந்திய "அப்படியயென்றா" லுக்கும் இந்த "அப்படியென்றாலு"க்கும் வித்தியாசமுண்டு. இப்பொழுது அவனுக்கு நான் குறிப்பிட்ட மாற்றத்தின் பொருள் விளங்கிவிட்டது. கதைதான் தெளிவாகவில்லை. நான் மௌனம் சாதித்தேன்.

சுந்தரம் கதையைத் தெளிவாக அறிந்துகொள்ள விரும்பி மீண்டும் "அப்படியென்றால்.." என்றான்.

நான் சிரித்தேன். "சுந்தரம், எனக்குப் பாரிசவாதம் என்பது உனக்குத் தெரியும். பொன்னம்மா செத்தவுடன் பரமசிவத்துக்குப் பாரிசவாதம் வந்தது, மனத்தில். இப்போது அது பூரண சுகமடைந்து விட்டது. ஆனால் அவளுக்கு மனப்பாரிசவாதம் பிடித்துக்கொண்டது."

"சுந்தரம் மீண்டும் கேட்டான்" அப்படியென்றால்...."

"அவ்வளவுதான்" நான் வாய்விட்டுச்சிரித்தேன்.

❖ ❖ ❖

# 17. புகை

சீதாவின் நல்லுணர்வு கிளர்ந்தெழுந்த போதெல்லாம், அது எதிர்பார்த்துத் துடித்த அந்தச்செய்தி எதிர்பார்த்தவர்களிடமிருந்து எதிர்பார்த்த செய்தியைத் தாங்கிவந்து அவள் கையிற் கிடக்கிறது. உவகையிற் பூரித்து, உள்ளெல்லாம் உருகி, ஆனந்தக் கண்ணீர் வடிக்கவேண்டிய அவள், புலன்களெல்லாம் செத்துப்போன நிலையில் கற்சிலையாய் நிற்கிறாளே. அது ஏன்? மனம் ஒரு பச்சோந்தி. கணத்துக்குக் கணம் நிறம் மாறும் குணம் அதற்குண்டு. அதனாலே தானோ? மனம் பசுத்தோல் போர்த்த புலியாய் உலாவுவது முண்டு. போர்வை கழன்றுவிடச் சுயரூபங்காட்டி உறுமுவதுமுண்டு. அதனாலே தானோ? சிலவேளை சில காரணங்களால் மனத்தின் அக்கினிக் கொழுந்துகள் அவிந்து விடப் புகைவதுமுண்டு. புகை சூழ்ந்துவிடுவதுமுண்டு. அதனாலேதானோ?

மனத்துக்குச் சலசலத்துக் கீதமிசைத்துச் செல்லும் கங்கையின் பிரவாகப் பண்பு சித்திக்குமானால், அது தன்னிடம் சேரும் அழுக்கனைத்தையும் நொடியிலே ஒதுக்கித்தள்ளித் தூய்மை பெற்றுவிடும். அக்கினியாயச் சுடர்விட்டு எரியுமானால், அழுக்கனைத்தையும் எரித்துச் சாம்பராக்கிவிடும். இப்பொழுது சீதாவின் மன அக்கினி என்றோ ஒருநாள் அறிந்த ஒரு செய்தியினால் அவிந்துவிட தூய்மை பொலிந்த இடமெங்கும் புகைசூழ்ந்துவிட்டது. இப்போது தந்திச்செய்தி இன்னதுதான் என உணரும்போது புகைமூட்டம் தடித்து பூரணமாக மூடுகிறது. புகைகிறது.

"எனக்கில்லாத அந்தப் பேறு அவளுக்குக் கிடைக்கவா? என்வயிறு செழித்து அந்தச் செழிப்பிலே சின்னஞ்சிறு மனிதப்பூ மலராதபோது "அவள்"?

அந்த ஏக்கம் உள்ளீடில்லாத பொறாமைபோல உருவங் காட்டுகிறது. என்றாலும் ஒரு பெண், மெய்ம்மையான பெண்மைப்பேறு பெற்றுவிடத்துடிக்கும் துடிப்பின் பெருமூச்சு அது. அந்தப் பெருமூச்சின் தாக்கத்தினாலே பண்டை நினைவுகள் ஒவ்வொன்றும் சிறிதும் பெரிதுமான பொறிகளாய் உதிர்கின்றன. ஒரு பொறி சுடர்காட்டிப் புகை மூட்டத்தினூடே மின்னுகிறது. அது பழைய நினைவுப்பொறி.

## 2

சீதாவின் மார்பிலே முகம் புதைத்துத் தேம்பித் தேம்பி அழுகிறாள் மாலதி. சீதாவும் அழுகிறாள். இருவரும் அழுது உருகிக் கரைந்து ஒருவராய் விடுகின்றனர். இரண்டு கண்ணீர்களும் சங்கமமாகிவிடப் பாசங்கள் பேசிக்கொள்கின்றன. பாசங்கள் வார்த்தைகளுக்குக் கட்டுப்படுவதில்லையானாலும், வேளை வாய்த்தபோது குழைந்து குழைந்து கொஞ்சுகின்றன. சீதாவின் கைகள் தங்கையின் இடையை அணைத்து மெல்ல மெல்ல இறுக்குகின்றன. ஆழமறியாத பாசப் பெருஞ்சுழியில் இழுபட்டு மூச்சுத்திணறி இருவரும் தடுமாறுகின்றனர்.

"அக்கா...."

"என்னடி மாலதி......"

"அக்கா நான் அநாதை....." அன்புச் சுழியில் அகப்பட்டு இழுபட்டு அலைபட்டு, இன்ப வேதனை கொண்டு தடுமாறும் வேளைகளிலெல்லாம் மாலதிக்கு இந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்துவிடும்.

"யார் சொன்னார்கள் அப்படி, அப்படியானால் நானும அவரும்...."

"அக்கா, நீங்களும் அத்தானும் தெய்வங்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கண்கண்ட தெய்வங்கள் என்னைக் கண்கலங்காமற் காத்தனவன்றி என்னை இந்த மண்ணுக்குத் தந்த அம்மாவாகவோ அப்பாவாகவோ இல்லை. என்னைப் பெற்றவள் யார்? பெற்றவன் யார்?"

"ஐயோ, ஐயோ, இப்படியான வேளைகளில் இப்படியான ஒரு பைத்தியம் உன்னில் பிறந்துவிடுகிறதே. ஏனடி, விடை கிடைக்காத வினாவைத் திருப்பித் திருப்பிக் கேட்டால், விடை கிடைத்துவிடுமோ? எனக்குத் தெரியாது. என் அம்மா தந்த விளக்கந்தான் எனக்குத் தெரியும். அதைத்தான் நம்பினேன். அந்த ஆசுபத்திரி டாக்டரம்மாதான் உன்தாயும் தந்தையும்..... அம்மாவுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். அவளுக்கு எதையும் நோண்டி நோண்டிப் பார்க்கத் தெரியாது. அவளுக்கு நீயும் நானும் குழந்தைகள். அவ்வளவுதான் எங்கள எல்லோருக்கும் தெரிந்ததும் தெரியவேண்டியதும்.

"அக்கா".... இந்தத் தெரிந்ததைப்பற்றி நீ எத்தனை எத்தனை தரம் சொல்லியிருப்பாய். நான் எத்தனை எத்தனை தரம் கேட்டிருப்பேன். நீ மீண்டும் மீண்டும் சொல்லச் சொல்ல, நான் மீண்டும் மீண்டும் நினைக்க நினைக்க...... அப்போதுதான் என்னுள்ளம் நிறைந்து கனக்கிறது.... அக்கா, உன் மனமென்ன இந்த நிலமளவு பெரியதா? வானமளவு உயர்ந்ததா? கடலளவு ஆழ்ந்ததா? ஐயோ. அக்கா, உன் பெரிய உள்ளம், என்றும் எப்பொழுதும் நித்தியமாக அமுத வெள்ளத்தால் எப்படி நிறைந்துவிட முடிகிறது....."

மாலதிக்குச் சொற்கள் தடுமாறுகின்றன. சொல்லுக்கெட்டாத பெரும் பொருளை, நன்றியினாற் பொங்கிப் பூரித்த பேருணர்வை அங்கு தூங்கிய மோனம் பேசுகிறது. அந்த மோனத்து முழுமையைத் தவிர வேறெதனாலும் அவற்றைப்பற்றிப் பேசிவிடமுடியாது. பிறகு ....

"என்றாலும் நீ கொஞ்சம் பொல்லாதவள்தான் அக்கா. அக்கா" என்னைப் பிரிந்துவிட உனக்கெப்படி மனம் வந்தது. போ என்று சொல்ல் எப்படி வாய் வந்தது. அந்த அமுதக்கடலிலே எப்படித் துளி நஞ்சு விழுந்தது. நீதான் எனக்குத் துணை. நீதான் எனக்கு எல்லாம். இப்படி நான் நினைத்துக்கொண்டிருக்கும்போது நீ என்ன வேலை செய்தாய்? என்னை ஒரு ஆண் துணையுடன் பிணைத்துவிட்டாய். அந்தப் பிணைப்பிலே ஒரு குளிர்ச்சியைக் காட்டினாய். ஒரு வாழ்க்கையை ஆக்கினாய். பிறகு.... அவருடன் போ ...... போயேவிடு....... அங்கேதான் உனக்கு இடம்; இங்கில்லை என்று கன்னத்தில் அறைந்து விரட்டுகிறாய். பிறகு ..... சகல சௌபாக்கியங்களும் நிறைய வாழ்த்தி, அடித்தது போல் அணைக்கிறாய். இது ஏன்? இது எப்படிச்சித்தித்தது" - இப்பொழுது பாசம் மாத்திரம் பேசவில்லை; புதிதாகக் கொடிவிட்டுப் படரத்தொடங்கிய காதலும் பேசுகிறது. பாசமும், காதலும் ஒன்றை ஒன்று விழுங்கி விழுங்கிக் கக்குகின்றன.

சீதாவின் கணவனின் கன்னங்களிலே கண்ணீர் முத்துக்கள் உருண்டு சிதறுகின்றன. மாலதியின் கணவன், கண்ணீரிலே கழுவிப் புனிதமாக்கப்பட்ட புன்னகை மலர்களைச் சொரிகிறான்.

சீதா காட்டிய வாழ்க்கைப் பாதையிலே மாலதி தன் கணவன் கையைப் பற்றிக்கொண்டு போய் விடுகிறாள்.

அவர்கள் பின்னழகைப் பார்த்துச் சீதா சிலையாகி விடுகிறாள். அந்தச் சிலைக்கு மெய்யாகவே உணர்வு வரப் பலநாட்கள் ஆகின்றன.

3

சீதா மெல்லத் தந்தியைப் பிரிக்கிறாள். தந்தியின் ஒட்டப்பட்டிருந்த வாயிலே சுட்டுவிரல் நுழைந்து திறக்கும்போதே. மற்றொரு எண்ணப்பொறி கோலங்காட்டிச் சிந்துகின்றது.

மாலதி தன் கணவனுடன் சென்ற பின்னர் வந்த முதற் கடிதம் அது. சீதாவின் கணிப்பிலே நாள் எண்ணி ஆறுமாத மூப்புப்பெற்ற கடிதம். கடிதத்தை மெல்லெனப் பிரிக்கும்போதே, பல்வேறு உணர்வுகள் கூடிக்குலவிக் கும்மாளமடிக்கின்றன. அந்தக் கும்மாளத்துக்கு இதழ்க்கடையில் ஓடிய புன்முறுவல் முத்திரை பொறிக்கிறது. அப்போது "அக்கா.... அக்கா.." என்று மாலதியின் அசரீரிக்குரல் அவள் மனச்செவியிற் கேட்கிறது. அது மன்னிப்புக் கேட்பதுபோலக் கொஞ்சிக் குழைந்து உள்ளச்சுவர்களை வருட, அவள் மெய்சிலிர்க்கிறாள். "போடி, இதற்கு யாராவது மன்னிப்புக் கேட்பார்களா? இதற்கெல்லாம் எங்கே நேரம்? பெண்ணின் வாழ்விலே திருமணம் புதியதொரு அத்தியாயமோ! புனர்வாழ்வோ! முன்பின் அறியாத ஆணின் கரம் பற்றிய பெண் அவனுக்கே அர்ப்பணமாகி விடுவது எதனால்? அதற்கு விடை வேண்டாம். அதற்கு அதுதான் விடை..... தன்னை ஆண்டவனின் நினைவில் பேச்சில செயலில் கோடி கோடி கற்பனைக்கும் அப்பாலான போகம் கிட்டும்போது மண்ணுலகம் ஏது? மண்ணுலகச் சுற்றமேது? நான்தான் ஏது? பெற்றவனையோ, பெற்று வளர்த்தவனையோ, வளர்த்தவர்களையோ மறக்கத்தான வேண்டும். அந்த மறதிதான் பெண்மை. அதனால் என் பெண்மை மூலம் உன் பெண்மையை உணர்ந்து போற்றுகிறேன்..... என்று சீதாவின் சிந்தனை, கொடிவிட்டுப் படர்கிறது.

சீதா அந்தக் கடிதத்தை வாசிக்கவில்லை. மனத்தால் விழுங்கினாள். கடிதத்தை வாசிக்காமலே கடிதத்தில் என்ன இருக்கும் என்று கற்பனைக் கண்கொண்டு காணுவதிலும் ஒரு தனியின்பமுண்டு. சீதாவும் பிரித்துக் கடிதத்தை வாசிக்காமலே, தனது இளமை நினைவுகளும் பெண்மையனுபவங்களும் இனிய இசையெழுப்ப, அந்த இசைக்கு, தன் தங்கையின் நினைவுகளும் அனுபவங்களும் அநுசுருதியாய்ச் சேர்ந்து இழைவதை மானசீகமாக உணர்ந்து பூரித்தாள். இப்படிப்பட்ட வேளைகளில் இப்படிப்பட்ட நினைவுகளும் அனுபவங்களும் இலௌகீக மறதிகளும் எல்லாப் பெண்களிடமும் விளையவேண்டும். விளைவதுதான பெண்ணின் தன்மை. - பெண்மை - என்று அவள் உணர்ந்து மெல்லச் சிரித்தாள்.

அது கடிதமா? காவியம். பெண்களுக்கே விளங்கக் கூடிய அந்தரங்கங்கள், நுணுக்கமான நெகிழ்ச்சிகள், உணர்வுகளின் மின்னற் கீற்றுகள் - இவைகளின் குவியலாய்க் கிடந்து மாலதியின் கடிதம் பேசுகிறது. கடிதத்தின் ஓர் இடத்திலே அவள் பழங் கிழவியாய் மாறிக் காலகாலமாகக் கண்ட உண்மைகளைக் கண்டறிந்தவள் போலக் கூறுகிறாள். இன்னொரு இடத்திலே சொல்வது எது விடுவது எது என்று தெரியாமல் கள்ளமறியாக் குழந்தையாய் மழலை மிழற்றுகிறாள். சில வரிகளிலே அவள் முகம் தெரிகிறது. நொடிக்கு நொடி முகத்திலே செம்மை படர நாணங் கொண்டு முகத்தைப் புதைக்கிறாள். செல்லம் பொழிந்து மெல்லச் சிணுங்குகிறாள்; இடையிடையே ஆனந்தக் கண்ணீர் சிந்திச் சிரிக்கிறாள்; அந்த அந்த வரிகளைப் படித்த சீதாவும் தன்னையறியாமல் நாணத்தாற் சிவந்து, மெல்லச் சிணுங்கி, ஆனந்தக் கண்ணீர்' வடித்துச் சிரிக்கிறாள்.

சீதாவின் கண்கள் இப்போது கடிதத்தின் கடைசி வரியைத் தொடுகின்றன. "அக்கா, உனக்கொரு நல்ல செய்தி. உன்னைக் கட்டி அணைத்து. துள்ளிக் குதித்துச் சொல்லத்தான் ஆசை; என்றாலும் உனக்குக் கூடச் சொல்ல வெட்கமாயிருக்கிறது. அக்கா...... அக்கா...... என் வயிறு செழித்துவிட்டது.

சீதா பெண்ணில்லாமல் தெய்வமாயிருந்தால், அந்தக் கடைசி வரி அவளைக் குளிர்வித்திருக்கும். கண்மூடி அந்தச் செய்தியை உள்வாங்கி, பூரண அருள்மாரி பொழிந்து ஆசீர்வதித்திருப்பாள். ஆனால், சீதாவின் அருபியாய்க் கிடந்த தாய்மை அந்தச் செய்தியை அறிந்ததும், விடநாகம் போலப் பெருமூச்சு விடுகிறது. நெஞ்சு ஓராயிரம் தீக்கங்குகளாய்க் கொழுந்து விட்டெரிகிறது; சுடுகிறது; புரண்டு புரண்டு குமைகிறது. "நான் வேண்டியும் பெறவில்லை; அவள் வேண்டாமலே பெறுகிறாள். ஐயோ! எண்ணக்கூடாத எண்ணமானாலும் எண்ணாமலிருக்க முடியவில்லையே."

அவள் நெஞ்சம் பொங்கும் பெருங்கடலாய் மாறுகிறது. கொந்தளித்தெழும் எண்ண அலைகள் நெஞ்சக் கரையில் மோதிச் சிதறுகின்றன. அலை ஓய்ந்து தேக்கம் கண்ட நிலையிலேதான், அந்த வேளையிலேதான் முதன் முதலாகப் பளிங்கு போலத் தூய்மை பொலியக் கிடந்த அவள் மனத்திலே அந்தப் பொல்லாத புகை மெல்ல மெல்ல அவளையுமறியாமல், தடுத்தும் தடைப்படாமற் படரத் தொடங்குகிறது.

## 4

சீதாவின் கைவிரல்கள் தந்தியைப் பூரணமாய்ப் பிரித்து விடுகின்றன. தந்தி கட்டுக் குலைந்து விரிந்து கிடக்கிறது. அதைக் கண்கள் கண்டு, மனம் வாங்குவதற்கு இடையில் இன்னொரு பொறி தெறித்து ஒளிக்கோலம் காட்டுகிறது.

சீதாவின் எந்த ஒரு பதிலையும் எந்நாளுமே எதிர்பாராமல், மாலதியிடமிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கடிதமும் தாய்மையின் கொலு; கன்னிப் பெண் தாய்மைப் பேற்றை அணுவணுவாகச் சுவைத்துணர்ந்த அனுப்வக் களஞ்சியம். மாலதியின் தாய்மை சுரந்தோட விட்ட உணர்ச்சிக் கிளுகிளுப்பில் ஒன்றுதானும், அவளது அனுபவக் கூறிலே ஒரு கீறுதானும் சீதாவின் இதயத்துப் புகையைப் போக்கிவிடவில்லை. ஒவ்வொரு கடிதமும் தன்னைக் கிண்டல் பண்ணிக் கேலி செய்வது போலத் தோன்றுகிறது. அவை அவளை மலடி, மலடி என்று இரகசியமாய்ப் பேசுகின்றனவோ! அவளது பெண்மையைக் கீறி அதன் வெறுமையை உணர்த்துகின்றனவோ! அல்லது தூங்கிக் கிடந்த கொடும்புலியைத் தட்டியெழுப்பி வேடிக்கை பார்க்கின்றனவோ! ஒவ்வொன்றும் புதிய, புதிய யமனாகப் பரிணாமப்பட்டுத் தன்னுயிரை வதைப்பது போல எண்ணி எண்ணித் துடிக்கிறாள் சீதா.

ஒரு கடிதம்....... "அக்கா, இப்போது எனக்கு எட்டு மாதம். என்னுள் முளைத்து விளையும் இந்த உயிரைச் சுமப்பதே தனி ஆனந்தம். அது உனக்கெப்படித் தெரியும்? அந்த உயிர் மகனோ? மகளோ? என் எண்ணப் படி மகன். அவர் எண்ணப்படி மகள். என் எண்ணந்தான் இப்போது எனக்குப் பெரிது. என் மகன்..... ஆ! அவன் என் வயிற்றிலே கிடந்து ஊரும்போதும் துடிக்கும் போதும் அவன் என் கண் முன்னே ஓடி விளையாடுவது போல உணருகிறேன். அவனை அணைத்துக் கொள்ளும் பாங்கில் அடிக்கடி என் வயிற்றை யாரும் காணாமலே தடவிக் கொள்ளுகிறேன். அந்தச் சுகம்.....ஓ! ..... அதை நீ கற்பனையிலேதான் காண வேண்டும்".

இது கடிதமா? சீதாவைப் பொறுத்தமட்டில் அக்கினி யாஸ்திரம். சீதாவுக்குத் தன் ஆற்றாமையைக் கூறுபடுத்தி, இழையாக்கி, அதனையும் வகிர் செய்வது போலத் தோன்றுகிறது. ஒவ்வொரு வகிரும் விசுவரூபமெடுத்துத் தன்னைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரிப்பது போல அவள் உணர்கிறாள்.

5

"சீதா, என்ன தந்தி. ஏன் நடுங்குகிறாய், என்ன சேதி" - அப்போதுதான் அங்கே வந்த கணவன் குரல் கேட்டுத் தெளிவற்ற தன்னிலைக்கு வருகிறாள் சீதா.

"ஆமாம்; தந்தி..... தந்திதான்". சீதா தடுமாறுகிறாள். தந்திச் செய்தியைச் சொல்லவோ, தந்தியைக் கொடுக்கவோ முடியாமற் பாதிப் பிரக்ஞையில் நின்று தத்தளிக்கிறாள். அவனுக்கு அவளுடைய நிலையும் சொல்லும் செயலும் புதுமையாய் இருக்கின்றன. அவனே அந்தத் தந்தியை அவள் கையிலிருந்து உருவியெடுத்துப் படிக்கிறான்.

"ஓகோ...... மாலதிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாம்..... மகிழ்ச்சி தானே" - அவன் பூரிக்கிறான்; ஆனந்தக் களிப்புக் கொண்டு சிரிக்கிறான். அந்தச் சிரிப்பையோ ஆனந்தத்தையோ உணரும் நிலையில் அவள் இல்லை. ஏதோ அனந்தலிலே கேட்ட கேள்விக்கு மறுமொழி கூறுவதைப்போல, புலம்புவது போல, பிதற்றுவது போல, வார்த்தை ஒன்று உதிருகிறது.

"யாருக்கு........"

தனக்கில்லை என்கிறது அக்கேள்வி. தன் மனைவியின் நிலை கண்டு வியந்து அவன் அவள் தோளைப்பற்றி உலுப்பினான். அவள் கண்ணைத் துடைத்துக் கொண்டு அவனை ஏறிட்டு நோக்குகிறாள்.

"ஏன் உனக்கு, எனக்கு எல்லோருக்குந்தான்...." என்று மிகத் தெளிவாக, அழுத்தமாகக் கூறிப் புன்முறுவல் பூத்தான், அவன்.

"ஆமாம்..... எல்லோருக்குந்தான்.... ம்..... உங்களை ஒன்று கேட்கட்டுமா?...... சிரிக்க மாட்டீர்களே." கரை புரண்டு வெடித்து வரும் அழுகையை அடக்கிக் கொண்டு தழுதழுககிறாள். அவன் ஒன்றும் பேசவில்லை. சீதாவின் மனத்தைப் பற்றிப் படர்ந்துள்ள மனப்புகையை அவன் இனங்கண்டு கொள்ளுகிறான். அவளைப் பற்றிக் கொண்ட நோயை அறிந்த அவனுக்கு அந்நோய்க்கு மருந்து தெரியவில்லை. அவன் அவளுக்காகப் பரிதாபப்படுகிறான்; தனக்காகப் பரிதாபப் படாமலும் இருக்க முடியவில்லை. குருட்டுக் குழந்தை போலத் தடுமாறிக் கொண்டு அவளே கேட்கிறாள்.

"இனி, எங்களுக்குக் குழந்தையே பிறக்காதா?"

"பிறக்கலாம்; பிறக்காமலும் விடலாம்." அவன் சொல்லும்போதே புன்னகை சிந்துகிறது.

"எனக்கு.... என் வயிற்றில், எங்களுக்கென்றே ஒரு குழந்தை...." வார்த்தையை வெடித்து வந்த விம்மல் முடித்துவிட, அவள் அவன் தோளிற் கிடந்து வெம்புகிறாள்.

"சீச்சீ....... சீதா, நீயா இப்படிப் புலம்புகிறாய். இதென்ன எண்ணம்...... நீ வேறு. மாலதி வேறா..... அவன் வேறு, நான் வேறா...... உன் மகனைப் பார்த்து வரலாம் புறப்படு; சிரிக்க வேண்டிய நீ அழுவானேன்; புறப்படு"

## 6

உரித்துரித்து மடல் போக்கிய வாழையின் நடுத்தண்டாய், மாலதி ஆஸ்பத்திரிக் கட்டிலிலே கிடக்கிறாள். குங்குமப்பூக் கலவாத வெறும் பாலைப்போல அப்படி ஒரு வெளுப்பு; முகத்தில் அசாதாரணமான ஒரு பொருமல்; கண்களிற் செம்மை படந்த ஒரு வீக்கம். சீதாவுக்கு மாலதியின் அந்தக் கோலம் ஒரு புது அனுபவம். ஒருவேளை அப்படித்தானோ என்று எண்ணுகிறாள். வைத்த கண் வாங்காமல் மாலதியைப் பார்க்கிறாள். அந்தத் தாய்மைக் கோலத்திலே தெய்வீகக்களை பொலிவதாக ஒரு பிரமையுண்டாகிறது. அந்த ஒளிக்கு மன அழுக்கையும் மாற்றும் ஆற்றலுண்டு போலும். முன்பிருந்த ஆற்றாமையின் வேகம் இப்பொழுது தணிந்து விடுகிறது. மாலதியின் படுக்கை'பருகிற் சென்று,

"மாலதி......" என்று அழைக்கிறாள் சீதா.

"அக்கா..... வந்தாயா?" அதன் மேல் அவளாற் பேச முடியவில்லை. அடிவயிற்றிலிருந்து புறப்பட்டு, நெஞ்சுக் குழியை ஊடறுத்து, இதயத்தைப் பிளந்து கொண்டு ஒரு கேவல் வெடிக்கிறது. பின் ஒன்றன் பின் ஒன்றாகப் பல. சிவந்த கண்கள் மேலுஞ் சிவக்கக் கண்ணீர் கட்டுடைத்துப் பாய்கிறது.

"ஐயோ! அக்கா....... அக்கா". மாலதி அக்காவின் மார்பில் முகம் புதைத்துக் கிடந்து பொருமித் தேய்கிறாள்; தேய்ந்து தேய்ந்து மாய்கிறாள்.

"என்னடி..... இதற்கா அழுகிறாய்?..... நான் கடிதம் எழுதாதது உனக்கு இத்தனை வருத்தமா? இத்தனை கோபமா?. எழுதித்தானா அன்பு தெரிய வேண்டும்? நானே வந்து விட்டேனே; இனியென்ன.... ம்...... அழாதே".

"இல்லை அக்கா......."

சீதா திகைக்கிறாள், திகைப்பு கண நேரத்தில் விடிகிறது. அவள் கண்கள் அறையெங்கும் துழாவுகின்றன.

"மாலதி........ என்னடி". சீதா அவள் முகத்தை நிமிர்த்தி நோக்குகிறாள். மாலதி பதிலேதும் பேசவில்லை; விம்மி விம்மி மூலையிற் கிடந்த சின்னத் தொட்டிலை நோக்குகிறாள். சீதாவும் அவள் நோக்கோடு சேர்ந்து அந்தத் தொட்டிலை நோக்குகிறாள். தொட்டில் கழுவித் துடைத்துச் சுத்தமாய்க் கிடக்கிறது; கழுவிய ஈரம் காயவில்லை.

தொட்டிலின் வெறுமையோடு சீதாவின் உள்ளத்திலும் வெறுமை குடிகொண்டு விடுகிறது. அந்த வெறுமையினூடே பயங்கரவுண்மையொன்று அவளுக்கு வைகறையாய் வெளிக்கிறது. அந்தப் பயங்கர உண்மை நன்றாய் விடிந்து சீதாவில் உறைந்த போது..... சீதாவுக்குத் தான் ஏன் சாகவில்லை என்பது அதிசயமாகிறது. அவள் அங்க அணுக்கள் அலுக்கொலுப்பட்டு அலைகின்றன. அவள் நெஞ்சம் நெருப்பாய் எரிகிறது: எரிமலையாய்க் குமுறுகிறது; கடலாய்க் கொந்தளிக்கிறது; மலையருவியாய் அதலபாதலத்தை நோக்கி இழிகிறது. பனிக்கட்டியாய்க் குளிர்ந்து உறைகிறது. உண்மையாகவே இவையெல்லாங் கலந்த வேதனை அவளை ஆட்கொள்ளுகிறது.

"ஐயோ, தெய்வமே! இது என்ன கொடுமை". சீதாவின் குரலிற் பிழிந்த வேதனையை ஆசுபத்திரிச் சுவர்கள் எதிரிரொலித்துப் புலம்புகின்றன. "ஐயோ, என்னுள்ளே படமெடுத்தாடிய நச்சரவந்தான் என் பிள்ளையைக் கொன்றது. என் எண்ணத்திலே விளைந்த விஷந்தான் என் பிள்ளையைக் கொன்றது. மாலதி, நானே என் குழந்தையைக் கொன்றேன்; நானே கொன்றேன்; நானே கொன்றேன்." சீதா வெறிகொண்டு, விசர் கொண்டு, பேய் கொண்டு மாலதியின் காலடியிற் கிடந்து, தான் வளர்த்த புகையிற் கிடந்து திணறித் துடிக்கின்றாள். தேற்றித தேற்றித் தேற்றப்பட வேண்டிய மாலதி தேற்றியும் சீதா அடங்கவில்லை.

சீதாவின் கணவனோ அவளைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். இரண்டொரு கண்ணீர் முத்துக்கள் உருண்டு சிதறுகின்றன. ஆனால், அவன் அவளைத் தேற்றவில்லை. அவள் அழுது அழுது தேய வேண்டும் என்பது அவன் ஆசை. அந்த அழுகையே மனப்புகையை அகற்றி, புகைச்சலைப் போக்கி, மீண்டும் அந்தப் பவித்திரமான அக்கினியை வளர்க்கும் என்பது அவனது எண்ணம்.

❖ ❖ ❖

# 18. தெய்வம்

"இப்படிப்பட்டவை பிரயாணம் பண்ணவே கூடாது. பேசாமல் வீட்டிலை முடங்கிக் கிடக்க வேணும். மற்றவைக்கு இடைஞ்சல் இல்லாமல் சீவிக்க எப்பதான் இந்தச்சனங்களுக்குத் தெரியப்போகுதோ!" என்றது ஒரு குரல். அதில் வார்த்தைக்கு வார்த்தை 'பெருமக்கள்' பண்பு வழிந்தது.

"இல்லைப் பாருங்கோ, இவைக்காகத்தான் அரசாங்கம் தருமாசுப்பத்திரி கட்டியிருக்கு. போய்ச் சாவகாசமாய்ப் படுத்துக் கிடக்கலாமே". வெகு நளினமாக நகைச்சுவை இழையோடக் கூறியது வேறொரு குரல்.

"பாவம், அநாதைபோலை தெரியுது. என்னவோ ஏதோ; தன்பாட்டிலை கிடக்கட்டும். எங்களுக்கென்ன?" கற்கண்டுக் குரலொன்று இனித்தது; தாய்மையின் 'பரந்த கருணை' பேசியது.

"சேச்சே, ஏதோ பெரிய வருத்தம்போலத் தெரியுது. முகம் காஞ்சு கறுத்துப்போய்க் கிடக்கு. ஐயையோ! முனகுறானே" - உண்மையான இரக்கம் சிந்தியது அந்தக் குரலில்.

"இப்படித்தான் வருத்தக்காறர்போல நடிப்பாங்கள். நாங்கள் அயர்ந்துபோற நேரம் பார்த்துச் சுருட்டிக் கொண்டு போவான்கள். கொஞ்சம் கவனமாக இருங்கோ; காலம் கலிகாலம்; யாருக்கும் இரங்கக் கூடாது; யாரையும் நம்பக்கூடாது" என்றது ஒரு சந்தேகப் பிராணி. அவர் தன் நிழலைக் கண்டும் அஞ்சி நடுங்கி ஒடுங்குவார் போலத் தெரிந்தது.

இந்த நாளில் எங்கெங்கும் மிக மிக மலிவான பண்டம் அபிப்பிராயம்; யாரும் எதையும் சொல்லலாம்; நியதியோ, வரம்போ, கட்டுப்பாடோ எதுவுமின்றி எங்கும் வியாபித்திருப்பது அது.

கொழும்பு - யாழ்ப்பாணம் தபால் வண்டியில் இருந்தவர்கள், பொல்காவலை நிலையத்தில் ஏறிய சுந்தரத்தைக் கண்டபோது, சிந்தனை எதுவுமின்றித் தங்கள் அபிப்பிராயங்களை உதிரவிட்டனர். அத்துடன் அவர்கள் வேலை முடிந்தது. ஏன் சொன்னோம்; சொல்லலாமா என்ற கவலை அவர்களுக்கு ஏது? கல்லை எறிவது அவர்கள் வேலை; எறிபட்டவ'ன் படும் பாட்டைப்பற்றி அவர்களுக்குக் கவலை ஏது?

அவைகளைப் பற்றிச் சிந்தித்துக் கவலைப்படத்தான் சுந்தரம் இருக்கிறானே.

தாயற்ற குழந்தைபோலக் கிடந்தலையும் மோதிரச் சுருளோடு கூடிய தலைமயிர் அழகாகச் சீவி விடப்பட்டிருந்தால், அளவுக்கு மிஞ்சி வளர்ந்துவிட்ட முகத்து மயிர் மழிக்கப்பட்டிருந்தால், அவன் சலவை செய்யப்பட்ட வேட்டியும் சட்டையும் அணிந்திருந்தால், அந்த வண்டியிலே அந்தப் பகுதியிலிருந்த அத்தனை பேரிலும் பார்க்க அவன்தான் அழகனாய் விளங்கியிருப்பான்; மூலை ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டு, லாகவமாகக் கால்களை ஆசனத்தில் நீட்டிவிட்டு புத்தகம், பத்திரிகைகள் என்பனவற்றுள் தங்களைப் புதைத்துவிட்ட 'பெரிய புள்ளி'களும் நேர்மையாக நீட்டி நிமிர்ந்து படுத்து உறங்குவது போலப் பாவனை பண்ணிய வீரர்களும் அப்போது அவனுக்கு நிச்சயமாக இடம் கொடுத்திருப்பார்கள். சுந்தரத்தின் அப்போதைய புறக்கோலம் அவனுக்குச் சதி செய்துவிட்டது. அதனால், மனிதப் பண்பைக் கொலை செய்து புதைத்து அந்தப் புதைகுழி மேல் வைக்கப்பட்ட அழகிய சிலைகளாய் அவர்கள் விளங்கினர். இல்லாவிட்டால், சுந்தரத்தின் நடுக்கத்தையும் முனகலையும் கோலத்தையும் கண்டு அவர்கள் இரங்கியிருப்பார்கள். ஆனால் ஒருவராவது அசையவில்லை. அதனால், இரு ஆசனங்களுக்கிடையே தன் உடலைக் கிடத்திவிட்டான் அவன்.

உழுத்த கோதாய்ச் சக்தி குன்றி, வண்டியிலேறிய சிறு முயற்சியே (பெருஞ் சிரமமாகிவிட இயங்கிக் கொண்டு, அவன் கண்மூடிக் கிடந்தான். தனக்கு வந்திருக்கும் அந்த நோய்க்கு முத்திரை பொறித்து இதுதான் என்று கூற அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அது கைகாலோச்சலாய், தலை வலியாய், இதயத்தைப் பிளக்கும் கோடையிடியாய், கனன்றெரியும் அனற் பிழம்பாய் தன்னை உண்ணத் தொடங்கிவிட்டது மாத்திரம் அவனுக்குத் தெரியும். அது உடலைத் தொட்டு, உள்ளத்தைத் தொட்டு, அதனடியிலுள்ள ஆசைகளைத் தொட்டு, வாழ்க்கைக் கனவுகளைத் தொட்டு எரிக்கத் தொடங்கிவிட்டது. அந்த இதய தகனத்தின் பேறாய், என்னவோ ஏதோ என்ற பயமும், ஏக்கமும், மனச்சோர்வும் மிஞ்சிக் கிடந்தன.

கொடிய சுரவேகத்தில் உடல் இயக்கமின்றிக் கிடந்து விட. அதை விட்டு மனம் பிரிந்து அந்தர வெளியில் நின்று உலாவுவது போன்ற அபூர்வமான சித்தநிலை சித்திக்கிறது. அந்த நிலையிலே விளங்காதவை விளங்கும்; விளங்கியவை புதுப் புது உருவம் பெறும்: அப்பொழுது வந்து விழுகிற ஒவ்வொரு சொல்லுக்கும் புதுப்புது வியாக்கியானங்கள் விரியும்.

சுந்தரத்தை நோக்கி வீசப்பட்ட அந்த அபிப்பிராயங்கள் கொதிநீரிலுள்ள நீரணுக்கள் போலச் சுழலத் தொடங்கின. பூரண தெளிவுமின்றி ஆழ்ந்த நித்திரையுமின்றி இரண்டுங்கலந்த 'அனந்தல்' நிலையில் அவர்களது ஒவ்வொரு அபிப்பிராயமும் பல பல உருக்கொண்டு மன அரங்கிலே தோன்றி மறைந்தன.

"இப்படிப்பட்டவை பிரயாணம் பண்ணக்கூடாது. பேசாமல் வீட்டிலை முடங்கிக் கிடக்கவேணும்" என்ற அவர்களுடைய அபிப்பிராயம் குமிழியாய்த் தோன்றி, வரவரப்பெரிதாய், எங்கோ மோதி உடைந்து மீண்டுஞ் சிறு சிறு குமிழியாய் மாறி மிதந்து அங்குமிங்கும் அலையத் தொடங்கியது.

'நான் வீட்டிலிருந்தா பிரயாணம் பண்ணுகிறேன்? வீட்டுக்கல்லவா போகிறேன். வீடு - அதைப்பற்றிய நினைவு - யாரோ தாமரைப் பூவிதழ்கள் கொண்டு தடவி விடுவது போலவல்லவா சுகம் பேசுகிறது. ஆமாம்; எனக்கு இப்போதுள்ள நிலையில் வீடுதான் சுவர்க்கம்; இல்லை இல்லை, எவர்க்கும் எப்போதும் வீடுதான் சுவர்க்கம்.

'வீடு ஒரு கோவில்; அம்மாதான் அங்குள்ள தெய்வம். அங்கே மூலத்தானத்தில் அம்மா ஜெகஜோதியாக விளங்குகிறாள். அவள் நெற்றியிலே குங்குமம் இல்லை. அந்தக் கோலமும் துடைத்துச் சுத்தமாக்கிய வெள்ளித் தாம்பாளம் போல அழகாகத்தான் இருக்கிறது. அதோ, அவளுக்குப் பாத பூசை செய்வது யார்? ஓகோ ! என் தங்கை கல்யாணி ; எப்போது அவள் இவ்வளவு பெரியவளானாள். அசப்பிலே பார்க்கும் போது இன்னொரு அம்மாவாகவே தோன்றுகிறாள். அடிகள்ளி, நீ அம்மாவிலிருந்து கழன்று புத்துருப்பெற்று வந்த வேறொரு அம்மாவோ?

'என் அம்மா' தன் கையில் ஒரு தங்க மோதிரம் வைத்திருக்கிறாள். அவள் கை நடுங்குகிறது; மெய் சிலிர்க்கிறது; கண்கள் பனிக்கின்றன. கண்ணீர்த் திரையூடு என்னைப் பார்க்கிறாள். "தம்பி, இது வெறும் மோதிரமல்ல; இதில் உன் அப்பா இருக்கிறார்; எனவே இது உன் அப்பா. இத்தனைநாளும் இதில் உன் அப்பாவைக் கண்டு பூரித்தேன்; அதனால் சக்தியும் பெற்றேன். இந்தா, இதைக் கொண்டுபோய் விற்று விட்டுப் பரீட்சைக்கு வேண்டிய முத்திரையை

வாங்கு. வேறு வழியில்லை. இந்த வேளையில் இதைப் பயன்படுத்தாது போனால் இதிலுள்ள உன் அப்பா நிச்சயமாக என்னைக் கோபிப்பார்'' என்று சொல்லி என் அம்மா குமுறி அழுகிறாள். நான் செத்துச் சாம்பலாயப் போனாலும் அந்தச் சாம்பல் துகள்கள் ஒவ்வொன்றும் இதை நினைத்துப் பொருமும்.

'அம்மாவின் கையில் ஒரு கடிதம் இருக்கிறது. என்ன, அது நான் எழுதிய கடிதமல்லவா? கல்யாணி அதைவாசிக்கிறாள்: "அம்மா, உன்சொல்லை மீறி நடந்த இந்தப் பாவியை முதலில் மன்னித்துவிடு, நீ தந்த அருமையில் அருமையான மோதிரத்தை விற்று இந்த மலை நாட்டுக்கு வந்து ஒரு தோட்டப் பாடசாலை வாத்தியாராகி விட்டேன். மேலே படிப்பதைவிட இப்போதைக்கு இதுவே மேல். பெரிய படிப்பும் பெரிய பதவியும் எங்களைப் போன்ற ஏழைகளுக்கல்ல: பெரிய பெரிய பணக்காரக் குழந்தைகளுக்கம்மா. இப்பொழுது எனக்குரிய ஒரேயொரு கடமை, உங்களைக் கண்கலங்காமற் காப்பதுதான். என் மகன் பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற உன் ஆசையில் மண்போட்ட என்னை மன்னித்துவிடு. உன்அன்பும் ஆசியுமே எனக்குத் துணை." கடிதத்தை வாசித்து முடித்த கல்யாணி' இனி எனக்கென்ன; நாம் மகாராணிதான் என்பதுபோலச் சிரிக்கிறாள். அம்மா விம்மி விம்மி அழுதுகொண்டே சிரிக்கிறாள்; அது ஆனந்தக் கண்ணீரேதான்.

'அம்மா, உன்னிடந்தான் வருகிறேன். இதோ மடியில் ஆயிரத்தைந்நூறு ரூபாய் இருக்கிறது. எல்லாம் உன் மகன் உழைத்ததுதானம்மா. எல்லாம் கல்யாணியின் கல்யாணத்துக்கே தானம்மா.'

அவனது அனந்தல் நிலையை அவன் மார்பைக் குத்திப் பிளந்த வலி அறுத்துவிட்டது. "ஐயோ அம்மா; ஐயோ தாங்கமுடியவில்லையே" என்று கதறிக் கொண்டு அங்குமிங்கும் புரண்டான் .

சிறிது நேரத்தில் அந்த 'அனந்தல்' மயக்கம் அவனைக் கவ்விக்கொண்டது. மீண்டும் கனவு கலந்த பிரக்ஞையில் நீந்தத் தொடங்கினான்.

'இதென்ன, யாரோ என் தலையைத் தடவுகிறார்களே, அவரைப் பார்க்க ஆசையாயிருக்கிறது; கண்தான் திறபடமாட்டே னென்கின்றது..... வாய்க்குள் என்ன வைக்கிறார்கள்; தேமோமீட்டராயிருக்குமோ..... நெஞ்சில் எதை வைத்து அமத்துகிறார்கள்.... ஒருவேளை டொக்கடர்தான் வந்துவிட்டாரோ.... ஐயையோ தோள்மூட்டில் ஊசியால் ஏன் குத்துகிறார்கள்...... ம்....... இனியென்ன நடப்பது நடக்கட்டும்?"

டாக்டர் ஏற்றிய ஊசிமருந்தின் வலிமையால், அனந்தல் நிலை நீங்கிவிட, சுந்தரம் அமைதியாக உறங்கத்தொடங்கினான்.

யார் செய்த புண்ணியமோ, அந்த வண்டியில் அவர் பிரயாணம் செய்தார்; இந்த உலகத்திலே இன்னமும் இரக்கம் இருக்கிறது; மனிதப் பண்பு இருக்கிறது என்பதை நிரூபித்துவிட்டார். அகதிக்குத் தெய்வம் துணை செய்யும் என்பார்கள். அந்தத் துணை இவ்வாறு தான் கிடைக்கிறதோ!

சுந்தரம் கண் விழித்துப் பார்த்தபோது, வண்டிதாளந் தவறாமல், கதி மாறாமல், காலகாலமாகப் பாடும் தனது சோக கீதத்தைப் பாடிக்கொண்டோடியது. இருள் தன்தன்மை கெட்டு ஒளியிற் கலந்து கரைந்துகொண்டிருந்தது. மெல்ல மெல்லப் பொழுது விடிந்து கொண்டிருந்தது. பூமி புத்துணர்வு பெற்றுச் சிலிர்த் தெழுந்தது. தன்னுள்ளும் ஏதோ ஒரு விடிவு மிக இரகசியமாக எங்கும் பரவுவது போன்ற உணர்வினாலே சுந்தரமும் மெல்லச் சிரித்தான். அந்தக் காலை மலர்ச்சியைக் கண்ணாற் காணும்போது ஏற்படும் ஓர் அபூர்வசுகம் அவனது உள்ளத்தையும் தொட்டது. யன்னல் வழியாகத் தூரத்திலே தெரிந்த பனைமரக் கூட்டமும் அதற்கு மேலும் இதமளித்தது.

அவன் கண்ணைச் சுற்றிப் பார்த்தபோது, நடை பாதையிற் கிடந்த தான் முழு ஆசனத்திற் கிடப்பதையும் தன்னையே அவதானித்துக்கொண்டு ஒரு மனிதன் தன் பக்கத்தில் இருப்பதையும் கண்டான். புதுமைகளுக்குக் கண்டிப்பாக இடமளிக்காத கலிகாலம் இது என்பதைப் பூரணமாக உணர்ந்திருந்த அவனால் இதை நம்பமுடியவில்லை. கலிகால நெஞ்சங்கள், வைரம் பாய்ந்த பாறாங்கற்கள். பாறாங்கல்லில் எவ்வாறு நீர்ச் சுரப்பு உண்டாயிற்று; கல் எவ்வாறு கனியாயிற்று. ஏதாவது திருவிளையாடல் நடந்து முடிந்திருக்கிறதோ என எண்ணினான்; வியப்போடு தன்னயலிலிருந்த மனிதனைப் பார்த்தான். அவன் புன்முறுவல் செய்து கொண்டே' "இப்போது எப்படியிருக்கிறது; கொஞ்சம் சுகமாயில்லை?" என்று சுந்தரத்தின் நெஞ்சிற் கைவைத்துப் பார்த்துக்கொண்டு கேட்டான். சுந்தரம் பதில் பேசவில்லை; ஏதோ சொல்லவேண்டும் என்னும் எண்ணம் தோன்றியது; ஆனால் எதைச் சொல்வதென்று மிரள மிரள அந்த மனிதனையே பார்த்தான். அவன் கனிவு கொண்ட பார்வையோடு, சுந்தரத்தின் நெற்றியிலே சிதறிக் கிடந்த மயிர்ச் சுருள்களை நீவிவிட்டான்; நெற்றியிலும் நெஞ்சிலும் கைவைத்துப் பார்த்தான். புன்முறுவலொன்று மலர்ந்தது. இந்த அழகழகான புன்முறுவல் இந்த மனிதனுக்கு எங்கிருந்து தான் வருகிறதோ என்று எண்ணி, சுந்தரமும் மெல்லச் சிரித்தான்.

"காய்ச்சல் எவ்வளவோ குறைந்திருக்கிறது. இன்னொரு ஊசி போட்டால் நல்லது" என்று சொல்லிக் கொண்டே, அவன் ஊசி மருந்தை

எடுத்தான். சுந்தரத்துக்கு ஏதுவுமே விளங்கவில்லை. ஏதோ மாயக் குகையொன்றிலே தான் இருப்பதுபோலவும் அன்புள்ள மந்திரவாதி ஒருவன் தன்னயலிலிருந்து வித்தைகள் பல செய்து காட்டுவது போலவும் அவன் உணர்ந்தான்: அவன் மெல்ல எழுந்திருக்க முயன்றான். "ம்.....வேண்டாம்; இன்னும் கொஞ்ச நேரம்தானே; படுத்திருங்கள்" என்று தோளிற் பிடித்துக் கிடத்திவிட்டு, அந்த மனிதன் ஊசி மருந்து ஏற்றினான்.

"என்ன இருந்தாலும் நீங்கள் இந்த நோயோடு தன்னந் தனியாகப் பிரயாணம் பண்ணியிருக்கக் கூடாது" என்றான் அந்த மனிதன், சிறிது உரிமையோடு.

"ம்..........யாருக்கு யார் துணை வரப்போகிறார்கள்; அகதிக்கு ஆகாயந்தான் துணை" என்று சொல்ல வாயெடுத்தான் சுந்தரம்; ஆனால் அவன் சொல்லவில்லை. அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து பதில் சொல்லிற்று. அதைத் துடைத்துக்கொண்டே அந்த மனிதன்,

"ஏன் அழுகிறீர்கள்; பயப்படவேண்டாம். எனக்கு எல்லாம் விளங்குகிறது. மனிதனுக்கு மனிதன் உதவாது போனால் தெய்வந்தான் எப்படி உதவும்? அது சரி, நீங்கள் எங்கே இறங்க வேண்டும்?" என்றான்.

"நாவற்குழி..........". அவன் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் சுந்தரத்தாற் சொல்ல முடிந்த ஒரேயொரு பதில் அதுதான்.

நாவற்குழியில் வண்டி நின்றது. சுந்தரத்தின் கையைப் பிடித்து மெல்ல இறக்கிவிட்டான். சுந்தரத்தின் உள்ளம் நன்றிச் சுமையால் மிகக் கனத்தது. அந்த நன்றி கருப்பூர மணம் போல அவனுள்ளமெங்கும் பரவி நறுமணம் வீசியது; அமுதமாய் உடலணுக்கள் தோறும் இனித்தது; கண்ணீராய்ப் பெருக்கெடுத்தது. விம்மல்கள் தொண்டைக் குழியிற் சிக்கித் தவித்தன. அதனால், வார்த்தைகள் ஏதும் பிறக்கவில்லை; வார்த்தைகளுக்குத்தான் வலியேது? சுந்தரம் கைகூப்பி வணங்கி விடை பெற்றான்.

"கொஞ்சம் பொறுங்கள்; நானும் வருகிறேன்" என்று சொல்லி அந்த மனிதனும் இறங்கினான்.

"என்ன நீங்களுமா? ஏன்? வேண்டாம். நான் போய்விடுவேன்: நீங்கள் போங்கள்; செய்த உதவியே பெரிது" என்று சொல்லி மீண்டும் கைகூப்பினான் சுந்தரம்.

"இன்னும் என்னில் மனிதத் தன்மை செத்துவிடவில்லை; வாருங்கள் போகலாம்." அந்த மனிதன் சிரித்துக்கொண்டே அவன் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

சுந்தரத்தை வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்த்து விட்ட அவன். மறுநாள் வருவதாகக் கூறிக்கொண்டு போய்விட்டான். சுந்தரத்தின் அம்மா,

"தம்பி, அவன் யார்?" என்று கேட்டாள். கல்யாணி "அவர் யார்?" என்று கேட்டாள். சுந்தரம். "அவனா? எனக்குத் தெரியாதே" என்றான்.

"என்னடா. தெய்வம் மாதிரி உதவி செய்த பிள்ளையை யாரென்று தெரியாதாம். அதிசயமானவன்தான் நீ" என்று கடிந்துகொண்டாள் அம்மா.

"நான் என்ன செய்வேன் அம்மா: அதெல்லாம் விசாரிக்க வேளை வரவேண்டாமா? நாளைக்குத்தான் வருவானே. நீயே விசாரித்துக் கொள்" என்று சொல்லியபடி பெருமூச்சு விட்டான். அந்த மனிதன் வருவானா. வரமாட்டானா என்ற சந்தேகம் அவர்கள் எல்லார் மனதிலும் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. சுந்தரத்தின் நோய்க்கு மருந்து கொடுக்க வேண்டியிருந்தது போய். இப்போது அவர்களின் சந்தேக நோயைத் தீர்க்கும் அந்த மருந்தைத் தேட வேண்டிய நிலை உண்டாயிற்று.

நல்லகாலம்! தேடிய மருந்து தானே வந்துவிட்டது. மறுநாள் வந்த அவன் சுந்தரத்தைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு "இனி அபாயமில்லை; பயப்படவும் வேண்டியதில்லை. இந்த மருந்துகளை முறைப்படி சாப்பிட்டால் போதும்" என்று ஒரு போத்தலையும் நாலைந்து சரைகளையும் எடுத்து வைத்தான். அம்மா ஒரு பெரு மூச்சு விட்டாள்; கல்யாணி முகம் மலர்ந்தாள்.

ஞானிகளெல்லாம் தேடித் தேடி அலையும் அந்த அருள் - எவ்வுயிரும் தன்னுயிர் போல எண்ணும் அருள் - இந்த மனிதனுக்கு எவ்விதந்தான் சித்தித்ததோ என்று சுந்தரம் எண்ணிக்கொண்டான். அந்த அருளைப் போத்தலில் அடைத்துவிட முடியுமோ! அந்த அருட் பெருக்குத்தான் அந்தப் போத்தலில் நிறைந்து நிற்பதாக அவனுக்குப் பட்டது! சுந்தரத்தினால் நன்றிச் சுமையைத் தாங்க முடியவில்லை. உள்ளம் நீராய் உருகியது.

"டொக்டர், உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. உங்களுக்கு மறுபிறப்புக் கொள்கையில் நம்பிக்கையுண்டோ, எனக்குத் தெரியாது. ஆனால், நான் இப்பொழுது அதை நம்புகிறேன்; ஏதோ ஒரு இறுகிய தொடாபு முன்னே பல பிறவி தோறும் எமக்குள் இருந்திருக்க வேண்டும்".

"நீங்கள் இப்படி அலட்டிக்கொள்ளக் கூடாது. மனிதனுக்கு மனிதன் செய்யும் உதவி இது. இதை மேருமலையாக்கிப் பெருப்பிக்கும் போது கூச்சமுண்டாகிறது. ஏதோ நான் செய்யவேண்டிய கடமையைச் செய்தேன்; அவ்வளவுதான்".

"நீ அப்படி நினைக்கலாம் தம்பி: ஆனால் நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? என் வயிற்றில் பால் வார்த்து, இக் குடும்பம் ஒடிந்து சிதறாமற் காப்பாற்றிய தெய்வம்..........". அம்மாவின் நன்றிப்பெருக்கு அன்புப் பெருக்காய்க் கண்ணீர்ப் பெருக்காய்ப் பெருகியது.

இதைக்கேட்டு அவன் ஏதோ ஒருவகை வெட்கத்தாற் கூனிக்குறுகிச் சிறுத்தான்; விதிர் விதிர்தான்; கைகூப்பி வணங்கினான்.

"தாயே, அவ்வாறு சொல்லாதீர்கள்; நான் மனிதனேதான்; மிகமிகச் சாதாரணமான, சாதாரணததிலும் இழிந்த மனிதனேதான்." அவன் குரல் தளதளத்தது; கண்கள் கலங்கின. எவரும் எதுவும் பேசவில்லை; ஆனால் என்னென்னவோ உணர்வில் எல்லாரும் சிரித்தார்கள்; அதே சமயம் எல்லாரும் கண்ணீர் விட்டார்கள். சுந்தரத்தான் மௌனத்தைக் கலைத்தான்.

"டொக்டர், நேற்று அம்மா என்னோடு சண்டை. உங்களை யாரென்று விசாரிக்கவில்லையாம்."

"மெத்தச சரி, விசாரியாது விட்டதே நல்லது. இனிமேலும் விசாரியாமலிருப்பதே மேல். ஒருவன் வந்தான்; அவன் போய்விட்டான் என்ற அளவோடு நிற்பதே உங்களுக்கும் நல்லது; எனக்கும் திருப்தி."

"அதென்ன தம்பி, அப்படிச் சொல்லிவிட்டாய். உன்னைப்பற்றி நாங்கள் அறியக் கூடாதா."

"அம்மா, என்னைப்பற்றி நீங்கள் அறியவே கூடாது. அறிந்தால் எனக்கு இத்தனை உபசாரங்கள் செய்வீர்களோ என்னவோ? செய்தாலும் உங்கள் மனமும் கூளிக்கும். உங்கள் தூய்மை, உங்கள் வீட்டின் தூய்மை, சமயத்தின் தூய்மை எல்லாம் கெடும். நான்.......நான்." கிணற்றிலே தவறி விழப்போன குழந்தையைத் தாய் அள்ளி எடுத்ததுபோல அம்மாவும் மேலே சொல்லவிடாது அவனைத் தடுத்து நிறுத்தித் திருப்திகண்டாள்.

"வேண்டாம் தம்பி, வேண்டாம். ஒன்றுமே சொல்ல வேண்டாம்; அந்த வாக்கியத்தை முடிக்கவும் வேண்டாம், எல்லாம் எனக்கு விளங்கிவிட்டது; பட்டப் பகல்போல விளங்கிவிட்டது."

அப்பொழுது எவரும் பேசவில்லை. அம்மாவின் கண்கள் ஆறாகக் கண்ணீர் பெருக்கின; உதடுகள் குவிந்து வெம்பின. அவளுள்ளே பொங்கி எழுந்த உணர்ச்சிப் போராட்டம் அவள் முகத்திலே தெரிந்தது. அதன் அறிகுறியாக நெற்றியில் வியர்வை முத்துக்கள் துளிர்த்தன. அவள் கண்ணை மூடிக்கொண்டு சிலையாகச் சிறிது நேரம் நின்றாள். சுந்தரம் என்ன நிகழப்போகிறதோ என்று ஏங்கித் திகைத்தான். உள்ளத்தைக் கொல்லும் அமைதி அங்கே தூங்கியது. அம்மா கண் திறந்தாள். அந்த மனிதனின் கையைப் பற்றிக்கொண்டு,

"தம்பி, இவ்வளவு நாளும் எனக்கு என் குடும்பம், என் பரம்பரை, என் சாதி, என் சமயம் எல்லாமே மனித குலத்திலே உயர்ந்தவை, சிறந்தவை, நிகரற்றவை என்ற தடிப்பு இருந்தது. ஆனால், யாராவது தெய்வத்திடம் போய் 'ஏ, தெய்வமே உன்சாதி என்ன? சமயம் என்ன?' என்று கேட்பார்களா என்று இப்பொழுதுதான் தெளிவாகிறது" என்றாள்.

சுந்தரத்திற்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. அம்மாதான் இவ்விதம் பேசுகிறாளா என்று எண்ணினான். தனக்கு நோய் வந்ததும் நல்லதாய்த்தான் போயிற்று என்று தன் நோய்க்கு வாழ்த்துக் கூறினான். ஆனால், அந்த மனிதன் எதுவுமே பேசவில்லை. வாய்விட்டுப் பெருங்குரலெடுத்துச் சிரித்தான். அதில் ஏளனத்தின் இழைகள் பின்னிக்கிடப்பது தெளிவாகத் தெரிந்தது. அந்தச் சிரிப்பொலி தேய்ந்துவிட்ட போதிலும் அது எல்லார் உள்ளங்களிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. மீண்டும் அம்மாவே பேசினாள்.

"தம்பி, சுயநலத்தில் விளைந்த ஞானம் என்றுதானே சிரிக்கிறாய். நன்றாகச் சிரி, தம்பி. நாங்களெல்லாரும் மனிதர்: சுயநலப் பிம்பங்கள். மனிதன் தன்னிடம் பிறர் அன்பும் ஆதரவும் காட்டவேண்டும் என்றுதானே விரும்புகிறான். பார்க்கப்போனால் அதுவும் ஒருவகைச் சுயநலந்தானே. இப்போதுதான் எனக்குத் தெரிகிறது, சுயநலங்கலந்த பாசம் முற்றி விளைவு கொள்ளும் போதுதான் எல்லாரும் சமமாகலாம்; இல்லையா தம்பி."

உடனே அந்த மனிதன் குரல் தழதழக்க, "அம்மா உங்கள் மகாவிசாலமான உள்ளத்தைப் புண்படுத்தி விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கொண்டே எழுந்து, அவள் கால்களைத் தொடப் போனான். அம்மா அவனைத் தடுத்து, "வேண்டாம் தம்பி, எங்காவது தெய்வம் யாரையாவது புண்படுத்தி, மன்னிப்புக் கோரி, காலில் விழுவதுண்டா? பக்தர்கள்தான் தெய்வத்தை வணங்குவார்கள்" என்றாள்.

ஒருவருமே எதிர்பாராத வேளையில், அம்மா அவன் கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

இருமையை ஒருமை செய்ய வல்லது அன்பு; வேற்றுமைகளையும் விகாரங்களையும் நீக்கித் தூய்மை செய்ய வல்லது அன்பு.

அதனால்,

சுந்தரத்துக்குத் தேடக்கிடைக்காத அருமந்தவொரு மைத்துனனும் கிடைத்துவிட்டான்.

❖ ❖ ❖

# 19. “வாய்ச் சொல்லில் வீரரடி”

பேராசிரியரியர் பெருமாள் நாடறிந்த பேச்சாளர். அவர் மேடையிலே பேச எழுந்து விட்டாரென்றால், தமிழ் அவர் நாவிலே கொஞ்சிக் குதித்து விளையாடும். தமிழ்த்தென்றல் தவழ்ந்து வந்து கேட்போரை மெல்லென அணைத்துச் சுகம் பேசும். புதிய புதிய உவமைகளுஞ் சின்னஞ்சிறு கதைகளும் அவரிடத்துக் கைகட்டிச் சேவகஞ் செய்யும். இத்தனை உவமைகளையும் உத்தனை கதைகளையும் எங்கிருந்துதான் பெற்றுக் கொண்டாரோ எனக் கேட்போர் வியப்படைவர். அவர் பேச்சிலே நகைச்சுவை நடனமாடும்; வியப்பு விம்மிப் புடைத்தெழும்; கோபம் கொப்பளிக்கும்; உவகை உயிரோட்டமாய்த் துடிக்கும்.

இவற்றால் அவர் சொற் சிலம்பமாடிக் கேட்போர் மனத்தை மயக்குபவர் என்று மாத்திரம் எண்ணிவிடக்கூடாது. அவர் பேச்சிலே உன்னதமான கருத்துக்களே உயிர் நாடியாய் மிளிரும். அக்கருத்துக்களை அழகு தமிழால் ஒப்பனை செய்து கேட்போருக்கு ஊட்டிவிடுவார். அரைத்தமாவை மீண்டும் அரைக்கும் பழக்கம் அவரிடமில்லை; ஒரு கருத்தை இரண்டு மேடையிற் சொல்லத் தெரியாது அவருக்கு. அவர் ஏறிய மேடைகளோ எண்ணற்றவை. அத்தனை மேடைகளிலும் அவர் புதிய புதிய கருத்துக்களையே விதைத்திருக்கிறார்.

அரசியலில், நிருவாகத்துறையில், பொதுவாழ்வில் நிகழுந் தில்லு முல்லுகளையும் ஊழல்களையும் மேடையிலே அக்குவேறு ஆணி வேறாகக் காட்டும்போது கேட்போர் மூக்கிலே விரலை வைப்பர்; அதனால் பெரும் பெரும் புள்ளிகளின் பகைமையைத் தேடிக் கொண்டவர்; அதற்காக அவர் என்றுமே வருந்தியதுமில்லை; அஞ்சியதுமில்லை. காலங்காலமாகச் சமுதாயத்திலே உழுத்துப்போன, ஆனால்

புரையோடிக்கிடக்கும் மூடக் கொள்கைகளைப் பகுத்தறிவுக்குப் பொருத்தமான முறையிலே சாடுவார். அவரது புரட்சிகரமான சிந்தனைகளும் கருத்துக்களும் இளஞ் சந்ததியினரிடையே பெருவரவேற்பைப் பெற்றிருந்தன. அதனால், அவரை அவர்கள் ஓர் இலட்சியவாதியாகவும் உன்னத புருடராகவும் மதித்தனர்.

அன்று அகில இலங்கைத் தமிழ் மாதர் முன்னேற்ற மன்றத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்; பெண்கள் விடுதலைக்காய் அவர்கள் முன்னேற்றத்துக்காய்க் குரலெழுப்பிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அவ்விழா நிகழ்ச்சிகள் வெகு சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அவ்வொழுங்குகளுக்கு மன்றச் செயலாளர் யாழினியின் அயராவூக்கமுந் தளரா முயற்சியுமே காரணமாயமைந்தன. யாழினி பல்கலைக்கழகத்திலே, பேராசிரியர் பெருமாளின் உத்தம மாணவியரில் ஒருத்தி. அவளுடைய அன்பும் பண்பும் பணிவும் செயலாற்றலும் பேராசிரியரைப் பெரிதுங் கவர்ந்தன. அவ்வாறே தன் மனத்தைப் பறிகொடுத்திருந்தாள். அதனால், அந்த வெள்ளிவிழாவுக்குப் பிரதம அதிதியாகப் பேராசிரியர் பெருமாளை அழைத்திருந்தாள். சுவரொட்டி விளம்பரங்களிலும் அழைப்பிதழ்களிலும் இளைய தலைமுறையினரான ஆண்களும் பெண்களுமாக மண்டபம் நிறைந்து வழிந்தது. ஆங்காங்கே நரைத்த தலைகளும் சில தென்பட்டன.

விழாவின் ஆரம்பத்தில் நிகழும் சம்பிரதாயச் சடங்குகளான வரவேற்புரை, தலைமைப் பேருரை என்பன நிகழ்ந்த பின்னர், பேராசிரியர் பெருமாள் அவர்கள் பேச எழுந்தார்கள். கரகோஷம் மண்டபத்தை அதிர்வித்து விண்முகட்டைத் தொட்டது. 'பெண்களும் சீதனக் கொடுமையும்' என்பதே அவர் பேச எடுத்துக் கொண்ட பொருள். சீதனக் கொடுமையால் இன்றைய தமிழ்ச் சமுதாயத்திலே பெண்கள் அடையும் இன்னல்களை அவர் எடுத்துரைத்தபோது, இளைஞர்கள் பலரின் கண்களிலே கண்ணீர் பனித்தது; இளம் பெண்களின் மனத்திலே மகிழ்வு துளிர்த்தது.

அவர் தம் பேச்சின் இறுதியிலே கூறிய சொற்கள் ஒவ்வொன்றுங் கேட்போரை மெய்சிலிர்க்கச் செய்தன.

"அன்பர்களே, கேளுங்கள், இஃது என் உறுதியுரை; சத்திய வார்த்தை. எனக்கு இறைவனின் அருட்கொடையாக மூன்று புதல்வர்கள் உளர். அவர்களில் மூத்தவன் சமூகவியலிலே ஒரு விரிவுரையாளன், என்னைப்போலவே கொள்கைப்பற்று மிக்கவன்; கலியாணச் சந்தையிலே விலைப்பொருளாக நிற்பவன். இன்றைய கலியாணச் சந்தை விலைப்படி பார்த்தால் குறைந்த பட்சம் இருபது இலட்சம் பெறுமதியுள்ளவன்.

ஆனால் இவ்விடத்திலே ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இருபது இலட்சம் பெறுமதியுள்ள அவனுக்காக, ஒன்றரைச் சதங்கூட நான் சீதனமாக வாங்கப் போவதில்லை; அவனும் அதை விரும்பமாட்டான். அன்பும் பண்பும் நல்லொழுக்கமும் நிறைந்த ஒரு மங்கை நல்லாளை அவனுக்குச் சீதனம் வாங்காமலேயே மணம் முடித்து வைப்பேன். அந்த மணவிழாவிற்கு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு இப்பொழுதே உங்களை வேண்டிக் கொள்கிறேன்."

அவர் சொற்பொழிவு நிறைவுற்றதும், அங்கு எழுந்த கரகோஷமும் மகிழ்ச்சி ஆரவாரமும் அடங்கச் சில நிமிடங்கள் சென்றன.

## 2

"ஐயா வணக்கம்"

"யார் நீங்கள்?"

"நான் யாழினியின் தந்தை"

"ஓ! யாழினியின் தந்தையா? சுந்தரமூர்த்தியா? கேள்விப்பட்டதுண்டு. இன்றுதான் சந்திக்கிறேன். வாருங்கள், வாருங்கள்."

பேராசிரியர் பெருமாள், சுந்தரமூர்த்தியை வரவேற்று உபசரிக்கிறார்.

"எனக்கு யாரிடமும் முகமன் வார்த்தை பேசத் தெரியாது. உண்மையாகவே சொல்லுகிறேன்; யாழினியைப் போன்ற ஒரு பெண்ணைப் பெற நீங்கள் முற்பிறப்பிலே பெருந்தவஞ் செய்திருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் பாரதி கண்ட புதுமைப் பெண்ணுக்கு யாழினிதான் வரைவிலக்கணம்."

பேராசிரியர் உணர்ச்சிப் பெருக்கோடு இவ்வாறு உரைக்கிறார்; சுந்தரமூர்த்தி மெல்லச் சிரிக்கிறார்; அவர் சிரிப்பிலே சோகத்தின் சாயல் படர்ந்திருக்கிறது.

"அன்று மாதர் முன்னேற்ற மன்ற வெள்ளி விழாவிலே நீங்கள் ஆற்றிய அந்தச் சொற் பொழிவு - அதை இப்பொழுது நினத்தாலும் என்மெய் சிலிர்க்கிறது. அந்தப் பேச்சின் இறுதிப்பகுதி இருக்கிறதே - அதுதான்."

சுந்தரமூர்த்தி வார்த்தைகளை முடிக்கவில்லை; பேராசிரியர் குறுக்கிடுகிறார். "ஏன்? அதிலே உங்களுக்குச் சந்தேகமா? 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்கிறானே பாரதி. அவன் கொள்கைதான் என் கொள்கையும்."

"ஓ! இந்தக் காலத்திலே உங்களைப் போன்ற உத்தமர்களைக் காண்பது அரிதினும் அரிது. ம்........ உங்களுக்கு யாழினியைத் தெரியும்; ஆனால். எங்கள் குடும்பநிலை தெரியாது. அவளுக்கு நானும் அவள் கல்வியும் குணமுந்தான் சொத்துக்கள்."

"ஏன் அவ்வளவும் போதாதா?"

"எப்படிப் போதும் ஐயா? யாழினி ஒரு பெண்; பருவமங்கை. அவள் குடியும் குடித்தனமுமாய் வாழ வேண்டுமே!"

"ஏன் கவலைப்படுகிறீர்; யாழினியின் படிப்புக்கும் குணத்துக்கும் அழகுக்கும் பலபேர் போட்டி போட்டுக்கொண்டு வருவார்களே."

சுந்தரமூர்த்தி விரக்தியோடு சிரிக்கிறார்; "அவற்றுக்குப் போட்டி போட்டு எவரும் வரவில்லை; சீதனத்துக்குத்தான் போட்டி போடுகிறார்கள்.......... அதனால்தான் உயர்ந்த கொள்கையுள்ள உங்களிடம்........." அவர் வார்த்தைகளை முடிக்கவில்லை.

"மாப்பிள்ளை கேட்டு வந்தீராக்கும்?" பேராசிரியர் கோபமாகக் கேட்கிறார்; பின்னர் சிறிது தணிந்து. ஆனால். என் மனைவி இருக்கிறாளே; அவளையும் அனுசரித்துப் போக வேண்டும். இந்தக்கடன் சுமையை எப்படித் தீர்க்கப் போகிறீர்கள் என்று கேட்கிறாள்; நான் செய்வது?"

"மகன்மாருக்குச் சீதனம் வாங்கிக் கல்யாணம் செய்ய வேண்டியதுதான்!" என்று உரக்கச் சிரித்துக் கூறுகிறார் சுந்தரமூர்த்தி; "வாய்ச் சொல்லில் வீரரடி கிளியே, வாய்ச் சொல்லில் வீரரடி" என்று முணுமுணுத்துக் கொண்டே புறப்படுகிறார்.

❖ ❖ ❖

# 20. பெரியம்மா

"பெ ரி-ய-ம்-மா".

அச்சொல் அமுததாரையாய் என் காதில் இனிக்கிறது. அந்தச் சொல்லை இங்கு நான் வந்த மூன்று நாட்களில் முந்நூறு முறை கேட்டிருந்தும். இக்கணந்தான் அதில் முற்றிய முழுச்சுவையை அனுபவிக்க முடிகிறது. அது ஏன் ? ஒரோர் வேளையிலேதான் மனம் எதையும் ஆசையோடு சுவைக்குமோ? கவிஞன் எப்போதுமே கவிஞனாவதில்லையே. வான்மீகி காவிய கர்த்தாவானதுகூட அப்படித்தானே. 'அரசரான தாங்கள் பணிக்கும்ப ாதெல்லாம் என்னிடத்தில் இசை எழாது' என்று அக்பரைப் பார்த்துத் தான்சேன் என்ற இசை மேதை கூறவில்லையா என்று எண்ணிக்கொள்ளுகிறேன்.

"பெரி - ய-ம்-மா".

மீண்டும் அமுத தாரை பொழிகிறது. அந்தச் சொல் 'பெரிய' அடைமொழியின்றி, வெறும் 'அம்மா' வாய் அழைக்குமானால்,.......

ஐயோ! ஐயோ! என் உடலெல்லாம் உள்ளமாய் அந்த உள்ளத்திலே என்னளவில் வரண்டுகிடந்த ஏதோவோர் அபூர்வ உணர்வின் ஊற்றுக் கண்கள் திறந்து பிரளயமாய் என்னை மூழ்கடிக்கின்றனவே.

'அம்மா'- என்னுள்ளே பச்சைக் குழந்தையின் குரலாய் அந்த ஒலியெழுந்து அடங்கிவிட, ஏக்கம் எஞ்சுகிறது.

"பெரி- ய-ம்-மா".

இனியும் பொறுக்க முடியாது. குரல் வந்த திசையை நோக்கி என் கண்கள் திரும்புகின்றன. எனது அறை வாயிலில் அம்பிகா நிற்கிறாள்; என் தங்கையின் மூன்றாவது மகள் அவள்; நான்கு வயதிருக்கும். கட்டை விரலலைச் சூப்பிச் சுவைத்து அதிற் பால் குடித்து, முழுலயப்பட்டு பாதிக்கண்கள் சொருகிய நிலையிற் சொக்கி

நிற்கிறாள். என்னைக் கண்டதும் முகம் மலருகிறது விரலைக் கௌவிப் பிடித்த பிடி விடாமல் முல்லை அரும்புகள் சிரிக்கின்றன.

"அம்பிகா".

என் குரலைக் கேட்டு. அவள் மெல்ல மெல்ல என்னருகில் வந்து நின்று வைத்த கண் வாங்காமல் என்னையே பார்க்கிறாள். அந்தப் பார்வை, மிகமிக மெல்லிய மலராய். என் முகத்திலே மிருதுவாக ஒற்றிவிடுவது போலுணர்கிறேன்; முகம் கூசுகிறது. உண்மையாகவே நான் சிரிக்கிறேன்.

"என்ன வேணும் அம்பிகா".

"ஒண்டும் வேண்டாம், பெரியம்மா.......பெரியம்மா. நீங்க நல்ல- நல்ல அழகு: நல்ல- நல்ல அழகு: எங்கம்மாவிலும் அழகு- எங்கம்மா கிழவி" உண்மையாகவா? இப்பொழுது என் மனம் கிளுகிளுத்துக் கூசுகிறது. குழந்தைகளின் வாக்கும் மகரிஷிகளின் வாக்கும் மகா தூய்மையுடையனவாமே. அந்தத் தூய்மையால் அற்புதங்கள் சித்திப்பதுமுண்டாமே. அம்பிகாவின் வார்த்தைகள் என்னளவிற் சஞ்சீவினி. இல்லாது போனால், ஏறக்குறையப் பட்டமரமொன்று. இளந்தளிரின்று. பசுமைப் பொலிவோடு. மணமலர் குலுங்க நிற்கும் பாவனை என்னுள் விளைய முடியாதே. நாற்பது வயதைக் கடந்த ஏக்கத்தில் என்மனம் முதுமை நினைவுகள் கொண்டு பெருமூச்சுவிடும் வேளையில், அம்பிகா என்னையும் தாயையும் ஒப்பிட்டுத் தீர்ப்புக் கூறியது எனக்குக் காயகற்பகம் அளித்ததுபோலிருக்கிறது. நான் மிகுந்த நன்றிப் பெருக்கோடு அவளை நோக்குகிறேன்.

அவள் எனது கையில், முழங்காலில் மெதுவாக வருடிப் பார்க்கிறாள். பின்னர் இரகசியம் பேசுவது போல, "பெரியம்மா, என்னைத் தூக்கி மடியில்.........." என்று கிசுகிசுக்கிறாள். எதை நான் முதலிற் செய்திருக்க வேண்டுமோ, அதை அவள் ஞாபகஞ் செய்த பிறகே உணருகிறேன். வெட்கம் ஒருகணம் என்னில் மூடு சூளையாய்க் கவிந்துவிட்டு. நீங்குகிறது. அந்தக்கணமே நான் அம்பிகாவை அள்ளியெடுத்து அணைத்து. எங்கோ மறைந்து கிடந்த ஒரு வெறி மிஞ்சிவிட, அவளை முத்தமிட்டுத் திணறடிக்கிறேன். அம்பிகா கலகலக்கிறாள். அது பாசத்தின் பேச்சு.

"அம்பிகா. நீ அருமையான அம்பிகா. நீ என்னுடன் கொழும்புக்கு வருவியா?"

"நான் மாட்டேன்."

"ஏன் குஞ்சு? "

"அம்மாவை விட்டுட்டு நான் வரமாட்டேன்."

"அம்மா கிழவி என்றாயே; என்னோடு வா."

"ஊ- கும், கிழவி என்றாலும் அம்மா அம்மாதானே."

என் நெஞ்சில்முள் உருளுகிறது. அதனால், ஒரு சிறு உறுத்தல் தோன்றி மறைந்துவிடுகிறது. நான் அம்பிகாவை மனப்பூர்வமாகவா அழைத்தேன்? அவள் வருவதாக இருந்தாலும் அறிவால் முதிர்ந்த என்னுள்ளத்துக்கு ஒரு காரணம் காட்டி மறுக்கவா தெரியாது! ஆனால், இந்தக் குழந்தை எவ்வளவு அழகாக, தெளிவாக, நிதானமாக, தீர்மானமாக, தன் கருத்தைப் 'பட், பட்' என்று சொல்லிவிடுகிறது. அவள் முன்னிலையில் நான் என் பெருமைகள் எல்லாம் இழந்து மிகச் சிறியவளாய், எளியவளாய் நிலை குலைந்து விடுகிறேன்.

இப்பொழுது அவள் என் கழுத்துச் சங்கிலியைச் சுழற்றி விளையாடுகிறாள்; மார்புப் பகுதியில் அவள் கைபட்டு மேனி சிலிர்க்கிறது. மீண்டும் அவள் முழுக் கவனமும் என்மீது விழுகிறது.

"பெரியம்மா....."

"என்ன அம்பிகா....."

"பெரியம்மா எங்கம்மாவுக்கு ஒரு அப்பா இருக்கிறார்; வசந்தி, சுலோ, அம்பிகா, தயா எல்லாரும் இருக்கினம்."

"ஆமாம் - எல்லோரும் இருக்கிறார்கள் - நல்லது தானே- அதற்கென்ன?""

"பெரியம்மா - இந்தப் பெரியம்மாவுக்கு ஏன் ஒரு பெரியப்பா இல்லை. வசந்தி, சுலோ, அம்பிகா, தயா ஒருத்தரும் இல்லை."

சாதாரண அம்புகளைத் தொடுத்துப் போராடி விளையாடிய அம்பிகா, கடைசியாகப் பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்தேவிடுகிறாள். அந்தச் சுடுசரம் என்னுட் பாய்ந்து உள்ளமெல்லாந் தேடி விடைகாண அலைகிறது.

"ஏன் பெரியம்மா, உங்களுக்கு ஒருத்தருமில்லை. சொல்லுங்கோ பெரியம்மா."

இந்தக் கேள்விக்கு நானே அறியாத பதிலை இவளுக்கு எப்படிக் கூறுவது? இதற்குரிய பதிலைத் தேடாது விட்டேனோ? தேடித் தேடிக் களைத்தேனோ? அல்லது தேடிக்கொண்டிருக்கிறேனோ? இவற்றில் எதுவென்றே இன்னும் விளங்கவில்லையே. இதற்கு விடை எந்தப் பெரிய நூல்களிலும் இல்லையே, என்ன செய்வேன்?

அம்பிகா என்னை வென்றுவிட்டாள், எனக்குப் படு தோல்வி; இது இரண்டாவத படுதோல்வி.

முதலாவது தோல்வி.......

## 2

வைராக்கியத்தை விரதமாக வரித்து, அறிவினால் அரண் செய்து, அதற்கு 'நிறை' என்ற பெயர் சூட்டி, அதையே தாரகமாகக் கொண்டு, என்னால் வாழ முடியாதா? பட்டப் படிப்பின் விளைவால் என்னுள் நிறைந்த சிரியா ரூபமான சிந்தனைப்போக்கு, உணர்ச்சிகளைப் புறங்கண்டு என்னைத் தனித்து வாழவைக்க முடியாதா? என்னம்மா, அம்மாவின் அம்மா, அவள் அம்மா - இப்படி எல்லா அம்மாக்களும் ஆணுக்கு அடிமைப்பட்டு, தம்மை அழித்து, என்ன சுகத்தைக் கண்டார்கள்? அன்பினால் அழிவும், அழிவினால் பெண்களுக்குச் சுகமும் சித்திக்கிறதென்று அம்மா உணர்வு நிலையில் நின்று கூறும்பொழுதெல்லாம், 'என்னால் அது முடியாது; முடியவே முடியாது' என்று ஒரு 'மூச்சு' என்னுள் எழும். அந்த மூச்சு சில வேளைகளில் வெறியாய் மூண்டு, எல்லாரும் எனக்கு ' ஆண்மாரி' எனப் புதிய பட்டமொன்று சூட்ட வழிசெய்ததுமுண்டு. அந்தப் புதிய பட்டம் எனக்கு மிக உவப்பானது. அந்த ஆண்மாரித்தனத்தைக் கட்டிவளர்ப்பதுதான் என் இலட்சியமோ? அல்லது இயற்கையாய் எழுகின்ற உணர்ச்சிகளின் துடிதுடிப்பை உணராது அறிவின் குரலைக் கேட்பதுதான் என் இலட்சியமோ? அல்லது இரண்டும் ஒன்றில் ஒன்று சுவறி ஒன்றான ஒன்றுதான் என் இலட்சியமோ?

அந்த இலட்சியத்தை பழுதுறாமற் பேணுவதற்குக் கொழும்பு களனாய் அமைய, அங்குள்ள மகளிர் கல்லூரி ஒன்றிற் புவியியற் பாட ஆசிரியையாகப் பதவி கிடைத்தது மிக வாய்ப்பாயிற்று.

கொழும்பு நவீன இயந்திரம்; வாழ்க்கையை வளமாக்கவென நியதி குலையாமல் வெகுவேகமாக இயங்கி, புதிய புதிய பல சிக்கல்களை உற்பவிக்கும் இயந்திரம்; பிள்ளையார் பிடிக்க முயன்று குரங்குபிடிக்கும் இயந்திரம். அங்கே ஓரளவுக்கு அறிவுக்கு இடமிருந்தாலும் உணர்ச்சிகளுக்கு ஈ இருக்குமிடந்தானும் இல்லை. மூளை சிலவேளை இயங்குவதுமுண்டு; மனம் நித்தியமாய் மரித்திருக்கும்.

வருடக்கணக்காய் அடுத்த வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பதையறிய யாருக்கும் மனம் ஏவுவதில்லை.

சுவருக்கு அப்பால், பிணமொன்றுக்குப் பிணச் சடங்கு விமரிசையாய் நடைபெறும். இப்பால் மணவினையொன்று வெகு விமரிசையாய் நடைபெறும். இரண்டிலும் இயந்திரபாவம் தேங்கி நிற்கும்.

வழியிலோ, கடையிலோ, நண்பர், உறவினர் யாரையாவது சந்தித்தால், ஒரு தலையாட்டத்தோடு, ஒரு பல்லிளிப்போடு நட்பும் உறவும் தீர்ந்துவிடும். அங்கும் இயந்திரபாவம்தான் தலைதூக்கி நிற்கும்.

இந்தக் கொழும்பு எனக்கு மிகமிகப் பிடித்திருந்தது.

கல்லூரியில் மணியோசை ஆட்சி நடத்தும். அது ஒலிக்காத வேளையிலே சுற்றுநிருபம் என்னும் ஒரு துண்டுக் காகிதம் ஆட்சி நடத்தும். இவை இரண்டினதும் கட்டளைக்கேற்ப, மாணவிகளும் ஆசிரியைகளும் இயந்திரபாவனையிற் பம்பரமாய்ச் சுழன்று வருவர். அதுவும் எனக்கு மிகப் பிடித்திருந்தது.

வகுப்பறையில் மலைகள், ஆறுகள், பீடபூமிகள், பள்ளத்தாக்குகள் என்றின்னோரன்ன 'புவியியல்' அறிவைத் திணிக்கும் முயற்சி என்னுடையது; அதைச் சீரணப்படுத்துவது, சீரணஞ் செய்ய முடியாமல் அசீரணத்தால் வருந்துவது ஆகிய இரண்டு முயற்சிகளும் மாணவிகளுடையன. அங்கும் கால நேரந் தவறாத இயந்திர பாவனை. அப்பொழுது மூளை சுழலும்; மனம் தூங்கும். அதுவும் எனக்கு மிக மிகப் பிடித்திருந்தது.

ஒருநாள் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த என் மனம் விழித்தெழும்படியாயிற்று. அன்று ஆசிரியைகள் அறையில் நிகழ்ந்த அந்தச் சம்பவம் என்னுள் பெரும் புயலைத் தோற்றுவித்தது. தேவமலர்தான் புயலின் கரு.

தேவமலர் பட்டமொன்றுமில்லா 'வெறும்' தமிழாசிரியை. அறிவுலகின் வெறும் குழந்தை. மெல்லிய உணர்ச்சிகளும் அவளை ஆட்டிப் படைக்கும். அவள் மூளை தூங்கியது; மனம் நன்றாக விழித்திருந்தது.

மாணவிகளின் கட்டுரைக் கொப்பிகளைத் திருத்திக் கொண்டிருந்த அவள், திடீரெனச் சிலிர்த்தெழுந்தாள். ஒரு கொப்பியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு "இதைக்கேளுங்கோ" என்றாள். அங்கிருந்தவர்கள் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தனர்; நான் முகத்தைச் சுளித்துக்கொண்டு கேட்டேன்.

"பாருங்கோ; அன்பைப்பற்றி, இவளொருத்தி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறாள். என்ன அழகாய் எழுதியிருக்கிறாள்" என்று உணர்ச்சி வழிய வழியப் படித்தாள்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்; அன்பே சிவம். சிவம் ஒவ்வொருவருக்கும் அவரவர் விரும்பிய திருக்கோலங்கொண்டு, அவரவர் உள்ளங்கவர் கள்வனாய் விளங்குவதுபோன்று, அன்பென்ற உணர்வும் பல பல நிலையிற் பல பல கோலங்கொள்கிறது. அவற்றுளொன்று காதல். அது தூயது. வலியது; ஆண்களிடத்தில் வீரத்தையும் மேலான செயற்றிறனையும் வளர்ப்பது. இவ்வுண்மையைப் பாரதியின் வாய்மூலங் கேட்பதே நன்று.

"கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா"
"நூற் றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண் ணிடைப்பெண் ணொருத்தி பணியிலே"
"காற்றி லேறியவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே"

"பாரதியார், நரம்பு புடைத்திட, நானிலம் வியந்திட, நாத் தழும்பேறிடக் கொட்டி முழக்குகிறார்."

அவள் படித்து முடித்துப் பெருமூச்சு விட்டாள்.

"ஆகா, அபாரம், அற்புதம்" என்று சில குரல்கள் கீச்சிட்டன. எனக்கு அது வெறும் சொற்கூட்டமாய்ப் பட்டது.

"பூ.....இதுதானா; இதில் என்ன இருக்கிறது? இதில் அறிவுக்கு விருந்தாய், ஏதாவது புதுமை இருக்கிறதா? சிந்தனைக்கு வேலை இருக்கிறதா? அன்பாம் அன்பு; காதலாம் காதல்; இந்தக் 'கொம்ப்யூட்டர்' யுகத்தில் இவை யாருக்கு வேண்டும்?"

"ஓகோ, நாற்பது வயதுக் குமரிக்கு அன்பைப் பற்றியும் காதலைப் பற்றியும் என்ன தெரியும்? அனுபவிக்கவோ அனுபவிக்கப்படவோ வாய்ப்பில்லாத கிழட்டுக் குமரிகளுக்கு இவற்றைப்பற்றி என்ன தெரியும்? பாவம்!"

எனக்கு எது நொய்த இடம் என்று அவள் கருதினாளோ அந்த இடத்திலே குறி தவறாமல் தாக்கினாள். ஒருகணம் காய்கனலின் நடுவில் நிற்பது போலத் துடிதுடித்தேன். போர்க்கோலம் பூண்டாயிற்று. இனி, எதிரியின் நொய்த இடத்தில் தாக்க வேண்டியதுதான். அவளது நொய்மை எதுவென்று எனக்குத் தெரியாதா?

"சீச்சீ; பேச்சைப் பார் பேச்சை. அனுபவித்தாளாம்; அனுபவிக்கப்பட்டாளாம். கண்ட மிச்சமென்ன? மலடு தட்டிப் போனதுதான் பலன்."

தேவமலர் முகங் கருகி, மெல்ல நடுங்கி அதிர்ந்தாள். நான் வெற்றிப்புன்னகை சிந்தினேன்.

"முப்பது வயதில் மலடைப் பற்றியோ, வளத்தைப் பற்றியோ உன்னைத்தவிர வேறுயாரும் தீர்மானிக்க மாட்டார்கள். உன்னளவு வயது எனக்கும் வந்தால் ஒருவேளை சொல்லலாம்.........ம் .........அப்படித்தான் நீ நினைத்தாலும் வாழ்க்கையை முறையாக அனுபவித்த அனுபவம் எனக்குண்டு. உனக்கு.......உனக்கு.......நீ பெண்ணல்ல. வெறும் சடவஸ்து."

எதிர்பாணந் தொடுக்க. அக்கினியாஸ்திரத்தைப் புட்டியிலே தேடினேன். அது வெறுமையாய்க் கிடந்தது. தேடு தேடு என்று தேடினேன்.. கிடைக்கவே இல்லை: படுதோல்வி.

என் அறிவு சுவைத்த முதலாவது படுதோல்வி இது.

## 3

என் கண்ணில் கண்ணீரா? என் மனக்கோட்டையைக் காத்த அரண் அழிகிறதா?

கண்ணீரைப் புறங்கையாலே துடைத்துக்கொண்டு அம்பிகாவைத் தேடுகிறேன். அவள் எப்போது போனாளோ? போகட்டும்; போகட்டும். நான் நானாயிருப்பதற்கு அவளும் என் எதிரி.

அந்த எதிரி மீண்டும் மீண்டும் தோன்றுகிறாள். "பெரியம்மா, உங்களைப் பாட்டி வந்துவிட்டுப் போகட்டாம் வாருங்கோ."....அந்த மாயக்காரி. கல கலவென அர்த்த புஷ்டியோடு சிரித்துவிட்டு மறைந்துவிடுகிறாள்.

இங்கு வந்தபிறகு எத்தனையோ தரம் என்னைக் கண்டு கண்டு பெருமூச்சுவிட்ட அம்மா. இப்பொழுதும் என்னைக் காணவேண்டுமாமே. ஏன்?

என்னைக் காணும்போதெல்லாம் அம்மாவுக்குப் பெருமூச்சுத்தான் பாஷை.

அம்மாவை நினைக்கும்போது, கருங்கற் பாறையில் இனிய நீரூற்றுச் சுரப்பதுபோன்று, என் அந்தரங்கத்திலும் ஓர் இனிய உணர்ச்சி தோன்றுகிறதே. விடுமுறை விட்டதும் அம்மாவிடம் பறந்தோடிச் செல்லுமாறு அது தூண்டுகிறதே. அதைக் கடமை யுணர்ச்சி, பழக்கத்தினால் வந்த ஒன்று என்று அறிவு வாதிடுகிறது. அப்படியானால், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் மகரிஷியா நான். இந்த இடத்திலே அறிவின் முகமூடியைக் கிழித்தெறிந்துகொண்டு தாய்ப்பாசம் தலையெடுக்கிறது.

இந்த வேளையில் என் மனங்கூட விழித்துக்கொண்டு. அந்த ஒருணர்வுக்கு இடங் கொடுக்கிறது என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறேன். இது என் கோட்பாட்டிலே தவிர்க்கமுடியாத புறநடைச் சூத்திரம்.

அம்மா படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாள். என் நினைப்புப்படி, திடீரெனத் தோன்றி அம்மாவிற் கவிந்த முதுமையோ அவளின் நோய். சென்ற விடுமுறையிலும் வழக்கம்போல என்னை இருத்தி இராசோபசாரம் செய்த அவளுடைய அசைந்துவரும் அழுகு, பலம், கொலு எல்லாம்

எங்கே போயின? திடீரெனத் தோன்றிய முதுமைதான். அவற்றை உண்டிருக்க வேண்டும். திடீரென முதுமை தோன்றியதேன்? நீண்ட நிரந்தரமான பெருமூச்சுக்களிலிருந்து அது பிறந்ததா? அப்படியானால் அந்தப் பெருமூச்சுக்கள் எங்கிருந்து வந்தன? உந்தியிலிருந்தா? நெஞ்சிலிருந்தா? மனதிலிருந்தா?

எல்லாம் நதிமூலம், ரிஷிமூலம்; தலையைச் சுற்றுகிறது.

நான் அம்மாவின் படுக்கையின் அயலிலே நிற்கிறேன். என்னைக் கண்டதும் ஆழமான பெருமூச்சு விடுகிறாள். நான் சிரிக்கிறேன். அவளும் மெல்லச் சிரிக்கிறாள். அந்தச் சிரிப்பில் உயிர் இல்லை.

"அல்லி! (இடை நடுவில் அம்மா சூட்டிய பெயர் அல்லி) நீயும் கண்கலங்கி அழுதாயாமே. அம்பிகா வந்து சொன்னாள்."

தாயிடம் - தெய்வத்திடம் - மனந்திறந்து தன் பலவீனங்களைச் சமர்ப்பித்தற்கும் இந்த மனித சாதியின் போலிக் கௌரவம் அனுமதிப்பதில்லையே. அது இருள் போல வந்து என்னைச் சூழ்ந்துவிட,

"அம்மா, அம்பிகா சொன்னதை அப்படியே நம்பிவிட்டாயோ? கண்ணிலே தூசி விழுந்து நெருடியது; அதனால், கண் கலங்கிற்று; வேறென்றுமில்லை."

"எனக்கு எதையும் சொல்ல வெட்கப்படுவானேன்? கண்ணிலே தூசி விழுந்ததா? மனத்திலே தூசி விழுந்து நெருடியதா? உன் மனத்தில் ஒரு தூசியாவது விழுந்து நெருட வேண்டுமென்றுதானே நான் தவமிருக்கிறேன்."

"என்னம்மா சொல்கிறாய்?"

"அடி பெண்ணே, உனக்கு விளங்கவில்லையென்றால் வேறு யாருக்கடி விளங்கும். அல்லி, மனத் தூசிகள் தாம் உணர்ச்சிகள். அவை நெருடும்போதுதான் மனம் விழித்துக்கொள்கிறது. உன் போன்ற வயதுப் பெண்களுக்குப் பெண்மை என்னும் ஒரு தூசி விழுந்து அது ஓராயிரமாய்ப் பல்கிப் பெருகி, சதா சர்வகாலமும் மனத்தை விழிக்கப்பண்ணி, என்றும் மீட்டப்பட்ட வீணையாய், உள்ளேயிருந்து இன்னிசை எழுப்பிக்கொண்டிருக்க வேண்டுமே........இனியாவது உள்ளதைச் சொல்......"

"உள்ளதொன்று இருந்தாலல்லவா சொல்ல முடியும்."......மனத்தைத் திருகி முறுக்கி, அடக்கி மடக்கி அமுக்கி அறிவின் வீம்பு பேசுகிறது. என்னையறியும் அம்மாவின் பிரயத்தனம் தோல்வியடைகிறது.

"நீ எப்போதும் முகமூடிதான். உன் உள்ளந்தரங்கத்தை அறிய முடியாது. எப்போதுமே நான் களைத்துப் போகிறேன். உன்னைக் காத்துவருவதாக நான் நினைக்கிற என் கரங்கள் சோர்ந்துவிட்டன.

உன் தங்கையைக் கெஞ்சி மன்றாடி இங்கு அழைத்திருக்கிறேன். அவளுமில்லையென்றால் நீயும் நானும்.....'' அம்மா விம்முகிறாள்; வெதும்புகிறாள்; தன்னுள் ஆழ்ந்துவிடுகிறாள். மானசீகமாக என் தங்கையையும் அவள் கணவனையும் போற்றுகிறாளோ?

என் தங்கை என்னைப் போலப் படித்தவளலல்லள். ஆனால். போற்றுதலுக்குரியவள். அவள் கணவரும் என்னறிவால் அளக்கத்தக்க அந்தஸ்துக்குரியவரல்லர்; ஆனால். போற்றுதலுக்குரியவர்.

நான் இல்லாத வேளையில் என் தெய்வத்துக்குப் பூசனை புரிந்து நைவேத்தியம் படைத்தவர்களல்லவா?

என்னிருதயம் கீழ் மேலாக உருண்டு புரண்டு குமைகிறது. ஆனால். கண்ணிரை வெளிவிடாமல் அடக்கி. சிலையாய் நிற்கிறேன்.

''அல்லி, கடந்த இருபது வருடமாய்ச் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். அதனால் நான் களைக்கவில்லை. ஏனென்றால் என் வேண்டுகோள் ஏதாவதொரு வேளையில் பலன் தரலாமென்ற ஆசையுண்டு. நீ வலிய கரங்களால் அணைக்கப்பட்டும் அடக்கப்பட்டும் காக்கப்பட்டும் மற்றப் பெண்களைப் போல வாழ வேண்டுமடி.......... செய்வாயா?'' - அவள் கெஞ்சுகிறாள்; கண்ணீர் விடுகிறாள். சிலவேளை தெய்வமும் கெஞ்சிக் கண்ணீர் விடுமோ? நான் அவள் கண்ணீரைத் துடைக்கிறேன். ஆனால் நிரந்தரமாய்த் துடைத்துவிட என்னால் முடியுமா?

''தீர்மானம் பண்ணின விஷயத்தைப் புனராலோசனை செய்வதற்கு அவசியம் நேர்ந்துவிடவில்லை. அம்மா.''

''என்னடி. அந்த அவசியம் எப்போதுமே நேர்ந்து கொண்டுதானே இருக்கிறது? அல்லி, இந்தக் கிழவியின் ஆத்மதிருப்திக்காகவாவது நீ பூவும் பொட்டும் தாலியும் கழுத்துமாய்.....'' - அம்மாவின வார்த்தைகளை விம்மலும் பெருகி ஓடும் கண்ணீருமே முடிக்கின்றன.

தெய்வம் வைராக்கியம் கொண்ட பக்தனை இரந்து வரங் கேட்கிறது. என் வைராக்கியத்தின் தடித்த மேலோட்டில் சிறு வெடிப்பு ஏற்பட்டு விடுகிறதோ?

''அம்மா. உனக்காக எத்தனையோ முறை யோசித்து யோசித்து ஒரு முடிவுக்குத்தான் வர முடிந்தது. இன்னும் ஒரு முறை எண்ணிப் பார்க்கிறேன்'' - இப்படியான ஆறுதல் வார்த்தைகளால் அம்மாவை எத்தனையோ தரம் சிரிக்க வைத்து வேடிக்கை பார்த்தாயிற்று. இதுவும் அவைகளிலொன்று.

அப்பொழுதுதான் பாலிய சிநேகிதிகள் சிலர் என்னைப் பார்க்க வருவதாகக் கூறியது ஞாபகம் வருகிறது. கூடவே அவர்கள் எல்லாரிலும் நான் உயர்ந்தவள் என்ற எண்ணத்திமிரும் என்னிற் பரவுகிறது. என்றாலும் வீடு தேடி வருபவர்களை என் தகுதிக்கேற்ப உபசரிக்க வேண்டாமா?

அதற்காக முன் மண்டபத்தைக் காலையிலேயே அலங்கரித்து விட்டேன். இப்பொழுதும் மீண்டும் ஒருமுறை கண்ணோட்டம் விடுகிறேன்.

அங்கே என் தங்கையின் சின்ன மகள் தயா குந்தியிருக்கிறாள். என்னைக் கண்டதும் தன் பாஷையில் என்னவோ கூறிச் சிரிக்கிறாள். அதேநேரத்தில் அவள் மலவிமோசனம் செய்கிறாள். என்னுள் நெருப்பு மூள்கிறது: எல்லாமே பற்றி எரிகிறது.

"எடி. தயா, என்னடி செய்கிறாய்? உனக்கு வேறிடம் இல்லையா?" என் குரல் முழங்கி எதிரொலிக்கிறது. அவள் கையைப் பிடித்து இழுத்து அவள் முதுகில் ஒன்று வைக்கிறேன். அவள் வீரிட்டுக் கத்துகிறாள். நான் பிடித்த பிடி அழுங்குப் பிடியாய் அந்த மலரிதழைக் கசக்குகிறது.

"அக்கா, அக்கா, அடியாதே அக்கா; பாவம்! பச்சைக் குழந்தை; அதற்கென்ன தெரியும்? இப்பொழுதே உன் வீட்டைத் துப்புரவு செய்துவிடுகிறேன்."

அவள் வாயில் 'உன்' என்ற சொல் மிக அழுத்தமாய்ப் புரளுகிறது. உரிமையற்ற தான், இங்கு வந்தது தவறு என்ற பாவம் அதிலே தெறிக்கிறதோ; அல்லது ஓடி விளையாடும் சின்னக் கால்கள் சேறாடாத வீடும் ஒரு வீடோ; குழந்தைகளின் 'சாணை'த் துண்டின் அத்தியற்புத மணங்கமழாத வீட்டுக்கும் ஒரு புனிதமோ என்று அவள் அந்த ஒரு சொல்லில் வைத்து விளையாடுகிறாளா? அவள் வார்த்தையில் நெளிந்த நளினம் எனக்கு எரிச்சல் ஊட்டுகிறது.

"அசிங்கம்; பழக்க வழக்கம் தெரியாத சனியங்கள்."

என் தங்கை எதுவும் பேசவில்லை. முகத்தைச் சுளித்துக் கொண்டு தயாவைத் தூக்கி முத்தமிட்டுக் கொண்டு செல்லுகிறாள். அவளுடைய அலட்சியப் போக்கு எனக்குச் சவுக்கடியாய் விழுகிறது: நான் கெம்புகிறேன்.

"கொஞ்சமாவது அறிவில்லாமல் அடுக்கடுக்காய் பிள்ளைப் பெறத் தெரியும்; ஆனால் வளர்க்கத் தெரியாது; சீச்சீ."

சின்னப் புழுவின் வயிற்றில் ஊசியாற் குத்தி அது துடிப்பதைக் கண்டு சிரிக்கும் குழந்தை போல நான் சொல்லாலே குத்தி விளையாடுகிறேன்; அவள் புழுவாய்த் துடிக்கிறாள்.

அவள் தயாவை அப்படியே விட்டுவிட்டு என்னை நோக்கி வருகிறாள். "அக்கா, பொத்து வாயை, உனக்கு அதுகூடத் தெரியாதே, நீயும் உன் படிப்பும்; உன் படிப்பைக் கொண்டு போய்க் குப்பையிற் கொட்டு."

இவள் என்ன சொல்லுகிறாள்? நீ இந்த உலகில் வீண்; உன் அறிவு வீண்; எல்லாமே வீண்; பின் எதற்கு வாழ்கிறாய் என்றுதானே கேட்கிறாள். என் வாழ்க்கையைப் பற்றி விமர்சிக்க இவளுக்கு என்ன உரிமை? என் ஆண்மாரிக்குணம் தலை காட்டுகிறது.

"பொத்தடி வாயை; பல்லுப் பறக்கும். என் குணம் தெரியாதோ?"

"அல்லி ராணியென்று அப்பொழுதே தெரியும். ஆனால் உன் அதிகாரம் என்னை ஒன்றுஞ் செய்யாது. இப்பொழுது நீயோ, அம்மாவோ எனக்குப் பெரிதில்லை. எனக்கு 'அவரின்' அதிகாரத்துக்கு அடங்கத்தான் தெரியும். நீ தனிமரம். நான் தோப்பு."

மீண்டும் அவளை என்னென்னவோ சொல்லித்திட்ட வாயெடுக்கிறேன். ஆனால், சொற்களெல்லாம் பொருளற்றுச் சருகாய் உதிர்கின்றன. அவள் மலையாய் உயர்ந்து நிற்கிறாள்; நான் அணுவாய்த் தேய்ந்து கூனிக் குறுகி நிற்கிறேன்.

அவள் பூரண கம்பீரத்தோடு, குழந்தையின் மலத்தைக் குனிந்திருந்து அள்ளுகிறாள்; எந்தவித அருவருப்பும் இல்லை. அவளிலே சந்தனத்தை அள்ளுவது போன்ற சுளிப்புத்தான் ஆடுகிறது.

அப்பொழுதுதான் சிநேகிதிகள் இருவர் உள்ளே நுழைகின்றனர். என் மனம் கூசி மன்னிப்புக் கேட்கத் துடிக்கிறது.

"மன்னித்துக் கொள்ளுங்கள்; அறை கொஞ்சம் அசுத்தப்பட்டு விட்டது; இப்படி வாருங்கோ."

"அடி அல்லி, இதுக்காக நீ ஏன் வெட்கப்படுகிறாய்? இதெல்லாம் எங்களுக்குப் பன்னீரும் சந்தனமும் மாதிரி. ஓகோ! உனக்கு இன்னும் இந்த விஷயங்களில் பழக்கம் ஏற்படவில்லையே - அதுதான் இப்படிக் கூச்சப்படுகிறாய்."

நான் எதிர்ப்படுபவர்கள் எல்லாரும் எனக்கு எதிரிகளாக மாறுகிறார்களே! மனத்திலே கபடமின்றி, கேலியாக வார்த்தைகள் விளைந்தாலும், அவை என்னைச் சுடுசரமாய்த் துளைக்கின்றனவே.

சிநேகிதிகள் இருவரும் கெக்கட்டம் விட்டுச் சிரித்துப் பழைய, புதிய கதைகள் எல்லாம் பேசினார்கள். எல்லாவற்றிலும் தத்தம் கணவர், பிள்ளைகள் பற்றிய பிரதாபங்களே தலையெடுத்து நின்றன. குடும்பப் பெண்களுக்கு வரும் கொடிய தொற்றுநோய் இதுவோ என்றுகூட எண்ணுகிறேன். பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்; அவர்களுடைய உலகட் அவ்வளவுதான்.

மரியாதைக்காக அவர்களோடு தலையாட்டி, சிரித்து, கைகொட்டி, வார்த்தையாடி, மிகுந்த அக்கறையுடன் சுகசேமங்கள் விசாரித்து மகிழ்வதுபோல் மகிழ்கின்றேன். ஆனால், உள்ளம் அடுக்கடுக்காய்ப்

பட்ட புண்களாலே துடிதுடித்து நைகிறது; கதகதப்பான ஒற்றடம் வேண்டுமெனப் புலம்புகிறது.

என் வாழ்க்கையே வேடமா? வேடந்தான் வாழ்க்கையா? வேடமே முடிபா?

சிநேகிதிகளும் போய்விட, என் தங்கை கூறியது போல் நான் தனிமரமாய் நிற்கிறேன். இந்தப் பிரபஞ்சத்தில் எதுவும் எனக்குத் துணையில்லை; தனிமை மிகமிகப் பாரமாய்க் கனக்கிறது. இப்பொழுது எனக்கு ஒரேயொரு துணையான அம்மாவிடம் போய் நிற்கிறேன். அவள் அமைதியாகப் படுத்திருக்கிறாள். சிறிது முன்னே தன்னிரு பெண்களுக்குமிடையில் நடந்த புயல் அவளுள்ளே அடங்கியிருக்கிறதோ? அப்படியானால் அம்மாவும் வேட்தாரியா? என்றாலும் என்னைப்போல் வேடமிட்டுக் கனகச்சிதமாய் நடிக்க அம்மாவால் முடியாது!

"அம்மா, அவளும் பிள்ளைகளும் எங்கே?"

"யாரைக் கேட்கிறாய்? உன் தங்கையையா? அவள் தன் வீட்டுக்குப் போய்விட்டாள்."

"ஏன் போனாள்? என்ன சொல்லிப் போனாள்?"

"போகாமலிருந்தால் அவள் ஒருவனின் மனைவியல்லவே. போக வேண்டியது அவள் தருமம். இது அவள் வீடல்லவே. அரக்கிகளும் அல்லியரசாணிகளும் வாழும் இடத்தில், தன்னால் வாழ முடியாதாம். எப்போதாவது இந்த வீடு வீடாகிறபோது வருவாளாம்."

"அம்மா நானும் போகப் போகிறேன்" - எதற்கு, எங்கே, ஏன் என்று அம்மா என்னைக் கேட்பாள்; கேட்டு என் புண்பட்ட மனத்தை மெதுவாகத் தடவி விடுவாள் என்று எண்ணுகிறேன். ஆனால், அவள் எங்கோ சூனியத்தைப் பார்த்துக் கொண்டு சொல்லுகிறாள்.

"சரி போ."

"நீ"

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"என்னுடன் வா"

"அருச்சுனன் இல்லாத அல்லிகளுடன் எந்தத் தாய்மாரும் துணைக்குப் போவதில்லை."

"என்னம்மா சொல்கிறீர்கள்."

"ஆமடி பெண்ணே, தாய்மையடையாத எந்தப் பெண்ணும் மேதையாய் அரசியாய் வாழ்ந்தாலும், பெண்மை என்னும் சோதியை அணையாமல் காத்துக் கொள்ள முடியாது. பெண்மையின் திண்மைதான் நம் நாட்டின் சிறப்பு. அந்தச் சிறப்பை உணராதவள்; எங்களைப் போன்றவர்களுக்கு எதிரி."

அம்மாவின் வார்த்தைகள் பயங்கரமாய்ப் பிறக்கின்றன. அதிலுள்ள பயமுறுத்தும் பாவம் என் தன்மையைக் குத்திக் கிளறுகிறது. சுடச் சுடப் பதில் கொடுக்க வேண்டும் போலத் தோன்றுகிறது.

"நான் உன் எதிரியா அம்மா? சரிசரி; போகட்டும்; உலகம் நீ நினைப்பது போலக் குறுகியதல்ல, மிகவும் பரந்தது."

"மகளே, உலகம் பரந்ததுதான். ஆனால் அந்த உலகமும் உனக்குத் துணை வராது."

"ஏன்?"

"ஏனோ? காரணத்தைத் தர்க்க ரீதியாய் உன்னைப் போலக் காட்ட எனக்கு முடியாது. என் அனுபவம், உலக அனுபவம் அப்படித்தான் என்று நினைக்கிறேன்."

"ஐயோ, அம்மா; ஏனம்மா என்னைச் சித்திரவதை செய்கிறாய்?"

என்னைக் காத்து வந்ததாக நான் கருதிய அரண் அடியோடு அழிவதாக உணருகிறேன். நான் பூண்ட வேடங்கள் கலைகின்றன; நான் இப்போது உண்மையான நானாய் நிற்கிறேன்.


"ஐயோ, என்னால் தாங்க முடியவில்லையே" - ஓராயிரம் தூசுகள் என் மனத்துள் விழுந்து நெருடுகின்றன.

"அம்மா, நான் என்ன செய்வேன்?" - நான் அம்மாவின் மடியிற் சின்னஞ்சிறு குழந்தையாய்க் கிடந்து தேம்புகிறேன். நான் இப்பொழுது அவளது சொல்வழி கேட்கும் சின்னக் குழந்தையோ.

"அல்லி, அழுகிறாயா? பெண்களுக்கு அழுகையும் மிக நல்லது: அழுது முடிந்ததும் கண்ணீரைத் துடைத்துக் கொள்; அத்தோடு என்றைக்குமாகத் துடைத்துக் கொள்."

நான் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சிரிக்கிறேன். அடை மழையின் பின் எறிக்கும் பிரகாசமான வெயில் போன்று என் சிரிப்பு இருப்பதை நான் உணர்கின்றேன்.

❖ ❖ ❖



## சு. வேலுப்பிள்ளை
(சு.வே.)

1921, மே, 24 இல் நாவற்குழியில் பிறந்த சு.வே., ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளில் ஒருவர்; 1943 இல் சிறுகதைத் துறையினுள் புகுந்தார். பண்டிதமணி வழி யாழ்ப்பாண மண்ணிலே விளைந்த செழுமைத்தமிழைப் படைப்பிலக்கியத்திலே புகுத்திய மூலவர். உருவகக் கதைக் கலையின் பிதாமகர்; நாடகாசிரியர். தமிழிலக்கியத்தின் பல் துறைகளிலும் ஆரோக்கியமாகக் காலடி பதித்த கலைஞர்.

Cover Printet: GURU Printers, Thirunelvely.